# காலசுரபி

வரலாற்றுக் கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இதழ் — 2 வெளியீடு — 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலசுரபி

1999 இதழ் II

Dr. K. Indrapala Archaeology Museum
Department of History
University of Jaffna
Sri Lanka.

இதழ் ஆசிரியர்
செல்வி வ. வசந்தமலர்

வரலாற்றுக் கழகம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் கழகம்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## 1998 / 1999 செயற்குழு அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| காப்பாளர் : | பேராசிரியர் ச. சத்தியசீலன் *( தலைவர் – வரலாற்றுத்துறை )* |
| பெரும் பொருளாளர் : | திருமதி. சோ. கிருஷ்ணகுமார் *( முதுநிலை விரிவுரையாளர் வரலாற்றுத்துறை )* |
| தலைவர் : | திரு. ம. சத்தியகுமார் |
| உப தலைவர் : | செல்வி. அ. கமலாசினி |
| செயலாளர் : | செல்வி. தி. பாலசுந்தரி |
| உப செயலாளர் : | திரு. பொ. வாகீசன் |
| பொருளாளர் : | செல்வி. சி. மாதினி |
| பத்திராதிபர் : | செல்வி. வ. வசந்தமலர் |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் : | திரு. க. ஜெயக்குமார் |
| | செல்வி. உ. உதயமலர் |
| | செல்வி. பா. அபர்ணா |
| | செல்வி. தே. சுகந்தினி |
| | செல்வன். செ. ரவீந்திரன் |
| | செல்வி. க. சுமதி |
| | செல்வி. ம. துஷ்யந்தி |
| | செல்வன். மு. யோகநாயகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் சிந்தனையில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களினது முன்னேற்றம், ஆளுமை, வளர்ச்சி போன்ற பல துறைசார்ந்த அறிவைப் பெறுவதற்கும் வழி காட்டியாகவும், அதேசமயம் பல்வகையிலும் மாணவர்களின் வளர்ச்சிக்கு வழி யமைத்துக் கொடுக்கின்ற வகையிலும் இயங்கி வருகின்ற கழகங்களின் வரலாற் றுக்கழகமும் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் வரலாற்றுக்கழகத்தின் இரண்டாவது வெளியீடான "காலசுரபி" இதழ் II உருவாக்கம் பெற்று இன்று உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இவ் வெளியீடானது மாணவர்களினதும், விரிவுரை யாளர்களினதும் ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சென்ற ஆண்டு "காலசுரபி" இதழ் I வெளியீட்டினைத் தொடர்ந்து கழகம் தன் முயற்சியில் சோர்ந்துவிடாது இவ்வாண்டும் இவ்விதழை வெளியிட்டு வைப்பதில் அந்நூலின் ஆசிரியர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன்.

இச்சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்கள்யாவும் இத்துறையில் ஆர்வ முள்ளோருக்கும், ஏனையோருக்கும் பயன்படும் என நம்புகிறேன். இதன் உருவாக் கத்திற்குப் பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஒத்துழைத்த விரிவுரை யாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இதனை வடிவமைப்பதற்கு எமக்கு ஆலோ சனைகள் வழங்கிய துறைத்தலைவரும் கழகக் காப்பாளருமான பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்களுக்கும், பெரும் பொருளாளர் திருமதி சோ.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும் இந்நூலைச் சிறப்புடன் வடிவமைத்துத் தந்த ஏழாலை மஹாத்மா அச்சகத்தாருக்கும் கழகத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இவ்விதழ் வெளியீடானது எதிர்காலத்திலும் தொடர்ந்து நடை பெற வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி

செல்வி வ. வசந்தமலர்
இதழாசிரியர்
வரலாற்றுக் கழகம்.

வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின்
# வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் கழகங்களுள் மூத்தவற்றுள் ஒன்றான வரலாற்றுக் கழகத்தின் காலசுரபி II சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். பல்கலைக்கழகங்களில் வரலாற்றை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் அருகிவரும் சூழ்நிலையில் குறைந்த மாணவர் பலத்தைக்கொண்டு இத்தகைய முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெற்றிருப்பது பாராட்டிற்குரியது. இம்முயற்சிக்குக் காரணமாயிருந்த துறைத்தலைவர் பேராசிரியர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

காலசுரபி சஞ்சிகையின் வெளியீட்டிற்கு நிதிதிரட்டும் வகையில் கைலாசபதி கலையரங்கில் வரலாற்றுக் கழகத்தினர் இனியதொரு கலைநிகழ்ச்சி ஒன்றை நடத்தியிருந்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு நிகழ்வின் ஒரு பகுதியாக அருங்காட்சியகத்தில் 'ஈழத்தமிழர் வாழ்வும் வளமும்' எனும் கருப்பொருளில் வரலாறு மற்றும் தொல்லியல் கண்காட்சியை வரலாற்றுத்துறையும் வரலாற்றுக்கழகமும் இணைந்து நடத்தியிருந்தன. இக் கண்காட்சி பல்லாயிரக் கணக்கானோரால் கண்டு களிக்கப்பட்டதுடன் பெரிதும் பாராட்டப்பட்ட ஒன்றாகவும் இருந்ததை நானறிவேன்.

வரலாற்றுத்துறையினர் இப்பிராந்தியத்தின் தொன்மையை எடுத்துக் காட்டும் வகையிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்ட பகுதிகளை வெளிப்படுத்தும் வகையிலும் ஆரம்ப காலத்திலிருந்தே இயங்கிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டை அகழ்வாய்விலிருந்து - பாண்டியன் பெருவழுதியின் நாணயம்- மிக அண்மையில் கந்தரோடையின் அகழ்வின்போது கிடைக்கப் பெற்றது கலை நுட்பம் கொண்ட அம்மி - குளவி வரை இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றண்டுகள் முன்பாகவே இப் பிராந்தியத்தில் உயர்ந்த நாகரிகம் ஒன்று தழைத்தோங்கியிருந்தமை இவ் வாய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக் கல்வியை வளர்க்க முற்படும் வரலாற்றுக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை. அத்தகைய முயற்சிகளில் ஒன்றாக இச் சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவந்து மாணவர் ஆர்வலர் அறிவுத் தேடலுக்கு உதவியாக அமையவேண்டுமென வாழ்த்துகின்தேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
B. A. Hons (Cey.) Ph. D. (Durham)
துணை வேந்தர்,
யாழ்/பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப் பீடாதிபதியின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு துறைசார்ந்த மாணவர் அமைப்புக்களும் தமக்கென ஓர் இதழை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றனர். பெரும்பாலும் வரலாற்றுத்துறை சார்ந்த மாணவர்கொண்ட வரலாற்றுக்கழகம் இவ்வாண்டும் வரலாறு படைக்கத் தீர்மானித்துள்ளனர். அவர்களுடைய வரலாற்றுக் கழகம் இவ்வாண்டு "காலசுரபி II" என்னும் இதழை அச்சிட்டு வெளிக்கொணர எண்ணியுள்ளது. இந்த முயற்சிக்கு பாராட்டுக்களைத் தெரிவித்து, இந்த இரண்டாவது இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்கின்றேன்.

அண்மைக் காலத்தில் வரலாற்றுக்கழக மாணவர்கள் தம்முடைய துறைக்கேற்ற ஒரு கலை நிகழ்ச்சி ஒன்றினைத் தமது சஞ்சிகை வெளியீட்டிற்காக ஒழுங்கு செய்து பெருவெற்றி கண்டுள்ளனர். இவர்களுடைய காலசுரபி என்றென்றும் புதுப்பொலிவுடன் வெளிவர மனமுவந்த வாழ்த்துக்களை கலைபீடத்தின் சார்பில் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்
பீடாதிபதி, கலைப்பீடம்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுத்துறை பேராசிரியரின்

# வாழ்த்துச் செய்தி

1974இல் சைவப்பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதனின் பரோபகாரத்தில் உருவாகிய பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாண வளாகமாக மலர்ந்தபோது அன்று செயற்பட்ட பிரதானமான துறைகளில் நமது வரலாற்றுத்துறையும் ஒன்றாகும். எனினும், இத்தகைய நீண்ட பாரம்பரியத்தையுடைய வரலாற்றுத் துறையில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு அடிப்படையில் குறைந்து காணப்படுவது நமது பல்கலைக்ழகத்தில் மட்டும் காணப்படும் நியதி மட்டும் அன்று. இத்தகைய போக்கே ஈழத்தின் பிற பல்கலைக்கழகங்களிலும் விஞ்சி நிற்கின்றது. இதுபற்றி ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது பற்றி இங்கே சுட்டிக் காட்டுவதும் பொருத்தமாகிறது.

நிற்க, தனியான தேசிய இனத்துக்குரிய பண்புகளைக் கொண்டுள்ள நாம் நமது உரிமைப் போராட்டத்தில் பல்வேறுபட்ட இழப்புக்களைச் சந்தித்துள்ளதோடு தொடர்ந்தும் பல்வகையான நெருக்குதல்களுக்கும் சவால்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளோம். இன்று நமது சமூதாயத்தின் பொக்கிஷமாகிய கல்விக் கூடங்கள் சீரழிய, பல்வேறுபட்ட அனர்த்தங்களால் நமது மாணவமணிகள் கூடச் சிதறுபட்டும் விட்டனர். இத்தகைய சூழலில் நமது மண்ணிலே நின்று மக்களோடு மக்களாக நடமாடும் நமது மாணவ மணிகளின் திடசங்கற்பம் பாராட்டத்தக்கது. விடிவு வரும்போது சீரழிந்த நமது கலாசாரத்தைச் செம்மைப்படுத்தும் கடும்பணியும் நம்மை எதிர் நோக்கி நிற்கின்றது.

மாணவர்களின் சஞ்சிகையாகிய "காலசுரபி" இவர்களின் எழுத்தாற்றலின் உரைகல்லாக மட்டும் நின்றால் போதாது. மாறாக, இத்தகைய கால கட்டத்தில் ஒரு வரலாற்றுத் தேவையாக, காலத்தின் கோலங்களைப் பிரதிபலிக்கும் ஓர் ஆவணமாக இது விளங்கவேண்டுமென்பதே நமது ஆவலாகும். இதில் இடம்பெறும் ஆக்கங்கள் இக்காலச் சிந்தனையின் பிரதிவிம்பமாக விளங்குவதோடு, எதிர்காலத்திற்கு ஒளியூட்டும் திசை காட்டியாகவும் நிற்கும் போதுதான் "காலசுரபி" தனது வரலாற்றுக் கடமையைச் செவ்வனே நிறைவு செய்கின்றது எனத் திடமாக நம்பலாம்.

நம்மை எல்லாம் இயக்கும் பார்வதி பரமேஸ்வரனின் அருள் இப்பணிதொடர நமக்குக் கிட்டுமாறு பிரார்த்திப்போமாக.

சி. க. சிற்றம்பலம்
எம். ஏ., பி. எச். டி.
பேராசிரியர், வரலாற்றுத்துறை.

திருநெல்வேலி,
01.03.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகக் காப்பாளர் - வரலாற்றுத்துறைத் தலைவரின்

# வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் கழகங்களுள் காலத்தால் முற்பட்ட ஒன்றாக வரலாற்றுக் கழகம் விளங்குகின்றது. அக்கழகத்தின் நீண்டநாள் கனவாக இருந்த மாணவர் சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவது கடந்த ஆண்டு நிறைவெய்தியது. இந்த ஆண்டும் இந்தப்பணி "காலசுரபி II" மூலம் நிறைவெய்தியமைதயிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஏனைய மாணவர் கழகங்களின் அங்கத்தவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் எங்கள் துறைசார்ந்த மாணவர்கள் வெகுசிலரே. அவர்களை மையமாக வைத்துக்கொண்டு இத்தகைய ஒரு பணியை நிறைவேற்றுவது மிகவும் பாராட்டிற்குரியதாகும். அவ்வகையில் இம்மலரின் வெளியீட்டிற்குப் பல வழிகளிலும் பெரிதும் பாடுபட்ட வரலாற்றுக் கழகத்தின் தலைவர் உட்பட்ட நடப்பாண்டு நிர்வாகிகளுக்கும் அங்கத்தவர்களுக்கும், உதவிவழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெள்ளிவிழாவைத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்புடன் கொண்டாடிய இந்த ஆண்டிலும் "காலசுரபி" மலர்வதையிட்டு மனநிறைவடைகின்றேன். வெள்ளி விழா நிகழ்வில் வரலாற்றுத்துறையுடன் வரலாற்றுக் கழகம் இணைந்து வரலாற்று மற்றும் தொல்லியல் கண்காட்சியை அருங் காட்சியகத்தில் மிகச் சிறந்த வகையில் நடத்தியதை இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. காலசுரபி Iஐப் போலவே இம்மலரும் எனது தலைமையின் கீழ் வெளிவருவதையிட்டு மேலும் மகிழ்வுறுகின்றேன்,

வரலாற்றை ஒரு பாடமாகக் கற்பது பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் அருகிவரும் இக்காலத்தில் வரலாற்றுக் கல்வி முன்னர்போல வளர்க்கப் படவேண்டுமென்ற விருப்பத்தை இம் மலரின் பொருளடக்கம் வெளிப்படுத்துகின்றது. "காலசுரபி" ஆண்டுக்கொரு தடவை சிறப்புடன் வெளிவர வேண்டுமென்று இறைவனை வேண்டி இம்முயற்சியில் பங்கு கொண்ட அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் ச. சத்தியசீலன்**
B. A. Hons (Cey). M. A., Ph. D (Jaffna)
கழகக்காப்பாளரும், வரலாற்றுத்துறைத் தலைவரும்.

வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின்

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுத்துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்களை உள்ளடக்கியதாக கால சுரபி II இதழ் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. வரலாறு கற்கும் மாணவர்களின் ஆர்வமும் கடின உழைப்பும் இம்மலர் வெளியீட்டிற்கு ஏதுவாக அமைந்தது எனலாம். இத்தகைய வெளியீடுகள் வரலாற்றைக் கற்கும் மாணவர்களின் அறிவுப் பசிக்கு அரிய விருந்தாக அமையும். அதேவேளை வரலாற்றை அறிந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்களுக்கும் பயன்படக் கூடியதாகவும் அமையும். மேலும் இத்தகைய வெளியீடுகள் காலந்தோறும் வெளியிடப்படுவதற்கு வரலாறு கற்கும் மாணவர்கள் பங்களிப்பு வழங்க வேண்டும் என்பது எம் விருப்பமாகும்.


திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
(பெரும் பொருளாளர் வரலாற்றுக்கழகம்)

வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.
21 - 03 - 2000




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகத் தலைவரின் எண்ணத்திலிருந்து....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுக் கழகம் தனது வரலாற்றில் வீறு நடை போடும் காலம் இதுவாகும். உறக்கத்தில் இருந்த கழகம் இப்போது விழித்துக் கொண்டது. அதன் தூக்கம் கலைத்த பெருமை மூத்தமிழ்ராஜினி அவர்களின் தலைமையில் கடந்த ஆண்டில் இருந்த நிர்வாகக் குழுவினரையே சாரும். எமது கழகத்தினுடைய முதலாவது சஞ்சிகை காலசுரபி என்னும் பெயருடன் எமது துறை மற்றும் ஏனைய துறை விரிவுரையாளர்கள், மாணவர்களினுடைய ஆக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்பட்டது. அதற்காக உழைத்தோர் அனேகம்பேர் அனைவருக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உண்மை வாழ்த்துக்களும் ஆசிகளும் எமது கழகத்திற்கும் செயற்பாடுகளுக்கும் உண்டு. அதனால் தான் எத்தனை இடர்களுக்கு மத்தியிலும் இரண்டாவது காலசுரபி சஞ்சிகை எனது கழகத்தினரால் நேசக்கரங்களைப் பற்றியபடி முனைப்போடு வெளியீட்டு வைக்கப்படுகிறது.

இக் கல்வியாண்டில் எமது கழகத்தினரால் அதிகளவிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இருந்த போதிலும் அனைத்துலகப் பெண்கள் தினம் எமது துறை விரிவுரையாளர் திருமதி சோ. கிருஷ்ணகுமார் அவர்களின் முயற்சியினால் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. எமது துறைவிரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராஜா அவர்களால் எழுதப்பட்ட தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. எமது பல்கலைக் கழக வெள்ளி விழா ஆண்டையொட்டி நடைபெற்ற கண்காட்சியில் அனைத்துப் பீடங்களையும் பாடசாலைகளையும் வரலாற்று ஆர்வலர்களையும் வெகுவாகக் கவரும் வகையில் துறைத்தலைவர், விரிவுரையாளர்கள் கழக அங்கத்தினர் ஆகியோரினதும் கடின உழைப்பின் மூலம் அரிய தொரு கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தோம்.

வரலாற்றுக் கழகம் இன்று பலரது கவனத்தையும் தன்னகத்தே ஈர்த்துள்ளது. இத்தகையதோர் சிறப்பான நிலையை இக் கழகம் எய்தியுள்ளது, என்றால் அதன் பெருமை எமது துறைத்தலைவரும் கழகக் காப்பாளருமான பேராசிரியர் ச. சத்தியசீலன் அவர்களையே சாரும். அவரது தலைமையில் இயங்கிய அனைவருக்கும் இச் சஞ்சிகை வாயிலாக நன்றி கூறிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். கழக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் வழிகாட்டியாகச் செயற்பட்ட பெரும் பொருளாளரும் எமது துறை முதுநிலை விரிவுரையாளருமான திருமதி சோ. கிருஷ்ணகுமார் அவர்களுக்கும் பல்வேறு வகைகளிலும் எம்முடைய செயற்பாடுகள் அனைத்திற்கும் மனமுவந்து தோளோடு தோள் நின்ற அனைத்து உள்ளங்களிற்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைக் கூறுவதில் ஆனந்தம் அடைகின்றேன். மூன்றாவது காலசுரபி முழுநிலவாய்த் தவழ்ந்து வர மனதார வாழ்த்துகின்றேன்.


ம. சத்தியகுமார்
கழகத் தலைவர்.

வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செயலாளரின் அறிக்கை

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் செயலாளர் என்ற வகையில் 1996 / 1997ஆம் கல்வியாண்டிற்கான கழகத்தின் செயற்பாடுகள், வளர்ச்சிகள், முயற்சிகள் பற்றி எழுதுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

1996 / 1997ஆம் கல்வியாண்டிற்கான வரலாற்றுக் கழகம் 1998-12-17 இலிருந்து இன்றுவரை இயங்கிவருகிறது. அன்றிலிருந்து கழகத்தின் செயற்பாடுகளை வரலாற்றுத்துறைத் தலைவர், விரிவுரையாளர்கள் மாணவர்கள் ஆகியோர் முன்னின்று நடத்தி வருகின்றனர். அவ்வகையில் 1999-06-30 இல் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராசா அவர்களின் 'தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வினை நடத்தியது. வரலாற்றுக் கழகத்தினரால் வெளியிடப்படும் "காலசுரபி" சஞ்சிகை வெளியீட்டிற்கான, நிதியினைச் சேகரிப்பதற்காக 1999-07-10 அன்று கைலாசபதி கலையரங்கில் இருகாட்சிகளாக "கலைவிருந்து" நிகழ்வு வெற்றிகரமாக நடத்தப்பட்டது

1999-10-20 ஆம் திகதியிலிருந்து 1999-10-24ஆம் திகதி வரை வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக் கழகம் நடாத்திய 'ஈழத்தமிழர் வாழ்வும் வளமும்' என்ற தலைப்பிலான பொருட்காட்சியில், எமது துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் மிக ஆர்வத்துடன் பங்கு பற்றியதுடன், புராதன சின்னங்களை எடுத்துக் காட்டினர். என்ற சிறப்பினையும் அது பெற்றுக் கொண்டது.

எனவே இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த யாவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இனிவரும் கழக அங்கத்தவர்கள் மேலும் திறம்பட செயற்பட வேண்டுமென வாழ்த்தி நிற்கிறேன்.

தி. பாலசுந்தரி
செயலாளர்
வரலாற்றுக்கழகம்

வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே . . . . .


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கையின் வரலாற்று மரபு<br>செல்வி க. சாந்தினி | 1 — 7 |
| 2. | ஐரோப்பாவின் இடைக்காலப் பல்கலைக்கழகங்களுடைய தோற்றமும் வளர்ச்சி அமைப்பு முறை<br>கா. கமலநாதன் | 8 — 12 |
| 3. | இலங்கையும் மகாயான பௌத்தமும்<br>செல்வி ப. வசந்தி | 13 — 19 |
| 4. | இத்தாலியக் குடாநாட்டின் மறுமலர்ச்சிக்கு ஏதுவாகவிருந்த காரணிகள்<br>பொ. வாகீசன் | 20 — 24 |
| 5. | பர்மிய தேசியவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்<br>செல்வி ஞா. சுபாஜினி | 25 — 29 |
| 6. | தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் பல்லவர்காலம் ஒரு வராற்று நோக்கு<br>செல்வி வி. பிரபாலினி | 30 — 35 |
| 7. | கி. பி. 13 ஆம் நூற்றாண்டிற்கும் 18ஆம் நூற்றாண்டிற்கு இடையேயான காலப்பகுதியில் இந்திய பண்பாட்டுத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்<br>செல்வி அ. கமலாசினி | 36 — 41 |
| 8. | பிரஸ்யாவின் எழுச்சிக்கு மகாபிரட்டிக் மன்னனின் பங்கு<br>செல்வி க. சுமதி | 42 — 46 |
| 9. | குப்தர்கால வடஇந்திய அரசியல் சிந்தனை மரபின் வளர்ச்சி, கல்வி பண்பாட்டு நிலை<br>செ. கிருஷ்ணராசா | 47 — 54 |
| 10. | 1848 இல் இலங்கையில் நடைபெற்ற கலகத்திற்கான காரணங்கள் ஒரு நோக்கு<br>க. அருந்தவராஜா | 55 — 62 |
| 11. | பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் ஸ்பானியா<br>செல்வி சு. முத்தமிழ்ராஜினி | 63 — 67 |
| 12. | கிரேக்க அரசியல் சிந்தனையாளர் அரிஸ்டோட்டில்<br>செல்வி சி. பாலசுந்தரி | 68 — 72 |
| 13. | மறுமலர்ச்சிகால இத்தாலியில் எழுச்சி பெற்ற சிந்தனையும் இலக்கிய வளர்ச்சியும்<br>செல்வி நா. வினித்தா | 73 — 79 |
| 14. | சீனாவின் தேசிய இயக்கத்தில் டாக்டர் சுன்யாட்சன்<br>செல்வி ப. அபர்ணா | 80 — 85 |
| 15. | ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்<br>செல்வி வசந்தமலர் வல்லிபுரம் | 86 — 90 |
| 16. | இந்திய வரலாற்றில் கி. பி. 1857 ஆம் ஆண்டுக் கலகம் ஒரு வரலாற்று நோக்கு<br>செல்வி சி. மாதினி | 91 — 96 |
| 17. | நாணயமாற்று வீதம் கணிப்பீட்டு முறைகளும் வகைகளும்<br>சி. உதயகுமார் | 97 — 105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வரலாற்று மரபு

— செல்வி க. சாந்தினி

*விரிவுரையாளர்*

*வரலாற்றுத்துறை*

*யாழ். பல்கலைக்கழகம்.*

'வரலாறு' என்ற பதம் தொடர்பாக அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. தத்தம் அனுபவங்களுக்கும் அறிவுக்கும் ஏற்ப இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொதுவாக உண்மை நிகழ்ச்சிகளின் சேர்க்கையும், அவற்றின் விளக்கங்களும் மக்களைக் கவரும் விதத்தில் அவற்றைக் கூறுதலும் வரலாற்றினுடைய பண்பெனலாம். எனவே பக்கச் சார்புகள், திரிபுகள், மறைப்புகள் என்பன இதில் காணப்படுவதும் தவிர்க்க முடியாதனவாகின்றன. ஆரம்ப காலங்களில் வரலாறு சமயச் சார்பாக விளங்கியது. வீரம் பொருந்தியவர்களுடையதும் நற்பண்புகளைக்கொண்டவரதும் கதைகள் இவற்றிலே பிரதான இடத்தை வகித்தன. காலப் போக்கில் மக்களது வாழ்க்கை, அவ்வாழ்க்கையில் நிகழ்ந்த மாற்றங்கள், அவற்றிற்குரிய பின்னணி என்பவையும் அவற்றினுடைய படிப்பினைகளும் நோக்கப்பட்டு வந்ததை அவதானிக்கலாம். இலங்கையின் வரலாறும் இத்தகைய பின்னணியைக்கொண்டிருந்தாலும் சில தனித்துவத்தையும் கொண்டு வளர்ந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்னாசிய நாடுகளில் இலங்கைக்குத் தொடர்ச்சியான நீண்ட வரலாற்று மரபு காணப்படுகின்றது. வரலாற்று மரபு என்பது ஆதி காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக கேள்வி வழியாகப் பேணப்பட்டுவந்த செய்தித் திரட்டுக்களை உள்ளடக்கியதாகும். இவை ஆரம்பத்தில் சமயம் சார்ந்தனவாகவே காணப்பட்டன. இவ்வாறான கேள்வி வழிச் செய்திகள் உலகின் பல நாடுகளில் வழக்கிலிருந்தாலும் அவை யாவும் வரலாற்று மரபாகச் சேகரித்து வைக்கப்படவில்லையென்றே கூறலாம். முதலில் வாய்மொழிப் பண்பில் பேணப்பட்ட வரலாற்று மரபானது காலப்போக்கில் எழுத்துவழி மாற்றம் பெற்று பின் நூல் வடிவினைப் பெறுவதே முறைப்பட்ட வழக்காக இருந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். இலங்கையைப் பொறுத்தவரை இவ்வாறான சமய வரலாற்று மரபின் வளர்ச்சியானது கட்டுக் கதைகள் சிலவற்றையும் உள்ளடக்கி வளர்ந்தபோதும் இந்நாட்டின் பழைய வரலாற்றைப்பற்றிய பல தகவல்களைப் பெறுவதற்கு இன்றியமையாத ஒரு வரலாற்று மூலாதாரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கைத் தீவுக்கு மிகவும் அண்மையில் காணப்படுவது இந்திய நாடாகும். பண்பாட்டு ரீதியிலே இரு நாடுகளிடையேயும் நீண்ட காலத் தொடர்புகள் இருந்துவந்தாலும் வரலாற்று மரபைப் பொறுத்தவரை இந்திய நாட்டில் தொடர்ச்சியான நீண்ட வரலாற்று மரபு இருக்கவில்லையென்றே கூறி விடலாம். ஆனால் இலங்கையில் தென்னாசிய நாடுகள் பிறவற்றில் இல்லாதவாறு நீண்ட தொடர்ச்சியான அதாவது ஏறக்குறைய 2500 ஆண்டுகள் கொண்ட வரலாற்று மரபு இலக்கியங்களுக்கூடாக வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளமையானது முக்கியத்துவமான அம்சமாகும், பொதுவாக இலங்கையியின் 'நாகரிக வரலாறு' பற்றிக் குறிப்பிடப்படும்பொழுது அது இங்கு பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியிலிருந்து தொடங்குவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகக் குறிப்பிடப்படுகின்றது. வட இந்திய மகத இராச்சியத்திலிருந்து இவ்வாறான அறிமுகம் நிகழ்ந்தாலும், அவ் இராச்சியத்தில் பேணப்படாத வரலாற்று மரபு இலங்கையில் பேணப்பட்டமையானது தனித்துவமான அம்சமெனக் கொள்ளமுடிகின்றது. அதற்குப் பின்வரும் காரணங்களை முன்வைக்கலாம்.

1) பரந்த பிரதேசத்தைக் கொண்ட இந்திய நாட்டில் காணப்பட்ட பல்வேறு வம்சங்களின் ஆட்சிமுறையும் குறிப்பிட்ட ஒரு சில வம்சங்களின் ஆட்சி தொடர்ச்சியாக அல்லது பெரிய நிலப் பரப்புக்களை உள்ளடக்கியதாகக் காணப்படாமையும் ஒருவர் மேல் ஒருவர் அடிக்கடி படையெடுத்தமையும் தொடர்ச்சியான நிலையான வரலாற்று மரபைப் பேண இடமளிக்கவில்லை. இலங்கையானது நிலப் பரப்பில் குறைந்ததாகவும் இந்தியாவுடன் ஒப்பிடும்போது வம்சப் போராட்டங்கள் மிகக் குறைந்ததாகவும் இருந்தது.

2) பௌத்த சமயத்தையும், விகாரைகள் பிக்குகள் என்பனவற்றையும் ஆதரிக்கின்ற அரசுகள் இலங்கையில் பெரும்பாலும் தொடர்ச்சியாக ஆட்சி செய்தமை தொடர்பு குன்றாத வரலாற்று மரபைப் பேண உதவியது. இந்தியாவிலோவெனில் பௌத்தத்தைப் பேணிவளர்த்து அயல் நாடுகளுக்கும் பரப்பிய மௌரிய ஆட்சிக் காலம் மறைய பிராமணனான புஷ்யமித்திரன் வழிவந்தவர் ஆட்சியும் அதையடுத்து இந்து சமயத்தை முதன்மைப்படுத்திய குப்த அரசின் ஆட்சியும் இடம்பெற்றமையைக் காணலாம்.

3) இலங்கையில் அரசியலும், சமயமும் ஒன்றோடொன்று இணைந்த வகையில் வளர்ச்சியடைந்திருந்தது. குறிப்பாக இந் நாட்டின் மன்னனாக இருப்பவன் நீர்ப்பாசனப் பணிகளை மட்டுமல்லாது சமயப் பணிகளையும் பிரதானமாகமேற்கொள்ள வேண்டியவனாக இருந்தான். இந்நிலைமையே பிற்காலத்தில் பௌத்த புனிதத் தந்தத் தாதுவை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட காரணமாக இருந்ததெனலாம்.

4) இலங்கையின் அமைவிடம் தனிமையானதாகவும், ஒரு தீவாகவும் காணப்படுவதால் இந்தியாவில் நடைபெறும் நிகழ்வுகளின் செல்வாக்கு முழுமையாக இங்கு செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. அதேவேளை இரு நாடுகளும் அருகருகாக அமைந்தமையினால் சில நிகழ்வுகள் படிப்பினையாக அமைந்த தன்மையினை அவதானிக்கலாம். இதனாலேயே இந்தியாவில் பௌத்தம் செல்வாக்கிழந்தபோதும் இலங்கையிலே அது பிரதான சமயமாக விளங்க முடிந்தது எனலாம்.

### பௌத்த சமயம்

கி.மு 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பீஹாரில் அரச குடும்பத்தில் பிறந்த சித்தார்த்தன் என்ற இளவரசன் தன் வாழ்க்கையில் கண்டுணர்ந்த அனுபவங்களையும் பின்னர் கௌதம புத்தராகி ஞானத்தினால் பெற்ற அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு பௌத்த சமயம் தோற்றம் பெற்றது. இந்து சமயத்தில் காணப்பட்ட பலியிடல், வர்ணாச்சிரம தர்மநெறி என்பவற்றுக்கு எதிராகவும் எழுச்சியடைந்த பௌத்த சமயம் அயலில் இருந்த இலங்கை போன்ற நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றது. சிறப்பாக கௌதம புத்தரே இலங்கைக்குப் பல முறை விஜயம் செய்து இங்கு நிலவிய அரசியற் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததோடு பலரைத் தன் போதனைகள் மூலம் சமய மாற்றம் செய்ததாகவும் அந் நாட்டின் பௌத்த சமய வரலாறு குறிப்பிடுவதைக் காணலாம்.

புத்தர் பரிநிர்வாணம் அடைந்த காலத்தின் பின்னர் அஜாதசத்துருவின் முயற்சியால் இராஜகிருகத்தில் கூடிய தேரர்களின் முதற்சங்கம் புத்தரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகளை மூன்று பிடகங்களாகத் தொடுக்கும் முயற்சியை மேற்கொண்டது. உபாலி என்பவர் விநய பிடகத்தையும், ஆனந்தர் என்பவர் சுத்த பிடகத்தையும், மகாகாசியர் அபிதம்மபிடகத்தையும் தம் நினைவிலிருந்து ஒப்பித்ததாக அறியமுடிகின்றது. விநயபிடகத்தை ஓதிய பிக்குகள் விநயதரர் என்றும், சூத்திரபிடகத்தை ஓதிவந்தோர் சூக்ராந்திகள் என்றும் அபிதம்மபிடகத்தை கூறிவந்தோர் அபிதம்மிகர் என்றும் அழைக்கப்பட்டனர். இப்பிடகங்களை ஓதிய பிக்குகளில் பல உட்பிரிவினரும் இருந்தனர். மேற்கூறப்பட்ட மூன்று பிடகங்களும் திரிபிடகங்கள் என அழைக்கப்பட்டன. இக்காலத்தில் எழுத்துமுறை வழக்கிலில்லாமையால் வாய்மொழி மூலமே இவை பாதுகாக்கப்பட்டு வந்தன.

முதலாவது பௌத்த சங்கம் கூட்டப்பட்டு இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது பௌத்த சங்கம் காலாசோகன் ஆதரவில் வைசாலியில் கூட்டப்பட்டது. அசோகனின் ஆட்சிக்காலத்தில் மூன்றாவது பௌத்த சங்கம் கூடிய பொழுது அயல்நாடுகளிலும் பௌத்தம் பரப்பப்படுவதற்கு முடிவெடுக்கப்பட்டது. இம் முடிவின்படி முதன் முதலாக அரசியல் ஆதரவின் பின்னணியில் இலங்கைக்கு மகிந்ததேரர் தலைமையிலே பௌத்த தாதுக்குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டது. தேரர்களின் கருத்து முரண்பாடுகள் காரணமாக பௌத்த சமயத்திலே சிறப்பாக பதினெட்டுப் பிரிவுகள் தோற்றம் பெற்றன. இவற்றுள் மகாஞானம், தேரவாதம் ஆகிய இரண்டும் பிரதான பௌத்த சமயக்கிளைப் பிரிவுகளாக விளங்கியதைக் காணலாம். புத்தரது பழைய கொள்கைகளைப் பின்பற்றிவரும் பௌத்தமதம் தேரவாதம் என்றும், புத்தர் காலத்தில் இல்லாது பின்னர் தோன்றிய புதுக் கொள்கைகளைக் கொண்ட பௌத்தமதம் மகாஞானம் என்றும் அழைக்கப்பட்டது. இங்கையில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட பௌத்தம் தேரவாதப் பிரிவைச் சேர்ந்ததாகும்.

## வரலாற்று மரபின் வளர்ச்சி

இலங்கையின் வரலாற்று மரபின் தோற்றம் ஆரியமக்கள் இங்கு வந்து குடியேறிய பின் ஏற்பட்டதாகச் சில அறிஞர்களால் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் ஏறக்குறைய கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கை மக்களிடையே பல வரலாற்றுச் செய்திகள் செவிவழிக் கதைகளாகப் பரிமாற்றம் செய்யப்பட்டு வந்தாலும் கி.மு மூன்றாம் நூற்றாண்டுவரை ஓர் ஒழுங்கான வரலாற்று மரபு இங்கு தோற்றம் பெற்றிருக்கவில்லையென்றே கூறலாம். கி.மு மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மகிந்ததேரர் தலைமையில் பௌத்த தாதுக்குழு இங்கு வருகை தந்ததை அடுத்து ஓர் ஒழுங்கான வரலாற்று மரபு தோன்ற அடிப்படை இட்டுக் கொடுக்கப்பட்டது. இதுவே பிற்கால வரலாற்று மரபின் தொடர்ச்சிக்கு வழிவகுப்பதாக அமைந்திருந்ததெனலாம். வட இந்தியாவில் புத்தரின் வாழ்க்கை அவருடைய போதனைகள், புத்தருடன் தொடர்புடைய நிகழ்வுகள் ஆகியனவும் புத்தருக்குப் பின்னர் மகாதேரர்களாக இருந்த ஆச்சாரிய பரம்பரையின் செய்திகளும் செவிவழி மரபில் பேணப்பட்டன. இவற்றுக்குக் கால அடிப்படையைக் கொடுக்கும் நோக்குடன் புத்தர் காலத்திலும் ஒவ்வொரு ஆச்சாரியார் காலத்திலும் ஆட்சிசெய்த மகத மன்னர்களுடைய வரலாறு சமய வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டது. மகிந்ததேரர் போன்றவர்களால் பௌத்த மதத்தை இலங்கையில் பரப்புவதற்காக மேற்கூறிய வரலாற்று மரபு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பௌத்த சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு ஒழுங்கான முறையில் பௌத்தக் கொள்கைகள், பௌத்தத்தின் வளர்ச்சியின் வரலாறு ஆகியன மக்களிடையே பரப்பப்பட்டதுடன் அவற்றைப் பாதுகாக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையிலே முதன் முதலாக அமைக்கப்பட்ட மகாவிகாரையில் வட இந்திய மகத அரசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கப்பட்ட பௌத்த வரலாற்று மரபு அப்படியே பாதுகாக்கப்பட்டதுடன் பின்னர் கூட்டப்பட்ட விகாரைகளிலும் இம் முறை பின்பற்றப்பட்டது.

மகாவிகாரையில் பாதுகாக்கப்படத் தொடங்கிய இந்த வரலாற்று மரபு மகிந்தனின் மரணத்தின் பின்னர் புத்த சாசனத்துடன் இணைக்கப்பட்டு, அதனுடைய முன்னுரையாக புதிய வழியில் வளரத் தொடங்கியது. பௌத்த சமய வரலாற்றைப் பேணிவளர்க்கும் நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்டிருந்த பௌத்த சங்கத்தார் இங்கு மகிந்ததேரரால் பௌத்தம் பரப்பப்பட்ட வரலாற்றையும் மிகவும் விரிவான செய்திகளுடன் சேர்க்கத் தொடங்கினர். இவ் வரலாற்றில் மகிந்ததேரரின் வரவு தீஸனும் அவனது அரசவையைச் சார்ந்தோர் பலரும் பௌத்த மதத்தை தழுவியமை, சங்கமித்தையின் வரவு, வெள்ளரசுக்கிளை கொண்டுவரப்பட்டு நாட்டப்பட்டமை, மகாவிகாரை ஸ்தாபிக்கப்பட்டமை, மகிந்ததேரரின் மரணம் ஆகிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டன. இலங்கையின் ஆட்சியாளனாக விளங்கிய தீஸ மன்னனின் வரலாறு மகிந்ததேரரின் வரலாற்றோடு இணைக்கப்பட்டது. மகத நாட்டு வரலாற்று மரபினை ஒட்டி இங்கும் வரலாற்று மரபு பேணப்பட்டாலும் சமயம் முக்கியமான கருப்பொருளாக அமைந்துகொண்டது.

தேவநம்பியதீஸன் காலம்தொடக்கம் இலங்கையின் பல பாகங்களிலும் விகாரைகள் அமைக்கப்பட்டன. இலங்கையின் வரலாற்று மரபு சமயச் சார்புடையதாகையால் இவ்விகாரைகளிலேயே அவை வளர்ச்சியடைந்தன. இதனால் வாய்மொழி மரபில் பேணப்பட்ட வரலாற்று மரபு ஒவ்வொரு விகாரையிலும் அதனைப் போதிப்பவரால் புதிய அம்சங்கள் சில இடைச்செருகப்பட வாய்ப்பாக அமைந்தது. மக்களிடையே நிலவிவந்த மரபுக் கதைகள், ஐதிகங்கள், கட்டுக்கதைகள் என்பன பௌத்த சமய வரலாற்று மரபுடன் சேர்க்கப்பட்டமையால் இலங்கையின் ஆரம்பகால வரலாற்று மரபு மேலும் விரிவடைந்தது. இதனால் அவற்றை ஞாபகத்தில் வைத்திருந்து மற்றவருக்குக் கையளிப்பது சிரமமாகக் காணப்பட்டது. எனவே செய்யுளமைப்பு முறையில் கூறப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கதைகளால் அலங்கரிக்கப்பட்ட பௌத்த மத வரலாற்று மரபுடன் தேவநம்பியதீஸன் ஆட்சிக் காலத்திலிருந்து ஆட்சிசெய்தமன்னர்களின் சமயப்பணியும் இடம்பெறலாயிற்று. இத்தோடு மன்னருடைய ஆட்சி நிலை, அவர்களாட்சியில் நடைபெற்ற கலகங்கள், பஞ்சம், நீர்ப்பாசனப் பணிகள் போன்றனவும் கூறப்படலாயின. சமய வரலாற்றோடு அரசியல்வரலாறும் இணைத்துக்கூறப்பட்டமையால் பௌத்த போதனைகளின் (புத்த சாசனத்தின்) முன்னுரையாக மட்டும் அதனை வைத்திருக்க முடியாமையால் முன்னுரையையே தனி நூலாக உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியதெனலாம்.

புத்தர் தம்முடைய போதனைகளை மாகதி என்ற மொழியில் நிகழ்த்தியதாகக் கூறப்படுகின்றது. அவர் மறைந்து இரண்டு நூற்றாண்டுகள் சென்ற பின்பு அவருடைய உரைகள் மாகதி மொழியில் எழுதப்பட்டன. பாளி என்றால் பாதுகாக்கப்படுதல் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. புத்தருடைய உரைகள் பாதுகாக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மாகதி மொழியும் காலப்போக்கில் பாளி என்று கூறப்பட்டது. மொழியியலாளர்கள் பிரகிருத மொழியின் கிளைமொழிகளில் ஒன்றாகப் பாளி மொழியை எடுத்துக் காட்டுகின்றனர். பௌத்தத்தின் வருகையோடு பாளி மொழியும் இங்கு அறிமுகம் செய்யப்பட்டாலும் அது இலக்கியமொன்றை ஆக்குவதற்கான செம்மையான மொழியாக வளர்ச்சியடையவில்லை. திரிபிடகங்களின் முன்னுரையில் ஆங்காங்கு காணப்பட்ட செய்யுட்கள் செம்மையற்ற பாளி மொழியிலேயே அமைந்திருந்தன. இவற்றின் உரைநடைப்பகுதி ஆதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இவ்விரு மொழிகளும் இலங்கையின் வரலாற்று மரபில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் இங்கிருந்த பிக்குகளும் அம் மொழிகளில் சிறந்த தேர்ச்சியுடையவர் களாக விளங்கியிருக்கவில்லை. இந்நிலை யில் வட்டகாமினி அபயன் காலத்திலே (கி. மு. முதலாம் நூற்றாண்டு) முதன் முதலாக வாய்மொழியாகப் பேணப்பட்ட திரிபிடகங்கள் சிங்களமொழியில் எழுதப் பட்டன. இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அக்காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள் பின்னணியாக அமைந்தன.

வட்டகாமினியின் ஆட்சிக் காலத்தில் தென்னகத்தில் இருந்து ஏழு தமிழர் களின் படையெடுப்பு ஒன்று நடை பெற்றதைத் தொடர்ந்து இலங்கையில் அவர்களுடைய ஆட்சி சிறிது காலம் நிலவியது. இத் தமிழர்களுடைய ஆட்சி யிலிருந்து நாட்டை மீட்ட வட்டகாமினி யின் ஆட்சியின் போது கொடிய பஞ்சமொன்றும் நிகழ்ந்தமைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன. இத னால் நகரைவிட்டு மக்களோடு பிக்கு களும் வெளியேறினர். இந் நிலையில் திரிபிடங்களை எழுத்துவடிவில் பேண வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனை விட கி. மு. முதலாம் நூற்றாண்டில் புதிய கொள்கைகள் பௌத்த மதத்தில் புகத் தொடங்கின. பழைய கொள்கைகளுக்கு எதிராக புதிய கொள்கைகள் திரிபிட கத்தில் நுழையாதவாறு தடுப்பதற்கும் எழுதா நிலையிலிருந்து விடுபடவேண்டி இருந்தது. வரிவடிவில் எழுதும் முக்கிய நிகழ்வானது அலுவிகாரையில் நடை பெற்றதாக மகாவம்சத்திலிருந்து அறிய முடிகின்றது. இவ்வேளையில்தான் புத்தரின் போதனைகளின் முன்னுரை யாக விளங்கிய வரலாற்று மரபும் தனி நூலாக ஆக்கப்படுவதற்குரிய சூழ்நிலை யும் தோற்றம் பெற்றது.

இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றியும் அவர்கள் எங்கிருந்து இலங்கைக்கு வந் தனர் என்பது பற்றியும் வரலாற்றறி ஞரிடையே கருத்து முரண்பாடுகள் நிலவு கின்றன. இலங்கையின் ஆதிக்குடிகள் வட இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்று சில அறிஞர்களும், தென்னிந்தி யாவிலிருந்து வந்தவர்கள் என்று வேறு சில அறிஞர்களும் நிறுவ முற்படுவதைக் காணலாம். எவ்வாறாயினும் தென்னிந் தியாவிலிருந்த தமிழர்கள் இலங்கைக்கு அடிக்கடி படையெடுத்து வந்து சில ஆண்டுகள் ஆட்சி நடத்தியுள்ளதை சேனன், குத்திகன், எல்லாளன் போன் றோரின் வரலாற்றிலிருந்து கண்டுகொள் ளலாம். துட்டகாமினி எல்லாளனுடன் மேற்கொண்ட போராட்டமும், அது தொடர்பான நிகழ்வுகளும் தமிழர்களுக் கெதிராக பௌத்தமத அடிப்படையில் ஓர் இணைப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்டதெனலாம். சிறப்பாக பௌத்தம் நிலைபெறுவதற்கான புண் ணிய பூமியாக இலங்கை புத்தரினாலேயே தெரிவுசெய்யப்பட்டது என்ற கருத்தின் பின்னணியில் தர்மதுவீபக் கொள்கை முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவ் உணர்வானது காலப்போக்கில் இந்து சமயத்திற்கு எதிராகவும் பயன்படுத்தப் பட்டது. இவ்வாறான நிகழ்வுகளும் இலங்கையின் வரலாற்று மரபின் நூலுருவாக்கத்தில் செல்வாக்கு செலுத் தியதை அவதானிக்கலாம்.

மேற்படி வளர்ச்சியடைந்த இலங் கையின் வரலாற்று மரபின் அடிப்படை யில் அறியப்படுகின்ற ஒரு நூலாக சீகல அட்டகாதா மகாவம்சம் காணப்படு கின்றது. குருண்டி (Kurndi), மகாபக்காரி (Mahapaccari), அந்த (Andha), சம்கிப ( Samkhepa ) ஆகியவற்றின் விளக்க உரைகள், காலத்துக்குக் காலம் விளக்க உரையாளர் கூறிய விளக்கவுரைகள், சமகால வரலாற்று நிகழ்வுகள் என் பனவும், கதைகள் உபகதைகள் போன் றனவும் இணைக்கப்பட்டு எழுதப்பட்ட நூலாக இது விளங்குகின்றது. வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபின் இன்னொரு தொகுதியாக சேத்தியவம்ச அட்டகாதா, சீமகதா, மகாபோதிவம்ச அட்டகாதா, விநய அட்டகாதா, சகஸ்ஸவத்து அட்டகாதா போன்றன எழுச்சியடைந்தன. இவற்றுக்கு ஆதாரமாக மூல அட்டகாதா அல்லது மகா அட்டகாதா விளங்கியது.

எழுத்து வடிவம் பெற்ற நிலையில் அறியப்படுகின்ற சீஹள அட்டகாதா மகாவம்சம் அநுராபுரத்து மகாவிகாரையிலும் நாட்டின் பிரதான விகாரைகளிலும் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆயினும் காலப்போக்கில் தனித்தனியாக ஏற்பட்ட சேர்க்கைகளினாலும், பிற காரணங்களினாலும் இந் நூல் இடத்துக்கிடம் சில வேறுபாடுகளைக் கொண்டு காணப்பட்டது. பொதுவான உள்ளடக்கத்தையும், அடங்கல் முறையையும் பொறுத்தமட்டில் வேறுபாடுகள் இருக்கவில்லை. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் விகாரைகளில் பேணப்பட்ட வரலாற்று மரபில் இடம்பெற்ற ஆரியர் குடியேற்றத்தோடு தொடர்புடைய விஜயன், பந்துகாபயன் போன்றோர்களின் கதைகளும், புத்தரின் இலங்கை வருகை பற்றிய கதைகளும் இலங்கை வரலாற்றின் ஆரம்பப் பகுதியாக சீஹள அட்டகாதா மகாவம்சத்தில் கூறப்படுகின்றது. மகிந்ததேரரின் பரிநிர்வாணம் இறுதிப் பகுதியாகக் காணப்படுகின்றது. சிற்சில பாளிச் செய்யுட்களை விட இந் நூலின் ஏனைய பகுதிகள் ஆதிச் சிங்கள மொழியிலேயே தெளிவற்ற நடையில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந் நூல் கிடைக்கப்பெறவில்லை.

கேள்வி வழியாகப் பேணப்பட்ட இலங்கையின் வரலாற்று மரபு எழுத்து வடிவத்தைப் பெற்றுக் கொண்டதை அடுத்து அதனை மையமாகக்கொண்டு பல நூல்களை பிற்காலத்தில் எழுதப்பட்டன. இலங்கையின் வரலாற்று மரபானது பௌத்த மதத்தை மையமாகக் கொண்டிருந்தமையினால் பௌத்த மத வரலாறு நாட்டு வரலாற்றோடு இணைந்து வளர்வது தவிர்க்கமுடியாததாயிற்று. இலங்கையின் வரலாறு கூற எழுந்த முதலாவது பாளி நூலாக தீபவம்சமே அறியப்பட்டுள்ளது. விகாரைகளில் பேணப்பட்ட கதை மரபுகளுக்கு இந்நூல் முக்கியத்துவம் அளித்தாலும் இலங்கை வரலாற்று மரபின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, கருப்பொருள் என்பவற்றை விளங்கிக் கொள்ள உதவும் பிரதான சான்றாக உள்ளது. அதேவேளை வரலாற்று மரபினுடைய முதலாவது கட்டத்தையும் இந் நூல் குறித்து நின்றதெனலாம். கி. பி. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட செம்மையற்ற மொழியிலமைந்த, இலக்கணப் பிழைகள் நிறைந்த, தொகுப்பு நூலாகவுள்ள தீபவம்சமே மகாவம்சத்தின் மூல நூல் என்பதனை மகாவம்சத்தின் உரை நூலாகிய வம்சத்த பிரகரணியிலிருந்து அறிந்துகொள்ளலாம். இவ் இரு நூல்களுமே மகாசேனனின் ஆட்சிக்காலம் வரையான செய்திகளைக் குறித்துள்ளன. ஆனால் மகாவம்சமானது தேரவாத பௌத்த மதத்தையும், மகாவிகாரையையும், அவற்றிற்கு ஆதரவு வழங்கிய துட்டகாமினி மன்னனையும் முதன்மைப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். அண்மைக் காலத்தில் இவ்வாறான தன்மைகொண்ட இலக்கியத்தையும், அதனை அடிப்படையாகக் கொண்டெழுந்த பிற இலக்கியங்களையும் அண்மைக் காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் வரை இலங்கையின் வரலாறு கூறும் முழுமையான நூல்களாகவே கருதப்பட்டுவந்தன. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த வரலாற்று ஆய்வின் அணுகுமுறைகள் மகாவம்சத்தின் பக்க சார்பையும், இனமத உணர்வையும், திரிபுபடுத்தலையும் திட்டமிட்டு இவ்வாறான ஒரு நூல் எழுதப்பட்டதையும் தெளிவுபடுத்துகின்றன. இதற்கு இந் நூலாசிரியரான மகாநாமதேரரின் காலச் சூழ்நிலைகளும் அவரது தனிப்பட்ட உணர்வுகளும் காரணமெனக் கூறப்படுகின்றது. பல வகையான குறைபாடுகள் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும் சிங்கள வரலாற்றாசிரியர்களிற் சிலர் அதனை முதன்மையான வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே வலியுறுத்திவருகின்றனர். இருப்பினும் 15 ஆம் நூற்றாண்டு வரை ஈழத்தில் எழுதப்பட்ட பாளி சிங்கள நூல்களுக்கு மகாவம்சம் மூலமாக விளங்கியதை மறுக்கமுடியாது.

சமய நிறுவனங்களில் பேணப்பட்ட குறிப்புக்களையும் அரண்மனையிற்பேணப்பட்ட குறிப்புக்களையும், தத்த வம்சம் கேசதாது வம்சம் ஆகிய நூற் குறிப்புக்களையும்கொண்டு உருவாக்கப்பட்ட இன்னொரு நூல் சூளவம்சமாகும். மகாவம்சம் 36 வது அத்தியாயத்துடன் முடிவடைய சூள வம்சம் 37வது அத்தியாயத்தில் மகாசேனன் என்ற மன்னனின் ஆட்சி தொடக்கம் ஆரம்பித்து 79வது அத்தியாயத்தில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆட்சி வரையிலான வரலாற்றினைக் கூறுகின்றது, இவ்வகையில் மகாவம்சத்தின் தொடர்ச்சியாக சூள வம்சம் கருதப்படுவதைக் காணலாம். பொதுவாக இப் பாளி நூல் மகா வம்சத்தை விடவும் வரலாற்றுத் தன்மையுடைய நூல் என்பது பல அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு இலங்கையின் பௌத்த சமய வரலாற்று மரபு கருக்கொள்ளத் தொடங்கி பின்னர் நாட்டின் பல இடங்களிலும் அமைக்கப்பட்ட விகாரைகளில் பேணப்பட்ட பௌத்தத்தின் வருகை, பரவல் ஆகியன பற்றிய செய்திகள் வாய்மொழி வரலாற்று மரபாக வளர்ச்சி அடைந்து மக்களிடையே வழக்கிலிருந்த மரபுக் கதைகள், கட்டுக் கதைகள் என்பவற்றோடு இணைந்துகொண்டது. அத்தோடு பௌத்த மதத்திற்கு ஆதரவளித்த மன்னர்களின் வரலாறும் கூறப்படத் தொடங்கவே பௌத்த மத வரலாற்று மரபுடன் நாட்டு வரலாற்று மரபும் உள்வாங்கப்பட்டது. கி.மு. 1 ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து வரலாற்று மரபு எழுத்து வடிவத்தினைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறான வரலாற்று மரபின் தொடர்ச்சியை சீகள அட்டகாதா, மகாவம்சம், தீப வம்சம் முதலிய நூல்களிலும் மகாவம்சம், சூளவம்சம் போன்ற நூல்களிலும் அவதானிக்கலாம். இடையிடையே சில நூல்கள் ஆக்கப்பட்டாலும் இலங்கையின் வரலாற்றுமரபின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் மேற்படி நூல்களில் சிறப்பாக விளங்கிக் கொள்ளலாம். அதேவேளை இலங்கையின் வரலாற்று மரபு பௌத்த பிக்குகளினாலேயே பாதுகாக்கப்பட்டு வந்தமையால் பௌத்த சமய வரலாற்றை முதன்மைப்படுத்தும் போக்குந் தவிர்க்கமுடியாததே. மேலும் இலங்கையின் ஆரம்பகால கல்விமையங்களாக விகாரைகளும், ஆசிரியர்களாகப் பௌத்த பிக்குகளும் இருந்தமையால் இவ்வாறான வரலாற்று மரபுப் பேணுகைக்குத் துணை நின்றது. காலப்போக்கில் இந்தியாவிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெற்ற சில நிகழ்வுகளால் இவ்வரலாற்று மரபு தமிழருக்கு எதிராகவும், பெரும்பான்மையாக அவர்கள் பின்பற்றிய இந்து சமயத்துக்கு எதிராகவும் மாற்றமடைந்தமையைக் காணலாம். இவ்வரலாற்று மரபின் நடுநிலையற்ற தன்மையைத் தொல்லியற் சான்றுகள் புலப்படுத்தியுள்ளனவாயினும் தென்னாசிய நாடுகளில் இலங்கையே நீண்டகால தொடர்ச்சியான வரலாற்று இலக்கியங்களின் மூலம் பாதுகாத்துவந்துள்ளதெனலாம்.

உசாத்துணை


1) History of Ceylon, Vol. I — R. C. Ray ( Editor in Chief )
2) Dipavamsa — D. B. C Law
3) History of Pali Literature — D. B. C Law
4) Culavamsa ( translation ) — Willgeim Geiger
5) ' வரலாறு என்றால் என்ன?' சிறிமா கிரியாமுன, சமூக மஞ்சரி, 1960
6) தீபவம்சம், இளங்கதிர், இந்திரபாலா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் இடைக்கால பல்கலைக்கழகங்களுடைய தோற்றம், வளர்ச்சி அமைப்பு முறை

— கா. கமலநாதன்
உதவி விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

மத்தியகால ஐரோப்பாவின் பிரசித்தமான படைப்பு பல்கலைக்கழகங்களாகும். நாட்டுப்பற்று, மொழிப்பற்று காரணமாக அவை நாடுதோறும் தோன்றலாயின. நகரங்களிலும், தலைக் கோயில்களிலும் நிறுவப்பட்டிருந்த பள்ளிகள் விரிவடைந்து பல்கலைக்கழகங்களாய் வளர்ந்தோங்கின. சமுதாயத்தில் மக்கள் சிறந்த வகையில் வாழ விழைந்தார்கள் வாழ்வு சிறக்க அறிவும், அறிவைப் பெறக் கல்வியும் கல்வியை அளிக்கப் பள்ளிகளும் கல்லூரிகளும் தேவை என்ற எண்ணம் இடைக் காலத்தில் உருப்பெற்றது. நாடோடி வாழ்வில் கண்ட சுதந்திரத்தையும், தன்னம்பிக்கையும் நாகரிக வாழ்வில் மலர்ந்த பாதுகாப்பு, கூட்டுறவு, பொருள் வளர்த்திற்கேற்ப உருவாக்குவதே கல்விப்பணியாயிற்று. கற்றுத்தேர்ந்தவர்களே அக்கால வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் முன்னணியில் இருந்தார்களாகையால், கற்கும் வசதிகள் மிகுதியாய்த் தேவைப்பட்டன. கற்போர் எண்ணிக்கையும் கற்பிப்போர் தொகையும் பெருகவே பல்கலைக்கழகங்கள் 11 ஆம் நூற்றாண்டிற்கும் கி. பி 13 நூற்றாண்டுக்குமிடையில் பெருவளியாகத் தழைத்தன.

பல்கலைக்கழகத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகிய "University" என்பது இலற்றீன் சொல்லாகிய "Universitas" என்பதினின்றும் பிறந்தது. நீண்ட இலற்றீன் சொற்றொடரின் குறுக்கமாகிய இச்சொல் ஏறத்தாழ கி. பி 1400 முதல் வழக்கில் இருந்து வருகின்றது. பேராசிரியர்கள் மாணவர்களின் சங்கம் (Guild) என்ற பொருளில் அச்சொல் (Universitas) வழங்கிவந்தது. பின்னர் ஏறக்குறைய ஒரே காலத்தில் 11 ஆம் நூற்றாண்டில் பல்வேறு இத்தாலிய, பிரெஞ்சு நகரங்களில் பல்கலைக் கழகங்களாய் விளங்கவிருந்த பள்ளிகள் தோன்றி எண்ணிக்கையிலும் அளவிலும் வளர்ந்தன. இறையியல் (Theology), தத்துவம் (Philosophy) சமூக சட்டம், திருச்சபைச் சட்டம், மருத்துவம் முதலியவற்றைக் கற்பித்தலே அவற்றின் நோக்கமாகும்.

பல்கலைக்கழகப் படிப்பிற்கும் ஆராய்ச்சிக்கும் கிரேக்கர்களைப் போல உரோமானியர்கள் அவ்வளவு மதிப்போ முதன்மையோ தரவில்லை. ஏதென்ஸ் கல்விக் கழகத்தில் கி. மு முதல் நூற்றாண்டில் சிசரோ (Cicero), ஹோராஸ் (Horace), ஜூலியஸ் சீசர் (Julius Caeser) போன்றவர்கள் மாணவர்களாய் சேர்ந்து சிறிது காலம் கற்றுவந்தார்கள் என்பதனையறிய முடிகின்றது. உரோமப் பேரரசர் ஹேடிரியன் (Hadrian) கி. பி 2 ஆம் நூற்றாண்டில் நிறுவிய அறிவுக் கூடம் கி. பி 5 ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. கிரேக்க அறிவுத் தெய்வத்தின் அதீனா என்னும் பெயரால் அது அதீனியம் என்று வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமப் பேரரசு வீழ்ந்த பின் கான்ஸ்டான்டி நோப்பிளைத் தலைநகரமாய்க் கொண்ட வைசாந்தியப் பேரரசு கிரேக்க கல்வி முறைகளைப் பின்பற்றி கி. பி 425 இல் ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்தது. கி. பி 6 ஆம் நூற்றாண்டில் ஐஸ்டினியன் என்பார் (527 – 565) ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவினார். ஐரோப்பாவில் இடைக்காலத்தில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்களின் எது பழமையானது என்று கூறுவது கஷ்டமாகும். இருப்பினும் மிகவும் பழமைவாய்ந்ததாக தலேனாவில் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகத்தைக் கூறலாம். இதனைப் போன்றே கி. பி 1150 இல் அமைக்கப்பட்ட பொலனியா பல்கலைக்கழகமும் கி. பி 12 ஆம் நூற்றாண்டிலமைக்கப்பட்ட பரிஸ் பல்கலைக்கழகத்தையும் இரண்டாவதாக கூறலாம். இவற்றுக் கடுத்தபடியாக பழமைவாய்ந்ததாக ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ், மொன்ஸ்பொலியர், சலமான்கா, ரோம், நோப்பிள்ஸ் என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஜேர்மனியில் கி. பி 14 ஆம் நூற்றாண்டுவரை பல்கலைக்கழகங்கள் இருக்கவில்லை. ஆனால் இறையியலை போதித்த கல்வி நிலையங்கள் பிறேக், கைடல்போக், கொலோன் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்தது.

இடைக்காலத்தின் தொடக்கத்தில் பள்ளிகளும், அவற்றிற்படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைந்திருந்தன. அதன் இறுதியில் கற்றவர்களின் தொகை கணிசமான அளவு உயர்ந்தது. அக்காலத்தில் குருமார்களே நன்கு கற்றுத்தேர்ந்திருந்தார்கள். இடைக் காலக் கருத்தையும் இலக்கியத்தையும் உருவாக்கி வளர்த்தவர் சமயத்துறையினரே. நகரங்கள் தோன்றி வாணிகத்தினால் வாழ்வுவளம் பெறத் தொடங்கியதும் கல்வித்துறையின் ஆர்வம் பெருகிற்று. நகரப்பள்ளிகள் புத்துயிர் பெற்றன. 11ம், 12ம் நூற்றாண்டுகளில் உயர்தரக் கல்வியைத் தேடி அலைந்தவர்களின் எண்ணிக்கை வளரலாயிற்று. இடைக்காலக் கல்வித்திட்டம் மாணவர்களின் அறிவாற்றலுக்குப் பயிற்சியளித்து அதனை விரிவாக்கி முதிர்ச்சி பெறச் செய்வதையே குறிக்கோளாய்க் கொண்டு வகுக்கப்பட்டிருந்தது. வயிற்றுப்பிழைப்பிற்கான வழிகளைக் கற்பித்தல் அவற்றின்நோக்கமன்று சமயத் தொண்டர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும், மருத்துவர்களுக்கும், ஆட்சிவல்லுநர்களுக்கும் பயிற்சி தருவதற்கே பள்ளிகள் இருந்தன.

இருண்டகால முடிவில் சில கலைத் துறைகளைப் பள்ளியிற்பயில இயலாது போயிற்று. அவற்றைக் கற்றுத்தேற பல் கலைக்கழகங்கள் வேண்டப்பட்டன. புதிய துறைகளிற் பயிற்சிதரப் பல்கலைக்கழகங்களே முன்வந்தன. மேலு கற்கும்முறைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. சமயக் கட்டுப்பாடுகளுக்கு அஞ்சாது சுதந்திரமாய்ச் சிந்திக்கவும் சிந்தித்தவற்றைச் சொல்லவும் எழுதவும் சமயக் கருத்துக்களைத் தாராளமாய் விளக்கவும் பல் கலைக் கழகங்கள் வசதியும், வாய்ப்பும் தந்தன. மாணவர்களும் ஆசிரியர்களும் தனித்தனியே குழுக்கள் அமைத்துக் கொண்டு பாடத்திட்டத்தையும் கற்பிக்கும் முறைகளையும் வரையறுத்துக் கொண்டார்கள். சட்டத்துறை, மருத்துவ துறைகளில் ஈடுபட விழைந்தவர்கள் பல்கலைக்கழகங்களில் உறுப்பினராய் சேர்ந்து கொண்டார்கள். நல்லாசிரியர்கள் பேருரை யாற்றிய இடங்களை மாணவர்கள் நாடிச் சென்று அங்கேயே தங்கிக்கற்கலானார்கள். செல்வக் குடும்ப இளைஞர் வசதியாகவும், ஏழை மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டும் படித்தார்கள். பிற்காலத்தில் மாணவர்கள் வசதியாய் தங்கி படிக்க மடாதிபதிகளும் செல்வர்களும் கல்லூரிக் கட்டடங்களைக் கட்டித் தந்தார்கள்.

இடைக்காலப் பல்கலைக்கழகங்களுடைய அமைப்பு முறையை நன்கு நோக்குகின்ற போது, பல்கலைக்கழகமென்றவுடன் நம் கண்முன் கூடகோபுரங்களுடன் காட்சி தருகிற மாடங்களையும், மண்டபங்களையும், கல்லூரிகளையும், நூலகங்களையும், சொற்பொழிவுக் கூடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், சோதனைச் சாலைகளையும் மனதிற்கொண்டு இடைக்கால பல்கலைக் கழகங்களை மதிப்பிடுவது தவறான தாகும். முக்கியமாக இடைக்கால பல் கலைக்கழகங்கள் இருமாதிரி அமைந் திருந்தன. இத்தாலி, ஸ்பெயின், தென் பிரான்ஸ் ஆகிய இடங்களிலமைந்த பல் கலைக்கழகங்களுக்கு பொலனியா நகரம் தலையாக இருந்தது. இங்கு படித்த மாணவர்கள் தங்களுக்கிடையே ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டார்கள். மேலும் இவர்கள் விரிவுரையாளரை சம்பளத்திற்கமர்த்தி இருந்தார்கள். அது மட்டுமன்றி தங்களது கடமைகளை ஒழுங் காக நிறைவேற்றாத ஆசிரியர்களுக்கு பதவி நீக்கும் அதிகாரத்தையும் பெற் றிருந்தனர். அநேகமாக தென்பகுதியில் இருந்த நிறுவனங்கள் ஒரு லௌகீக தொடர்புடையனவாக பண்புடையன வாக காணப்பட்டன. சிறப்பாக சட்டம், மருத்துவம் என்பவற்றுக்கு அதிக முக் கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அடுத்தமாதிரியான அமைப்பு வட ஐரோப்பாவிலிருந்த பல்கலைக்கழகங்கள் ஆகும். இவை பரிஸ் பல்கலைக்கழகம் போல் மாணவரது சங்கமாக இல்லாது ஆசிரியரது சங்கமாக இயங்கியது. இது 4 பீடங்களைக் கொண்டிருந்தது. கலை, இறையியல், சட்டம், மருத்துவம் என் பனவே அவைகளாகும். இந்தப் பீடங்கள் ஒவ்வொன்றுக்கும் தெரிந்தெடுத்த பீடாதி பதி தலைமை தாங்கினார். வடக்கில் இருந்த பல்கலைக்கழகங்களில் முக்கியத் துவம் பெற்றனவாக கலை, இறையியல் காணப்பட்டது. கி. பி 13 ஆம் நூற் றாண்டின் இறுதியில் பரிஸ் பல்கலைக் கழகம் தொடர்புபடுத்தப்பட்டு பல்வேறு தனிப்பட்ட கல்லூரிகள் ஸ்தாபிக்கப் பட்டன. இவை மாணவர்கள் தங்கிப் படிக்கும் இடமாக இருந்தன. இதை யொத்த அமைப்புமுறை ஐரோப்பிய கண்டத்தின் பல்வேறு பாகங்களிலும் பரவியது. இங்கிலாந்தின் பல்கலைக்கழ கங்களில் ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் என் பன பரிஸ் பல்கலைக்கழகம் மாதிரியாக அமைக்கப்பட்டன. இக் கல்லூரிகள் சுதந்திரமாக அமைக்கப்பட்டன.

தற்காலப் பல்கலைக்கழகங்கள் தங்கள் அமைப்பு முறையின் பெருமளவினை இடைக்காலப் பல்கலைக்கழகங்களிலிருந்து பின்பற்றுகின்றன. ஆனால் கல்விப் போதனை முறைகளும் பாடத்திட்டங் களும் பெருமளவு வேறுபட்டுள்ளன. வர லாறு, இயற்கை விஞ்ஞானம், தூயகணி தம், பண்டைய இலக்கியங்கள் போன் றவை பொறுத்த பாடவிதானங்கள் இடைக்காலத்தில் இருக்கவில்லை. இடைக் காலப் பல்கலைக்கழக மாணவர்கள் முத லிலே 4, 5 வருடங்கள் "திறிவியம்" என அழைக்கப்பட்ட 3 முக்கிய பாடங் களை கற்கவேண்டியிருந்தது. இவைக ளாக இலக்கணம், அணி இலக்கணம், தர்க்கம் என்பனவாகும். இவற்றிலே அவர்கள் சித்திபெற்றால் ஆரம்பப் பட்ட மான B. A. பட்டத்தைப் பெறமுடிந்தது. இது எந்தவித விசேட தகைமைகளையும் கொண்டதல்ல. இதன்பின்பாக பல வரு டங்களைச் செலவழித்து படித்து உயர் பட்டங்களைப் பெறமுடிந்தது. அத் தகைய உயர் பட்டங்களாக M. A.. Doctor of Laws, Doctor of Medicine போன்றன இருந்தன. இந்த Master of Degree பட்டத்திற்கு மேலதிகமாக 3 அல்லது 4 வருடங்கள் கற்கவேண்டியிருந் தது. இந்த நெறியின்போது குவாட் றியம் என்ற 4 முக்கிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெறவேண்டி யிருந்தது. இவைகளாக எண் கணிதம், கேத்திர கணிதம், வானியல், சங்கீதம் என்பனவாகும். இறையியலிலே மேற்படிப்பைப் பெற்று பட்டம்பெறுவ தற்குக் கூடிய காலம் படிக்கவேண்டி இருந்தது. பரிஸ் பல்கலைக்கழகத்திலே 14 வருடங்கள் இப்படிப்பை முடிக்கத் தேவைப்பட்டது. குறைந்தது 35 வருடங் களிற்குப் பின்னர்தான் இப்பட்டங்களைப் பெற வாய்ப்பானது.

இடைக்காலப் பல்கலைக்கழகங்களிலே மாணவனது கல்விநிலை நாம் தற்போது பார்க்கின்ற பல்கலைக்கழகங்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வழிகளிலும் வேறுபட்டிருந்தது. இடைக்கால பல்கலைக்கழக மாணவர்கள் ஒரே தன்மையானவர்களாகவோ அல்லது பல்வேறுபட்ட தேசிய இனங்களைக் கொண்ட குழுவாகவோ விளங்கினார்கள். மாணவரிடையே குறிப்பிடத்தக்களவுக்கு மோதல்கள் முரண்பாடுகள் இடம்பெற்றன. ஒவ்வொரு துறையைக் கற்க ஒவ்வொரு நாட்டவரும் வேறு இடம் செல்ல வேண்டியிருந்தது.

முழுப் பல்கலைக்கழகங்களும் ஒரு சுதந்திர சமூகமாக விளங்கியது. மாணவர்களும், ஆசிரியர்களும் அரசியல் அதிகாரிகளிடையே நியாய ஆதிக்க அதிகார வரம்பிற்குக் கட்டுப்படாதவர்களாகவே விளங்கினர். இந்தத் தனியுரிமையின் விளைவாகவே ஜேர்மனியப் பல்கலைக்கழகங்களிலே சொந்த சிறைச்சாலைகள் கூட காணப்பட்டன. மிகவும் குறைவான மாணவர்களுக்கே நூல்கள் காணப்பட்டது. நூலகங்களிலிருந்து நூல்களை இரவலாகப் பெறுவது அருமையாகவே இருந்தது. அதன் விளைவாகக் கற்பித்தலிலே பிரதிபண்ணும் முறைமை முக்கியத்துவம் பெற்றது. கல்வி முறையிலே மனனம்செய்வது முக்கியமான பண்பாகக் காணப்பட்டது. விரிவுரையின் பின்பாக மாணவர் ஒன்றுகூடி விவாதித்தார்கள். அதாவது இளைஞர்களது கல்வியானது தர்க்க ஞாபகம்மூலம் பெறப்படுவதாகவும் பரந்த வாசிப்பு அல்லது ஆராய்ச்சியிலும் பார்க்க முதன்மை பெறுவதாகவும் இருந்தது. இடைக்காலப் பல்கலைக்கழக மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகள் பற்றி அறிந்திருக்கவில்லை. இன்று போலவே அன்றும் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் நிறைந்திருந்தன. தற்காலப் பல்கலைக்கழகங்களிலே வளர்ச்சியுற்றிருக்கும் தீவிரவாதப் போக்கும், மரியாதையும், அலட்சியம்செய்யும் பாங்கும் இடைக்காலப் பல்கலைக்கழகங்களிலே காணப்பட்டன.

ஆரம்ப காலங்களில் கிறிஸ்தவ நிறுவனங்கள் அறிவுத்துறையை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டிருந்தன. கி.பி. 11ம் 12ம் நூற்றாண்டுகளிலே அந்தக் கட்டுப்பாட்டினை அவை பெருமளவு இழந்து கொண்டன. புதிய வர்த்தக வகுப்பு எழுச்சியும் உலகியல் துறை பொறுத்து மக்களது ஈடுபாடும் அறிவுத்துறை வளர்ச்சியிலே புதிய வளர்ச்சி ஏற்பட உதவி புரிந்தன. கிறிஸ்தவ மத நிறுவனங்களிலிருந்து விலகி புதிய வர்த்தக வகுப்பினருடைய தேவைகளை நிறைவு செய்யும் வகையிலே இப்பல்கலைக்கழகங்களிலே பாடவிதானங்கள் மாற்றியமைக்கப்பட்டன. மதத்துறையிலிருந்து அறிவுத்துறை விலகியதனடிப்படையிலே புதிய பாடவிதானங்கள் பல்கலைக்கழகங்களிடம்பெற்றன.

இவ்வகையில் ஆராய்ந்து பார்க்கின்றபோது ஐரோப்பிய நாடுகளில் ஆரம்ப கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் தோன்றிய பள்ளிகள் மதத்துடனும், மடாலயங்களுடனும் இணைந்து கல்வியை மாணவருக்கு வழங்கிவந்தன. இவை இடைப்பட்ட காலத்தில் நகரங்களின் முக்கிய கல்வி நிறுவனங்களாக மாறிச் சமுதாயத்தில் மக்களுக்கு சிறந்த வகையில் அறிவை வழங்கின. இவ்வாறு இருந்தவையே ஐரோப்பிய வரலாற்றில் கி.பி. 3ம் நூற்றாண்டிற்கும் 13ம் நூற்றாண்டிற்கு இடைக் காலத்தில் பல்கலைக்கழகங்களாகத் தோன்றின. தோன்றியவை ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மாணவர்களின் முயற்சியால் விழுதுவிட்டு வளர்ந்துவந்தன. அவ்வாறு வளர்ந்து வரும்போது அவற்றின் நோக்கங்களும் விரிவடைந்து கலை, சட்டம், மருத்துவம், வான சாஸ்திரம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பல துறைகளிலும் விரிவடைந்து சுதந்திரமான (ஆசிரியர் - மாணவர்) அமைப்பைக் கொண்டனவாக விளங்கின. பட்டங்கள் வழங்கும் கால அமைப்பு, கல்வியை வழங்கும் முறை, மாணவர்களுக்கான வசதிகளை வழங்கும் அமைப்பு போன்றவற்றினைக் கொண்டவையாகக் காணப்பட்டன. தற்காலப் பல்கலைக்கழகங்களுக்கான சகல அமைப்புக்களையும் கொண்டவைகளாகவே இடைக்காலப் பல்கலைக்கழகங்கள் விளங்கின என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

1) FISHER, H. A. L., A HISTORY OF EUROPE, London Edward Arnold & Co, 1949.

2) James Bowen, A History of Western Education, Volume 2, Civilization of Europe, 1975.

3) James Bown, A History of Western Educatien, Volume One, 1972 Methuen & Co Lte.

4) சொக்கப்பா, T. V., ஐரோப்பிய வரலாறு, பாகம் I தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1971.

5) இராஜகோபால், எஸ், ஐரோப்பிய வரலாறு

6) கிறான்ற், ஏ. சே., ஐரோப்பிய வரலாற்றுச் சுருக்கம், இலங்கை அரசாங்கப் பிரசுரம்

7) ஆரோக்கியசாமி, மு., ஐரோப்பிய வரலாறு, பாகம் 1

8) சத்தியசீலன் ச., நாகரிகங்களுக்கு ஓர் அறிமுகம், பாகம் 1 யாழ்ப்பாணம், 1994

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு அழகுண்டு
ஆனால் ஒ வ் வொ ரு வ ரு ம் அதைக்
கண்டுகொள்வதில்லை.

— கன்பூஷியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் மகாயான பௌத்தமும்

— செல்வி வசந்தி பரராஜசிங்கம்
சிறப்புக்கலை
இரண்டாம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

உலக வரை படத்தை நோக்கின் எமது நாடான இலங்கை மிகவும் சிறிய ஒரு புள்ளியைப் போலவே காணப்படுகின்றது. எனினும் எமது நாடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாகவும் தொடர்ச்சியான நீண்டகால வரலாற்றைக் கொண்டுவிளங்கும் சிறப்பையும் உடையது. இதற்குக் காரணம் இலங்கையின் அமைவிடமே ஆகும். அதாவது இந்து சமுத்திரத்தில் இலங்கை ஒரு தீவாக விளங்குகின்றது. பண்டைக்காலம் தொட்டு இலங்கை பல்வேறு நாடுகளுடன் தொடர்புகொள்ளுவதற்கும் அதேவேளை தனித்துவமான பண்பாட்டு அம்சங்களான அரசியல், சமய, பொருளாதார, சமூக கலை, கலாச்சாரம் போன்றன வளர்வதற்கும் தீவாக இருப்பதே காரணம் எனக் கூறலாம். கிழக்குப் புறத்தில் வங்காள விரிகுடாவையும், மேற்குப் புறத்தில் அராபிக் கடலுடனும் தொடர்புபட்ட வகையில் இந்து சமுத்திரத்தின் மையத்தில் இலங்கை அமைந்திருப்பதானது அதனுடைய கேந்திர முக்கியத்திற்கு இடம் அளித்தது. சிறப்பாக வர்த்தக கேந்திர நிலையமாக இத்தீவு விளங்குவதற்கு இவ் அமைவிடமே வழிவகுத்துக் கொடுத்தது போல இந்தியாவில் தோன்றிய பௌத்தம் அங்கு அழிந்துபோனதும் இலங்கையில் அழியாது இன்று வரை நிலைத்து நின்று வளர்ச்சியடையவும் வழிவகுத்துக் கொடுத்ததும் இலங்கையின் அமைவிடமே ஆகும்.

இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் மூலங்கள் பல்வேறு வகைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. வரலாற்று மூலங்களைப் பொறுத்த வரை வரலாறு என்னும் கட்டிடத்தை அமைப்பதற்கு பயன்படும் வரலாற்று மூலாதாரங்கள் அல்லது ஆதாரங்கள் எனப்படும். இம் மூலாதாரங்களில் சான்றுகளின் மூலமாகவே பழைய காலத்து நிலைமைகளை இக்கால மக்கள் பார்வையிட முடிகின்றது. இம்மூலாதாரங்கள், இலக்கியங்கள் எமது மூதாதையர் அவ்வக் காலங்களில் விட்டுச் சென்ற அருங்கலைகளை வெளிப்படுத்தும் தொல்பொருட்கள், பொறிப்புக்கள், நாணயங்கள் என்பன அடங்குகின்றன. இலக்கியங்களில் மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம் ஆகியனவும் பிற சிங்கள நூல்களான நிக்காய சங்கிரக, ராஜாவலி, பூஜாவலி போன்றனவும் குறிப்பிடலாம். இவற்றைக் கொண்டு இலங்கையின் தனித்துவ நிலைமை, வளர்ச்சி, மாற்றம் என்பவற்றை ஆராயமுடிகின்றது.

இலங்கையின் வரலாற்றின் ஆரம்பத்தில் திராவிட மக்கள் தனித்துவமான பண்புகளைக் கொண்டுவாழ்ந்தனர் என்ற கருத்தும், அதேநேரம் இத்தோடு ஆரியரின் வருகையால் பயிர்ச்செய்கை, இரும்பின் உபயோகம், நிலையான குடியிருப்பு உள்ளூராட்சி மன்றங்களின் விருத்தி என்ற வகையில் நன்மைகள் அடைந்ததாகவும் கருதப்பட்ட போதிலும் அவை ஒன்றிணைந்து நிறுவனப்படுத்தப்பட்ட வகையில் மக்களின் பண்பாட்டின் உயர்வுக்கே வித்திட்டது பௌத்த மத வருகை எனலாம். இதன் வருகையால் இலங்கையில் மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி கட்டிடக் கலை, கல்வி, சிற்ப, ஓவிய வளர்ச்சி என்பனவும் மற்றும் அரசியல், சமய, சமூக மாற்றங்கள் என்பன ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதனால் மக்கள் வாழ்க்கையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு பிறநாடுகளுடனான தொடர்புகளும் அதிகரித்தது. இந்த நிலையில் இலங்கையில் தனித்துவம் பெற்றிருந்த தேரவாத பௌத்தத்தின் சில நடவடிக்கைகளின் மூலம் அதற்கு எதிரான, முரணான வகையில் மகாயான பௌத்தம் கொண்டுவரப்பட்டு இலங்கையில் புகுத்தப்பட்டு வளர்ச்சியடையச் செய்யப்பட்டுள்ளமையை அதன் வளர்ச்சி நிலையைக்கொண்டு ஆராயலாம்.

இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தின் பின் மௌரிய சாம்ராச்சியம் மறைய வடமேற்கு கணவாய்க்கூடாக பல சாதியினர் இந்தியாவுக்குள் புகுந்து ஆண்டனர். அவர்களில் குஷானியர் பெஷாவாரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினர். குஷாணப் பேரரசர்களில் கனிஷ்கன் பௌத்த மதத்தை வளர்க்க விரும்பி கி. பி. 120 இல் பெஷாவாரில் ஒரு பெரும் பௌத்த மாநாட்டைக் கூட்டினான். அறிஞர்களான பௌத்த பிக்குகள் கூடிய சபையில் மகாயான பௌத்த மதக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. புத்தர்பெருமான் பிராமணியத்திலிருந்த அனேக கோட்பாடுகளைக் கண்டித்தார். தேவர்களிலும் அவர்கள் வல்லமைகளிலும், நம்பிக்கை, செபங்கள், சடங்கு முறைகள் ஆகியன ஒதுக்கப்பட்டு அற ஒழுக்கமே வற்புறுத்தப்பட்டது. ஆனால் கனிஷ்கன் மாபெரும் சபையைக் கூட்டுமுன்பே புத்த பெருமான் கண்டித்த சில விடயங்கள் பௌத்த மதத்திற்குள் புகுந்திருந்தன. மகாயானபௌத்தம் புத்தர்பெருமானைக் கடவுளாக மதித்து பூ முதலிய காணிக்கைகளை ஒப்புக்கொடுத்ததுமல்லாமல் சிலைகளை வைத்து வணங்கி தங்களுக்கு வேண்டிய வரங்களை அடையலாமென நம்பினார்கள். நிர்வாண நிலையை அடையும் தறுவாயிலுள்ள ஒருவன் உலகில் பிறந்து போதிசத்துவர் ஆகலாம். இவ் இலங்கு நிர்வாண நிலையை எய்துவதிலும் உயர்ந்தது என மகாயானத்தவர்கள் நம்பினார்கள். இன்றும் இவர்களின் போதனையின்படி ஒருவன் புத்தரிடம் அல்லது போதிசத்துவரிடம் வேண்டி அவர்களுக்குப் பூக்கள் முதலிய காணிக்கைகளையும் செலுத்திப் பிரார்த்தனை செய்து இவ் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது ஆதாரங்கள் மூலம் அறியக்கூடியனவாக உள்ளன.

இலங்கைக்கு பௌத்தம் பரவிய காலத்தில் (கி. மு. 247) இந்தியாவில் பௌத்த சங்கத்தில் 18 பிரிவுகள் இருந்தன. அவற்றுள் சிறந்ததும் புத்தரின் போதனைகளை உள்ளவாறு பேணியதுமான தேரவாத பௌத்தமே இலங்கைக்கு வந்தது. இதன் நிலைக்களனாகவும், தலைமைப்பீடமாகவும் இலங்கையில் விளங்கிய மகா விகாரை பிற பௌத்தப் பிரிவுகள் இந்நாட்டிற் புகுந்து மதத் தூய்மையைக் கெடுக்காதவாறு பாதுகாத்து வந்தது. இந்தியாவில் பின்னர் தோன்றிய மகாயான பௌத்தம் கி. பி. 1 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் பரவ முற்பட்டபோதெல்லாம் மகா விகாரையினர் எச்சரிக்கையாக இருந்து புதுக் கொள்கையைப் பரவவொட்டாது செய்தனர். ஆனால் மகாசேனன் காலத்தில் (276 - 303) மட்டும் அவர்களின் முயற்சி வீணாகின. மன்னன்தான் மகாயானக் கொள்கைகளை ஏற்றதுமன்றி அவை பரவவும் துணைசெய்தான். அவனது ஆட்சி முடிவில் மகாவிகாரையினர் தாம் இழந்த நிலையை மீட்டுக்கொண்டனர். அதாவது மகாசேனனுக்குப் பின் சமயத் தகராறுகள் குறைந்தே காணப்பட்டன. மகாயானக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் இலங்கைப் பௌத்தத்துடன் ஒன்றிவிட்டன. கொள்கையளவில் தேரவாத பிரிவை இலங்கை சார்ந்துநின்ற போதும் நடைமுறையில் மகாயானக் கொள்கைகளைக் கைக்கொண்டிருந்தது என்றே சொல்லவேண்டும். இதனாலேயே மகாயானப் பிரிவினருக்கும், மகாவிகாரைக் குழுவினருக்கும் இடையே சச்சரவுகள் 10ம் நூற்றாண்டுக்குப் பின் மறைந்துவிட்டமையை ஆதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாயான பௌத்தம் சார்ந்த புதுக் கொள்கைகள் கொண்ட சமயப் பிரிவை மகாவிகாரைத் தலைமைப்பீடம் ஏற்க மறுத்தது. ஆனாலும் துட்டகாமினி. அபயன் காலத்தில் கி. மு. 1ம் நூற்றாண்டில் பௌத்த சமயம், மகாவிகாரை அபயகிரி விகாரை என இரண்டாகப் பிளவுபட்டாலும் பகைமையின்றி இயங்கி வந்தன. ஆனால் வைதுல்யவாதிகள் எனக் குறிக்கப்படும் மகாயானிகள் முதன் முதலாக வொகாரிகதீஸ மன்னன் காலத்திலேயே இலங்கையில் தலைகாட்டினாலும் மன்னன் மகாவிகாரையின் ஆதரவுடன் நடத்திய மத விசாரணை மன்ற மூலம் இவர்கள் தண்டிக்கப்பட்டு, அவர்களுடைய ஆகமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

மகாயானப் பௌத்த மதம் இந்தியாவில் தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. புத்தரின்போதனைகள் ஒழுக்கம் பற்றியே இருந்ததினால் சமய வழிபாட்டுக்கேற்றதாக அவரது நெறி இருக்கவில்லை. இந்துக்களின் சூழலில் வளர்ந்த பௌத்த மதமும் விரைவில் வழிபாட்டு முறைக்குரிய பல தன்மைகளை இந்துமதத்திலிருந்து பெற்றுக்கொண்டது. உருவ வழிபாடு, பக்தி முறை என்பன பௌத்தத்தில் புகுந்தன. இயல்பாக எழுந்த இம்மாற்றங்களுக்கு பெசவாரில் கூடிய நான்காம் பௌத்த மத மாநாடு தத்துவ வரைமுறைகளைச் செய்து மகாயான கோட்பாடுகளை அறுதியிட்டது. கனிஷ்க மன்னனின் ஆட்சிக் காலத்தில் கூடிய இக்கழகத்தையே மகாயான பௌத்தத்தின் தொடக்கமாகக் கொள்வர். மகாயான பௌத்தத்திற்கு வட திருச்சபை என்ற பெயரும் உண்டு. தென் திருச்சபை என அழைக்கப்பட்ட தேரவாத பௌத்தத்திற்கு மகாயானப் பிரிவினர் ஹீனயான நெறியென்ற பெயரைக் கொடுத்துள்ளனர். போதிசத்துவர் என்ற நிலையை எய்தியும் புத்தரின் நிலையை மனிதகுல மீட்சிக்காகப் பின்போடுவதை மகாயானம் போதிக்கின்றது. அவலோகிதேஸ்வரர் மஞ்சுஸ்ரீ, மெத்தேய என்பவர்கள் இத்தகைய போதிசத்துவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள். இவ்வளர்ச்சிகளால் இந்து மதத்தைப் போன்று பலவகை உருவங்களை மகாயான பௌத்த மக்கள் வழிபடலாயினர், பரிவர்த்தனக் கோட்பாட்டின்மூலம் நாம் செய்யும் நற்செயல்களின் பேறாக உள்ள புண்ணியத்தை மற்றவர்களுக்குக் கிடைக்கச் செய்யலாம் என மகாயான மதத்தவர் கொண்டனர். அறிவால் மட்டுமன்றி பக்தியாலும் வழிபாட்டாலும் விடுதலையை அடையலாம் என அவர்கள் மேலும் போதித்தனர். இவைபோன்ற சில முக்கிய கோட்பாடுகளில் தேரவாதப் பௌத்தப் பிரிவினரினின்றும் வேறுபட்ட மகாயானப் பிரிவினர் இலங்கையில் பல நூற்றாண்டுகள் எதிர்ப்பைப் பெற்றதிலும் வியப்பில்லை.

தேரவாத மதபீடமாக மகாவிகாரைக்கு எதிராக மகாயான பீடமாகப் பிற்காலத்தில் விளங்கிய அபயகிரி விகாரையை நிறுவிய வட்டகாமினியின் ஆட்சிக் காலத்தில் பௌத்த சங்கத்தில் முதல் முதலில் பிளவுகள் தோன்றினாலும் மகாயான அபயகிரி விகாரம் முதன்மையாயுள்ளது. ஒழுக்க விதிகளை மீறியதற்காக மகாதிச தேரர் தண்டிக்கப்பட்டபோது அவரது ஆதரவாளர்கள் சிலர் மகாவிகாரையை விட்டு வெளியேறி அபயகிரியில் வாழலாயினர். இந்தியாவிலுள்ள "வச்சி புத்த" பிரிவைச் சேர்ந்த தம்மருசி என்பவர் இலங்கைக்கு வந்தபோது அபயகிரி விகாரையினர் அவரை வரவேற்று அவரது போதனைகளை ஏற்றுக்கொண்டதனால் தம்மருசி நிகாய என்ற பெயர் அபயகிரிக் குருமார்களுக்கு ஏற்பட்டது. பாதிகதீசன் காலத்தில் அபயகிரி விகாரைக்கும், மகாவிகாரைக்கும் இடையே ஒரு தகராறு மூண்டு அரசனால் நியமிக்கப்பட்ட ஒரு அந்தணனால் தீர்த்துவைக்கப்பட்டது. வொகாரிகதீசன் காலம்வரை மகாயானக் கொள்கைகள் பரவ முற்பட்டதைப் பற்றிய குறிப்புக்கள் மகாவம்சத்திலோ மற்றைய ஏடுகளிலோ இடம்பெறவில்லை. முன்னதாகவே மகாயானக் கருத்துக்கள் இங்கே பரவி இப்போதுதான் வன்மைபெற்றதெனக் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதுல்ய பீடகமே புத்தரில் உண்மைப் போதனைகளைக் கூறுவது எது என்பதனை ஆராய்ந்து முடிவு செய்யும்படி அரசன் அறிக்கை செய்தான். வைதுல்ய பீடகம் புத்தரின் கொள்கைக்கு முரணானது எனக் கபிலன் கூற வைதுல்ய ஏடுகளைத் தீக்கிரையாக்கி மற்ற மதத்திற்கு ஒளி கொடுத்தான்.

வைதுல்ய பீடக நூல்கள் அழிவுற்ற போதும் அவர்களின் ஆர்வம் குன்றவில்லை. அடுத்த 20 ஆண்டுக்குள் கொடாபயன் ஆட்சியில் மீண்டும் வைதுல்யவாதிகள் தலையெடுத்தபோது மன்னன் 5 பிரதான விகாரத்துக் குருமார்களையும் கூட்டி வைதுல்யக் கொள்கைகள் புத்தரின் போதனைகளாக இருக்காது கண்டு அவற்றைப் பின்பற்றிய அறுபதின்மாரைக் குறிப்பிட்டு நாடு கடத்தினான். அவர்கள் காவிரிப் பட்டினத்திலுள்ள விகாரத்தில் தங்கி இருக்கையில் அவர்களுக்கு நேர்ந்தவற்றை அறிந்த சங்கமித்தர் என்ற குருமகா விகாரைமீது பழிவாங்க எண்ணி இலங்கை வந்தார். தன் அறிவாலும், ஆழ் புலமையாலும் மன்னன் மனதைக் கவர்ந்த சங்கமித்தர் மன்னனது குமாரர்கள் இருவருக்கு அறிவுபுகட்டும் பணியில் அமர்ந்தார். மூத்தோனான ஜெட்டதீசன் சங்கமித்தரது போதனைகளுக்கு இடமளிக்க மறுத்தான். இளையவனான மகாசேனன் மகாயானக் கருத்துக்களை ஏற்கும் மனநிலை உடையவனாய் விளங்கினான். கொடாபயன் இறந்து ஜெட்டதீசன் அரசு செய்தபோது சங்கமித்தர் தனது நாட்டுக்குத் திரும்பி 10 ஆண்டுகளின் பின் மகாசேனன் அரசனானதும் இலங்கை மீண்டமையை அறியமுடிகின்றது.

இக்காலத்தில் இந்துமதம் வேள்வியிலும், தெய்வ வழிபாட்டிலும் மூழ்கியிருந்தது. வேள்விசெய்து தெய்வங்களைப் பிரீதிப்படுத்தினார்கள். சிவபெருமான், விஷ்ணு ஆகிய தெய்வங்களை வீடு பேறு அளிக்கும் தெய்வங்களாக வழிபட்டனர். பக்தி மார்க்கம் பரவியது. இதனால் பாதிக்கப்பட்ட மகாயான பௌத்தர்கள் போதி சத்துவ நிலையை அடையக் கூடிய மார்க்கத்தைப் புகழ்வதோடு நில்லாது போதி சத்துவ நிலை அடைந்தோரை வழிபட்டால் அவர்களுடைய அனுக்கிரகம் கிடைக்கும் எனவும் போதித்தனர். எனவே இந்துக்களது கடவுள்களைப் போல பௌத்த சமயிகள் புத்தர்களைத் தெய்வமாக மதித்தனர். இந்துமத செல்வாக்கினால் விஷ்ணு போன்ற இந்து சமயத் தெய்வங்களும் இடம் பெற்றதால் மகாயான பௌத்தம் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

சீலகாலன் என்பவனால் கேசதாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு அதற்குத் தனி விழாக்களும், வழிபாடுகளும் நடந்தன. சீலகாலன் மன்னனாக ஆட்சி நடத்திய காலத்தில் தம்மதத்து என்னும் மகாயான ஆகமம் கொண்டுவரப்பட்டது. சீலகாலன் அதனை வெறுமனைபாக அக்கறையின்றி வரவேற்றதுமன்றி இதன் வருடாந்த விழாப் பொறுப்பை ஜெதவனராம விகாரையிடம் ஒப்புவித்தான். இதனால் சீலகாலன் காலத்தில் அபயகிரி விகாரை புனிதப்படுத்தப்பட்டதும் மகாயான பௌத்த மதத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

கோதாபயன் காலத்தில் மீண்டும் மகாயானம் இலங்கையில் புக எடுத்த முயற்சிகள் நசுக்கப்பட்டாலும் மகாசேனன் காலத்தில் மன்னன் ஆதரவுடன் சங்கமித்தர் தலைமையில் இலங்கையில் மகாயானம் இடம்பெற்று 10 ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியுற்றமையானது எவராலும் மறுப்பதற்கில்லை. மகாசேனனுக்குப் பின் சிம்மாசனம் ஏறிய அவன் மைந்தன் கீர்த்தி ஸ்ரீ மேகவண்ணன் காலத்தில் மகாயான வழிபாட்டாளருக்கு வழிபாட்டுப் பொருளான தந்த தாது கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்தது. மகா விகாரை தந்த தாது வழிபாட்டிலும் ஊர்வலத்திலும் பங்கெடுக்க மறுக்க அபயகிரி விகாரையிலிருந்த மகாயான வழிபாட்டாளர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட மக்களின் ஆதரவு அபயகிரிக்கு பெருமளவில் கிடைத்தது. குப்தர்கால இந்துமத மறுமலர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் இந்துசமயத்திடம் பெற்ற புது வழிபாட்டு முறைகள் பக்திமார்க்கம் மகாயானத்திலும் கலந்ததால் மக்களின் மனதைக் கவரக்கூடிய பல வழிபாடுகள் விழாக்கள், காணிக்கைகள், சிலை வணக்கங்கள், பிரித்தோதும் வழக்கம் இடம்பெற அபயகிரி விகாரைக்குத் தனி மதிப்புத் தோன்ற மகாயானம் வளர்ச்சியுற்றது. கி.பி. 412ல் இலங்கை வந்த சீன யாத்திரிகனான பாஹியான் அக்காலத்தில் அபயகிரி விகாரையே முக்கிய விகாரையாக விளங்கியதென தனது குறிப்புக்களில் குறித்ததிலிருந்து மகாயானத்தின் செல்வாக்கு புலனாகின்றது. அபயகிரி தூபிகை புத்தரின் காலடிச் சுவட்டின்மேல் கட்டப்பட்டதென்றும் அக்காலத்தில் நம்பப்பட்டது. இவ்விகாரையிலும் பரிசுத்த வெள்ளரசுக்கிளை ஒன்று நாட்டப்பெற்றிருந்தது. அரசமரத்தடியில் 22 அடி உயர புத்தரின் சிலை அபயகிரி விகாரையில் 5000 பிக்குகளும், மகா விகாரையில் 3000 பிக்குகளும் இருந்தார்கள். பாஹியானுடைய குறிப்பிலிருந்து மகாயானத்தில் காணப்பட்ட வழிபாட்டு முறைகளாலும், ஆடல் பாடல் முறைகளினாலும் அனேக மக்கள் கவரப்பட தேரவாதத்திலும் கூடிய ஆதரவு மகாயானத்திற்கு இக்காலத்தில் கிடைத்தது என அறியமுடிகின்றது. இக்காலத்தில் அனுராதபுரியிலிருந்த மூன்று விகாரங்களில் மகாவிகாரை ஒன்றே தேரவாத மையமாக இருந்தது. அபயகிரி விகாரையிலும் காலமேவன் எனும் அரசன் காலத்தில் ஜெதவனராம விகாரையிலும் மகாயானம் இடம்பெற்றது. புத்தருடைய உருவச் சிலைகளும், போதி சத்துவருடைய சிலைகளும் புத்தருடன் தொடர்புள்ள புனித தாதுக்களும் அபயகிரி, ஜெதவன விகாரைகளில் அதிகமாகக் காணப்பட்டன. மகாயான மத விகாரைகளில் வழிபடப்பட்டவர்கள் மகா விகாரைக்குச்சென்றபோதெல்லாம் அங்கிருந்த வெள்ளரசு, பிச்சைப்பாத்திரம் போன்றவற்றையும் வழிபடத் தொடங்கினர். எனவே வேறுபட்ட கொள்கை பூண்டிருந்தாலும் மகாவிகாரைப் பிக்குகள் மகாயான மத வழிபாட்டுக்கும், சடங்குகளுக்கும் தமது விகாரையில் இடமளித்தனர் என்பதிலிருந்து மகாயான பௌத்த மதம் தேரவாதத்துடன் சமனாக வளர்ச்சியடைந்தமையைக் காணலாம்.

மகாசேனனது ஆட்சி மகாயான பௌத்தத்திற்கு பெரு வெற்றிகள் கிட்டிய காலமாகும். இந்தியாவிலிருந்து மீண்ட சங்கமித்ததேரர் மகாவிகாரையையும் ஏனைய விகாரைகளைச் சார்ந்தோரையும் மகாயானக் கொள்கைகளை ஏற்கும்படி மன்னனை வற்புறுத்தச் செய்தார். அவர்கள் மறுக்கவே அவ் விகாரைப் பிக்குகளுக்கு ஐயமிடுவோருக்கு 100 காசு தண்டம் விதிக்கப்படுமென மக்களுக்கு அறிவிக்கச் செய்தார். மூன்று நாட்களாக ஐயம் பெறாமையால் நான்காம் நாள் லோகபாதவில் கூடித் தவறான கொள்கைகளை ஏற்பதைவிட சாவை ஏற்பது மேலானது என உறுதிபூண்டனர். தம் விகாரங்களை விடுத்து உறுகுணைக்கும், மலையகத்திற்கும் அவர்கள் செல்லவே மகாவிகாரைக்குரிய பல கட்டிடங்களை சொண என்ற அமைச்சரின் துணையுடன் சங்கமித்தர் அவற்றைப் பாழ்படுத்தி அங்கு பெறப்பட்ட பொருட்களை அபயகிரி விகாரையை அழகு செய்யப்பயன்படுத்தினார். மேகவண்ண அபயன் என்ற அமைச்சனொருவன் தலைமையில் உருவான எதிர்ப்பையும் அவ் அமைச்சனின் நல் எண்ணத்தையும் கண்டு மனம்மாறிய மகாசேன மன்னன் மீண்டும் மகாவிகாரையை ஆதரித்தது மட்டுமன்றி அழிவெய்திய கட்டிடங்களைப் புதுப்பிக்கவும் ஏற்பாடுகள் செய்தான். சங்கமித்தரும், சொணவும் முறையே பட்டத்தரசியின் சூழ்ச்சியாலும் ஆத்திரப்பட்ட மக்களாலும் கொல்லப்பட்டனர். மகாசேனன் ஜெதவன விகாரத்தை மகாவிகாரை எல்லைக்குள் நிறுவி தன் நண்பரான ஜெகன் தீசனுக்கு வழங்கினான். இவ் விகாரமும் பிற்காலத்தில் வைதுலயக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டது. இவ்வாறு மகாசேனன் காலத்தில் மகாயானக் கொள்கைகள் அரசனது ஆதரவினைப் பெற்று வளர்ச்சியடைந்தது.

3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசேனனுக்குப் பின் இவ் இரு பிரிவினர்களுக்கும் சமர்கள் நிகழாது போனமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை மகாயானப் பிரிவினர் நிலையாக அபயகிரி விகாரையில் வாழ்ந்து வந்தனர். மன்னர்கள் இருபிரிவினரையுமே ஆதரித்து ஒரு வகையான நடுவுநிலைமையைப் பேணினார்கள். தன் தந்தை செய்த பல அழிவுகளை நிவர்த்தி செய்த ஸ்ரீ மேகவண்ணன் தந்ததாதுவை ஆண்டுதோறும் அபய்கிரிக்கே எடுத்துச் செல்லுமாறு செய்தான். 6ம் நூற்றாண்டில் சிலகாலனது ஆட்சியின் போது ஜெதவன விகாரைக் குருமார்கள் மகாயானத்தை ஏற்றுக் கொண்டமையினால் அவன் அபயகிரி விகாரைக்கு சார்பாக நடந்துகொண்டான் என்பது தெரிகின்றது. இவனது சில நடவடிக்கைகளால் மகாயானம் மேலும் வளர்ச்சியடைந்தது. இம் மன்னன் முன்னதாக வட இந்தியாவிற்கு சென்று புத்தகாயாவில் பௌத்தத்துறவியாக வாழ்ந்த போது மகாயானக் கருத்துக்களால் கவரப்பட்டிருக்கக்கூடும். 7ம் நூற்றாண்டின் அறுதிக்காலத்திலும் 8ம் நூற்றாண்டிலும் மகாயானப் பிரிவினைச் சேர்ந்த புகழ்வாய்ந்த அறிஞர்களான கஷ்மீர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த குணவர்மன் வஜிரபோதி, அமோகவர்ஷர் இலங்கை வந்து அபயகிரி விகாரையில் தங்கிச் சென்றமையால் அதன் புகழ் இன்னும் அதிகரித்தது. இவர்களின் வருகையால் மகாயானக்கொள்கை மேலும் இங்கு நிலைபெற்றது எனலாம். 8ம் நூற்றாண்டுக்குப் பின்னரும் இங்கு மகாயானக் கொள்கைகள் வலுப்பெற்று வந்தன என்பதனை இலக்கியச் சான்றுகள் மட்டுமன்றி அக்காலக் கல்வெட்டுக்களினாலும் மகாயனக் கடவுளரில் உருவங்களினாலும் அறிந்து கொள்ள முடிகின்றது. சோழர் இலங்கையைக் கைப்பற்றிய வரையில் அபயகிரி, ஜெதவன விகாரைகளில் மிக அதிகமான குருமார்கள் வசித்து வந்தனர். மகாசேனனுக்குப்பின் மகாயானக் கொள்கைகள் நிலைத்துவிட்டன என்றே கூற வேண்டும். அரசர்களின் நடுவு நிலையைப் பயன்படுத்தித் தம் கொள்கைகளை வளர்த்து வந்தனர். அபயகிரிக் குருமார்கள் மகாவிகாரையினருமே மகாயானக் கோட்பாடுகள் சிலவற்றை ஏற்றுவிட்டதால் அவர்களின் எதிர்ப்பும் பொருளற்றதாகிவிட்டது. இதிலிருந்து மகாயானம் தேரவாத ஆதரவைப் பெற்று வளர்ச்சியடைந்தது சிறப்புடையதே.

மேலும் தந்ததாது, கேசதாது, தம் மதத்திற்கு மட்டுமன்றி போதிமரம், தூபிகள், ஆகியவற்றிற்கும் விழாக்கள் எடுக்கப்பட்டன. போதிவிருட்சத்தை நீராட்ட வருடா வருடம் ஸ்ஞான பூஜா ஒன்று கொண்டாடப்பட்டது. அதில் மன்னரும் மக்களும் பங்கு பற்றினர். நீண்ட கால வரட்சி, பஞ்சம், கொள்ளை, நோய்க் காலங்களிலும் தெய்வங்களைச் சாந்திப் படுத்த விழாக்கள் கொண்டாடப்பட்டன. கௌதம புத்தரின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட விழாக்களும் அதில் இருந்தமையும் மகாயான பௌத்தத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே முடிவாக எமக்குக்கிடைத்த சான்றாதாரங்களுடன் மகாயான பௌத்தத்தின் வளர்ச்சியினை ஆராயும்போது 10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த சோழர் படையெடுப்பாலும் அதன் பின் 77 வருடகாலம் *(993-1070)* அவர்கள் கீழ் அடிமையாகக்கப்பட்டிருந்தாலும் பழைய தேரவாத பௌத்த மதமும் புதிய மகாயான பௌத்தமதமும் ஒருங்கே வீழ்ச்சியுற்றன. எனினும் மீண்டும் விஜயபாகுவால் புனருத்தாரணம் பெற்று பராக்கிரமபாகுவால் தேரவாத தலைமையின் பிளவுகள் ஒற்றுமையாக்கப்பட்டு ஒரே கொள்கையடிப்படையில் பௌத்தமதம் ஸ்தாபிக்கப்பட்டது. கி. மு. 3ம் நூற்றாண்டு முதல் கி. பி. 10 ம் நூற்றாண்டு வரை இலங்கை மக்களின் சமய வரலாற்றில் தனிப்பெரும் கவர்ச்சிகரமான அம்சங்களைப் புகுத்தி மன்னரதும், மக்களினதும் ஆதரவினைப் பெற்ற மகாயானம் இன்று அழிந்துபோனாலும் அது சமயத்தில் புகுத்திவிட்ட விக்கிரக வழிபாடுகள், சமயச்சடங்குகள். ஆராதனைகள் காணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள், விழாக்கள், ஊர்வலங்கள், பிரித்ஓதும் வழக்கம், போன்ற மகாயான வழிபாட்டுமுறைகள் இன்றும் அழியாத வழக்கில் இருப்பது அதனுடைய தனிப் பெரும் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது என்பதில் சந்தேகமில்லை.

உசாத்துணை நூல்கள்

1. இலங்கையின் சுருக்க வரலாறு : by எச். டபிள்யு கொட்டிங்ரன்
2. இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும் by கு. தனபாக்கியம்

சுதந்திரமாகப் பிறந்த மனிதன்; எங்கெங்கு நோக்கினும் சங்கிலிகளால் தளையிடப்பட்டிருக்கின்றான்.

— ஜீன்ஜோகியூஸ்ரூசோ

எந்த நினைவு உன்னை அதிகமாகத் துன்புறுத்துகின்றதோ அதற்குப் பெயர்தான் பசுமையான நினைவு

— கண்ணதாசன்

உயர்ந்த இலட்சியத்துக்காக உயிர் துறப்பவர் ஒரு நாளும் தோற்பதில்லை.

— பைரன் பிரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியக் குடாநாட்டின் மறுமலர்ச்சிக்கு ஏதுவாகயிருந்த காரணிகள்

— பொன்னையா வாகீசன்
சிறப்புக்கலை
மூன்றாம் வருடம்

15-ம் நூற்றாண்டிலே இத்தாலி பெரிதும் அசாதாரண முறையிற் காட்சியளித்தது. அதற்குக் காரணம் அது அறிவியற்துறையில் மற்றைய நாடுகளைவிடச் சிறந்து விளங்கியமையே ஆகும். அக்கால கட்டமானது மறுமலர்ச்சி அங்கு பூரணமாய் தொடங்கிவிட்ட தென்றே சொல்லவேண்டும். 15வது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மறுமலர்ச்சி காலத்தைக் கணக்கிடலாம். இக் காலத்தின் தொடக்கமே நவீன ஐரோப்பாவின் தொடக்கமாகும். இதுவே இடைக்காலத்தின் முடிவுமாகும். மறுமலர்ச்சி என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது "பழமையை மீண்டும் போற்றினார்கள்" என்பதாகும். இது வரலாற்று வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது உண்மையாகவே இருக்கிறது. ஏனெனில் அவர்கள்போற்றிய பழமை இடைக்காலப் பழக்கவழக்கங்களில் இருந்து தோன்றிய தொடர்ச்சியன்று. அல்லது இடைக்காலத்தில் தோன்றிய கலையையோ அல்லது இலக்கியத்தையோ அடிப்படையாகக் கொண்டு தோன்றிய புதிய இயக்கமன்று. இடைக்காலத்திற்கு முற்பட்ட பழைய கிரேக்க இலத்தின் காலத்தில் தோன்றியுள்ள நாகரிக வழக்காறுகளையும் மரபுகளையும் கலைகளையும் இலக்கியங்களையும் ஐரோப்பிய மக்கள் போற்ற முற்பட்டனர். அதன் விளைவாக ஏற்பட்டதே இத்தாலிய மறுமலர்ச்சியாகும்.

இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்கிய காரணிகளில் நீண்டகால காரணிகளை எடுத்துக் கொண்டால் இத்தாலிய அமைவிடம் அதன் காரணமாக 12ம் நூற்றாண்டில் இருந்து ஐரோப்பிய வர்க்கத்தில் ஏற்பட்ட விருத்தி, அச்சுக்கலையின் வளர்ச்சி, சிற்பம், ஓவியம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களின் தோற்றம் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், விஞ்ஞானத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான கருத்துக்கள், இலக்கியத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம், மனிதாபிமான இயக்கத்தின் [Humanism] தோற்றம், தாய்மொழியில் ஏற்பட்ட பற்று, புதிய நாடுகளைக் கண்டுபிடித்தமை, கத்தோலிக்கத் திருச்சபையின் தளர்வு, கப்பல் கட்டும் துறை விருத்தி அடைதல், சிலுவைப் போர்கள் ஏற்பட்டமை போன்றவற்றுடன் உடனடிக் காரணமாக கூறத்தக்கது. கொன்ஸ்தாந்திநோபிள் கி. பி. 1453 ல் கைப்பற்றப்பட்டமையாகும். இக்காரணங்களே மறுமலர்ச்சி இத்தாலியில் தோன்ற துணைபுரிந்த காரணங்கள் எனலாம்.

இத்தாலிய நகர அரசுகள் மத்தியதரைச் கடற்பகுதியில் அமைந்திருந்தமை காரணமாகவும் உரோமானிய பாரம்பரியங்களை கொண்டிருந்தமை காரணமாகவும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்களவு கிரேக்க குடியேற்றங்களுக்கு இடமளித்ததன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகவும் இத்தாலி தனித்துவமான பல அம்சங்களை தன்னகத்தே கொண்டிருந்தது. இவற்றோடு மத்திய காலத்தில் இலத்தீன் திருச்சபையின் மையப் பகுதியாகவும் இப்பகுதியே விளங்கியது. இப்பகுதியில் வட ஐரோப்பாவைப் போல் நிலமானிய நிலப் பிரபுத்துவ கட்டுப்பாடுகள் பலவீனமான நிலையில் இருந்தது. இவற்றின் காரணமாக இத்தாலிய குடாநாட்டில் பெருமளவிலான வேறுபட்ட அளவினைக் கொண்ட நகர்கள் எழுச்சி பெறுவதற்கு வாய்ப்புக்கள் இருந்தன. இதன் விளைவாக இத்தாலிய மக்கள் அவர்களுடைய பழம்பெருமையைப் போற்றி வந்தனர். பழைய சாதனைகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தனர். அதனால் புதியதொரு கலையையும் இலக்கியத்தையும் அவர்கள் உருவாக்கவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களாக இருந்தனர், எப்படி பிரஞ்சு அரசியல் வளர்ச்சிக்குத் தாயகமாகவும் ஜேர்மனி சமயப் புரட்சிக்கு இருப்பிடமாகவும் இருந்ததோ அதைப் போன்று இத்தாலி சிந்தனைப் புரட்சிக்குத் தாயகமாக இருந்ததெனலாம்.

இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த சிறப்பம்சங்களை நோக்கின் அழகைப் போற்றுதலும் பகுத்தறிவை மதித்தலும் மனிதவுரிமைகளைப் பாதுகாத்தலும் புதியதுறைகளில் வளர்ச்சியை நாடுவதில் மகிழ்வுறுதலும் துணிச்சலான பயணங்களும் முன்னேற்றமான கண்டுபிடிப்புக்களும் சிறப்பான இயல்புகளாகும். மக்களின் உள்ளப்பண்பாடும் புதிய வாழ்க்கையில் மேம்பாட்டையச் செய்யும் வளர்ச்சிகளும் அக்காலத்தில் மிகவும் சிறப்பாகப் போற்றப் பெற்றன. மக்கள் எதையும் மூடத்தனமாக நம்பி வாழ்ந்த காலம் மறைந்து வந்தது. அரசர்களும் அதிகாரிகளும் சமயவாதிகளும் கூறுவதை அப்படியே மக்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தமை இத்தாலிய மறுமலர்ச்சியின் சிறப்பம்சம் எனலாம்.

அத்துடன் அவர்கள் கூறுவதற்கு மக்கள் விளக்கம் கோரினர். அவர்களது ஐயப்பாடுகளைத் தெளிவாக்கிக் கொள்ள ஏன்? எதற்கு? எப்படி? என்ற பலவினாக்களைத்தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்துடன் இருந்தனர். உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடையே மிகுந்துவிடவே அவர்கள் இயற்கையாகவே அறியாமையிலிந்தும் சமய நம்பிக்கையிலிந்தும் மூடநம்பிக்கைகளிலிந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற முற்பட்டனர். இவைகள் தான் இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றக் காரணமாகியது.

மறுமலர்ச்சி புலர்ந்த இடமென்று நோக்கின் முதலில் இத்தாலிய சிறு நகரங்களிலிருந்து தோன்றி பிற ஐரோப்பிய நாடுகளிலும் பரவத்தொடங்கின. இத்தாலியில் அப்பொழுது பல நகரங்கள் சுயேச்சை பெற்ற தனி நகரங்களாக விளங்கின. ரோம், வெனிஸ், ஜெனோவா பீஸா, புளோரன்ஸ் ஆகிய நகரங்கள் மிகவும் புகழ் பெற்ற குடியரசு நகரங்களாக இருந்தன. இந்நகரங்கள் சுதந்திரமாக இயங்கிய காரணத்தாலும் பல அறிஞர்களையும் கலைஞர்களையும் அந் நகரங்களிலுள்ள பிரபுக்களும் சீமான்களும் ஆதரித்துவந்ததாலும் அங்குதான் முதலில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியதெனலாம்.

இவற்றை விரிவாக நோக்கின் 12ம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பிய வர்த்தகத்தில் ஏற்பட்ட விருத்தியும் அதற்கு வாய்ப்பாக காணப்பட்ட புவியியல் அமைவும் மிக முக்கிய காரணமாகும். வெனிஸ், புளோரன்ஸ் முதலிய நகரங்கள் சிறந்தவாணிப நகரங்களாகத் திகழ்ந்தன, வெனிஸ் நகரின் முழுவலிமையும் அதன் வணிகத்திலேயே தங்கியிருந்தது. கிழக்கும் மேற்கும் சந்திக்கும் முனையாக வெனிஸ் விளங்கியது. நன்னம்பிக்கை முனையானது கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே கிழக்கு நாடுகளின் வாணிபப் பொருட்கள் முதலில் வெனிசிற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. ஜேர்மனி பிரான்ஸ் இவற்றுக்கிடையிலான ஐரோப்பிய வாணிபத்தால் வெனிஸ் நாட்டுத் துறைமுகம் அவ்வழியாற் செல்லும் பொருட்கள் யாவற்றாலும் பெருலாபத்தினைப் பெற்று செல்வ நகரங்களாக விளங்கின, இதனால் அங்கு செல்வமிக்க வணிகக் குடும்பங்களும் தோற்றம் பெறுகின்றன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டே இத்தாலியில் மறுமலர்ச்சி தோற்றம் பெற்றது.

இத்தாலி நாடானது இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளைப் போலல்லாது பிற வழிமுறைகளில் முன்னேறிக்கொண்டிருந்தது. அந்நாடுகளின் அரசியல் சக்திகளில் ஒற்றுமை ( Poltical Unity ) ஒருமைப்பாடு என்பன காணப்பட்டன. ஆனால் இத்தாலி நாட்டிலோ அரசியல் ஒற்றுமை என்ற பேச்சே எழவில்லை. அத்துடன் தமது விருப்பத்தினை மற்றைய அரசுகளின் மீது திணிக்கும் பலம்கூட இத்தாலிக்குஇருக்கவில்லை. அதற்குப் பதிலாக பல சுதந்திர அரசுகளைக் கொண்ட ஒரு புவியியற் கூறாகவே இத்தாலி காணப்பட்டது. இதன் பயனாகத்தான் முதன் முதலில் இத்தாலியில் மறுமலர்ச்சி தோற்றப் பெற்றதென கூறமுடியும்.

இத்தாலியானது பழைய உரோம நாகரிகத்தின் மையமாக விளங்கியது. எனவே உரோம நாகரிகத்தின் பல அம்சங்கள், எச்சங்கள் அங்கு காணப்பட்டன. அத்துடன் புகழ்பூத்த புராதன கால அறிவுக் கல்வி இம் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. இவ் அறிவித்துறைசார்ந்த மறுமலர்ச்சியானது தானாகவே தோன்றிப் படிப்படியாக வளர்ந்ததாகும் அக்காலத்தில் கிரேக்க இலக்கியத்தில் நல்ல பயிற்சி இல்லாமையால் நல்ல ஆசிரியர்கள் கிடைப்பதரிது. எனினும் பார்லாம், லியோன்டியல் போன்றோர் கிரேக்க மொழியை கற்றுக்கொடுக்க முனைந்த சிறந்த ஆசிரியர்களாவர். இவர்களிடத்தில் படித்தவர்கள் தான் பெட்ராக் பொக்காசியோ ஆகியோராவர். பெட்ராக் என்பவர் மனிதாபிமான இயக்கத்தின் தந்தையாவர். மனிதாபிமான இயக்கத்தின் விளைவாக ஐரோப்பாவின் கிரேக்க இலக்கியங்களில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியது. இதனால் கிரேக்க மொழியில் ஆர்வம் படைத்தவர்கள் கிரேக்கலத்தின் மொழிகளில் எழுதப்பெற்ற பழைய கையெழுத்துப் பிரதிகளை தேட முற்பட்டனர். தேடி எடுத்த நூல்களை பிரதியெடுத்து பிரபுக்களுக்கும் நூல் நிலையங்களுக்கும் நல்ல விலைக்கு விற்கப்பட்டது. எங்கு பார்த்தாலும் நூல் நிலையங்கள் தோன்றின. இத்தாலியில் புளோரன்ஸே முதலில் இப்புதிய கல்வியின் இல்லமாக அமைந்தது. எனினும் இக்கல்வி நானாதிசைகளிலும் பரவிற்று. வெளிசிலும் இக்கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டதுடன் இத்தாலிய மறுமலர்ச்சிக்கும் காரணமாகியது.

நாளடைவில் இந்த மனிதாபிமான இயக்கம் வலுவடைந்து நாகரிகத்தின் சின்னமாகக் கருதப்பெற்றது. இதனால் போப்பாண்டவர்களும் இவர்களை மதிக்கத் தொடங்கினர். 5வது நிக்கலஸ் என்ற போப்பாண்டவர் இந்த இயக்கத்தை கண்டிக்காது பல கிரேக்க இலத்தீன் நூல்களை நூல் நிலையத்தில் வைக்க ஏற்பாடுகள் செய்தார். இந்த இயக்கம் முன்போலக் கண்மூடித்தனமாக எல்லா கிரேக்க இலத்தீன் நூல்களையும் வானளாவப் புகழாமல் அவற்றைத் திறனாய்வு செய்ய முற்பட்டனர். அத்துடன் பல கிரேக்க கல்விக் கூடங்களும் ஐரோப்பிய நாடுகளில் நிறுவப் பெற்றன. இவையாவும் இத்தாலிய மறுமலர்ச்சியை வலுவடையச் செய்தன.

அடுத்து அச்சுக்கலையின் வளர்ச்சியே மறுமலர்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாகும். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த யோன் கூற்றன் பேர்க் (கி. பி. 1398 – 1468) அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்ததன் விளைவாக பல நூல்கள் அச்சிடப்பட்டது. அத்துடன் கடுதாசி கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பாலும் கல்வி பரவுவதற்கு வழி வகுத்தது. இல்லாவிடில் பல இலக்கியங்கள் பாமர மக்கள் படிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்கும். உண்மையில் மறுமலர்ச்சி இயக்கம் எல்லா ஐரோப்பிய நாடுகளுக்குக் சொந்தமானதென்றாலும் இத்தாலிய மக்கள்தான் இந்த இயக்கத்திற்கு அதிக ஆதரவு கொடுத்தனர் எனலாம். எனவே அச்சியந்திரத்தின் வருகையும் அதனால் விவிலியம் முதலிய நூல்கள் அச்சுவாகனம் ஏற்றப்பட்டமையைத் (1455) தொடர்ந்துதாய்மொழியைவிட கிரேக்க இலத்தீன் மொழியில் ஆர்வம் பெருக அதுவே இத்தாலிய மறுமலர்ச்சிக்கு வித்திடகாரணம் என்பதோடு இதனுடன் இணைந்து பிரதேச மொழிகளும் வளர்ந்தன.

கலை வளர்ச்சி என்னும் போது இலக்கிய வளர்ச்சி எப்படி முதலில் இத்தாலிய நகரங்களில் தோன்றியதோ அதைப் போன்றே கலை, சிற்பம், ஓவியம் ஆகியவை முதலில் இத்தாலிய நகரங்களில் தான் சிறப்படைந்ததெனலாம். அக்காலத்தில்மிகச் சிறந்த கலைஞர்களாக போட்டிசில்லி [Botticelli] Leonardo Dav--inci [கி. பி 1452- 1519] இவரது ஓவியங்களில் Monalisa Last Supper என்பவை இன்றளவும் புகழ்பெற்றவையாகும். மேலும் Raphael, Michael Angelo போன்றோர் இத்தாலிய நகரங்களில் தோன்றியவர்களேயாவார். இவர்கள் படைத்த ஓவியங்கள் கண்ணைக் கவராது மட்டுமல்லாது கருத்துக்கள் பொதிந்தவையாகவும் காட்சியளித்தன. குறிப்பாக மெடிச்சி குடும்பத்தவரது ஆடம்பர விருப்பங்கள் இக்கலை வளர்ச்சிக்கு உதவின. புலனுகர்ச்சி இன்பங்களை விரும்பும் இத்தாலியச் சமுதாயத்தின் விருப்பத்திற்கிணங்க இக்கால சிற்பங்களோ, சித்திரங்களோ படைக்கப்பட்டன. இவ்விதமாக அழகும் கருத்தும் ஒருங்கே பொதித்த ஓவியங்களை உருவாக்கிய அந்த கலைஞர்களிற்கு இத்தாலிய நகரங்கள் கலைக்கோயில்களாக அமைந்திருந்தன. கலைஞர்களை ஆதரிப்பதில் இத்தாலிய நகரங்களின் அரசர்களும் பிரபுக்களும் மிகப்பெருமை கொண்டிருந்தனர். கோயில்களை கட்டுவதற்கோ அரண்மனைகளை நிர்மாணிக்கவோ அல்லது பிரபுக்களின் மாளிகைகளை அழகுபடுத்தவோ இக் கலைஞர்களின் முழுக் கலைத்திறனையும் அவர்கள் பயன்படுத்தினர். புராதன இத்தாலிய நகரங்களில் கலைச் சின்னங்கள் அழிவற்ற நிலையில் காணப்படுகின்றன. இத்தாலியர்கள் கலையார்வம் மிக்கவர்கள் மட்டுமன்றி அதனை புரிந்து கொள்ளும் அனுபவமிக்கவர்களாகவும் இருந்தனர். இதுவும் இத்தாலிய மறு மலர்ச்சியை வலுவடையச் செய்ததெனலாம்.

அரசியலை எடுத்துக் கொண்டால் நிலமானிய முறை அழிய முற்பட்டபொழுது அரசாங்க நிறுவனங்கள் நன்கு பலப்படுத்தப்பட்டன சிறு, சிறு நாடுகள் பெரிய பேரரசுகளின் பிடியிலிருந்து விடுதலை பெறத்துடித்தன. ஏனைய நாடுகளை விட இத்தாலியில் நிலமானிய முறை தளர்வு நிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் மக்களிடையே சுதந்திரவுணர்ச்சி தோன்றியது. ஆகவே நிலமானியப் பிரபுக்களின் பிடியிலிருந்து பண்ணையாட்களும் குடியானவர்களும் சுதந்திரம் பெறமுற்பட்டனர். இதனால் மக்களாட்சியும் மலரத் தொடங்கியது. Niccolo Machia-velli [கி. பி 1460 - 1527] என்பவர் புளோரன்ஸ் நகரத்தின் ஆட்சியாளராகவும் இராச்சியத் தூதுவராகவும் பணியாற்றி நல்ல அனுபவம் பெற்றிருந்தார். அவர் பெற்ற அநுபவங்களிலிருந்து "The Prince" என்ற சிறந்ததொரு நூலை எழுதினார். "ஒரு குறிக்கோளைப் பெற அரசு எந்த வழியையும் பின்பற்றலாம். அரசின் இறுதிப் பயனுக்கும் அறநெறிக்கும் தொடர்பில்லை." என்று அவர் அந்நூலில் கூறுகிறார். அவருடைய அரசியல் கோட்பாடுகள் அக்கால அரசாங்கங்களில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தன. அதுமட்டுமன்றி அவற்றை மிகவும் பாதித்துவிட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூடக் கூறலாம். எனவே இதுவும் மறுமலர்ச்சி இத்தாலியில் ஏற்பட ஒரு காரணம்.

விஞ்ஞானத்துறையில் இக்காலத்தில் வளர்ச்சியும் மலர்ச்சியும் தோன்றியது. மத்திய ஐரோப்பாவின் பாதுவாப் பல்கலைக்கழகம் இத்தாலியில் அமைந்திருந்த வைத்தியத்துறைக்கு புகழ்பெற்ற ஒன்றாகும். 1453 ல் கொன்ஸ்தாந்தி நோபிள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து கீழைத்தேய நாடுகளுக்கான புதிய பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமையும் இப் பிரயாணங்களுக்கு உதவியாயிற்று. திசையறிகருவி [Compas] போன்றன கண்டுபிடிக்கப்பட்டதால் பாதுகாப்பான பிரயாணம் செய்யும் நிலை தோற்றம் பெற்றது. இதனால் அமெரிக்க தேசம் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தாலியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டு பேடினட் மன்னன் இஸ்பெல்லா இராணி ஆகியோருடைய அனுசரணையுடன் 1492 ல் அமெரிக்காவுக்கு அண்மையிலுள்ள கரிபியன் தீவுகளில் ஒன்றை அடைந்தான். இவனைப் பின்பற்றிய இத்தாலியரான அமெரிக்கோ வெஸ்புசி என்பவர் அமெரிக்கக் கண்டத்தை முதலில் அடைந்த ஐரோப்பியராவார். இந்த வகையிலும் இத்தாலியின் மறுமலர்ச்சி தோற்றம் பெறக் காரணமாகியது.

மறுமலர்ச்சி இயக்கம் தோற்றம் பெறுவதற்கான காரணங்களில் உடனடிக் காரணமென நோக்கின் 1453 ல் உரோம பேரரசின் தலைநகரமாக இருந்த கொன்ஸ்தாந்தி நோபிள் ஒட்டோமன் துருக்கியர்களாற் கைப்பற்றப்பட்டமையேயாகும். எனவே கொன்ஸ்தாந்தி நோபிளில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த கிரேக்க உரோம இலக்கிய நூல்கள் மேற்கு ஐரோப்பாவிற்கு கற்ற கிறிஸ்தவர்களால் கொண்டுவரப்பட்டு ஆராயப்பட்டு கிரேக்க உரோம கலாச்சாரம் மீண்டும் எழுச்சி பெற்றதெனலாம். அத்துடன் இவற்றின் செல்வாக்கு அதிகம் இத்தாலியிலேயே காணப்பட்டதன் காரணமாக இத்தாலியில் மறுமலர்ச்சி புலர்ந்தது என்று கூறின் அது மிகையில்லை.

இவ்விதமாக இத்தாலியின் மறுமலர்ச்சிக் காலத்தன்மையானது மொழி, இலக்கியம், சித்திர சிற்ப, கட்டிடக்கலை கலாச்சாரம், விஞ்ஞானம், வானியல், சமுத்திரவியல் போன்ற பல்வேறு துறைகளினதும் வளர்ச்சியோடு தோன்றியது. அதுமட்டுமன்றி அவற்றுக்குரிய அடிப்படைக் காரணிகளாக நகரங்களின் வர்த்தகப் புத்துயிர்ப்புக்களும், சமய மறுமலர்ச்சிகளும், கொன்ஸ்தாந்தி நோபிள் கைப்பற்றப்பட்டமையும் அதனுடன் இணைந்த கிரேக்க மொழியியல் அறிஞர்களது இத்தாலிய வருகை அச்சு இயந்திர வருகை காகிதத்தாளின் கண்டுபிடிப்பு வர்த்தக குடும்பங்களின் மொழி இலக்கிய கலை நாகரிக ஆர்வம் போன்றமையும் இத்தாலியக் குடாநாட்டில் மறுமலர்ச்சி தோற்றம் பெறுவதற்கான அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன.

## உசாத்துணை நூல்கள்


1) ஐரோப்பிய வரலாறு - முதற் பாகம் [கி. பி 395 - 1500]
by T. V சொக்கப்பா
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் - 1971

2) ஐரோப்பிய வரலாறு - [1500 முதல் இக்காலம் வரை]
by மு. ஆரோக்கியசாமி
சென்னின அமுத நிலையம் - 1968

3) ஐரோப்பிய வரலாறு - [கி. பி 1500 முதல்]
by என். ஜே. இராஜகோபால்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் - 1977




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்மிய தேசியவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

— செல்வி ஞானப்பிரகாசம் சுபாஜினி
வரலாறு சிறப்புக் கலை
மூன்றாம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

15ம், 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் இதுவரை கத்தோலிக்கத் திருச்சபைக்குக் கட்டுப்பட்டிருந்த ஐரோப்பிய சமுகம் அதிலிருந்து விடுபட்டுப் பல துறைகளிலும் தம் வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றது. இந்த ரீதியிலே மறுமலர்ச்சியின் தாக்கங்களில் ஒன்றான நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டதுடன் அதன்மூலம் பல மேலைத்தேய,கீழைத்தேய நாடுகளில் தம் ஆதிக்கத்தை நிறுவி அந்நாட்டில் உள்ள பொருளாதாரத்தை எல்லாம் சுரண்டியதுடன் தம் இஷ்டம்போல் ஆட்டிப் படைத்ததையும் நாம் வரலாற்றில் அறியமுடிகிறது. அந்த வகையில் தென் கிழக்காசிய நாடான பர்மாவும் இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப் பட்டது. ஏற்கனவே இவர்களால் அடிமைப்படுத்தப்பட்ட இந்திய நாட்டோடு இணைத்து ஆட்சி நடத்தினர். இதனால் பர்மிய மக்கள் பிரித்தானிய இனத்தவரால் மட்டுமன்றி இந்திய, சீன இனத்தவராலும் பல கஷ்டங்களை எதிர்நோக்கினர். இவ்வேளையில் தான் ஏனைய ஆசிய நாடுகள் பிரித்தானிய அரசிற்கு எதிராக நடத்தும் தேசிய போராட்டங்களை அறிந்த பர்மியச் சமுகம் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆரம்பித்தனர். எனவே இவ்வாறு பர்மிய மக்கள் தேசிய போராட்டங்களை நடத்தி அந்த நாட்டு தேசியவாதம் வளர்ச்சியடைந்து செல்ல உதவிய அம்சங்களாக முதலில் பிரித்தானியாவிற்கு எதிராக ஐப்பான் நடத்திய தேசிய போராட்டம். அதனைத் தொடர்ந்து பௌத்த பிக்குகள் கல்வி கற்ற வர்க்கமும் ஏனைய பொதுமக்களும் ஒன்றிணைந்த பல இயக்கங்களின் எழுச்சி இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட மொன்ரேகு - செம்ஸ்போர்ட் சீர்திருத்தம், 1930 இல் இடம்பெற்ற பொருளாதார மந்தம், இறுதியாக ஜப்பானின் துரோகச் செயல் இவ்வாறான அம்சங்களே பர்மிய தேசியவாதம் வளர்ச்சியடைந்து செல்ல உதவின. எனவே இவற்றை இக் கட்டுரையிற் காண்போம்.

தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான பர்மாவானது 19 ம் நூற்றாண்டளவிலேயே பிரித்தானிய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. பிரித்தானியர் பர்மாவைத் தமது நிர்வாகத்தின் கீழ் தனியாக நிர்வகித்தது. இந்தியப் பேரரசோடு இணைத்தே ஆட்சி செய்தனர். ஆகவே பர்மாவானது ஆங்கிலேயரால் மட்டுமன்றி இந்தியராலும் ஏற்கனவே அங்கு குடியேறிய சீனர் போன்றவர்களாலும் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இத்தரீதியில் பர்மாவின் இயற்கை வளங்கள், உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் அங்கு வாழ்ந்த ஆங்கிலேய, இந்திய, சீன இனத்தவரின் வர்த்தக முன்னேற்றத்திற்கே பயன்பட்டதால் பர்மியப் பொருளாதார முன்னேற்றங்கள் பர்மிய சமுத்தை வளம் படுத்துவதற்குப் பதிலாக அந்நியர்களின் நாட்டை வளம்படுத்தின. இவ்வாறான பொருளாதாரப் பாதிப்பு மட்டுமன்றி



Dr. K. Indrapala Archaeology Museum
Dep... ...ory
University of Jaffna
Sri Lanka.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மிய மரபுகளின்படி தொன்றுதொட்டு நடைமுறையில் வந்த கல்வி முறையை மாற்ற முயன்றதுடன் சமுதாய அடிப்படையிலே தம் பண்பாடுகளையே ஒத்ததாக மாற்றியமைக்க முற்பட்டனர். இவ்வாறான அந்நிய சக்திகளின் அடக்குமுறையை 20 ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே உணரத்தொடங்கிய பர்மியன் ஏனைய ஆசியநாடுகளில் ஒன்றான ஜப்பான் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தேசியப் போராட்டத்தை நடத்தியதையும் இறுதியில் வெற்றிபெற்றதையும் அதிலிருந்து அந்நாடு வளர்ச்சியடைந்து முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுவதையும் கண்டு வியந்தான். யப்பானியனைப் பின்பற்றி தானும் சுதந்திரம் பெறவேண்டும் எனும் எண்ணம் கொண்டான். இதன் விளைவாகவே பர்மிய தேசிய வாதம் ஆரம்பமாகி பின் இந்த ரீதியிலேயே வளர்ச்சியடைந்தது. எனவே பர்மிய தேசிய வாத வளர்ச்சிக்கு உதவிய முக்கிய காரணியாக யப்பானின் போராட்டம் அமைந்தது.

இவ்வாறான இந்த பர்மிய தேசியப் போராட்டத்தை உணர்ந்து வழிநடத்திச் சென்றவர்களாக பௌத்த பிக்குகளும் கல்விகற்ற மத்திய தர வர்க்கமும் காணப்பட அவர்களோடு இணைந்த வகையிலே பொதுமக்களும் தம் உரிமையைப்பெறும் போராட்டத்தை நடத்தினர். பர்மிய முடியரசானது அங்கிருந்த பௌத்த மத நெறிமுறைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையிலே செயற்பட்டதுடன் பௌத்த குருமார்களாக விளங்கும் பிக்குகளே சமுகத்தில் உயர்ந்த ஸ்தானத்தைப்பெற்றதுடன் அவர்களே பர்மிய கலை, கல்வி, பண்பாடு முதலியவற்றின் காலவராகவும் விளங்கினர். இவ்வாறாகப் பௌத்த மதத்திற்கும், பிக்குகளுக்கும் மதிப்புக் கொடுக்கும் வகையில் காணப்பட்ட பர்மிய சமூகத்தின் கோட்பாடுகளையும் நெறி முறைகளையும் அந்நியர்கள் மாற்ற விளைந்ததுடன் அவர்களில் பெரும்பெரும் மதிப்புக்குரியவர்களாகக் கொள்ளப்பட்ட புத்த பிக்குகளையே ஆங்கிலேயர் புறக்கணித்தனர். அத்தோடு புத்த பிக்குகளின் கல்வி நிலையங்களில் கல்விகற்ற மாணவர்களுக்கு அரச பதவிகள் மறுக்கப்பட்டன. மாறாக ஐரோப்பிய முறைக் கல்விக்கே உயரிடம் வழங்கப்பட்டது. இதனால் பர்மாவில் வாழ்ந்த ஏனைய இனத்தவர் ஐரோப்பிய முறைக் கல்விக்கு ஆதரவு அளித்ததுடன் அவர்களின் பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றையும் ஏற்று நடந்ததால் அவர்கள் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகள் பெற்றதுடன் வளமான வாழ்வினையும் பெற்றனர். இந்நிலையிலேயே பர்மிய புத்த பிக்குகளும், ஏனைய சமூகமும் பர்மியனின் குருதியில் கலந்துவிட்ட புத்தசமயத்தையும்,பண்பாட்டையும் மீண்டும் பழையஉயர்ந்த நிலைக்கு உயர்த்த வேண்டும் என ஆர்வம் கொண்டதுடன் அந்நியனையே பர்மாவிலிருந்து விரட்டியடித்துச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என ஆர்வம்பெற்று ஐரோப்பிய எதிர்ப்பு இயக்கத்தைத் தோற்றுவித்தனர். அந்த எதிர்ப்பு இயக்கம் ஒரு கழகமாகச் செயற்பட்டது. அதுவே புத்த மதப் பொதுக் கழகமாகும். ( The General Council of the Buddhist Association of Burma ) இவ்வாறாக ஐரோப்பியரால் புத்தமதமும் அதனோடு ஒட்டிய சமூக நடைமுறைகளும் மாற்றியமைக்கப்பட்டதால் இவற்றை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் வகையிலே புத்த பிக்குகள் தேசியப் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றனர்.

புத்த பிக்குகளுக்கு அடுத்தாற்போல் பர்மிய தேசியம் தோன்றக் காரணமாக இருந்தவர்கள் ஐரோப்பியக் கல்வியைக் கற்றுணர்ந்த பர்மிய அறிவாளிகள். ஏற்கனவே பர்மாவில் இருந்த மக்கள் கல்வி அறிவற்ற கிராமப்புறச் சமூகமாக இருந்தமையால் அவர்களை அடிமைகொள்வது ஆங்கிலேயருக்கு இலகுவாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்றுவந்த கற்றோர் சமூகம் தாம் அந்நிய சக்திகளால் சுரண்டப்படுவதையும் இதனால் தான் அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசார உரிமைகள் பாதிக்கப்படுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் உணர்ந்து புத்த பிக்குகளோடு இணைந்து பல்வேறு இயக்கங்களைத் தாபித்து தேசியவாதப் போராட்டத்தை நடத்தியது. இவ் இரு பகுதியினரோடு இணைந்து ஏராளமான நில உரிமையற்ற பாட்டாளி மக்களும் போராடினர். இவ்வாறு பர்மிய தேசியவாதம் வளர்ச்சியடைவதற்கு பர்மிய சமூகத்தில் காணப்பட்ட இத்தகைய பாதிப்புக்களே காரணமாக அமைந்தன.

இந்தியாவிற்கு அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாக பிரித்தானியரால் ஏற்படுத்தப்பட்ட மொன்ரேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் கூட பர்மா பொறுத்து கவனத்தில் கொள்ளவில்லை. இந்நடவடிக்கையால் பர்மியர் புறக்கணிக்கப்படுவதை உணர்ந்த பர்மியர் கிளர்ச்சி செய்யலாயினர். இந்த ரீதியிலே இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் இந்திய தேசிய இயக்கத்தின் கோரிக்கையின் விளைவாக வழங்கப்பட்டது. ஆனால் இந்த சீர்திருத்தம், பர்மா பொறுத்து கவனத்தில் எடுக்கப்படவில்லை. இந்த நிலைமை பர்மியரிடையே வலுத்த எதிர்ப்பை ஏற்படுத்தியது. இதனால் ஏற்கனவே பர்மாவில் வேரூன்றி இருந்த தேசிய உணர்வு திடீரென்றுகிளர்ந்தெழுந்தது. அது மட்டுமல்ல பிரித்தானிய அரசாங்கத்தாலே அதனை அனுசரித்துப் போக வேண்டிய கட்டாய நிலைக்கும் உள்ளாகியது. இந்த வேளையிலே பர்மாவிலிருந்த பல்வேறுபட்ட அரசியல் சார்ந்த சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து "தேசியவாத பொதுக் கவுன்சில்" என்ற பெயரைப் பெற்றுக் கொண்டன. இது ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக அரசியல் கிளர்ச்சிகளிலும், பகிஷ்கரிப்புகளிலும் அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு பர்மாவிற்கு சுய ஆட்சியை கோரலாயிற்று. இந்தப் பேரரசு 1919 லே இந்திய சட்டம் வழங்கிய அதே தன்மைகொண்ட சுயாட்சியை பர்மாவிற்கு வழங்குமாறு கோரிக்கை விட்டது. இதனால் 1929ம் ஆண்டு பர்மிய சட்டமொன்று பிரித்தானிய அரசாலே நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின்படி 1919இலே இந்திய சட்டம் கொண்டிருந்த அரசியல் அதிகாரங்கள் பர்மாவிற்கும் வழங்கப்பட்டது. இதனால் பர்மா ஒரு தேசாதிபதி மாகாணமாக ஆக்கப்பட்டு நிறைவேற்று சபையும், சட்டவாக்க சபையும் கொண்ட ஒரு நிர்வாக ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதன்படி சட்டசபையில் உள்ள 103 அங்கத்தவரினுள் 79பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் ஏனையோர் நியமனம் மூலம் அங்கத்துவம் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். பாதுகாப்பு ஒழுங்கு சட்டம் வருமானம் நீதி என்பன ஒதுக்கப்பட்ட விடயங்களாக நிர்வாக கவுன்சிலில் இருந்த 2 அங்கத்தவரிடம் விடப்பட்டிருந்தன. மற்றைய கல்வி, சுகாதாரம் போன்ற மாற்றப்பட்ட விடயங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளிடம் விடப்பட்டது. இந்த இரு தன்மைப்பட்ட இரு ஆட்சிமுறை 1937 வரை அதாவது பர்மா இந்தியாவிடமிருந்து தனிநாடாகும் வரை நடைமுறையிலிருந்தது. ஆனால் இந்த இரட்டை ஆட்சிமுறையை ஏற்காத பௌத்தபிக்குகளும்தேசியவாதிகளும் முழு சுதந்திரம் கோரிப் போராட்டங்களைத் தொடங்கினர். இதனால் 1935ல் பர்மா இந்தியாவில் இருந்து பிரிந்து தனிநாடாக்கப்பட்டது. ஆனால் இந்த செயல் பர்மாவை இந்தியாவில் இருந்து பிரிந்து தனி நாடாக்கியது என பர்மிய தேசியவாதிகள் கருதிப் போராட்டங்கள் நடாத்தினர். இவர்களால் செய்யப்பட்ட போராட்டங்கள் இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவில் பின்பற்றிய சுதந்திரப் போராட்டவடிவிலேயே அமைந்தன. இதனால் 1938ல் ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த போராட்டத்தில் தோபாமா கழகம் என்ற கழகத்தின் சார்பில் "ஆங்செள்" என்பவர் ஐரோப்பியர் பர்மா ஒரு ஆசிய நாடு என்ற வகையில் ஆதரவளிக்க முன்வந்ததை கருவியாக் கொண்டு யப்பான் சென்று படைப் பயிற்சி பெற்று மீண்டும் நாடு திரும்பி ஓர் விடுதலைப் படையை உருவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பானியரின் உதவியோடு ஆங்கிலேய ருடன் போராடி வெற்றி பெற்றனர். இதன்படி 1948ல் சுதந்திர பர்மிய அரசு உருவாக்கப்பட்டது.

இதன் பின்னர் யப்பானியர் பர்மியர்களால் வரவேற்கப்பட்டனர். இவ்வாறு யப்பானியர் மூலம் ஆங்கிலேயரை விரட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது. இதற்கு 1930இல் பர்மாவில் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் ஒரு காரணமாக சொல்லப்படுகின்றது. அதாவது பர்மாவிலிருந்து ஆங்கிலேயர், இந்தியர், சீனர் போன்றோர் பர்மிய பொருளாதாரத்தை சுரண்டி தம் நாட்டை வளம்படுத்த முனைந்ததால் பர்மியப் பொருளாதாரம் பாதிப்பிற்குள்ளாகியது. இதனால் 1932இல் பர்மியப் புரட்சி ஏற்பட்டபோது ஆங்கிலேயரால் 2000க்கும் அதிகமான மக்கள் கொன்று குவிக்கப் பட்டு புரட்சி நசுக்கப்பட்டது. இவ்வாறு ஆங்கிலேயரால் நசுக்கப்பட்ட போதிலும் இந்திய சீனருக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்தன.

இந்த நிலையில் தான் யப்பான் 'ஆசியா ஆசியர்க்கே" என்ற கோசத்துடன் பர்மாவினை ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து மீட்க முற்பட்டு 1942 இல் ஆங்கிலேயரிடம் சுதந்திரம் பெற்றும் கொடுத்தது. ஆனால் மிக விரைவிலேயே யப்பானியரின் உண்மை நோக்கமான பர்மாவை அடிமை கொள்ளும் நோக்கத்தை தேசியவாதிகள் விளங்கிக் கொண்டனர். நாம் அடைந்தது சுதந்திரமல்ல ஆங்கிலேயருக்குப் பதில் யப்பானியரின் அடக்குமுறை என்பதை உணர்ந்து யப்பானிய எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கினர். இதன்படி தேசியவாதத்தில் இடதுசாரிக் கொள்கையை பின்பற்றிய பிரிவினர் யப்பானியருக்கு எதிரான ஒரு தலைமறைவு இயக்கத்தை உருவாக்கினர். இந்த இயக்கம் 'பாசிச எதிர்ப்பு மக்கள் சுதந்திர கழகமாக' 'ஒங்சான்சின்' தலைமையில் இயங்கி யப்பானுக்கு எதிராகப் போராடியது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் மீண்டும் பர்மாவிற்குள் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இதன்படி தளபதி ஸ்லிம் என்பவரின் தலைமையிலான 14ஆம் ஆங்கிலப்படை பர்மாவை யப்பானிடம் இருந்து மீட்டது. அத்துடன் மீண்டும் பர்மாவில் போருக்கு முன்பிருந்த ஆட்சி முறையினை ஏற்படுத்த ஆங்கிலேயர் முயன்றனர். ஆனால் ஆங்செனின் தலைமையில் பர்மியப்படை தங்களை எதிர்க்கும் ஆற்றல் கொண்டிருப்பதை உணர்ந்து பர்மிய தலைவர்களுடன் பேச்சு வார்த்தையை நடாத்தி ஆங்சென் உடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து அதன்படி சுதந்திரம் வழங்க ஆங்கில அரசு ஒப்புக் கொண்டது. இந்நிலையில் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் பர்மாவில் இனப் பூசல் ஆரம்பித்தது. இதனால் நடந்த போராட்டத்தில் ஆங்செனும் அவருடன் இணைந்த 5 உறுப்பினரும் 1947 யூலை கொலை செய்யப்பட்டனர். இவரின் மறைவுக்குப் பின்னர் அவரின் தலைமைப் பதவியை 'தாகின்நு' ஏற்றார். அதன் பின்னர் இவர் ஆங்கில அரசுடன் பேச்சுவார்த்தையை நடாத்தி 1947 ஒக்டோபர் திங்கள் 17ம் நாள் பர்மாவிற்கு சுதந்திரம் வழங்கும் சட்டத்தில் ஆங்கில தலைமை அமைச்சு கையெழுத்து இட்டது. 1948 ஜனவரி 4ம் நாள் பர்மா சுதந்திரம் அடைந்ததுடன் பிரித்தானியா பொது நலவாய அமைப்பில் இருந்தும் விலகியது.

இவ்வாறு பர்மிய தேசியவாதம் வளர்ச்சி அடைந்து உச்சக்கட்டத்தில் சுதந்திரம் பெற்ற போதிலும் உள்நாட்டுப் பூசல்களும் இதனைத் தொடர்ந்து உருவாகின. அதன்படி 1950 - 59 இல் பர்மிய பொதுவுடமைக் கட்சியினர் பூசல் செய்த போது யுடநூ அதனைத் தடை செய்தார். அதன்பின்னர் Karans என்ற பர்மிய இனத்தவரும் தங்கள் உரிமையைப் பெறவும் தனியான பிரதேசத்தைப் பெறவும் புரட்சி செய்த போது அதனையும் யுடநூ வெற்றிகரமாக அடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல்வேறு பிரச்சனைகளை யும் அடக்கி பர்மாவை ஒருங்கிணைக்க முயன்றார். அத்தோடு சீன பர்மா எல்லைத் தகராறுகள் 1956- 57 இல் சுமுகமாக தீர்க்கப்பட்டது. இவ்வாறு உள்நாட்டு வளர்ச்சிக்கும், சிறந்த அயலுறவுக் கொள்கைக்கும் உலக நாடுகளின் நன்மதிப்பைப் பெற்று விளங்கவும் யு—நூ பாடுபட்டாலும் பர்மாவின் நிலை கொந்தளித்துக் கொண்டே இருந்தது. எனவே யு—நூ பதவி விலகத் தளபதி நீ- வின்னின் தலைமையிலான ஆட்சி ஏற்பட்டது. இவனும் யு—நூவைப் போல் பர்மாவின் வளர்ச்சிக்கும், அமைதிக்கும் உழைத்த போதிலும் அவை அதிக நன்மை பயக்கவில்லை. இவ்வாறு பர்மிய தேசியம் அதிக நன்மை படைக்கவில்லை. அதாவது பர்மிய தேசியவாதமானது அந்நிய ஆக்கிரமிப்புகளாலும், உள்நாட்டுப் பூசல்களாலும், பர்மிய தேசியவாதம் வளர்ச்சியடைந்து சென்றது.

எனவே இவையனைத்தையும் பொதுவாகக் கொண்டு பார்க்கும் போது பர்மாவின் பொருளாதார தலன்களை கருத்திற் கொண்டு ஆங்கிலேயரால் அந்த நாடானது கைப்பற்றப்பட்டு அங்கு அரசை அமைந்ததோடு அந்த நாட்டு அரசில் பொருளாதார, சமுக, கலாசார ரீதியான மாற்றங்கள் என அனைத்திலும் தம் ஆதிக்கத்தைச் செலுத்தி அவற்றை எல்லாம் தம் வசதிக்கேற்ப மாற்றி அமைக்க ஆங்கிலேயர் முயன்ற வேளையில் தான் பர்மிய தேசிய எழுச்சி ஏற்பட்ட போது அதற்கு யப்பானின் பிரித்தானிய நாட்டுக்கு எதிரான போராட்டம் வழிகாட்ட அதன் வழிதம் ஒற்றுமைக்காகப் பர்மிய பிக்குமாரும், கல்வி கற்ற மத்திய வகுப்பும் பல இயக்கங்களைத் தொடங்கி போராட்டங்களைத் தொடர்ந்தனர். இப் போராட்டமானது ஆங்கிலேயருக்கு எதிரானது மட்டுமன்றி பர்மாவில் வாழ்ந்த இந்திய சீனருக்கும் எதிராகவும் மேற்கொள்ளப்பட்டது. இந்த வகையிலே பர்மாவில் தேசியவாதம் வளர்ச்சியடைந்து அது ஒரு சுதந்திர நாடாக மிளிர வழிகாட்டிய அம்சங்களாக யப்பானின் வழிகாட்டலோடு பர்மிய தேசியவாதிகளின் விடாமுயற்சியும், இந்தியருக்கு கொடுக்கப்பட்ட மொன்ரேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தமும், 1930 இல் ஏற்பட்ட பொருளாரமந்தமும் இறுதியில் யப்பானின் நம்பிக்கை துரோகமும் பர்மியதேசிய வாதம் வளர்ச்சியடைய வழிகாட்டிய அம்சங்களாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. வ. இராஜாராம்
   சீன, யப்பான், மற்றும், ஆசிய நாடுகளின் வரலாறு
2. சி. அரசரத்தினம்
   சமுக மஞ்சரி - 1960 இல் ஆசியாவில் தேசிய வாதத்தின் மூலங்கள்.
3. D. E. G. ஹோல்
   தென்கிழக்காசிய வரலாறு முதல் பதிப்பு 1971
4. K. M. பணிக்கர்
   ஆசியாவும் மேனாட்டார் ஆதிக்கமும் முதலாம் பதிப்பு 1969


> நம் சிந்தனைகள் நமக்குச் சொந்தமானவை
> அவைதம் விளைவுகள் நமக்குச் சொந்தமில்லை.
>
> — வில்லியம் ஷேக்ஸ்பியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் பல்லவர்காலம்-ஒரு வரலாற்று நோக்கு

— செல்வி பிரபாலினி விஸ்திரலிங்கம்
*மூன்றாம் வருடம், சிறப்புக்கலை*

தொண்டை மண்டல வரலாற்றில் கி. பி. 6ஆம் நூற்றாண்டானது முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாக விளங்குகின்றது. முதன் முதலாக தென்னிந்திய பண்பாட்டு வாழ்க்கை முறையில் ஒரு புதிய மாற்றம் ஏற்படுவதை பல்லவர் ஆட்சியுடன் அவதானிக்கலாம். சமுத்திரவியல் வழிவந்த அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புதியவம்சம், புதிய தலைநகர் வேறுபட்ட சமய வாழ்க்கை சமூக உருவாக்கம் பொருளாதார அபிவிருத்தி போன்றன ஏற்பட்டுக் கொள்வதை காணலாம். அதுமட்டுமன்றி சமுத்திரவியல் வழிவந்த கலைமரபுகளும் இக்காலத்தில் அறிமுகப்படுத்தப் படுவதை அவதானிக்கலாம். ஆகவே தான் பல்லவர் ஆட்சிக் காலமானது தென்னிந்திய வரலாற்றில் திருப்பு முனை காலமாகவும், ஆக்க காலமாகவும் கொள்ளப்படுவதை அறியலாம். அதுமட்டுமன்றி வட இந்திய தென்னிந்திய பண்பாட்டு தொடர்புக்கு வித்திட்ட பெருமையும் பல்லவர்களுக்குரியதாகக் கொள்ளப்படுகின்றது. கலாநிதி இராய் சௌத்திரி "இந்திய கலாச்சார அரசியல் வரலாற்றில் பல்லவ வரலாறு முக்கியத்துவம் பெறுகின்றது" என்று கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்வேறு கூறுபாடுகளை தன்னகத்தே கொண்டு விளங்குவதையே 'பண்பாடு' என்ற பதம் விளக்கி நிற்கின்றது. அந்த வகையில் பல்லவர் வரலாற்றில் அரசியலை நோக்கின் காஞ்சியை தலைநகராகக் கொண்டு புதிய அரசவம்சமான பல்லவ வம்சம் பேரரசு கட்டமைப்புக்குரிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், திட்டமிட்ட நிர்வாக ஒழுங்குகள் நிர்ணயிக்கப்பட்டு படைப் பலத்தை ஊக்குவித்ததன் வாயிலாக புதிய நிலப் பரப்புக்கள் வெற்றி கொள்ளப்பட்டு அவையாவும் தலைநகருடன் இணைக்கப் பட்டன. இவ்விதமாக அரசியல் ரீதியான ஒரு கட்டுக்கோப்பான நிலை காணப்பட்டதன் விளைவுதான் தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

பல்லவர்கால பொருளாதார நிறுவனத்தில் வணிக கணங்களின் பங்களிப்பு மிக முக்கிய இடத்தை பெறுகின்றது. இவ்வணிக கணங்களினூடாகவே தென்னிந்தியா ஈழம் உட்பட தென்கிழக்காசியா வரையும் பல வெளிநாடுகளுடன் பண்பாட்டுத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைத்ததெனலாம். ஆரம்பத்தில் வட இந்தியாவுடன் மட்டுமே ஈழம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதெனினும் பல்லவர்காலம் முதல் தென்னிந்தியாவுடன் தொடர்பை ஏற்படுத்தியிருந்தமையை இலங்கையில் அநுராதபுரத்திலும் தாய்லாந்தில் தாபகர் என்னுமிடத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட மணிக்கிராமத்தார் என்ற வணிக கணத்தவரின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சான்றுபகர்கின்றது. இவ்விதமாக பல்லவர்கால பண்பாடு தென்னிந்தியாவுடன் மட்டும் நின்றுவிடாது பல்வேறு வகையில் வளர்ச்சியடைய முடிந்தது எனலாம்.

அடுத்து இக்கால மொழிபற்றி பார்க்குமிடத்து பல்லவர்கள் பிராமணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக மௌரியர்காலத்தில் சிறப்புப் பெற்ற தேவநாகரி எனப் புகழப்படும் வடமொழியானது இக்காலத்திலும் சிறப்புப் பெற்றதெனலாம். ஆயினும் பல்லவர் கிரந்தம், தமிழ் போன்றவையும் நடைமுறையில் இருந்துள்ளதை சாசனங்களும் செப்பேடுகளும் புலப்படுத்துகின்றன. அரச கரும மொழியாக இக்காலத்தில் வடமொழிதான் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

பல்லவர்கால பண்பாட்டு வளர்ச்சிப் போக்கில் சமயத்தை நோக்கின் அவைதிக வைதிக மதங்களிற்கு மத்தியில் காணப் பட்ட முரண்பாடு காரணமாக நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஒன்றிணைந்த இயக்கமாக பக்தி இயக்கம் உருவாக்கப் பட்டது. இந்த பக்தி இயக்கத்தின் வலிமையான செயற்பாடு காரணமாக அவைதீக மதத்தினை தழுவியிருந்த மகேந்திர வர்மன் வைதீக மதத்திற்கு ஆதரவு வழங்கினான். எனவேதான் அரச ஆதரவுடன் சமய மறுமலர்ச்சி ஏற்படவும் அதன் ஊடாக பண்பாடு கட்டியெழுப்பப்படவும் காரணமாக விளங்கிய பக்தி இயக்கமே தென்னக வரலாற்றில் பல்லவர் காலத்தை வடஇந்திய குப்தர்காலத்துடன் இணைத்துக்கூற வழி வகுத்த தெனலாம்.

மேற்கூறிய அடிப்படையில் ஏற்பட்டு வந்த நிலையான பண்பாட்டு மாற்றங்கள் கலைத்துறை பொறுத்து துரித வளர்ச்சி ஏற்பட வழிவகுத்ததுடன் புதிய மாற்றங்களையும் கொண்டு விளங்குகின்றது! இதுவரை நிறுவனப்படுத்த முடியாத நிலையில் தமிழ்நாட்டுக் கலைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் கி. பி 6ம் நூற்றாண்டில் பல்லவர்களுடைய ஆட்சி கட்டிட சிற்ப ஓவியம் நடன இசை இலக்கியம் ஆகிய துறைகளில் புதுத் திருப்பத்தை ஏற்படுத்தியதை சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இக்கால பண்பாட்டு வளர்ச்சியில் கட்டிடக்கலையை நோக்கில் கோயில்கள் பாறைகளிலே குடையப்பட்டமை இக் காலத்துக்குரிய சிறப்பம்சம் எனலாம். மண்டபப்பட்டுக் குகைக்கோயில் கல்வெட்டொன்றில் "செங்கல் சுண்ணாம்புபோன்றவை இல்லாமல் விசித்திரசித்தன் அமைத்த கோயில் இது" என குறிப்பிடப்பட்டுள்ளது. பல்லவர்களுக்கு முன் கற்கோயில்கள் இல்லை என்பதனை இந்த கல்வெட்டு எடுத்துக் காட்டுகின்றது. பல்லவர்காலம் தொட்டுத்தான் பெருந் தொகையான கற்கோயில்கள் குகைக் கோயில்கள் தமிழ் நாட்டில் தோன்றின. பல்லவர்கால கட்டிடக்கலை,பிற்காலத்தில் தன்னுடைய தாக்கத்தை ஏற்படுத்தியதை காணமுடிகின்றது. எடுத்துக் காட்டாக "பெருங்கோயில்கள் கட்டிய சோழர்கள் கூட பல்லவ கற்கோயில் முறையை பின் பற்றினர். என கூறப்படுகின்றது. இன்று காணப்படும் கோபுரங்கள் விமானங்கள் எல்லாம் பல்லவர்கால கற்கோயில் அடிப் படையில் வளர்ச்சி பெற்றவை என்று கூறினால் மிகையாகாது.

இக்கால கோயில்கள் பல்வேறு அரசர்களால் பல்வேறு காலப்பகுதியில் கட்டப்பட்டன. உதாரணமாக திரு. நவரட்ணம் அவர்கள் தன்னுடைய சிற்பக்கலை என்ற நூலில் தேவார காலத்தில் தமிழ் நாட்டில் 200 கோயில்கள் இருந்தன என்று குறிப்பிட்டுள்ளார். அப்பர் காலத்தில் தமிழ்நாட்டில் புகாரில் (நகரம்) பல்லவன் ஈச்சுவரம் என்ற கோயில் பழம் கோயிலாக காணப்பட்டது. கைலாசநாதர் கோயில் பல்லவர் காலத்தில் புகழ்வாய்ந்த கோயில் ஆகும். அத்துடன் இது ஒரு பல்கலை பள்ளியாகவும் காணப்பட்டது. இராஜராஜசோழ கல்வெட்டு ஒன்று கரையோரத்தில் மூன்று கோயில்கள் இருந்ததாக குறிப்பிடுகின்றது அதில் இரண்டு கடலால் கொள்ளப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள கோயில் "சலசயனம்" என்று அழைக்கப்படுகின்றது. இக்கோயிலைப் பற்றி திருமங்கையாழ் வார் பாடியுள்ளார். தண்டி என்ற புலவரும் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரவர்மன் அமைத்த குகைக் கோயில்கள் மிகவும் புகழ்வாய்ந்தவை. உதாரணமாக பல்லாவரம் குகைக் கோயில், திருக்கழுக்குன்றம், திருவல்லம், திருச்சி புதுக்கோட்டை (சித்தன்னவாசல்) என்பனவாகும். மகேந்திரவர்மனது பட்டப்பெயர்களில் ஒன்று சேத்தகாரி இதன் பொருள் கோவில்கள் அமைத்தவன் என்பதாகும்.

மகேந்திரவர்மனைப் பின்பற்றி நரசிம்ம வர்மனும் ஒற்றைக்கல் கோயில்களை அமைத்தான். குகைக்கோயில்களின் முன்மண்டபங்களில் உள்ள சுவர்களில் அழகிய சிலைகள் அன்னப்பறவைகள் வெட்டப்பட்டுள்ளன. இவனது குகைக்கோயில்கள் மகிடாசுர மண்டபம், வராகமண்டபம், திரிமூர்த்தி மண்டபம் முதலியனவாகும். கோயில் கட்டிய மன்னர்களுள் இராஜசிம்மனும் புகழ்வாய்ந்தவனாவான். மாமல்லபுரத்து கடல் ஓரத்து கோயில் புகழ் வாய்ந்தது. (கைலாசநாதர் கோயில்) ஆகவே தமிழக பண்பாட்டு வரலாற்றில் பல்லவர்கால கட்டிட கலை வளர்ச்சி அழியாவிடத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

அடுத்து பல்லவர் காலத்தில் கலைத் துறையில் சிறப்பாக குறிப்பிடக்கூடிய அம்சம் யாதெனில் சிற்பக்கலையாகும். அதிலும் 33 M நீளமான பாறைச்சிற்பம் பிரசித்தமானது. இந்த பாறையின் மத்தியில் பெரியபிளவு ஒன்று காணப்பட்டதை சிற்பி தனது கற்பனையால் கங்கையாக மாற்றி அதனை கங்கையின்வருகை அல்லது அருச்சுனன் தவமாக சித்தரித்துள்ளமை (நரசிம்மன் காலத்திற்குரியது) பாராட்டத்தக்கதாகும். அச்சிற்பமானது ஒரு பேரண்டத்தை சித்தரிக்கின்றது. இச்சிற்பமானது நான்கு பெரும் பகுதியாக பிரித்து மேல்பகுதியில் ஒன்பது கோயில்களும் சூரியனுட்பட பார்க்கக்கூடியதாகவுள்ளது. அத்துடன் கன்னரர் மிதுனர் தேவர்கள் மிக வேகமாக உத்தரம் காற்றில் பின்நோக்கித்தள்ள செல்வதுபோன்ற காட்சியும் அதிலும் மிதுனர் ஜோடியாக சித்தரிக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும். இரண்டாம் பகுதியில் இரண்டு பக்கத்தாலும் கங்கைக்கு வருகின்ற அண்டசண்ட சராசரி பட்சிகள் காணப்படுகின்றது. மூன்றாம் பகுதியில் காட்டில் தவசு செய்கின்ற ரிஷிகள் இன்னும் பிறவும் காணப்படுகின்றது. 4ம் பகுதியில் மனிதர்கள் சித்தரிக்கப்பட்டதோடு இச்சிற்பமானது ஆரங்கு, ஆடம்பம், ருத்திராட்ச பூனை போன்வற்றினூடாக பல கருத்துக்களைப் புலப்படுத்துவது மட்டுமன்றி நேரத்தையும் புலப்படுத்துகின்றமையைகொண்டு இச்சிற்பத்தின் சிறப்பை பாராட்டாமல் இருக்கமுடியாதுள்ளது.

இதனைவிட வைகுந்த பெருமான் கோவிலிலும் நடன சிற்பங்கள் காணப்படுகின்றன. சிவபெருமானின் தாண்டவ நடனம் தூக்கிய திருவடி நடனம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. பல்லவர் வரலாறு எழுதிய Dr. இராஜமாணிக்கனார் மகேந்திரவர்மன் அமைத்த சமணக் கோயிலான சித்தன்ன வாசலில் அமைந்துள்ள தீர்த்தாங்கரர் உருவச்சிலை அக்கால சிற்ப உயர்வை எடுத்துக்காட்டுகின்றன எனக் கூறியுள்ளார். மகேந்திரவர்மனுக்குரிய விசித்திரசித்தன் என்ற பட்டப்பெயர் அவனை சிற்ப ஓவியக் கலைஞன் என குறிப்பிடுகின்றது. இக்கால சிற்பங்களின் அற்புதங்களை மாமல்லபுரத்தில் உள்ள கோவில்களில் காணக்கூடியதாக உள்ளது.

நரசிம்மன் காலத்து குகைக்கோயில் சிற்பங்களாக வராக அவதாரம், வாமண அவதாரம், கஜலக்குமி, துர்க்கை போன்றன காணப்படுகின்றன. இவற்றை வாதாபி குகைக்கோயில் சுவர்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. எனினும் மகிடாசுரனை வெல்லுதலைக்குறிக்கும் சிற்பவேலை பல்லவர்க்கேயுரியது.

இராஜசிம்மன் அமைத்த கோவிலில் காஞ்சி கைலாயநாதர் கோயில் சிற்ப வேலைப்பாடுகளுக்கு பெயர்பெற்றது. இது சிற்பக்கலைக்கு ஓர் சிகரமாகவும் அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. இவை இந்திய சிற்பங்களுள் மிகச் சிறந்த நிலையில் வைத்து எண்ணப்படத் தக்கன. கி. பி 2ஆம், 3ஆம் நூற்றாண்டின் அமராவதி சிற்பச்சாயலை இதில் காணக் கூடியதாகவுள்ளது. இச்சிற்பக்கலையில் இசை நடனம் இணையோடியிருப்பதைக் காணலாம். உதாரணமாக திரிபுரதகனம் பாற்கடலை கடைந்தமை, சிவன் அருச்சுனன் போர். இராஜசிம்மன் சிவபெருமான் ஆடிய பலவகை நடனங்களை சிற்பவடிவில் செதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கால ஓவியங்கள் என்னும்போது சித்தன்னவாசல் தூண்கள் மீதும் மேற்கூரைமீதும் மகேந்திரவன்மன் அழகொழுகும் ஓவியங்களைத் தீட்டச் செய்தான். அவற்றுள் அழிந்தனபோக இன்று இருப்பவை நேர்த்தியாக இருக்கின்றன. முன் மண்டபத் தூண்கள் இரண்டிலும் மாதர் இருவர் நடனமாடும் நிலையில் தீட்டப்பட்டுள்ளன. அவர்தம் உருவங்கள் அழகாக அமைந்துள்ளன. இந்த பெண்களை அப்சர பெண்கள் என சிலர் கூறுகின்றனர். இவ் ஓவியங்கள் வாயிலாக பல்லவர் காலத்துபெண்மணிகள் அணிந்த நகை வகைகளும் சிறப்பாக உயர் நிலையில் இருந்த நடனமாதர் அணிந்துவந்த அணிகலன்களும் அக்கால நடிகையர் கூந்தல் ஒப்பனைகளும். மேலாடைச் சிறப்பும் அக்காலத்து நடனக்கலை நுட்பத்தை நாம் அறிய துணைபுரிகின்றன. முன் மண்டபக் கூரை முழுவதும் அணி செய்து கொண்டிருக்கும் ஓவியம் தாமரை இலைகளும் தாமரை மலர் களும் கொண்ட தாமரைக்குளமாகும், இது சித்தன்னவாசல் சிறப்பைப் பெரிதும் காட்டுவதாகும். இங்கு காணப்படும் அரசன் அரசி ஓவியமும் சிறப்பித்குரியது. ஆகவே தமிழக பண்பாட்டு வரலாற்றில் பல்லவர் முக்கியத்துவம் பெறுவதற்கு இவ் ஓவிய வளர்ச்சியும் துணைபுரிகின்றது.

இக்காலப் பகுதியில் இசை, நடனம் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன. உதாரணமாக மகேந்திரவர்மன் பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை சங்கீர்ண சாதி (நடன இசைக்கலைகளில் வல்லவன் என்பது அதன் பொருள்) என்று கூறியுள்ளான். குடுமியாமலைக் கல்வெட்டொன்றில் "சித்தம் நமசிவாய" என்று தொடங்கும் பாடலைக் காணலாம். இவை பலவகை பண்களையும் தாளங்களையும் விளக்கி முடிவில் எட்டுக்கும் ஏழுக்கும் உரிய என்று முடிந்துள்ளது. (வீணை) மகேந்திர வர்மன் பரிவாதினி வீணையில் சிறந்தவனாக விளங்கினான். மகேந்திர வர்மன் இசை நுட்பமும் உணர்ந்தவனாதல் வேண்டும். இதற்குச் சான்றாக புதுக்கோட்டைச் சீமையைச் சேர்ந்த குடுமியாமலைக் கல்வெட்டொன்றில் " இந்தக் கல்வெட்டு இசை மாணவர் நன்மைக்காகப் பண்களை வகுத்துத் தந்த உருத்திராச்சாரியார் என்பவர் மாணவனான அரசன் கட்டளைப்படி வெட்டப்பட்டது" என்பதே அக்கல்வெட்டின் சாரம்.

இவனைப் போலவே இராசசிம்மனும் இசையில் பெரும் புலமை பெற்றவன் ஆவான். அவனுடைய பல விருதுப் பெயர்களுள் "வாத்ய வித்யாதரன் - இசைக் கருவியில் வித்யாதரன்" "ஆதோத்ய தும்புரு-தும்புருவைப் போல ஆதோற்ப வீணை வாசிப்பதில் வல்லவன்". "வீணா நாரதன் – வீணையில் நாரதன் போன்றவன்" என்பன அவனது இசைப் புலமையை நன்கு விளக்குகின்றது.

திருநீலகண்டயாழ்ப்பாணர். வாசிக்க இயலா வகையில் சம்பந்தர் பாடல் பாடியமை, தேவார காலத்திலிருந்த இசைக் கருவிகளின் எண்ணிக்கை என்பன பல்லவப் பேரரசர் காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ்ப் பண்களும், தமிழ் இசையும் கனி நடனம் புரிந்தன என்பதற்குத் திருமுறைகளே ஏற்ற சான்றாகும். சுருங்கக்கூறின் "பல்லவர் நாடு இசைக்கலையில் கந்தர்வ நாட்டை ஒத்திருந்தது என்று கூறிமுடிக்கக்கூடிய அளவிற்கு தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் பல்லவர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன் காலத்து சித்தன்ன வாசல் ஓவியங்களுள் லதா பிரிசிக தோற்றம் ஒன்று காணப்படுகின்றது. சிவனின் ஆடல் கண்டால் வேறு எதனையும் காண வேண்டுமோ எனத் திருநாவுக்கரசர் குறிப்பிட்டமையும், திருஞானசம்பந்தர் பல்லவர் காலத்தில் இசையையும் நடனத்தையும் வளர்க்கப் பல அடிகள்மார் இருந்னர் என்பதை "தேனார் மொழியார் திறைத்தங்காடித் திகழும் குடமூக்கில்", "தண்டு உடுக்கை தாளம் தக்கை சார நடம் பயில்பவர் உறையும் புகார்" என் பதிலிருந்தும் இக்காலத்தில் இசைக்கலையின் வளர்ச்சியை அறியமுடிகின்றது. இக்காலத்தில் இசைக்கலையை வளர்த்தவர்களை அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர் முதலியவர்களுடைய பெயர்கள் காணப்படுவதினாலும் முக்தீச்சுரர் கோவிலில் மட்டும் 42 அடிகள்மார் இருந்தனர் எனின் பல்லவப் பெருவேந்தர் நடனக் கலையை வளர்த்த சிறப்பை என்னெனப் புகழ்வது.

மகேந்திர வர்மன் தனது மத்த விலாசத்தில் 'சிவன் காபாலி' அவனது தாண்டவ நடனம் மூவுலங்களையும் ஒருமைப் படுத்துகின்றது எனக் கூறியுள்ளான். இத்தகைய சிற்பங்கள் எல்லோரா எலிபென்டா புவனேஸ்வரம் முதலிய இடங்களில் உள்ளது. இராசசிம்மன் தான் அமைத்த கையிலாசநாதர் கோவிலில் சிவபெருமான் ஆடிய பலவகை நடனங்களைத் தமிழ் மக்கள் அறியும் வகையில் சிற்ப வடிவில் அமைத்துள்ளான். வைகுந்தப் பெருமாள் கோவிலில் இரண்டு நடன சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடியதைக் காட்டுகின்றன. இவ்விரண்டு சிற்பங்களோடு சிலப்பதிகாரச் செய்திகளையும் நோக்க பல்லவர் காலத்தில் இரு பாலாரும் நடனத்தில் வல்லவராய் இருந்தனர் என்பதும் இருபாலரும் சேர்ந்து நடித்தவை, பல்லவப் பெரு வேந்தர்களும் பாராட்டி வளர்த்தனர் என்பதனாலும் தமிழகப் பண்பாட்டு வளர்ச்சிப் போக்கில் பல்லவர்கால இசை நடன சிறப்பை அறியலாம்.

பண்பாட்டு வரலாற்றில் அடுத்த அம்சமாக இலக்கியம் காணப்படுகின்றது. பக்தி இயக்கம் காரணமாக இலக்கியம் பல்லவர் காலத்தில் மன்னர்களின் ஆதரவைப் பெற்று ஒரு நல்ல மார்க்கத்தைப் பெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். பொதுவாக இக்கால இலக்கியத்தை நோக்குகின்றபொழுது ஒரு உண்மை புலனாகின்றது. அதாவது பக்தி சார்ந்த இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுவதனைக் காணலாம். வடமொழியின் புகழினைக் காணமுடிகின்றது. அதேநேரத்தில் தமிழினுடைய பெருமையினையும் காணமுடிகின்றது. இந் நடையை மணிபிரவாளநடை என்று கூறுவார்கள். உதாரணமாக மத்த விலாச பிரகாசனம் என்ற நூல் மாமண்டூர் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றது. இது வடமொழி நூலாகும். தேவாரங்கள் இக் காலப்பகுதியில் பாடப்பெற்றது குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் புலவர்கள் ஆதரிக்கப்பெற்றமையால் பெருந் தொகையான இலக்கியங்கள் எழுச்சிபெற்றன. உதாரணமாக யாப்பு நூல், பொது நூல், நந்திக் கலம்பகம், சைவத் திருமுறை, சேரமான் பெருமாள் பாடிய அந்தாதி உலா, பாரத வெண்பா, மும்மணிக் கோவைகள், ஞான உலா, நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் என்பனவாகும்.

பல்லவர்காலப் பகுதியில் கலைக்கழகங்கள், பல காணப்பட்டன. காஞ்சியில் வடமொழிக் கல்லூரி இருந்தது. கதம்ப மரபைத் தோற்றுவித்த மயூரசன்மன் (கி. பி. 345 - 370) முதல் பல்லவர் காலத்தில் இங்கு படிக்க வந்தான் என் பதிலிருந்து இக்கல்லூரி அக்காலத்திலேயே சிறப்புப் பெற்றிருந்தது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கடிகாசலம் 2ம் நந்திவர்மன் காலத்தில் சோளிங்கன் (சோழ சிங்கபுரம் கடிகாசலம்) மலை மீதுள்ள கடிகைக்கு மானியம் விடப்பட்டதாகத் திருவல்லம் கல்வெட்டு குறிக்கின்றது. இதுவும் நீண்ட காலமாக அங்கிருந்த வைணவக் கலைப்பீடமாக இருந்திருத்தல் வேண்டும். பாகூர் வடமொழிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி பற்றி பாகூர் பட்டயத்தை நோக்க அங்கிருந்த கல்லூரி பல்லவர் காலத்தில் தென் பல்லவ நாட்டிற்கு அமைந்த பெருங் கல்லூரியாக இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. இதனைவிட பெரும் நகரங்களில் பிரமபுரிகள் காணப்பட்டன. சீர்காழி பிரமபுரம் என்று அழைக்கப்பட்டது கவனிக்கத்தக்கதாகும். மடங்கள் பல கட்டப்பட்டு அவையும் கலையை வளர்த்தன சமணர்கள், பௌத்தர்களுக்குமுரிய மடங்களும் பள்ளிகளும் காணப்பட்டன. எனவே தமிழகப் பண்பாட்டு வரலாற்று வளர்ச்சிப் போக்கில் பல்லவர்காலப் பங்களிப்பை இதன் வாயிலாக அறியலாம்.

தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் பல்லவர்கால பண்பாட்டு வளர்ச்சி பற்றி நோக்குமிடத்து முதன் முதலாகத் தொண்டை மண்டல வரலாற்றிலேயே பண்பாட்டு வாழ்க்கை முறையில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டதோடு பல்லவர் ஆட்சிக் காலமானது அரசியல், பொருளாதார, சமூக, கலைத்துறை பொறுத்து ஒரு திருப்புமுனைக் காலம் என்றும் ஆக்க காலம் என்றும் கூறத்தக்க வகையில் அமைந்ததோடு, தொடர்ந்துவந்த காலப் பகுதிகளுக்கு ஒரு முன்னோடியாகவும் அடிப்படையாகவும் அமைந்து காணப்பட்டுள்ளதையே பல்லவர் கால பண்பாட்டு வளர்ச்சிப் போக்கு எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. பக்தி இயக்கம் காரணமாக சமய மறுமலர்ச்சி ஏற்பட்டதோடு கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், இலக்கியம் போன்ற பல்வேறு பண்பாட்டு அம்சங்களுக்கும் மன்னர்களினது ஆதரவைப்பெற்று காலத்திற்குக் காலம் ஊக்குவிக்கப்பட்டு வந்ததையே பல்லவ மன்னர்களின் கலைத் துறைப் பணிகள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. ஆகவேதான் தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் பல்லவர் காலம் நீங்காவிடத்தை இன்றுவரை வகிக்கின்றது என்பதை வரலாற்றுநோக்கில் அறிய முடிகின்றது.

## உசாத் துணை நூல்கள்

1) பல்லவர்காலவரலாறு
மா. இராசமாணிக்கம்,
திருநெல்வேலித் தென்னிந்தியச்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
லிமிடெட் - 1944.

2) தமிழ்நாட்டு வரலாறு
பா. இறையரசன்,
பூம்புகார் பிரசுரம், பிரஸ், 1983.

3) தென்னிந்திய வரலாறு
N. K. நீலகண்ட சாஸ்திரி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
முதற் பதிப்பு – 1966

4) தென்னிந்திய வரலாறு
K. K. பிள்ளை, இரண்டாம் பதிப்பு
1964, சென்னை பழனியப்பா
பிரதர்ஸ்.

தோல்வி எனக்கு மனச் சோர்வு
தருவதில்லை. மாறாக அது என்னை
மேலும் ஊக்குவிக்கும்.

— மகாத்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. பி. 13ஆம் நூற்றாண்டிற்கும் 18ஆம் நூற்றாண்டிற்கும் இடையேயான காலப்பகுதியில் இந்திய பண்பாட்டுத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

செல்வி A. கமலாசினி

*இறுதி வருடம்*

*வரலாறு சிறப்புக்கலை.*

இந்தியாவின் பண்பாட்டுதுறை வரலாற்றில் கி. பி. 13ம் நூற்றாண்டிற்கும் 18ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் குறிப்பிடத்தக்களவில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. குறிப்பிட்ட இக் காலத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு இந்தியாவில் அரசியல். மற்றும் படையெடுப்பு காரணிகளின் தாக்கம் பலமாக ஏற்பட்டிருக்க வேண்டும். புதிய வம்சம், புதிய இன, புதிய மதத்தைச்சார்ந்த ஒரு மக்கள் கூட்டத்தின் வருகையால் தான் சுவாதீனமான தனித்துவமான பண்பாட்டம்சங்களில் மாற்றங்கள் ஏற்படமுடியும். அந்தவகையில் கி. பி. 5—18-ம் நூற்றாண்டுப்பகுதிகளில் முஸ்லிம்களது வருகையும் அவர்களது அதிகாரமும் நிலைநிறுத்தப்பட்டமை இனங்காணப்படுகின்றது. இந்தியாவில் முஸ்லீம்களது வருகை 712 அளவிலேயே ஏற்பட்டாலும் அதனுடைய தாக்கம் நிலையூன்றிய காலம் கி. பி. 13 பின்னர் எனக்கொள்வது பொருத்தமாகும். கி. பி. 13ற்கும் 18ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலங்களில் முஸ்லீம்களின் படையெடுப்பு அடிக்கடி ஏற்பட்டகாலமாக கொளகின்ற போது அடிமை ஆட்சி, (1206–1290) கில்கிவம்சத்தின் ஆட்சி (1290-1321) துக்ளவம்ச ஆட்சி (1321-1413) சையது வம்சக் ஆட்சி (1414-1451); லோடிவம்சம் (1451–1526) ஆகிய ஐந்து பிரதான வம்சங்களின் ஆட்சியை இனங்காண முடிகிறது- இவற்றைத் தொடர்ந்து மொகலாயர் (1526-1707) வரை ஆட்சியைக் கைப்பற்றியிருந்தனர். தொடர்ச்சியாக இந்த ஐந்து நூற்றாண்டுகளும் முஸ்லீம்களது ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டிருந்தமையால் ஆட்சி, அதிகாரம் முஸ்லீம்களின் கையிலே இருந்தன. ஆகவே முஸ்லீம்களது பாரம்பரிய பண்பாடுகள். பழக்கவழக்கங்கள் கலை. மொழி, அரசியல் பொருளாதாரம் போன்றன இந்தியாவில் புகுத்தப்பட்டமையும், அதை இந்தியமக்கள் சாதாரணமாக ஏற்றுக்கொண்டு பின்பற்றுவதும் அதனால் இந்தியாவின் பண்பாட்டுத்துறையில் புதிய மாற்றங்கள் உள்வாங்கப்படுவதும் இயல்பாக ஏற்பட்ட நிகழ்வாகும். எனவே கி. பி. 13 - 18ம் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் பண்பாட்டு துறையில் ஏற்பட்ட மாற்றத்தை நோக்குவோம்.

முஸ்லீம்களது வருகையால் 13-18ம் நூற்றாண்டிற்கும் இடையில் ஏற்பட்ட மாற்றங்களுள் அரசியல் பொருளாதார துறையில் பலமாற்றங்கள்-நிகழ்ந்துள்ளன. அவற்றை விரிவாகநோக்கும்போது ஆங்கிலேயர் வருவதற்குமுன் சிதறுண்டுகிடந்த இந்திய அரசுகளை ஒன்றிணைத்து ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைக்கீழ் ஆண்டவர்கள் முஸ்லீம்களே யாவர். பாரம்பரிய இந்தியா கண்ட குடியாட்சிமுறைமை மீண்டும் மொகலாயர் காலத்திலேயே புதுப்பொலிவு பெறுவதைக் காண்கின்றோம். இந்திய சைத்திரிய சேத்திரக் கோட்பாடுகள் புதிய நோக்கில், புதிய ஒழுங்கில் புதிய மதச் சூழலின் பின்னணியில் முன்னெடுத்துச் செல்லப்படுவதைக் காணலாம், குறிப்பாக அக்பர் ஆட்சிக்காலம் ஓர் அனைத்திந்திய அமைப்பு முறையிலான முடியாட்சி முறைமை ஏற்படுத்தப்பட்ட காலப்பகுதியாக அமைந்துள்ளது. இது வரைகாலமும் இந்தியாவின் முடியாட்சி முறையானது பௌத்த அல்லது இந்து மதப்பின்னணியில் வெற்றிகரமாக பரிசீலிக்கப்பட்டு வந்தமை நாம் கண்ட அனுபவமாகும். ஆனால் முதல் முறையாக இனத்தாலும், மதத்தாலும், மொழியாலும் அறியப்பட்ட ஒரு வர்க்கம் இந்தியாவுக்குள் புகுந்து தம்மை இந்தியராகவோ அல்லது இந்தியப்பண்பாட்டை தமது பண்பாடாக ஏற்று இஸ்லாமிய மதத்தின் பின்னணியில் முடியாட்சிமுறையின் செழிப்பான தன்மைகளை நடைமுறைப்படுத்திய தன்மையை மொகலாய பேரரசில் காணலாம். எனவே ஒரு அரசாங்க மொழி, தோன்றியது இந்தியா ஒரே நாடாக ஐக்கியப்பட்டது.

அடுத்து பொருளாதாரத்துறையை எடுத்துக்கொண்டால் தென்னாட்டவர் கையில் அயர்ந்து கிடந்த கடல்வாணிபத்தை புதுப்பித்தவர் முஸ்லீம்களே யாவர். இக்காலப்பகுதியிலேயே இந்தியாவிற்கும் வெளிநாடுகளுக்குமான தொடர்பு ஏற்பட்டது. இந்திய கடற்படையை முதன்முதலில் நிர்மாணித்தவர்களும் இவர்களே. அதுமட்டுமன்றி மொகலாய ஆட்சியை இந்தியாவில் தொடங்கிவைத்த பாபராலேயே வெடிமருந்து, பீரங்கி போன்றன அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இது மட்டுமன்றி அக்பர் ஆட்சியின்போது துணி நெய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. நிலங்களை யளந்து கணக்கிட்டு வரிவிதித்து வசூலிக்கும் சிறந்தமுறைகூட இவர்களாலே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

அடுத்து மதத்துறைசார்பாக ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும்போது இஸ்லாம் இந்தியாவிற்கு வந்ததன் விளைவாக இந்துமதத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இந்துமதத்தில் பல தெய்வக்கோட்பாடு, உருவவழிபாடு ஆகியன பிரதான இடம் வகித்தது. ஆனால், ராமானந்தர், ராமானுஜர் முதலியோர் தோன்றி ஒரு தெய்வம் என்ற அடிப்படையில் இந்து மதத்தை ஒரு வடிவத்தில் அமைத்தனர். இவர்கள் ஏக தெய்வக் கொள்கையைப் பின்பற்றியமையால் தான் இந்துமதம் நீடித்திருக்கிறது. எனவே இறைவன் ஒருவன் அவன் எல்லாம் வல்லவன் எனும் புனிதக் கொள்கையை இந்தியாவில் கொண்டு வந்தவர்கள் முஸ்லீம்கள். இதனடிப்படையில் தான் 18–ம் நூற்றாண்டில் சங்கரர் மலையாளத்தில் இருந்து இஸ்லாமிய பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டு அத்வைத கொள்கையை இந்துமதத்தில் புகுத்தினார். இஸ்லாமிய ஏக தெய்வ பிரசாரமே லிங்காயத்துக்கள் தோன்றவும் நமசிவாய எனும் மூலமந்திரம் தோற்றம் பெறவும் வழியமைத்தது. இவ் ஏகதெய்வ வணக்கப் பிரசாரத்தின் காரணமாக இந்துமதத்தில் பத்திமார்க்கப்பிரசாரம் தலைதூக்கியது. தமிழ்நாட்டில் சித்தர்கள் தோன்றி உருவமற்ற ஒரே இறைவழிபாட்டை மேற்கொண்டனர். இதுவரை இந்தியாவில் மதம்சார்ந்த ரீதியில் வர்ணாச்சிரமக் கோட்பாடு வகுக்கப்பட்டு சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் பாராட்டப்பட்டிருந்தது. ஆனால் இஸ்லாமியக்கருத்துப்படி இறைவனின் படைப்பில் எல்லோரும் சமம் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை எந்த தொழிலும் எவரும் செய்யலாம் என்ற கொள்கை தோன்றியது. இந்து மதத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு இஸ்லாமிய மதம் காரணமாக இருந்தது. இஸ்லாமிய மார்க்கத்தில் மக்கள் சேருவதைக் கண்ட வைதீக இந்துக்கள் இஸ்லாத்தை விரும்பாத நிலையில் ஜாதிக்கட்டுப்பாடுகளை அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தனர். பக்தி இயக்கம் தோன்றி தென்னிந்தியா கிழக்கிந்தியா, போன்ற இடங்களில் ஆதரவு பெற்றாலும் இஸ்லாமிய மதத்தின் தாக்கம் மக்கள் மத்தியில் ஆழப்பதிந்தது. இதன் விளைவாக இஸ்லாமிய சகோதரத்துவ, சமத்துவ, ஜனநாயகக் கொள்கைகள் இந்திய மக்களை தாராளநோக்குள்ளவராக மாற்றியது. முஸ்லீம் ஸுபிகள் மக்களுக்கு எளிய முறையில் உபதேசித்தமையால் கல்வியறிவற்ற மக்களும் ஆத்மீக உண்மைகளை அறிந்து நன்நெறியில் சிந்திக்க செயற்பட வழிவகுத்தது.

சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கின் முஸ்லீம்கள் இந்தியாவை வென்று ஆளுமுன் இந்திய சமுதாயத்தில் பெரும்பாலும் இந்துக்கள், பௌத்தர், ஜைனர்கள் என்ற பிரதான சமயப் பிரிவுகளே இருந்தன. முஸ்லீம் ஆட்சி தொடங்கிய போதே பௌத்தம் வேரறத் தொடங்கியது. சமணமும் இந்துமதத்தால் அழிவுற்றமையால் இஸ்லாம் இந்தியாவில் புகுந்தபின் இந்து இஸ்லாம் எனும் இருபெரும் சமயங்களே நிலவின. அதனால் ஒவ்வொரு நிலைகளிலும் இந்துமுஸ்லீம் தொடர்புகள் வெளிப்படுத்தப்பட்டன. முஸ்லீம்மதத்திற்கு மாறுவதன் மூலம் தம் சமூக அந்தஸ்து உயரக்கூடும் என எண்ணி சலுகைக்காக மாறியமையால் சமூகத்தில் முஸ்லீம் பண்பாடும் விரைவில் பரவியது. முஸ்லீம் மகளிரைப்போல இந்து மகளிரும் பர்தா அணிந்து கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. அவ்வாறே மூக்குத்தி அணியும் வழக்கம் ஏற்பட்டது. இந்தியாவில் முன்னர் காணப்பட்ட பால்யவிவாகம், உடன்கட்டை ஏறல் முதலியவற்றிலே சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்துக்கள் குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்யலாகாது எனவும் இறந்துபோன கணவனுடன் அவன் மனைவியை நெருப்பிலிடும் முறையும் தடுக்கப்பட்டது. இது இந்திய சமூகத்தில் ஏற்பட்ட முக்கிய மாறுதல் எனலாம். முஸ்லீம்களது சமத்துவம், சகோதரத்துவ கொள்கைகளினால் இந்து மதத்தின் வர்ணாச்சிரமக் கோட்பாடு புறக்கணிக்கப்பட்டு மொழி, நிறம், ஆடை, கருத்து நாடு முதலான வேறுபாடுகளைக்களைந்து எல்லோரும் சேர்ந்து ஆண்டவனைத் தொழவும், வர்க்க வேறுபாடின்றி சம பந்தி போசனம் உண்ணவும் வழிபிறந்தது. சாதிவெறி கொண்ட இந்திய சமுதாயத்தில் இத்தகைய மாற்றங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முஸ்லீம் ஸுபிகாருடைய அன்புப் போதனைகளால் கவரப்பட்டு இஸ்லாம் மதத்தைச் சார்ந்து கொண்டனர். பெண்களிற்கு உரிமை மறுக்கப்பட்ட இந்திய சமுதாயத்தில் இக்காலப்பகுதியில் மாற்றம்கொண்டு வரப்பட்டது. பெண்களிற்கு சொத்துரிமை முதலான உரிமைகளை வழங்கினர். ஆண்களுக்கு இருக்கும் அதே சுதந்திரம் பெண்களுக்கும் உண்டு என்ற கருத்தை முன்வைத்தனர். சாதிக் கொடுமை ஓரளவேனும் நீக்கப்பட்டு சமதர்மம் உருவாக்கப்பட்டது. திருமணத்திற்கு முன் மணப்பெண்ணின் இணக்கத்தைப் பெற்று அங்கீகரிக்கவும் விதவைகளின் மறுமண வாழ்வை அனுமதிக்கவும் செய்தனர்.

அடுத்து கி. பி 13–18 ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் மொழியில் ஏற்பட்ட மாற்றமும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சி ஆரம்பித்தபோது முஸ்லீம்சிப்பாய்களும் முஸ்லீம் அரசாங்க அலுவலர்களும் இந்திய மக்களுடன் தொடர்பு கொண்டபோது தம் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டது. அதைப் போன்று முஸ்லீம் ஸுபிகள் இந்நாட்டு மக்களிற்கு போதனை செய்யும் அவசியம் ஏற்பட்டது. இந்தவேளை முஸ்லீம்கள் துருக்கி, பாரசீக மொழிகளையோ இந்தியர் இந்தி பிராகித மொழியையோ பேசவில்லை. பஞ்சாப், கங்கை சமவெளி தக்கணம் ஆகிய பகுதிகளில் புதிய மொழி உருவானது. அது முஸ்லீம் சேனைகளில் பேசப்பட்டமையால் உருது என்று அழைக்கப்பட்டது இந்தி, அரபீ ஆகிய மொழிகள் கலந்து புதிதாக உருவாக்கப்பட்ட உருது மொழியில் இஸ்லாமிய இலக்கிய கருவூலங்களைக் கொண்டு வந்து அம்மொழியை வளம்படுத்தினர். இதைவிட வடமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம் மேலோங்கி வங்காள மொழி நசிந்து கொண்டிருந்த நிலையில் அவற்றிற்கு உயிரூட்டி ஊக்கம் கொடுத்து வளர்த்தனர். மராட்டி, பஞ்சாப், கிந்தி ஆகிய மொழிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. எனவே இக்காலப் பகுதியில் உருதுமொழியின் புதியதோற்றமும் ஏனைய சில மொழிகளின் வளர்ச்சியும் மொழியில் ஏற்பட்டுக் கொண்ட மாற்றங்கள் எனலாம்.

மொழிவளர்ச்சியுடன் கல்வி அறிவு வளர்ச்சியிலும் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. விண்ணியற் கல்வி இக்காலப் பகுதிகளில் பெரும் வளம் பெற்றது. அஷரேகை, தீர்க்கரேகை ஆகியவை பற்றிய முஸ்லீம்களின் கணிதமுறைகளை இந்துக்கள் பின்பற்றலாயினர், கி. பி. 1686 — 1743 ஆகிய காலப்பகுதிகளில் ஆட்சி புரிந்த மகாராசா ஜெய்சிங் இந்து ஆண்டு கணக்கு முறையை சீர்திருத்தியமைத்தார். அத்துடன் டில்லி, காசி ஆகிய இடங்களில் விண்ணியல் ஆராட்ச்சிக்கூடங்களை அவர் நிர்மாணித்தார். மேலும் முஸ்லீம்களே இந்தியாவுக்கு யூனானி மருத்துவமுறையைக் கொண்டுவந்தார். 500 ஆண்டுகள் இம் மருத்துவமுறை இந்தியாவில்செல்வாக்குப் பெற்றிருந்தது. காகிதத்தை முதன் முதலில் புகுத்தியவர் முஸ்லீம்களே. அதனால் இந்தியாவில் காகித உற்பத்திச் சாலைகள் ஏராளம் பெருகின. இலக்கியங்க தோற்றம் பெற்றன. அதனால் மக்களது அறிவுத்துறை வளர்ச்சி பெற்றது. முதலில் இந்திய வரலாற்றை எழுதியவர்களும் முஸ்லீம்களே. அரசர்கள் தம்வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதியதுடன் பல வரலாற்று ஆசிரியர்களைக் கொண்டு வரலாற்றை எழுதவும் செய்தனர். இதனால் பாரம்பரிய வரலாற்றை பேணுகின்ற மரபு இக்கால கட்டங்களில் ஏற்பட்டுக் கொண்டது.

மொழி வளர்ச்சி, கல்வி அறிவு என்பவற்றால் இலக்கியத்துறையிலும் இந்தியா புதிய மாற்றம் கண்டது. முஸ்லீம்பக்தி இயக்கத்தால் எழுத்தாலும், சொல்லாலும் பிரசங்கங்கள் செய்தமையால் பொதுமக்களுக்கு இந்திய மொழியில் ஒரு புதிய ஆர்வம் தோன்றியது. கபீர், நானக் போன்றோரது பிராந்திய மொழிப்பாடல்களை உச்சாடனம் செய்தனர். தமிழில் தேவாரம், திருவாசகம்போன்றபாடல்கள் தமிழை வளர்த்ததுடன் மக்களை சமணத்திலிருந்து விலகி சைவ, வைணவக் கொள்கைகளைப் பின்பற்றச் செய்தது. சமஸ்கிருதத்தில் எழுந்த பழையநூல்கள் இந்திய மொழிகளில் கவிதை, வசன நடையில் நவீன ஊக்கத்துடன் மொழிபெயர்த்தெடுக்கப்பட்டன. இந்தியாவில் இஸ்லாம் வந்தபின் ஏற்பட்ட மாற்றங்களால் அதற்கு முன்பிருந்த காலத்தில் ஒரு சிலரது ஏகபோகஉரிமையாகக் கருதப்பட்ட சமயமும் இலக்கியமும் இஸ்லாமிய தொடர்பால் மக்களின் பொதுவுடமையாக மாறின. முஸ்லீம்களுடன் பாரசீக இலக்கியங்களும் இந்தியாவில் புகுந்து வளர்ச்சி பெற்றன. இதைவிட இந்துக்கள் பாலிமொழியில் கவிதைகளை எழுத முற்பட்டனர். எனவே இந்தியாவில் இலக்கியத்துறையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டமையை இக்காலகட்டம் சுட்டி நிற்கிறது.

அடுத்து கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றம் இந்திய கலைவரலாற்றில் ஒரு புதிய வடிவத்தை தோற்றுவித்திருக்கின்றது. இந்திய கலைவரலாற்றில் இது வரையும் வெளிப்படாத புதிய தன்மைகள் இக்காலத்தில் வெளிப்படுவதைக் காண்கின்றோம். முன்னர் எப்போதும் இல்லாதவகையில் முன்னைய கலைமரபுக்கும் மொகலாயர் கலைமரபுக்கும் இடையிலான புதிய அம்சங்கள் கலை நோக்கில் தெற்றெனப் புலப்படுவதாகவுள்ளது.

இந்திய கலைக்கட்டுமானங்கள், வெளிப்பாடுகள், இஸ்லாமிய கலைமரபினூடாக வெளிப்படுத்தப்பட்ட காலப்பகுதியாக இக்காலம் அமைந்தது. இந்தியா என்றுமே கண்டிராதவகையில் இராணுவ கட்டிடங்கள் இந்தியாவில் உருவாக்கம் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியாக இக்காலம் அமைந்தது. இதுவரை காலமும் அரண்மனையிலே அகழிகளையும், இராணுவபாதுகாப்பு மையங்களாக உருவாக்கிக் கொண்ட தன்மை விலகி' ஒவ்வொரு நகரமுமே மலையரண்போன்று காட்சியளிக்கும் வகையில் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப் பட்டு கோட்டைபோன்று காட்சியளிக்கக் கூடிய நடவடிக்கை மொகலாயர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இது முற்றிலுமே பாலைவனபிராந்தியக் கட்டிடக் கலை மரபுகளாகும். அவ்வகையில் பெரும் மசூதிகளும்.பள்ளிவாசல்களும் கட்டப்பட்டன. இக்காலத்தில் இஸ்லாமிய கலை மரபுகள் இந்து கட்டிடக்கலை மரபுகளுடன் அமைத்து இந்தோ - இஸ்லாமிய கலைமரபு உருவானதை நாம் அவதானிக்க முடிகிறது. இந்தியாவில் முஸ்லீம் கட்டிடக்கலை குதுப்புத்தீன் ஐபெக் டில்லியிலும், அக்மீரிலும் இருபள்ளிவாசல்களை நிறுவியதுடன் ஆரம்பித்தது. இதற்குப் பின்னர் முஸ்லீம்கள் எங்கு வெற்றி பெற்றார்களோ அங்கெல்லாம் பள்ளிவாசல்களை அமைத்தனர். அதனைப்பின்பற்றி இந்துக்களும் தம்கோயில்களையும் அரண்மனைகளையும் அமைத்தனர். சமாதி கட்டும்முறையும் தோற்றம்பெற்றது. இந்தியாவின் வெவ்வேறு இடங்களுக்கும் சென்று முஸ்லீம்கள் வெவ்வேறுவிதமான கட்டிடங்களை நிர்மாணித்தனர். வங்காளத்தில் கௌர், குஜராத்தில் மாண்டு, மத்திய கங்கைசமவெளியில் ஜவ்ன் பூர், மேல்கங்கை சமவெளியில் தில்லி, ஆக்ரா, தக்கணத்தில் பீயாப்பூர் போன்ற இடங்களிலுள்ள கட்டிடங்கள் இதை மெய்ப்படுத்துவவவாகும். இவ்வாறாக விருத்தியடைந்த கலைதான் பின் ஷாஹ்ஜஹான் சக்கரவர்த்தி காலத்தில் உலக அற்புதங்களில் ஒன்றாக தாஜ்மகால் எழுப்பக் காரணமாயிற்று.

எனவே இந்தியக் கட்டிடக்கலை வரலாற்றில் பலமாற்றங்கள் ஏற்பட்டு புதிய தோற்றத்துடன் வளர்ச்சி பெறுவதைக் காணலாம். அத்துடன் பாதி வட்டமுள்ள வளைவுகளும் முட்டை வடிவமுள்ள கும்மட்டக் கோபுரங்களும் அழகான வடிவங்களுள்ள பூங்காக்களும் முஸ்லீம் ஆட்சியாளர்களினால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட கொடைகள் எனலாம். ஓவியக்கலையும் வளர்ச்சிபெற்றதை குறிப்பிடத்தக்கது. முஸ்லீம்களது வருகையால் ஓவியக்கலை பெரிதும் மாற்றமடைந்தது. பாபரின் காலத்தில் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்ட ஓவியக் கலை முகலாயர் ஆட்சியின் போது இந்திய ஓவியக்கலையுடன் சங்கமமாகிப் புதுப்பொலிவு பெற்றது. அதனை இந்திய அரசவை ஓவியரும் பின்பற்றினர்.

இக்காலப்பகுதிகளில் சாதாரண மக்களது வாழ்விலும் பழக்கவழக்கங்களிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. முஸ்லீம்களின் வருகையால் இந்தியாவில் உணவுக்கலை பெரிதும் மாறுதலடைந்தது. பிரியாணி, குர்மா, ஷர்பத், முதலியன அறிமுகமாக்கப்பட்டன. பழங்களின் உற்பத்தியை முஸ்லீம்களே அபிவிருத்தி செய்தனர். சாலைகளின் ஓரங்களிற் கூட பழந்தருமரங்களை வளர்த்தனர். இவர்கள் வருவதற்கு முன் சாதாரண நாட்டுப் பழங்களே உண்ணப்பட்டு வந்தன. ஆனால் பின்னர் நல்ல பழங்களைக் கண்டு பிடித்து வளர்த்தனர். இறந்தவரை அடக்கம் செய்வதில் புதிய முறையை ஏற்படுத்தினர், பிரேதங்களை எரிக்காது குளிப்பாட்டி அடக்கம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினர். உயர்ஜாதி இந்துக்கள் முஸ்லீம்களைப் போன்று நாகரீகமாக உண்ணவும் உடுக்கவும் ஆரம்பித்தனர். நீராடும் அறைகளுடன் கூடிய வீடுகள், அவற்றை அலங்கரித்தல் என்பனவும் முஸ்லீம்களால் ஏற்பட்ட பழக்கவழக்கங்களாயின.

எனவே தொகுத்து நோக்கின் கி.பி 13 – 18 ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்திய பண்பாட்டு துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் முஸ்லீம்களாலேயே ஏற்பட்டுக் கொண்டது. இதற்கு முன் இந்தியாவில் படையெடுத்து வந்தோர் யாவரும் அடையாளமும் தெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமல் போய்விட முஸ்லீம்களோ ஒரு தனிநாகரிகத்துடன் வந்தமையால் சுவா தீனமாக தம்பண்பாடுகளை இந்தியாவில் நிலைக்கச் செய்தனர். அதே வகையில் சமூதாயம், மதம், பழக்கவழக்கங்கள், மொழி, கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாவிதமான பண்பாட்டு துறைகளிலும் மாற்றங்களை யும், புதிய ஆக்கங்களையும் ஏற்படுத்திய வகையில் இந்திய வரலாற்றில் தனி இடம் பெற்றுக் கொண்டனர்.

**உசாத்துணை நூல்கள்**

1. இப்றாகிம் சைஜித்
   இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி
   பாகம் I, I, I
2. அப்துல் தஜீம்
   இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்
3. எ. எம் அபூபக்கர்
   அறிவுத்துறையில் முஸ்லீம்கள்
4. எஸ்.எம் எட்வர்ட்ஸ் H.L. O காரெட்
   இந்தியாவில் முகலாயர் ஆட்சி பாகம் II

உங்கள் கவுரவம் வேறெங்கும் இல்லை
உங்களின் நாக்கு நுனியில்தான் உள்ளது.

— பியரீஸ்

உயர்ந்த இலட்சியத்தில் உற்ற தோல்வி உன்னை
வெற்றிக்கு வெகு அருகே அழைத்துச் செல்லும்

— ஹென்றிவாட் பீச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஸ்யாவின் எழுச்சிக்கு மகா பிரட்றிக் மன்னனின் பங்கு


செல்வி சுமதி கந்தையா
வரலாறு சிறப்புக்கலை
இறுதி வருடம்


வட ஜேர்மனியில் உள்ள ஒரு சிறிய இராட்சியமே பிரஸ்யா. 18ஆம் நூற்றாண்டில் இது அடைந்த வளர்ச்சி வியந்து போற்றத்தக்கது. இதனுடையவளர்ச்சிக்குப் பங்களித்த பெருமை மகா பிரட்றிக் எனப்படும் 2ஆம் பிரட்றிக்கையே சாரும். ஆயினும் 2ஆம் பிரட்றிக்கிற்கு முன்னர் ஆட்சி செலுத்திய மன்னர்களும் இதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளமையை மறுக்க முடியாது. கி. பி. 1640ஆம் ஆண்டு தொடக்கத்தில் மன்னராக்கப்பட்ட பிரண்டன் பேர்க் அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரட்றிக் வில்லியம் என்பவன் காலத்திலிருந்து பிரஷ்யாவின் எழுச்சிக்குரிய அத்திவாரம் இடப்பட்டது. தொடர்ந்து 1688இல் பிரட்றிக் என்பவன் முதன் முதலாக பிரஷ்யாவின் வைபவரீதியாக முடிசூட்டிக் கொண்டு பிரஷ்யாவிற்கு வெற்றிகள் பெற்றுக் கொடுத்தான். இவனைத் தொடர்ந்து 1713 இல் 1ஆம் பிரட்றிக் வில்லியம் சிதறிக்கிடந்த பல அரசுகளைப் பிரஷ்யாவுடன் ஒன்றிணைத்துக் கொண்டான். இவ்வாறு படிப்படியாக பிரஷ்யாவின் வளர்ச்சியில் இந்த மன்னர்கள் பணி குறிப்பிடத்தக்கவாறு இருந்தபோதும் பிரஷ்யாவின் எழுச்சிக்குக் காரணகர்த்தாவாகக் கொள்ளப்படுபவன் 1740—1786ஆம் ஆண்டுகளில் மன்னனாகத் திகழ்ந்த மகா பிரட்றிக் எனப்படும் 2ஆம் பிரட்றிக்கே ஆவான்.

இவன் தன் சாதுரியமான வெளிநாட்டுக்கொள்கைகளினால் பிரஷ்யாவின் எல்லைகளை விஸ்தரித்தும் உள்நாட்டு வருமான செலவீனத் திட்டங்களால் பொருளாதாரத் துறையில் மேம்பட்டும் பொதுமைக் கொள்கைகளை அனுசரித்ததன் மூலமும் சமயரீதியில் சமாதானம் பேணியும் சட்டத்தொகுப்பை சரியாக ஒழுங்குபடுத்தியதன் மூலமும் சமூகத்தைச் சிறந்த கட்டுக் கோப்பான அமைப்பிற்கும் கொண்டு வந்தான். இத்தகைய பிரட்றிக்கின் கொள்கைத் திட்டங்களால் ஐரோப்பிய அரசுகள் யாவும் வியக்கும் வகையில் பிரஷ்யா 18ஆம் நூற்றாண்டில் எழுச்சியடைந்து கொண்டது. எனவே பிரஷ்யாவின் எழுச்சிக்கு பிரட்றிக்கே வழிசமைத்தான் என்ற வகையில் அவன் மேற்கொண்ட அரசியல் பொருளாதார சமய சமூக சாதனைகளை நோக்குவோம்.

ஒரு தனி இராச்சியமாக விளங்கிய பிரஷ்யாவின் எல்லைகளை விஸ்தரிக்கும் அவா 2ஆம் பிரட்றிக்கு உண்டானது. வளமான இடங்களைப் பிரஷ்யாவுடன் இணைப்பதன் மூலம் பிரஷ்யாவின் அரசியல் அதிகாரம் அதிகரிப்பதுடன் பொருளாதாரத் துறையிலும் பொருள் வளம்பெற முடியும் என்பதனை உணர்ந்தான். அந்த வகையில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரிலும், ஏழு ஆண்டுப் போரிலும், போலந்து பாகப்பிரிவினையிலும் கலந்து கொண்டதன் மூலம் பிரஷ்யாவிற்கு வெற்றியீட்டிக் கொடுத்தான். பிரஷ்யாவின் எல்லைகளை விசாலிக்க வேண்டும் என்று கருதிய பிரட்றிக்கிற்கு தக்க சந்தர்ப்பமாக ஆஸ்திரியா வாரிசுரிமைப்போர் ஏற்பட்டது.

ஆஸ்திரியப் பேரரசனான 6ம் சாள்ஸ் ஆண் சந்ததியின்றி இறந்துவிடவே அவர் மகளான மேரியா தெரேசா என்பவள் பட்டத்து இராணியானாள். மேரியா தெரேசா பட்டத்திற்கு வருவதற்குப் பல எதிர்ப்புகள் ஏற்படும் என்பதை ஏற்கனவே அறிந்த 6ஆம் சாள்ஸ் ஐரோப்பிய அரசுகளை அழைத்து அவர்களிடம் மேரியாதெரேசாவைப் பட்டத்து இராணியாக்குவதற்கான அனுமதியைப் பெற்றிருந்தான். இதில் பிரட்றிக்கின் தந்தையையும் கூட ஒப்பமிட்டிருந்தார். ஆயினும் 6ஆம் சாள்ஸ் இறந்ததும் மேரியா தெரேசா ஆஸ்திரியாவின் இராணியாக பட்டம் சூட்டப்பட்டதும் பிரட்றிக் தன் ஆதிக்கக் கொள்கைகளை ஆஸ்திரியா மீது மேற்கொண்டான். பிரஷ்யப்படைகளை ஆஸ்திரியாவுக்குள் அனுப்பி சைலீசியா மாகாணத்தைக்கைப்பற்றிக்கொண்டான். வளமான மாகாணமான இச்சைலீசியாவை பிரஷ்யாவுடன் இணைத்தமை அதன் எழுச்சியின் பொருட்டு பிரட்றிக் சாதித்த முதல் வெற்றி எனலாம்.

1740 தொடக்கம் 1748 வரை நடந்த இப்போர் ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் எனப்படும். பிரட்றிக்கின் இப்போர் ஐரோப்பாவில் ஒரு பெரும் போருக்கே வழியிட்டுக் கொடுத்தது. போரில் பிரான்சின் உதவி பிரஷ்யாவுக்குக் கிடைத்தது. ஆஸ்திரியாவுக்கு இங்கிலாந்து உதவி செய்தது. எட்டு ஆண்டுகள் தீவிரமாக நடந்த இப்போர் எய்ச்சிலாச்செப்பேல் உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்படி ஆஸ்திரிய அரசு மேரியா தெரேசாவிற்கு என்றும் சைலீசியா பிரஷ்யாவுக்கே சொந்தமானது என்றும் ஏற்பாடாகியது. எனவே பிரட்றிக்கைப்பொறுத்தவரை ஆஸ்திரியா முழுவதையும் பிரஷ்யாவுடன் இணைக்க வேண்டும் என்ற கனவு நிறைவேறாது போனாலும் சைலீசியாப் பிரதேசம் கைப்பற்றப்பட்டமையே பெரு வெற்றியாக அமைந்து விடுகின்றது. இதன் செழிப்பு பிரஷ்யாவிற்கு பெரும் பொருளாதார ஈட்டத்தை வழங்கியதன் மூலம் பிரஷ்யாவின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கினை இப்பிரதேசம் ஆற்றியுள்ளது எனலாம்.

இருந்தாலும் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரட்றிக்கிற்கு கிடைத்த வெற்றி அவனுக்கு திருப்தி அளிக்கவில்லை. அதனால் மீண்டும் ஆஸ்திரியாவுடன் போரிடச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான், அதே நேரம் ஆஸ்திரியாவும் சைலீசியாவை இழந்தமையால் அதை மீளவும் பெற ஐரோப்பிய நாடுகளிடம் முறையிட்டுக் கொண்டிருந்தது. இவ்வாறு இரு நாடுகளுக்குமே அதிப்தி நிலவியதால் 7 ஆண்டுப் போர் ஏற்பட்டது. பிரான்ஸ், ரஷ்யா, சுவீடன் சக்சனி ஆகியவற்றின் உதவி ஆஸ்திரிய அரசியல் தூதுவரான காணிட்ஸ் என்பவரால் மேரியா தெரேசாவிற்குக் கிடைத்தது. இங்கிலாந்து மட்டும் பிரஷ்யாவுக்கு உதவ முன் வந்தது. ஆசிய நாடுகளில் இங்கிலாந்துக்கும் பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட குடியேற்றவாதப் போட்டிகள் தொடர்ந்த கொண்டிருந்தமையினால் 7 ஆண்டுப்போரில் இவ்விரு நாடுகளும் எதிரெதிராகவே கலந்து கொண்டன. 1756 இல் பிரஷ்யா – அவுஸ்திரியாவை முதன்மைப் படுத்திய 7 ஆண்டுப் போர் தொடங்கியது.

பிரஷ்யாவிற்குள் நான்கு திசைகளில் இருந்தும் படையணிகள் வந்து மோதிக் கொண்டன, இத்தகைய பெருங் கூட்டணியை பிரட்றிக் எதிர்பார்க்கவில்லை. இங்கிலாந்தின் உதவியும் திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. ஆயினும் பிரட்றிக் நம்பிக்கையுடன் தன் படைகளை நடத்தினான். அதன் மூலம் சக்சனியை ஆக்கிரமித்துக் கொண்டான். பொஹிமியா மீதும் போர் தொடுத்து பிரேக் பட்டணத்தைக் கைப்பற்றினான். ஆஸ்திரியா, சுவீடன், பிரான்ஸ் ஆகியவற்றின் ஒருமித்த எதிர்ப்பை சமாளிப்பது கடினமாக இருந்தாலும், தோல்விகளுடன் பல போர்களில் பின் வாங்க நேர்ந்தாலும் பிரட்றிக் மனம் தளராது தொடர்ந்து போரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினான். 1757 நவம்பர் 5 இல் Rass back எனும் இடத்தில் பிரான்சுப் படைகளைத் தோற்கடித்தான். அடுத்தமாதம் Leuthen எனும் இடத்தில் ஒரு பெரும் ஆஸ்திரியப் படையைத் தோற்கடித்தான். இந்த இரண்டு போர்க்களங்களிலும் அவன் பெற்ற வெற்றி எதிரிகளைச் சிதறடித்தன. அத்துடன் ஐரோப்பாவின் முதல் தளபதி எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டான். ஆயினும் 1760இல்பிரஷ்யா ஆஸ்திரியக் கூட்டணியிடம் தன் பல பகுதிகளை இழக்கவும் நேரிட்டது.

பிரட்றிக் நீண்ட நாள் போரில் ஈடுபட்டமையால் அரச நிதியும் அழிந்திருந்தது. இச் சமயத்தில் 1761 இல் இங்கிலாந்தின் பிரதமஅமைச்சர் பிட் பதவியில் இருந்து விலகினார். தன் வெற்றிக்குக் காரணமான பிட் பதவி விலகியதால் தனக்கு உதவிகிட்டாது என்பதை உணர்ந்து பிரட்றிக் தற்கொலை கூட செய்ய எண்ணினான். நல்ல வேளையாக ரஷ்ய அரசியான எலிசபெத் இறந்து விட்டதனால் அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த 3ஆம் பீற்றர் பிரட்றிக்கின் நண்பனாக இருந்ததன் காரணமாக சமாதான ஒப்பந்தத்திற்கு உறுதிவழங்கினான். இவ்வாறு 7 ஆண்டுகள் தொடர்ந்த இப்போர் 1763இல் பரிஸ் உடன் படிக்கையின் மூலம் தீர்க்கப்பட்டது. அதன்படி சைலீசியா மாகாணம் நிலையாக அவுஸ்திரியாவை விட்டுப் பிரிந்து அது பிரஷ்யாவின் ஒரு பகுதி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரட்றிக்கின் வலிமை இவ் யுத்தத்தினால் மேலோங்கியது. ஐரோப்பிய மன்னரெல்லாம் இவருடைய படைத்திறமையையும் அரசியல் கொள்கைகளையும் புகழ்ந்தனர். ஆங்கிலேயர் பிரஷ்யாவுக்கு உதவினாலும் கூட ஒரு சிறிய நாடான பிரஷ்யா ஐரோப்பாவில் தன் பெருமையை நிலைநாட்டுவதற்கு மகா பிரட்றிக்கின் திறமையே காரணமாக இருந்தது. எனவே பிரஷ்யாவின் எழுச்சியை 7 ஆண்டுப் போரில் பெற்ற வெற்றி மூலம் பிரட்றிக் நிலைநாட்டிக் கொண்டார்.

மேலும் பிரஷ்யாவின் எல்லை விஸ்தரிப்பிற்காக பிரட்றிக் மேற்கொண்ட இன்னோர் வெளிநாட்டுக்கொள்கை போலந்தை 1772இல் பாகப்பிரிவினை செய்து கொண்டமையாகும். சைலீசியாவை கைப்பற்றிக் கொண்டதற்கு ஆஸ்திரியாவுக்கு நஷ்டஈடு வழங்கும்பொருட்டு போலந்து பாகப்பிரிவினையில் ஆஸ்திரியாவையும் சேர்த்துக் கொண்டான். ரஷ்யாவின் அரசி 2ஆம் காதரைனின்யோசனைப் படியே பிரட்றிக் போலந்து பாகப்பிரிவினையில் ஈடுபட்டான். போலந்து நாட்டு அரசன் இறந்தவுடன் அங்கே குழப்பம் நிலவியது. அச்சயமத்தில் போலந்தை ஆக்கிரமித்த காதரைன் ஒரு படையை அனுப்பினாள். ஆஸ்திரியாவை இச் சிக்கலில் கலந்துகொள்ளாதிருக்கும் வகையில் போலந்தின் ஒரு பகுதியை நஷ்டஈடாகத் தருவதாக மேரியா தெரேசாவிற்கு ஆசை காட்டினாள். இவ்வஞ்சத்தை மேரிய தெரேசா விரும்பாவிட்டாலும் மறுத்தால் ரஷ்யா, பிரஷ்யா ஆகிய இரண்டினதும் எதிர்ப்பைப் பெறவேண்டி வரும் என அஞ்சினாள். ஐரோப்பிய நாடுகள் யாவும் போலந்து பாகப்பிரிவினையை ஒரே முகமாக எதிர்த்தன. இருப்பினும் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய மூன்றும் போலந்தைப் பங்கிட்டுக்கொண்டன. இதனால் பிரஷ்யாவின் எல்லைகள் பால்டிக்கரையோரம் வரையில் விரிவடைந்தது. பிரஷ்யாவின் புகழ் மேலும் ஓங்கியது. ஐரோப்பிய வல்லரசுகளில் முக்கியம் வகிக்கும் வல்லரசாக பிரஷ்யா கருதப்பட்டது. எனவே சிறிய இராட்சியமாக இருந்த பிரஷ்யாவை பெரும் வல்லரசாக்கிய பெருமை பிரட்றிக்கிற்கே உரித்தானது.

ஒளிர்வுசால் வல்லரசர்களில் முன்னணியில் திகழ்ந்த பிரட்றிக் அயல் நாடுகள் உடன் பல்வேறு போர்களிலும் ஈடுபட்டதன் மூலமும் பல பிராந்தியங்களை கைப்பற்றியதன் மூலமும் பிரஷ்யாவின் எழுச்சியை வலியுறுத்தியதுடன் உள்நாட்டில் பொருளாதாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையை வளர்த்துப் போரினால் இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளப் பல திட்டங்களை அமுல்படுத்தினார். பிரட்றிக் முழுமையாக எதேச்சாதிகாரியாக ஆட்சி செய்தாலும் மக்களின் சிறந்த பணியாளராகத் தன்னைக் கருதிக் கொண்டார். "மன்னன் கட்டுக்கடங்காத எஜமானரல்ல. அவரே நாட்டின் முதல் வேலைக்காரன்" என்று பிரட்றிக்கே குறிப்பிட்டுக் கொண்டான். மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டான்.

தன் ஆட்சியின் கீழ் உள்ள எல்லா அரசாங்க நிறுவனங்களையும் ஒழுங்கு படுத்தி, ஒவ்வொரு துறையிலும் அனுபவம் மிக்க அதிகாரிகளை நியமித்து அவர்களையெல்லாம் அரசனிடத்தும் பொறுப்பாக நடந்து கொள்ளவேண்டும் எனப் பணித்தார். அவர் மேற்பார்வையில் தான் எல்லா நிறுவனங்களும் இயங்கின, காடுகளை அழித்துக் கழனியாக்கினார், குடியானவர்களுக்கு விவசாயத்திற்கும் கால்நடை வளர்ப்பிற்குமாக உதவிகள் வழங்கினார். பிரான்சில் இருந்து வெளியேற்றப்பட்ட ஹியூகனட்சுகளை, பிரஷ்யாவில் அவர்கள் தொழிற்சாலைகளை நிர்மானிக்க பல வசதிகள் செய்துகொடுத்தார். அவருடைய காலத்தில் சில்க், வெல்வெட், லினன் ஆகிய துணிவகைகளின் உற்பத்திக்கு ஆதரவு அளித்தார். இரும்பு, ஈயம், போன்ற உலோகப் பொருட்கள் எடுக்கும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. பயிர்ச்செய்கையில் நவீன முறைகளைப் புகுத்தி அதிக லாபம் பெற்றுக் கொள்ள வழியமைத்தார். சாகுபடி செய்யப்படாத நிலங்களை உழுது பழந்தரு மரங்களையும், கிழங்கு, செடி, கொடிகளை பயிரிடத் தூண்டினார். நீர் தேங்கிக் கிடந்த சதுப்பு நிலங்களைச் சாகுபடிக்குத் தகுந்த இடங்களாகச் செய்தார். சாலைகளையும், கால்வாய்களையும் அமைப்பித்தார்.

நாட்டின் தொழில்களையும் வணிகத்தையும் சிறக்கச் செய்தார். ஏழைகளின் வரிச்சுமையைக் குறைத்தார். மக்களிடம் இருந்து கிடைத்த வரியை கருத்துடன் செலவழித்தார். இவ்வகையில் பிரஷ்யாவின் பொருளாதார நிலையைப் பெருக்குவதற்காக பிரட்றிக் மேற்கொண்ட இத்தகைய திட்டங்களால் பிரஷ்யாவில் செல்வவளம் மிகுந்து பிரஷ்யா பொருளாதார ரீதியாகவும் எழுச்சிபெற்றுக் கொள்ள பிரட்றிக் பெரும் பங்காற்றினார். அரசியல், பொருளாதாரத்துறைகளில் பிரஷ்யாவின் எழுச்சிக்கு பங்காற்றிய பிரட்றிக் சமூக ரீதியான எழுச்சிக்கும் கர்த்தாவாக விளங்குகின்றார். கல்வித் துறை, சட்டமுறை, சமயம் ஆகியவற்றில் இவர் கடைப்பிடித்த கொள்கைகள் பிரஷ்யாவின் உயர்ந்த வளர்ச்சிக்குத் துணை போயின.

கல்வியைப் பரப்புவதில் ஊக்கம்காட்டிய இவர் பல ஆரம்ப பாடசாலைகளை திறுவினார். பெர்லின் நகர விஞ்ஞானக் கழகத்தை விரிவுபடுத்தினார். அறிவுத் துறையில் மேற்கு நாட்டவர்களைப்போல பிரஷ்ய மக்களும் முன்னேற்றம் பெற வேண்டும் என ஆவல்கொண்டார். ரூசோ, வோல்ரயர், மொண்டஸ்கியூ ஆகியோரது நூல்களை பிரட்றிக் தான் விரும்பிப்படித்ததுடன் அவர்களின் தத்துவ உண்மைகளை பிரஷ்ய மக்களும் அறிந்து கொள்ளும்வகையில் அந்நூல்களையும் பிரஷ்யாவுக்குள் பரப்பினார். சட்டத்துறையைப் பொறுத்தவரை சட்டங்களை எல்லா மக்களும் விளங்கிக் கொள்ளும் பொருட்டு சட்ட நூலாக தொகுத்து வெளியிட்டார். குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளைக் குறைத்தார். நேர்மையான வழியில் நீதி வழங்கும் முறைகளைக் கையாண்டார். முறை அற்ற தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளை தானே இனங் காணும் பட்சத்தில் அவர்களுக்குத் தண்டனை வழங்கி மக்களைக் காக்கவும் பிரட்றிக் பின் நிற்கவில்லை.

சமயக் கொள்கைகளைப் பொறுத்த வரையில் பிரான்ஸ் போன்ற நாடுகளைப் போல் பாரபட்சம் காட்டாது சகல மதங்களையும் ஆதரித்து. எல்லா மதத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களின் உணர்வுகளுக்கும் முதன்மை யளித்து. பொதுமையான மதக்கொள்கை யைப் பின்பற்றினார். இதன் மூலம் ஹியூகனட்களை பிரான்ஸ் நாடு வெளி யேற்றியபோது அவர்களை ஆதரித்து பிரஷ்யாவில் குடியேற அனுமதித்தார். "துருக்கியர் இப்போது நம்நாட்டிற்கு வந்தால் அவர்களையும் வரவேற்று நாமே மசூதிகள் கட்டித்தருவோம்" எனப் பிரட்றிக் கூறியதில் இருந்து சமயம் தொடர்பாக பிரட்றிக் கொண்ட பொதுமை நோக்கம் புலனாகும். இத் தகைய சமயப் பொறைமூலம் ஏனைய நாடுகள்போல் சமயச் சச்சரவுகள் இல் லாது அமைதியான ஆட்சி நிலவியதுடன் ஹியூகனட்களுக்குப் புகலிடம் கொடுத் மையால் கைத்தொழில் துறையில் அபி விருத்தி அடைந்து செல்வம் திரட்ட முடிந்தது.

தொகுத்து நோக்கும்போது கி. பி. 18ஆம் நூற்றாண்டில் சாதாரண இராட் சியமாக விளங்கிய பிரஷ்யா வல்லரசு என்ற அந்தஸ்த்தைப் பெற்றுக்கொண்ட தென்றால் அத்தகைய எழுச்சிக்கு மகா பிரட்றிக்கே முதற்காரணன் ஆவான். ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் கலந்து கொண்டதன் மூலம் 7 ஆண்டுப் போரில் பங்குகொண்டதனாலும் போலந்துப் பாகப்பிரிவினையில் ஈடுபட்டதனாலும் பிரஸ்யாவின் எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டதுடன் பிரட்றிக்கின் பெருமை யும், திறமையும், படை வலிமையையும் ஐரோப்பிய நாடுகள் தெரிந்துகொண்டு பிரஷ்யாவை ஒரு வல்லரசாக நோக்கின. அந்தளவிற்கு வெளிநாட்டுக் கொள்கை களால் பிரட்றிக் பிரஷ்யாவை உயர்த் தியதுடன் பொருளாதாரத்துறையை மேம்படுத்துவதன் பொருட்டு கைத் தொழில், விவசாயத்துறைகளை ஊக்கு வித்தும், வரிகளை அறவிட்டும், அவற் றின் மூலம் பெறும் வருமானங்களை தேவையோடு செலவிட்டும் மிகுந்த அவதா னத்துடன் செயற்பட்ட வகையினால் பொருளாதாரத் துறையிலும் பிரஷ் யாவை உயரச்செய்தான். அத்துடன் கல் வித்துறை பொறுத்தும் நீதி வழங்கல், சட் டத் தொகுப்பிலும் மக்களுக்கு நன்மை அளித்து அம்மக்களிடமிருந்து நல்லபிப் பிராயத்தையும் பெற்றுக் கொண்டான். எல்லாவற்றிற்கும் மேலாக இவன் மேற் கொண்ட சமயக்கொள்கைகளினால் சமூ கத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சகிப்புத் தன்மை கொண்ட தார்மீக சிந்தனை வளரப்பெற்று மக்களிடையே பூசல்கள் தோன்றாது அமைதியான வாழ்க்கை முறை நிலவியது. இவை யாவும் பிரஷ் யாவின் உயர்ந்த நிலையைக் காட்டுவ தாக அமைகின்றன. எனவே அரசியல் பொருளாதார, சமூக, சமய ரீதியாக ஒரு ஒட்டுமொத்தமான எழுச்சி பிரஷ்யா வில் நிலவியதுடன் அதன் எழுச்சி எல்லா ஐரோப்பிய நாடுகளின் பார்வையையும் திருப்பியது. என்றால் அதற்குக் காரணம் பிரட்றிக் பிரஷ்யாவில் ஆற்றிய ஆட்சியே என்றால் மிகையில்லை.

உசாத்துணை நூல்கள்:


1. ஐரோப்பிய வரலாறு:
   மு. ஆரோக்கியசாமி
2. ஐரோப்பாவின் வரலாறு:
   இராஜகோபால்
3. நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வம்;
   (i) எஸ். ஏ. பேக்மன்
   (ii) ஜி. வி. மெண்டிஸ்


வறுமையின் திறவுகோல் சோம்பல்

— ஜான்ரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்தர்கால வட இந்திய அரசியல் சிந்தனை மரபின் வளர்ச்சி, கல்வி பண்பாட்டு நிலை

செ. கிருஷ்ணராசா (M. A.)
முதுநிலை விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை.

## அறிமுகமும் வம்சத்தோற்றமும்

குப்தர்கால இந்தியாவின் அரசியல் சிந்தனையினதும் அந்நிறுவனங்களின் வளர்ச்சியைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு அவ்வம்சத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்களும் உதவும். அவ்வகையில் குப்த வம்சத்தின் தோற்றமுறைமையானது இந்திய நிலமானிய அமைப்புமுறையுடன் தொடர்புபட்டதாக உள்ளது. இந்திய வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி, எவ்விதமான சலனமுமின்றிக் காணப்பட்டிருந்த குப்த வம்சமானது வடபீகாரில் நிலச் சுவாந்தராகவும், ஒரளவிற்கு அப்பகுதியின் அதிகாரவர்க்கத்தினராகவும் விளங்கிய லிச்சாவி (Lichchavis) வம்சத்து இளவரசியான குமாரதேவியை முதலாவது சந்திரகுப்தன் திருமணம் புரிந்தமையைத் தொடர்ந்து அவ்வம்சத்து ஆதிக்கவாதம் ஆரம்பித்தது எனக் காணமுடிகிறது. சமூக வாழ்வில் நிலத்தினை ஓர் அலகாகக் கொண்ட ஒரு செழிப்பான சமூக உருவாக்க - அரசியல் நடவடிக்கைகள் குப்தர்களால் கி. பி. 3-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டமைக்கு லிச்சாவி என்றழைக்கப்பட்ட சிறு நிலச்சுவாந்தரின் இணைப்பே அடிப்படைக்காரணமாயிற்று. இக்காலத்தில் தோற்றம் பெற்ற பல்வேறு வகையான மூலாதாரங்களும் இதனையே கோடிட்டுக் காட்டுகின்றன.

குப்தர்கால மகதத்தின் அரசியல் ஏற்றத்திற்கும் பண்பாட்டு மிளிர்விற்கும் ஏற்ற ஊடகமாகத் திகழ்ந்தது பாடலிபுத்திர நகரும் அந்நகரோடு நேரடியாக இணைக்கப்பட்டிருந்த தாம்ரலிப்தித் துறைமுகமுமாகும். கி. பி. 3ம் நூற்றாண்டினைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச வியாபார மார்க்கங்கள் கடல்வழியாகவும், தரைவழியாகவும் இந்திய பெரு நிலப்பரப்பினை இணைத்துக்கொண்டபோது முறையே தாம்ரலிப்தித் துறைமுகமும், பாடலிபுத்திரமும் கேந்திர முக்கியத்துவத்தினைப் பெற்றுக்கொண்டிருந்தன. திபெத், சீனா முதலிய தேசங்களுடன் இணைந்துவந்த சர்வதேச வியாபாரத் தரைவழி பாடலிபுத்திரத்தினை மீண்டுமொருமுறை வளங்கொழிக்க வைத்தது. தென்-தென்கிழக்காசிய வியாபார நடவடிக்கைகளுக்கெல்லாம் தாம்ரலிப்தித் துறைமுகம் நல்லரணாக விளங்கியது. இப்பின்னணியே குப்தர்கால வட இந்திய அரசியல் - பண்பாட்டுச் சிந்தனை மரபுகளின் செல்வாக்கானது தென்-தென்கிழக்காசிய நாடுகள் மீது படர்வதற்கும் உரிய அடிப்படையாயிற்று.

குப்தர்கால அரசியல் சிந்தனை-நிறுவனங்களின் வளர்ச்சியைப் பற்றிய தகவல்களை பல்வேறுவகையான மூலாதாரங்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள முடிகிறது. மனுசம்சிதை (Manu-Samhita) என்ற வடமொழி நூல் சந்திரகுப்தன் கால நடவடிக்கைகளையும், சிறப்பாகச் சந்திரகுப்தன்-குமாரதேவியின் திருமணத் தொடர்புகள் அரசியற்பெறுபேறுகள் பற்றியும் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குவதாக உள்ளது. இந்நூலின் பிரகாரம் லிச்சாவி வம்சத்தினர் சத்திரியர்களில் சற்று பின்னடைவைப் பெற்ற ஒரு குழுவினர் என்பதும் (Degraded) அந்நிலையானது முதலாவது சந்திரகுப்தனுடைய திருமண உறவின் அடிப்படையில் அரசியல் பலம் பெற்றதுடன், பேரரசு உருவாக்கத்திற்கே வித்திட்டு நின்றது என்பதும் தெரியவருகின்றது. இந்நிலையில் லிச்சாவி வம்சத்தினர் மிகவும் நீண்ட காலமாக குடியரசு (Republican System) முறையிலமைந்த வகையில் வைசாலியைத் தலைநகராகக் கொண்டு கௌதம புத்தரது காலத்திலிருந்து ஆட்சிசெய்து வந்திருந்தனர் என்பதனையும் அறியமுடிகிறது. ஆனால் சந்திரகுப்தன் ஏற்படுத்திக் கொண்ட திருமண உறவிற்குரிய பின்னணியையும், குடியரசு அமைப்பு முறையைக் கொண்டிருந்த லிச்சாவி அரசியல் நடவடிக்கைகளுக்குமிடையே காணப்பட்டிருக்கக்கூடிய தொடர்புகளை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. ஆனால் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது வைசாலிக்கும் நேபாளத்திற்குமிடையில் உள்ள வடபீகாரை தமது ஆள்புலமாகக் கொண்டிருந்த லிச்சாவிகளின் நிலையானது சந்திரகுப்தன்–குமாரதேவியின் திருமண இணைப்பின் வாயிலாக ஓர் உறுதியான–பரந்த நிலப்பரப்பினை மகதத்துடன் இணைத்தவகையில் பேரரசாக கட்டிஎழுப்பப்படுவதற்குரிய மாற்றத்திற்கு வழிகோலியது. இந்நிலையில் குப்த சாம்ராச்சியத்திற்கு தனது அரசியல் மேலாதிக்க நெறி முறைகளை பெருமளவிற்கு ஒரு வகையான நிலமானிய உறவுமுறையின் அடிப்படையில் வளர்த்தெடுத்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பம் கைகூடிவிட்டது எனலாம்.

முதலாம் சந்திரகுப்தனுக்கு முன்னர் ஆட்சி செய்த குப்த மன்னர் பற்றிய வம்சாவழிப்பட்டியல் தொடர்பாக வரலாற்றாசிரியர் மத்தியில் பல பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும் 1–ம் சந்திரகுப்தன் காலத்திலிருந்தே குப்த மன்னர் பின்பற்றிய தெளிவான அரசியற் கொள்கைகள், வெளிநாட்டுப் பூட்கைகள், உள்ளூராட்சி முறைமைகள் போன்றவற்றை அறியமுடிகின்றது. சந்திர குப்தன் 'குப்த யுகம்' (Gupta Era) என்ற ஒரு கால அட்டவணையை கி. பி. 320ல் பிரகடனப்படுத்தியதிலிருந்து அவனது முடிசூட்டு வைபவம் கி.பி. 320ல் நிகழ்ந்ததாக வரலாற்றாசிரியர் கொள்வர். இவனைத்தொடர்ந்து அவனது மகனான முதலாம் சமுத்திர குப்தன் ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டான் என்பதனை அவனது அலகாபாத்தூண் பிரஸஸ்தியிலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது. அச்சாசனத்தின் அடிப்படையில் சமுத்திர குப்தனது ஆட்சிக்காலமானது கி. பி. 340/350 தொடக்கம் 380 வரைக்குமுள்ளது என வரலாற்றாசிரியர் கொள்கின்றனர். இருந்தும் 'குப்தயுகம்' தொடர்பாக இன்னும் பல சர்ச்சைகள் இருந்துகொண்டேயுள்ளன. நடைமுறையில் 'குப்த யுகம்' ஒன்றை ஆரம்பித்து வைத்தவன் சமுத்திர குப்தன் எனக் கொண்டால் அம்மன்னனது ஆட்சியின் தொடக்கம் கி. பி. 320 ஆக அமையும் என்பது நோக்கத்தக்கது. ஆனால் பொதுவாகக் குப்த யுகத்தினை ஆரம்பித்து வைத்தவன் அவ்வம்சத்து ஸ்தாபகனான முதலாம் சந்திர குப்தன் எனக் கொண்டால் சமுத்திர குப்தனுடைய ஆட்சிக்குரிய அதிகாரம் கி. பி. 340 அல்லது 350 ஆம் ஆண்டாக அமையும் எனவும் வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றது.

சமுத்திரகுப்தனைத் தொடர்ந்து அவனது மகனான ராமகுப்தன் என்பவன் ஆட்சிக்குப் பொறுப்பானான் என்பதனை சமுத்திரகுப்தனுடைய தேவி சந்திரகுப்தம் என்ற நாடக நூலிலிருந்து அறியமுடிகிறது. ஆனால் வேறு எந்தவொரு இலக்கிய மரபுகளிலும் இம்மன்னனது பெயர் பேணப்பட்டிருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இரண்டாம் சந்திர குப்தனது கல்வெட்டுக்கள் கி. பி. 380 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கத் தொடங்கின்ற நிலையில் இம்மன்னனது அரசியல் நடவடிக்கைகள் கி. பி. 380 க்கும் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பது தெளிவாகின்றது. பொதுவாக கி.பி. 376 இல் இரண்டாம் சந்திரகுப்தன் முடிசூட்டுவிழாவினை நிகழ்த்தியிருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. 33 வருடங்கள் ஆட்சிபுரிந்த இம்மன்னன் கி.பி 413க்கு 415க்கு மிடைப்பட்ட காலத்தில் இறந்திருக்கக் கூடும். குப்த வம்ச வரலாற்றில் மிகவும் புகழ்பூத்த ஒரு காலப்பகுதியாக இவனது ஆட்சிக்காலம் மிளிர்ந்தது என்றால் அது மிகையாகாது.

இரண்டாம் சந்திரகுப்தனைத் தொடர்ந்து முதலாம் குமாரகுப்தன் ஆட்சிப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டான். இவனது ஆட்சிக்காலம் கி. பி. 415–455 ஆகும். இம்மன்னனது 40 வருடகால ஆட்சிக்காலத்தில் குப்தப் பேரரசக் கட்டுமானமானது மிகவும் உயர்ந்த ஒரு நிலையை அடைந்திருந்தது. இம்மன்னனைத் தொடர்ந்து இவனது மகனான ஸ்கந்த குப்தன் குப்தப் பேரரசின் வாரிசு ஆனான். ஸ்கந்தகுப்தனின் ஆட்சிக்காலமானது நீண்டகால அமைதியைக்கொண்டிருக்கவில்லை. அவனது சமகாலப் பதிவேடுகளின்படி 'மிலேச்சர்கள்' என அழைக்கப்பட்ட 'குணர்கள்' (Huns) என்போருடைய தொடர்ச்சியான படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. அச்சம் நிறைந்ததாகவே கி. பி. 460 க்கும் 467 க்கு மிடைப்பட்ட இவனது ஆட்சிக்காலம் அமைந்தது. இவன் இறக்கும்போது குப்தப்பேரரசினை எவ்விதமான சிதைவுகளுமின்றி தனது வாரிசுவிடம் கையளித்துச் சென்றான் எனக் கூறப்படுகிறது. இருந்தும் இம்மன்னனைத் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களான முதலாம் குமாரகுப்தனின் மகனான புரு குப்தன் என்பவனது ஆட்சிக் காலத்திலிருந்தே பேரரசின் அரசியல் அடிப்படையிலான வீழ்ச்சி ஆரம்பித்தது. இவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வருகை தந்திருந்த புர குப்தன் பானுகுப்தன் போன்றோருடைய ஆட்சிக் காலங்களில் குப்தப் பேரரசானது மிகவும் சுருக்கமடைந்து, தளர்வெய்தி வீழ்ச்சிபெற்றது எனலாம். அவ்வீழ்ச்சியை முடித்துவைத்தவர்கள் குணர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### குப்த மன்னர்கள் பின்பற்றிய அரசியல் பூட்டைகள்

"ஒரு சாஸ்திரிய யுகம்" என அழைக்கப்படும் இந்த இரண்டாம் மகதப் பேரரசின் காலத்தில், 2ம் முறையாக ஓர் அனைத்திந்திய பொதுமை தென்னாசியாவில் அரசியல் அடிப்படையிலும் பண்பாட்டடிப்படையிலும் உருவாக்கப்பட்டது. மனு சம்கிதையில் இடம்பெறும் ராஜதர்ம என்ற பாகமும் நிதிசார, ஸ்மிருதி கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரம் போன்ற நூல்களும் இந்தியாவின் இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் இடம் பெறுகின்ற சாந்திபர்வன் என்ற பகுதியும் இந்திய அரசியல் கோட்பாடுகள் பற்றி விளங்குகின்ற பாகங்கள் ஆகும். இந்த நூல்களில் புராதன இந்திய மன்னர்களது தகமைகள் ஆட்சிக்குரிய முறைகள் அரசு, அரச பதம், ஆட்சிப்புலம் என்பனவற்றின் கருத்துக்கள் என்பன விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றினைப் பின்பற்றி குப்தர் கால அரசியல் கோட்பாடுகள் பல உருவாக்கப்பட்ட போதிலும் பல விசேடமான அரசியல் நடவடிக்கைகளில் இம் மன்னர்கள் ஈடுபட்டிருந்தமையினைக் காணமுடிகின்றது.

புராதன இந்திய அரச பதம் பற்றிய கருத்தமைவானது பெருமளவிற்கு இராமராச்சியம் தொடர்பானதாகவே அமைந்திருந்ததினை இந்திய அரசியல் நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. அத்தகைய ஒரு அரசியல் வாதத்தினை எடுத்து மீண்டும் நிலைநாட்டும் ஒரு காலப் பகுதியாக வட இந்தியாவில் குப்தர்களது அரசியல் நடவடிக்கைகள் அமைந்தமையினைக் காணலாம். இந்திய அரசியல் வரலாற்றின் வளர்ச்சியில் மௌரியர் காலத்தினைத் தவிர குப்தருக்கு முற்பட்ட ஏனைய வம்சங்களின் ஆட்சிக்காலத்தில் ( Divine Right Theory ) தெய்வீக உரிமைக் கோட்பாடு பெருமளவுக்கு அரசியலில் பின்பற்றப்பட்டது. Hemadri யின் " சத்துர் வர்க்கசிந்தாமணி " என்ற நூலிலும் "பிராயசித்த காண்டம்" என்ற நூலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"The King is a God in human and, therefore none should harm him" என மன்னனது தெய்வீக உரிமைக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

பேரரச குப்தர்களைப் பொறுத்தமட்டில் ஒரு புதிய பிராமண இயக்கக் அரசியல் கோட்பாடுகள் தொடர்பான நடைமுறைகளில் செல்வாக்குச் செலுத்தியமையினைக் காண முடிகின்றது. இதனை neo - Brahminical movement என வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார்கள். குப்த மன்னர்கள் சூடிக்கொண்ட விருதுகள் ராஜாதிராஜ, பரமராஜாதிராஜ, ராஜாதிராஜர்ஷி, ராஜராஜாதிராஜ போன்றவை அம்மன்னர்களது பேரரசவாதத்தின் தன்மையை பிரதிபலித்தனவாக அமைந்து காணப்படுகின்றன.

குப்தமன்னர் சூடிக்கொண்ட விருதுகளின் தன்மையை நோக்கும்போது அவை அவர்களது Super - Human குணாதிசயத்தினைத் தருவதாக இருப்பதனைக் காணலாம். இத்தன்மையே அவர்களை அரசியலில் கடவுளர்க்குரிய தன்மையைக் கொடுத்தது எனலாம். அலகாபாத் தூண்சாசனத்தில் சமுத்திர குப்தனை பூமியில் வசிக்கின்ற கடவுளாக ஹரிசேனர் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. சமுத்திரகுப்தன் காலத்திற்குச் சற்று பின்னர் தோற்றம்பெற்ற இலக்கியங்களிலும் அவனைப் பற்றிய கடவுட் குறிப்புக்கள் அவன், குபேர, வர்ண, இந்திர, அங்கத (யம) தெய்வங்கட்குச் சமமானவனாக அழைக்கின்றன. வட வங்காளத்தில் உள்ள இலக்கியக் குறிப்புக்களில் குப்த மன்னர்களுக்குரிய விருதுகளாக பரமதைவத, பரமபட்டராக, மஹாமானாதிராஜ என இடம் பெற்றிருப்பது ஓரளவுக்கேனும் 'பரமேஸ்வர' என்பதுடன் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குப்த மன்னர்களால் வெளியிடப்பட்டு வைக்கப்பட்ட தங்க நாணயங்களின் முற்பக்கத்தில் அவர்களுடைய விருதுப் பெயர்களைத் தெளிவாகக் காணமுடிகிறது.

குப்தப்பேரரசர்கள் பின்பற்றியிருந்த ஆதிக்கவாத விஸ்தரிப்பு நடவடிக்கைகள் புராதன இந்திய அரசியல் கோட்பாடுகளுக்கேற்ப அமைந்திருந்த போதிலும் பேரரசுடனான பிரதேசங்களின் இணைப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் ஏனைய காலப்பகுதிகளில் இருந்து சற்று வேறுபட்டு அமைந்தமையும் அவதானிக்க முடிகிறது. சமுத்திர குப்தனுடைய அலஹாபாத் தூண் பிரஸஸ்தியானது அந்நடவடிக்கையை மிகத் தெளிவாகத் தருகின்றது. மோக்ஸ, அனுக்கிரஹ, கிரஹண என்ற மூன்று கட்டங்களாக ஆள்புல திக்விஜய நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. சமுத்திர குப்தன் கால அரசியல் சித்தாந்தத்தில் ஆரியவர்த்தகப் பகுதி திக்விஜய நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு அம்மன்னர்களை Liborate(மோக்ஸ)செய்வித்து நேரடியான இணைப்புக்குட்படுத்தப்பட்டமையைக் காணலாம். தக்ஷணாபத படையெடுப்பின்போது பின்பற்றப்பட்ட கோட்பாடு அனுக்கிரஹ என்பதாகும், தக்ஷணாபதத்தில் ஆட்சிசெய்த 12க்கு மேற்பட்ட மன்னர்களையும் சமுத்திரகுப்தன் தனது மேலாணையை ஏற்றுக்கொண்ட பட்சத்தில் அவர்களை அவ்வாறே ஆட்சிக்கு அனுமதித்த நடவடிக்கையை 'அனுக்கிரஹ' என்பது விளக்குகின்றது, அடவிஹாராஜாக்கள், (Frondies Kingdom மீதான படையெடுப்பும் இணைப்பும் இன்னொரு வேறுபட்ட தன்மையைக் கொண்டிருந்தமையைக் காணலாம். இலங்கையுடன் சமுத்திரகுப்தன் கொண்டிருந்த வெளிநாட்டுக் கொள்கை பெருமளவுக்கு அரசியல் அடிப்படையிலானதாக அல்லாமல் பண்பாட்டு அடிப்படையிலேயே இணைப்பினை ஏற்படுத்துவதாக அமைந்தது என்ற கருத்து மீள் பரிசீலனைக்குரியது.

குப்த மன்னர்கள் பின்பற்றியிருந்த நிர்வாக யந்திரத்தின் அமைப்புமுறையைப் பார்க்கும்போது அது பெருமளவுக்கு பாரம்பரிய இந்தியாவின் தொடர்ச்சியாய் அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்தமன்னர்களுடைய சிவில் நிர்வாக அமைப்பில் காணப்படுகின்ற முக்கிய மானதும் உயர்ந்ததுமான ஒரு நிர்வாக அமைப்பு 'மந்திரி' என்பதாகும். கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரத் திலும் இதனை நன்கு அவதானிக்கலாம். 'மந்திரி' என்ற நிறுவனமே குப்தப் பேரர சின் சகலவிதமான நிர்வாக நடவடிக்கைக் குரிய தலைமைப்பீடமாக அமைந்தது. இதற்கடுத்த நிலையில் 'மஹா பலாதிக் கிரிட்ட' (Mahabaladhikrita) என்றழைக் கப்படும் Commander – in – chief. மஹா தண்டநாயக்க (Mahadandanayaka) என் றழைக்கப்படும் General மஹா பிரதிகார (Mahapratihara) என்றழைக்கப்படும் Chief – Door – Keeper என்பன போன்ற நிர்வாக நிறுவனங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்பட்டன. சதவாஹனர் காலத்து நிர்வாக முறை களும், குஷாணர் காலத்து நிர்வாகமுறை களும் குப்த காலத்து நிர்வாக யந்திரத் தில் பெரும்பங்கு கொண்டிருந்தமையைக் காணமுடிகிறது. அவ்வகையில் மஹா பலாதிக்கிரிட்ட என்றழைக்கப்படும் உத்தி யோக நிறுவனமானது சதவாகனர் காலத்து 'மஹாசேனாதிபதி' என்பதுடன் தொடர்புடையதாக எடுத்துக்காட்டப் படுகின்றது. மஹா தண்டநாயக்க என் பது குஷாணர் காலத்து நிர்வாக முறை யுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இப்பதவியானது தெலுங்கு நாட்டில் ஆட்சி செய்த இக்ஷ்வாகு வம்சத்திற்கு உரியதாகும். குப்தர் கால நிர்வாக யந் திரத்தில் இடம்பெற்ற இன்னொரு முக் கியமான பதவிப்பெயர் சாந்திவிக்கிரகீக (Sandhivigrahika) என்பதாகும். இது Minister of Peace and war Foreign Miniister எனப்பட்டது.

## குப்தர் காலக் கல்விக் கொள்கையும் பண்பாடும்

இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் குப்தர் காலமானது "ஒரு சாஸ்திரீய கலை மரபுக்காலம்" எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு கொள்வ தற்குரிய அடிப்படையாக அமைந்த காரணி அக்காலத்திலேற்பட்ட கல்விச் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையும் அதன் பின்னணியில் மலர்ச்சி பெற்ற கலைகளின் செழுமையுமேயாகும். "ஓர் உண்மையான அழகியற் கல்வியின் அணுகுமுறையுடனும், ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் செயல் வடிவங் களுடனும், இந்திய மதமொன்றால் ஆக்கப் பட்ட கல்விக்கோட்பாடுகளுக்குள் நின்று ஒரே (சமச்) சீராகக் கலையின் தோற்றப் பாடுகளை வெளிப்படுத்திய தன்மையின் அடிப்படையிலேயே குப்தர் காலமானது இந்தியக் கல்வியியல் வரலாற்றில் ஒரு ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. இந் திய அலங்காரக் கலையின் வரலாற்றில் குப்தர் காலம் ஓர் உச்சமான காலகட் டத்தினைக் குறித்து நின்றமைக்கு ஏது வாக அமைந்த காரணி அவ்வம்சத்து ஆட்சியின் தொடக்கத்தில் இருந்து அதன் வீழ்ச்சிவரைக்குமுள்ள காலப்பகுதிக்குள் (ஏறத்தாழ கி. பி. 320 இலிருந்து கி.பி. 647 வரைக்குமுள்ள 300 வருடங்கள்) எண்ணிக்கையில் மிகவும் அதிகமாகத் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு வகையான இலக்கிய, கலை வேலைப்பாடுகளே ஆகும். இத்தகைய இலக்கிய கலை வேலைப்பாடுகளானவை குப்தர் காலத் திற்கு முற்பட்ட கல்விச் சிந்தனைகளை யும், குப்தர் காலத்திலும், அதற்குப் பின்னரும், நின்று நிலைக்கப்போகின்ற இலக்கிய, கலை மரபு பற்றிய கல்விச் சிந்தனைகளையும் ஒருங்கே கொண்டு வெளிப்படுத்தப்பட்டனவாக உள்ளன. இத்துடன் நின்றுவிடாது பல்வேறு பிரிவு களுக்குட்பட்ட இந்தியக்கலைக் கல்வியின் வரலாற்றில், ஒரு முக்கியமான கட்டத் தினைக் குறிப்பதுடன், தனக்கேயுரிய தனித்துவமான இந்தியக் கல்விப் பாரம் பரியமொன்றுடன் இதற்கு முற்பட்ட காலத்திலோ அல்லது பிற்பட்ட காலத் திலோ விஞ்சப்பட முடியாத வகையில் புதிய கல்வி மரபுகளைத் தோற்றுவித்த தன் அடிப்படையிலும், அவையே ஏறத் தாழ தற்காலம் வரையிலும் நின்று நிலைக்கவைத்ததன் அடிப்படையிலும் புராதன இந்தியக் கல்வி கலை பண்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இக்காலம் அமைந்தது எனலாம்.

## குப்தர் காலக் கல்வி — அறிவியற் துறைகளின் பின்னணி:

இதுவரை காலமும் பௌத்த மதமும் ஏனைய மதங்களும் அவற்றின் அறவியல் (ethics) அறிவியல் ரீதியானதும், ஸ்தாபன ரீதியானதுமான தன்மைகாரணமாக இந்தியாவடங்கலிலுமுள்ள உயர்குடிப் பிறந்தோரது மதங்களாகவே விளங்கி வந்தன. எனினும் பௌத்த மதமானது இந்திய உபகண்டத்திற்கு வெளியே தென், தென்கிழக்காசிய, தூரகிழக்காசிய நாடுகளுக்கும் பரவியபோது அம் மதமானது வெளிநாட்டு ஆட்சியாளரையும் கவர்ந்துகொள்ளக்கூடிய ஒரு சர்வ தேச மதமாகவும் மாற்றம் பெற்றுக் கொண்டது. அந்நிலையில், அவ்வப்பிர தேசத்தில் மக்களுடைய வாழ்க்கை முறைகளில் ஊடுருவி, அவர்களைக் கல்வி —சிந்தனை அடிப்படைகளில் நாகரிகப்படுத்தும் ஒரு கருவியாகவும் தொழிற்பட்டுக் கொண்டிருந்தது. இக்கட்டத்தில் விகாரைக் கல்வியூடான அறிவியற்துறை வளர்ச்சியானது தென்னாசியாவில் மேலோங்கிக் காணப்பட்டிருந்தது என்பதனை இங்கு குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. இந்நிலையிலேதான் இந்தியாவில் முன்னணியில் திகழ்ந்த பல பிராமணீய கல்வியியற் பீடங்களின் தத்துவ ஞானிகள், கல்விச் சிந்தனையாளர்கள், விஷ்ணுவின் அடியார்களானபாகவதர்கள் சிவனடியார்களான காபாலிகர் அல்லது லாகுலின்கள் அரசவையிலுள்ள பிராமணீய உறுப்பினர்கள், அவர்கள் நடாத்திய பிராமணீய வேத — சடங்காசார முறைகள் — யாகங்கள் என்பவற்றிலிருந்து உணர்வும், ஆதரவும், ஊக்கமும் பெற்றதாகவே குப்தர் காலத்து நவீன பிராமணீய கல்வி மரபு தோற்றம் பெற்றது. இவ்வாறான ஒரு கல்விமுறை தோற்றம் பெற்று விரைவாக வளர்ச்சியடைந்தமைக்கு அடிப்படையாக சமஸ்கிருத மொழி மூலமான கல்விமுறையின் போதனையும், அதனடிப்படையிலான சிந்தனை வளர்ச்சியுமே ஆதாரமாக அமைந்தன.

குப்த மன்னர்கள் மத சகிப்புத் தன்மை கொண்டோராக விளங்கிய அதே நேரத்தில், விஷ்ணுவிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர்களாகவும், விசேடமாக விஷ்ணுவினுடைய அவதாரங்களில் ஒன்றும், இந்தியத் தேசிய காவியத்தின் கதா நாயகனும், புராதன இந்திய இலட்சிய அரச முறையின் முன்னோடியாகவும் விளங்கிய இராமனிடத்தில் ஆழ்ந்த பற்றுக் கோடு உடையவர்களாகவும் காணப்பட்டனர். இத்தகைய ஒருபின்னணியே பாரம்பரிய குருகுலக் கல்விமுறையான பாரத, இராமாயணக் கல்வி மரபினை சமஸ்கிருத மொழியூடாகக் குப்தர் காலத்தில் வளர்த்தெடுத்தது. அதேநேரத்தில் பௌத்த மதத்திலே காணப்பட்ட உலோகாயுதக் கோட்பாடானது பற்றற்ற நிலையைப் போதிக்கும் பண்பூடாக அக்கால அறிவியல் — விஞ்ஞானத்துறைக் கண்டுபிடிப்புக்களுக்கான அடித்தளத்தினை அமைத்துக் கொடுத்தது. இத்தகைய ஒரு பின்னணியே மறைமுகமாக புதிய ஒரு கோணத்தில் அமைந்த கல்வியியற் புலத்து அறிவியற் துறைச் சாதனைகள் - கலை மரபுகள் பற்றிய எழுச்சிக்கும் பொதுவாக தென்னாசியாவின் இறுதியான — தீர்க்கமான பண்பாட்டுத் தோற்றப்பாட்டு வளர்ச்சிக்கும், வாழ்க்கை முறைக்குமான வழியைச் சமைத்துக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது.

## குப்தர் காலக் கல்வியியற் புலத்தின் பொதுவான இயல்புகள்

இடைக்கால இந்துப் பண்பாட்டில் அல்லது ஓரளவிற்குத் தற்காலம் வரையான ஒரு கால எல்லையில், மிகச் சிறந்த ஆனால் இதுவரையில் விஞ்சப்பட முடியாத பூரணத்துவம் வாய்ந்த வாழ்வு முறையை உருவாக்கியதன் அடிப்படையிலும், அதன் தோற்றப்பாடுகள் மரபு மாதிரியை அடிப்படையாகக் கொண்டமைந்ததன் அடிப்படையிலும், அதே நேரத்தில் அதிகார பூர்வமான இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத் தோற்றப்பாடுகளின் இறுதி நிலையை உருவாக்கியதன் அடிப்படையிலும் குப்தர் காலமானது இந்தியக் கல்வியியல் வரலாற்றில் ஒரு நவீனத்துவத்தைக் கொண்ட சாஸ்திரிய காலப் பகுதியாக விளங்கியது. கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட 5 ஆம் நூற்றாண்டளவில் கெலனோ - றோமன்; கெலனோ - பார்தியன் நாடுகளிலிருந்து பெருந்தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கல்வியியல் சிந்தனைகளின் வடிவங்களையும், கருத்துக்களையும் அவற்றின் செல்வாக்குகளையும் இந்தியத் 'தேசிய' ஆத்மீகக் கல்வி மரபிற்கேற்ப மாற்றியமைத்துக்கொண்டது. பின்பு அதனடிப்படைகளில் இருந்தே குப்த கல்விக் கோட்பாடானது தனது கலை மரபினையும், அதற்குரிய வடிவத்தினையும், வெளிப்பாட்டு முறைகளையும் உருவாக்கிக் கொண்டது. இத்தகைய ஒரு செயற்பாடானது, இந்தியாவிலே மேற்குலகினுடைய ஆன்மீகக் கல்விக் கோட்பாட்டின் அடிப்படைகளுக்கு ஓர் உண்மையான எதிர்ப்புணர்வாகவும், அதேநேரத்தில் ஏதோவகையில் தனித்துவம் வாய்ந்ததாகவும், இந்தியாவில் முற்பட்ட காலகட்ட கலை வளர்ச்சியூற்றுக்களிலிருந்து வேறுபட்டு அமைந்து, மிகத் தீவிரமான புதிய கல்வி வளர்ச்சியூக்கங்களைக் கொண்ட காலப்பகுதியாகக் குப்தர் காலத்தினை விளங்க வைத்தது.

(அந்த நிலையானது பின்பு கி. பி. 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் மத்திய ஆசியாவிலிருந்து தொடர்ச்சியாகப் படையெடுத்துவந்த அநாகரிக, வெறும் ராணுவ நடவடிக்கைகளில் விருப்புடையவர்களான, கல்வியறிவற்ற குணர் (Guns) என்றவொரு சாதியினரால் முற்றுமுழுவதுமாக அழித்தொழிக்கப்பட்டது.)

இப்பின்னணியே புதிய ஒரு கோணத்தில் அமைந்த கல்விச் சிந்தனை எழுச்சிக்கும், ஆனால் மிகவும் வலுவுடைய ஓர் அலங்கார இலக்கியக் கலை மரபின் தோற்றத்திற்கும் வழிவகுத்து நின்றது. இத்தகைய ஒரு அபிவிருத்தியானது பின்னர் வடஇந்தியாவில் இந்துக்கோவில்களுடைய கட்டிட நிர்மாணத் தோற்றப்பாட்டிற்கும் அடிப்படையாக அமைந்தது. இதே நேரத்தில், கிறிஸ்துவுக்கு முற்பட்ட 3 ஆம், 2 ஆம் நூற்றாண்டுகளிலிருந்து அந்நிய நாடுகளான மாசிடோனியா, பக்ரீரியா, கிரேக்கம் போன்ற மத்தியாசிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பரிணாமமடைந்த பௌத்தக் கல்வியின் பாரம்பரியம் இக்கால கட்டத்தில் மெல்லமெல்லக் கைவிடப்பட்டமையைக் காணலாம். ஆனால் பௌத்தக் கல்வி மரபினைவிட அரசியல் விஞ்ஞானம் என்றவோரடிப்படையில் மத்தியாசிய நாடுகளூடாக இந்தியா வந்தடைந்த மரபினை அறிவியலானது மிகவும் நெருக்கமாக எல்லா வகையான இந்திய இலக்கியங்களிலும் எடுத்தாளப்பட்டிருந்தமையைக் காணலாம்.

## முடிவுரை

மகதவரசு உருவாகி ஏறத்தாழ ஓராயிரமாண்டு எல்லையில் இரண்டாம் முறையாக பேரரசு அந்தஸ்த்தினை இந்திய உபகண்டத்திலும் அதற்கு வெளியேயும் உருவாக்கி நடைமுறைப்படுத்தியிருந்த ஓர் அரசியல், சமூகச் சூழலைக் குப்த வம்சம் கட்டியிருந்ததற்கான பின்னணியினைச் சுருக்கமாக நோக்கினோம். றோமிலா தாப்பர் குறிப்பிட்டமை போன்று அப்பேரரசானது தன்னகத்தே பல வியக்கத்தக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளமையைக் காண்கின்றோம். கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் உருவாகிய மகதம் பதினாறு மகாஜனப் பதங்களுள் ஒன்றாக வளர்ச்சிபெற்று இந்திய அரசியற் கோட்பாடான "மட்சயர் நியாயம்" என்பதற்குரிய சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து, இறுதியில் கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் அதாவது அவ்வரசு தோற்றம் பெற்ற ஓராயிரமாண்டு எல்லையில் தென்னாசியாவின் அரசியற் - பொருளாதார - சமூக ஒழுங்கு முறைகளை வலிமையாக்கியதுடன் ஆனால் அதனையே இறுதியானதான ஒரு வடிவத்தினுக்குள் உருவாக்கித் தந்த பின்னணியும் மறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதைக் காண்கின்றோம். புராதன-நவீன இந்திய அரசியற் கோட்பாடுகளுக்கெல்லாம் ஓர் இணைப்புப் பாலமாக விளங்கி, அவற்றின் பின்னணியில் 'தேசிய உணர்வு' மீதுரப்பெற்ற கலை வடிவங்களை ஆக்கியளித்த நிலையில் இப்பெரும் பேரரசு கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. அறிவியல் – அறவியல், வாணியல் போன்ற துறைகளில் இந்தியாவின் புகழை வெளிநாடுகளில் பதித்த ஒரு பொற்காலப் பரப்பு எவ்வாறு மங்கி மறைந்து காலச் சுவடாயிற்று என்று நோக்கும்போது மிகவும் ஆச்சரியமும் வியப்புமே மேலிடுகின்றது. மெய்ஞானமும், விஞ்ஞானமும் ஒன்றிணைந்த வகையில் புராண மரபுகள் இறுதி வடிவம்பெற்ற ஒரு காலப் பரப்பு காலச்சுவடாகியமை ஓர் அதிசயமே!

தேங்கி நிற்கும் நீரில் கிருமிகள்
உற்பத்தியாகின்றன. சோம்பி நிற்கும்
மனிதனிடம் துன்பங்கள் உற்பத்தியாகின்றன.

—கண்ணதாசன்.

'கிடையாது' என்பது சோம்பேறியின்
அகராதியில் தான் இருக்கும்.

—நெப்போலியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1848 இல் இலங்கையில் நடைபெற்ற கலகத்திற்கான காரணங்கள்

## ஒரு நோக்கு

— க. அருந்தவராஜா
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை

1848 ஆம் ஆண்டானது இலங்கையின் நவீனகால வரலாறு பொறுத்து அரசியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் பெற்ற காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இலங்கையானது, நீண்ட காலமாகவே அந்நியரின் காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்பட்டுத் தனது இறைமையை இழந்த நிலையில் இருந்து வந்துள்ளது. குறிப்பாகப்போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் அவர்களின் பின் ஆங்கிலேயர்கள் என ஒவ்வொரு ஐரோப்பிய இனத்தவர்களும் இலங்கையில் தமது காலடியைப் பதித்து விட்டுச் சென்றுள்ளனர். இவர்களில் ஆங்கிலேயரைப் பொறுத்தவரை நாம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு விடயம் யாதெனில் அவர்கள் இலங்கை முழுவதனையும் தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்தமையாகும். அதாவது 1796 இல் இலங்கையின் கரையோரங்களையும், 1815 இல் கண்டியையும் கைப்பற்றி 1948 வரை இலங்கை முழுவதனையும் ஆட்சிசெய்தமையாகும்.

இத்தகைய ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலப்பகுதியில் அவர்களின் நிர்வாக முறையினால் அதிருப்தி கண்ட இலங்கையர்கள் இவர்களின் நிர்வாகத்திற்கு எதிராக 1818 / 1848 காலப் பகுதிகளில் பெரும் கலகங்களில் ஈடுபட்டனர். இவ்விரு கலகங்களும் ஏதோ ஒரு வகையில் இலங்கை வரலாற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றே கூறவேண்டும். பொதுவாக 1817/1818 ஆண்டுப் பெரும் கலகத்தின் பின்னர் இலங்கையில் நிலவிய அமைதியைக் குலைத்த அடுத்த முக்கியமான நிகழ்ச்சி 1848 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலகம்தான். இவ்வாண்டிலே ஏற்பட்ட கலகமானது சிறிய அளவில் கொழும்பிலும், பாரிய அளவில் கண்டிப் பிரதேசத்தின் மாத்தளை, குருநாகல் ஆகிய இடங்களிலும் ஏற்பட்டது. 1817 1818 ஆகிய காலப் பகுதியில் விதிக்கப்பட்ட வரிகளுக்கு விரோதமாக உருவாகிய பொது எதிர்ப்பு ஒன்றுதான் இவ்விரு இடங்களிலும் எழுந்த கலகங்களில் காணப்பட்ட பொதுவான இயல்பாகும்.

1848 இல் இலங்கையின் வரலாற்றில் பல்வேறு வகைகளில் தாக்கத்தை உண்டாக்கியதாக வரலாற்று ஆசிரியர்கள் பலரால் கூறப்படுகின்ற இக் கலகமானது தோற்றம் பெறுவதற்குப் பல காரணிகள் பின்னணியாக அமைந்துள்ளன. அவற்றில் நீண்ட காலமாக மக்கள் மத்தியில் ஆங்கிலேயருக்கு எதிராக இருந்துவந்த வெறுப்புணர்வுகள் ஒரு புறமாகவும் மறுபுறம் இங்கிலாந்தில் இலங்கைக் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தமை உடனடிக் காரணமாகவும் அமைகின்றன. இக்காரணிகளில் முதலில் ஆங்கிலேயருக்கெதிராக அவர்களின் ஆட்சியில் நீண்ட காலமாக மக்கள் மத்தியில் இருந்துவந்த வெறுப்புணர்வுக்கான காரணங்களை ஆராய்வோம்.

கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுகளில் காணப்பட்ட குறைபாடுகள் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணங்களாக இக்கலகத்துக்கு அமைந்து காணப்படுகின்றன. 1838 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் ஆணைக்குழுவின் சிபார்சுகளால் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நாடு முழுவதும் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமை, சட்ட சபை, சட்ட நிர்வாக சபை என்பவை ஏற்படுத்தப்பட்டமை, நீதி பரிபாலன விடயங்கள் பொறுத்து சீர்திருத்தங்கள் ஏற்பட்டமை, இலங்கையில் பல தொழில்களில் பிரித்தானிய மூலதனம் முதலீடு செய்யப்பட்டமை, தோட்டங்கள் தோன்றி வியாபாரம் பெருகி வருமானங்கள் அதிகரித்தமை, வரவு செலவுத் திட்ட விழுக்காடு தீர்ந்தமை, போக்குவரத்து வளர்ச்சியேற்பட்டமை, ஆங்கிலக் கல்வி பரவியமை, பத்திரிகைகள் வெளியாகியமை இவ்வாறு பல முன்னேற்றங்கள், அபிவிருத்திகள் என்பன ஏற்பட்ட போதிலும்கூட இவற்றால் பல அதிருப்திகளும் இலங்கை மக்களைப் பொறுத்து ஏற்படத்தான் செய்தன.

கோல்புறாக் ஆணைக்குழுவின் சீர்திருத்தங்களின் விளைவாக மாகாணங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு நாடு முழுவதும் ஒருநிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. முன்பு பதினாறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மாகாணங்களுக்குப் பொறுப்பான நிர்வாக அதிகாரி மாகாண மக்களை நன்கு நிர்வகித்து அவர்களின் தேவைகளையும் பூர்த்திசெய்து வந்தார். ஆனால் தற்போது மாகாணங்களின் எண்ணிக்கை ஐந்தாகக் குறைக்கப்பட்டமையினால் இவற்றுக்குப் பொறுப்பாக இருந்த குடியியற் சேவையாளர்கள் தலை நகரங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களைக் கவனித்து வந்தார்களேயன்றி கிராமப் புறங்களில் தமது கவனத்தைச் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும். இதன் காரணமாகக் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டது.

சட்டவாக்கக் கழகத்திலுள்ள உத்தியோகப் பற்றற்றோரின் தலையீட்டினால் தோட்ட முதலாளிகள், வியாபாரிகளின் தன்மையையே அரசாங்கம் அதிகளவில் கவனித்து வந்தது. விவசாயிகளுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவியாக இருந்து வந்த 'கன்சபவ' போன்ற ஸ்தாபனங்கள் மறைந்தன. இதனால் விவசாயிகளின் குறைபாடுகளை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறுவதற்கு ஒரு நிறுவனமும் இருக்கவில்லை. முற்பட்ட காலங்களில் அரசின் ஆதரவில் நீர்ப்பாசனம், விவசாயம் என்பன வளர்ச்சியடைந்து காணப்பட்டன. இவ்விடயத்தில் கன்சபாக்கள் பெரும் பங்காற்றின. ஆனால் 1833 இன் பின்னர் அரசாங்கம் வர்த்தகப் பயிர்ச்செய்கையில் அதிக கவனத்தைச் செலுத்தியது. உண்மையில் கோல்புறாக் ஆணைக்குழுவினர் தானிய வரியிலிருந்தும், பழைய முடிக்குரிய நிலங்களை விற்பனைசெய்து வருகின்ற வருமானத்தின் 1 / 2 பகுதியிலிருந்தும் பழைய குளங்களையும் நீர்ப்பாசனக் கால்வாய்களையும் திருத்தவேண்டும் என்று சிபார்சுகளைச் செய்தபோதும் அரசாங்கம் அதனைத் திருத்துவதில் அக்கறை காட்டவில்லை. குறிப்பாக அநுராதபுரம், ஊவாப் பகுதிகளில் உள்ள கால்வாய்கள் கவனிக்கப்படாமையினால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. பெரும்பாலான மக்கள் உண்ண உணவின்றிக் கஷ்ரப்பட்டதுடன், அநேகர் மலேரியாவாலும் பாதிக்கப்பட்டனர். தமது இவ்வாறான ஒரு சீர்கெட்ட நிலைமைக்கு அரசாங்கம் தான் காரணமெனக் கருதி அரசாங்கத்தின் மீது இவர்கள் வெறுப்புற்றுக் காணப்பட்டனர். முற்பட்ட காலங்களிலே விவசாயிகள் தங்களுக்கென பிரித்துக்கொடுக்கப்பட்ட பங்கைப் பாதுகாத்து வந்தனர். கோல்புறாக் ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கிணங்க இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமையினால் அவர்களிடையே பிணக்குகள் தோன்றலாயின.

புதிதாகத் தோன்றிய வழக்குகளை விசாரணை செய்து சரியான முறையில் தீர்ப்பை வழங்குவதற்குப் புதிதாக நிறுவப்பட்ட நீதிமன்றங்களால் முடியவில்லை. அத்துடன் வழக்குகள் முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடைந்து தீர்ப்புக்கள் கூறுவதற்கும்கூட காலதாமதம் ஏற்பட்டது. இவ்வாறான ஒரு நிலைக்குக் காரணம் யாதெனில் இலங்கை மக்களின் தேச வழமையோ அல்லது நாட்டின் தொன்றுதொட்டு வந்த சட்ட திட்டங்களையோ ஐரோப்பிய நீதிபதிகள் தெரிந்துவைத்திருக்கவில்லை என்பதே ஆகும். ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் காணிச் சட்டங்கள் கிராம மக்களின் கூட்டு வாழ்வினைப் பாதித்தன. முற்பட்ட காலங்களில் காணிகளை மற்றவருக்கு விற்பனை செய்வது கடினமாக இருந்தது. ஆனால் தற்போது இது இலகுவாக்கப்பட்டதால் மக்கள் அதிகளவு நேரத்தை நீதிமன்றங்களிலே செலவுசெய்தனர்.

சிவில் வழக்குகள் தவிர்ந்த கிரிமினல் வழக்குகளிலும் மக்கள் ஈடுபடத் தொடங்கினர். வழக்கைச் சரியான முறையில் நடாத்துவதற்குச் சட்ட அறிவும் இவர்களுக்குப் போதியதாக இருக்கவில்லை. மக்கள் வழக்குரைஞர்களுக்கு ஏராளமான பணத்தைச் செலவுசெய்தது மட்டுமன்றி எஞ்சியிருந்த காணிகளை விற்பனை செய்துகூட வழக்கை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர். எனவே இவ்வாறு பல வழிகளிலும் தாம் பாதிக்கப்பட்டமைக்கு அரசாங்கமே காரணம் என மக்கள் கருதினர்.

மலையகத்தில் வர்த்தகப் பயிர்ச்செய்கை விருத்தியடையவே முடிக்குரிய காணிகளையும், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான காணிகளையும் தோட்ட முதலாளிகள் வாங்கினர். அக்கால கட்டத்திலே சரியான முறையில் நிலப் பங்கீடு செய்தும் இருக்காததன் காரணமாக தோட்ட முதலாளிகள் தங்களது விருப்பப்படி நிலங்களைச் சுவீகரித்துக்கொண்டனர். அதுமட்டுமன்றி மந்தை மேய்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில் கூடத் தோட்ட முதலாளிகள் தோட்டங்களை உருவாக்கினர். பல வருடங்களாக நிலத்துக்குச் சொந்தக்காரராக இருந்த கண்டிய மக்கள் அந்நிலங்கள் அன்னியரிடம் செல்வதை ஒருபோதும் விரும்பவில்லை. வர்த்தகப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்ததின் காரணமாகப் பல புதிய தொழில்கள் ஏற்பட்டன. இத்தகைய புதிய தொழில்களுக்கு முற்றிலும் புதிதான கண்டிய மக்கள் அவ்வகையான தொழில்களில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தயங்கினர். ஆனால் கரையோரச் சிங்களவர்கள் இத்தொழில்களில் ஈடுபடுமுகமாக கண்டிப் பிரதேசங்களில் குடியேறினர். மேலும் தோட்டங்களில் வேலைசெய்வதற்கு இந்தியத் தொழிலாளர்களும் இப்பிரதேசங்களுக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். அன்னியர்கள் மலையகத்தில் குடியேறித் தீய ஒழுக்கங்களைப் பரப்பி அச்சமுதாயத்தின் சீரிய ஒழுங்கினைக் குறைப்பதற்கு முற்பட்டனர். மேற்கூறப்பட்ட காரணங்கள் கண்டிய மக்களை அன்னியரின் ஆட்சியை வெறுப்புடன் நோக்க வைத்தது எனலாம்.

பழைய சமுதாய முறைக்குப் பழக்கப்பட்டு அதனால் கவரப்பட்டு மலையக மக்கள் காணப்பட்ட நிலைமையும் 1848 இல் நடைபெற்ற கலகத்துக்கு ஒரு காரணமாகச் சொல்லலாம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் நீதி, நிர்வாக மாற்றங்கள் ஏற்பட்டனவேதவிர இதற்கு மலையக மக்கள் பழக்கப்படவுமில்லை. இதனால் பாதிக்கப்படவுமில்லை. 1818 தொடக்கம் புதிய நிர்வாக ஒழுங்குகள், சீர்திருத்தங்கள், நீதி பரிபாலன முறைகள், வீதிகள், தோட்டங்கள், புதிய வரி முறைகள் என்பனவற்றின் வழியாகக் கண்டி இராச்சியத்தின் தனித்தன்மையைச் சிதைக்கவும், அப்பிரதேசத்தைச் சுரண்டவும் பிரித்தானியர் முற்பட்டனர். மானிய முறையினையும் இடைக்காலத்தின் பழைய முறைகளையும் அனுசரித்து வந்த சிங்களச் சமுதாயத்தினுள் இராணுவ பலமும், நிர்வாகத் திறனும், முற்போக்கான கருத்துக்களும் கொண்ட நவீன பிரித்தானியராட்சி புகுத்தப்பட்ட தன்மையானது கண்டிய மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பை உண்டாக்கியதில் வியப்பில்லை.

1848 இல் கண்டிப் பிரதேசத்தில் ஏற்பட்ட கலகத்திற்கு மற்றொரு காரணம் தேசியத் தன்மை எனலாம். இச்சக்தியை நன்கு விளங்கிய ஆள்பதி ரொறின்ரன் பின்வருமாறு அதனை வர்ணிக்கின்றார்.

''கண்டிய மக்களின் தேசியத் தன்மை என்பது முப்பத்தினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முறையாக எங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட மக்களிடையே காணப்படும் உணர்ச்சிகள் பழக்கவழக்கங்கள், உறவு வழக்கங்கள் என்பவற்றைக் குறிக்கும். அவர்கள் கரையோர மாகாணங்களுடன் இணைக்கப்பட்டமை ஒரு விதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தென்படவில்லை''

கண்டிய மக்களின் தேசிய வாதமானது நீண்ட கால வரலாற்று வளர்ச்சியால் ஏற்பட்ட வழமையைத் தழுவுகின்ற தன்மைகொண்டதாக அமைந்தது. அவர்கள் தத்தமது கிராம மக்களுக்கும், மாவட்டங்களுக்கும், நாட்டிற்கும் நிறைந்த விசுவாசமும் அபிமானமும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இப்பாமர மக்கள் தமக்குள் ஒருவனை அரசனாக்கிப் பழைய கண்டிய அரசாட்சி முறைக்குச் செல்வதற்கு முற்பட்டனர். பிரித்தானியர் ஆட்சியாலே ஏற்பட்ட மாற்றங்களுக்கும், நிலைபேறின்மைக்கும் எதிராக அவர்கள் நன்கு அறிந்ததும் அவர்கள் உள்ளங்களில் வசதியாக வேரூன்றியிருந்ததுமான பழைய சமுதாய முறையை உயிர்ப்பிக்கின்ற நோக்கமாகவே கலகத்தை விளைவித்தனர் எனலாம்.

மலையகத்தில் பிரதானிகளது அதிகாரங்கள் குறைக்கப்பட்ட சம்பவமும்கூடக் கலகத்தை ஏற்படுத்திய மற்றொரு காரணியாகும். கண்டியில் விக்கிரம இராஜசிங்கனது ஆட்சியில் தமது அதிகாரங்கள் குறைக்கப்பட்டுவருவதை அறிந்த பிரதானிகள் அவன்மீது வெறுப்புக்கொண்டு அவனை ஆங்கிலேயரிடம் காட்டிக்கொடுத்தனர். ஆனால் தற்போது அதே ஆங்கிலேயர்கள் 1818 இல் நடைபெற்ற கலகத்தை அடக்கிய பின்னர் பிரதானிகளின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு முற்பட்டனர். இவர்கள் பெற்றுவந்த வரி வருமானம் ஒழிக்கப்பட்டதுடன் பிரதானிகளிலும் பார்க்க பல ஆங்கிலேயர்கள் உயர் பதவியிலும் நியமிக்கப்பட்டனர். சிங்கள, நாயக்க மன்னர்கள் காலத்தில் பிரதானிகளிலும் பார்க்க உயர்பதவியில் மன்னனொருவனே காணப்பட்டான். ஆனால் ஆங்கிலேயரின் ஆட்சியில் பிரதானிகளிலும் பார்க்கப் பலர் உயர்வான பதவிகளில் நியமிக்கப்பட்டதால் அவர்களின் சொற்களைக் கேட்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதைப் பிரதானிகள் ஒருபோதும் விரும்பவில்லை. பிரதானிகளின் அதிகாரங்கள் சட்டரீதியாகக் குறைக்கப்பட்டாலும்கூட இவர்கள் மீதான செல்வாக்கு மக்களிடையே தொடர்ந்தும் காணப்பட்டு வந்தது.

பிரதானிகள் தமது பகுதிகளிலே குறுநில மன்னர்கள் போல் செயற்பட்டுவந்தனர். ஆனால் சடுதியாக இளைஞர்கள் அரசாங்க நிர்வாக அலுவல்களில் இருந்து முழுமையாக விலக்கப்பட்டதுடன் அவர்கள் நெடுங்காலமாக அனுபவித்துவந்த வருவாய்கள், அதிகாரங்கள் யாவற்றையும் இழந்துகொண்ட நிகழ்வானது அவர்களை வேதனைக்கு உட்படுத்தியது. இவர்களுக்கு பாமர மக்களிடமிருந்த செல்வாக்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. மக்களுக்கும், அரசாங்கக் குடியியற் சேவையாளருக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதற்குச் சாதகமாகப் பிரதானிகள் இருந்தனரென்று ஆளுனர் ரொறிங்ரன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார். பிரதானிகளுக்கு எல்லா வகுப்பு மக்களும் காட்டுகின்ற மரியாதை தெய்வ வணக்கத்துக்குச் சமன். இத்தகைய செல்வாக்குக்கொண்ட பிரதானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அரசாங்க நிர்வாகக்கருமங்களிலிருந்து புறக்கணித்தமை ஆங்கிலேயருக்கே தீமையாக அமைந்தது என்றே கூறவேண்டும். இவ்வாறான பல காரணங்களால் அதிருப்தி கொண்ட பிரதானிகள் தம்மேல் சந்தேகம் கொண்ட ஆட்சியாளர்களுக்கு எவ்வித உதவியையும் வழங்காது நாட்டில் வளர்ந்துவந்த அதிருப்தியைப் பாராமுகமாக விட்டதில் வியப்பில்லை.

1848 இல் ஏற்பட்ட கிளர்ச்சிக்கு மற்றுமொரு காரணமாக அமைவது பிரித்தானிய அரசாங்கம் பௌத்தமத பாரம்பரியங்களுக்கு மதிப்புக் கொடுக்காத தன்மையாகும். இதன் காரணமாகப் பௌத்த சங்கம் ஆங்கிலேயர்மீது வெறுப்புக் கொண்டது. 1841 இல் பௌத்த பிக்குகள் தாமே தமது சங்கங்களில் தலைமைப் பிக்குகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் அத்தெரிவினை ஆளுனர் உறுதிப்படுத்துவாரென்றும் அரசாங்கம் சட்டமொன்றினை இயற்றியது. 1847-ம் ஆண்டில் அரசாங்கம் மேலும் புத்தரின் புனித தந்தத்தின் பாதுகாப்பினைத் தலதாமாளிகையின் அதிகாரிகளிடம் ஒப்படைத்து அந்தப் பொறுப்பிலிருந்தும் விலகிக்கொண்டது. இவை வரவேற்கத்தக்க மாற்றங்களாகக் காணப்பட்டாலும் கூட முற்பட்ட காலங்களில் அரசன் தலதா மாளிகையின் நிலங்களின் பாதுகாவலனாக விளங்கியதுமன்றி விகாரைகளுக்கும் ஆண்டுதோறும் நன்கொடைகள் வழங்கிவந்தான். ஆனால் தற்போது அரசாங்கமோ அப்பொறுப்புக்களை நிராகரித்தது. மேலும் சிங்கள மன்னர்களின் காலங்களிலும் பௌத்த குருமார்கள் கலந்து கொண்டு சிறப்பித்துவந்தனர். எனவே மன்னர்கள் காலத்தில் தாம் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் மரியாதையையும் ஆங்கிலேயர் ஆட்சியில் பெற்றுக்கொள்ள முடியாதவையிட்டு அவர்கள் மனம் வருந்தினர்.

இக்காலப்பகுதியில் தோட்டங்கள், வீதிகள் ஏற்படுத்தப்பட்டமையும் இக்கிளர்ச்சிக்கு ஒரு காரணமெனலாம். மலைநாட்டில் வீதிகள், தோட்டங்கள் திறக்கப்பட்டமையினால் பிற்பட்டகாலங்களில் பல நன்மைகள் ஏற்பட்டாலும் கூட அக்காலகட்டத்தில் கண்டிய மக்கள் அவற்றால் தமக்குப் பல தீமைகள் ஏற்படுவதாகக் கருதினர். கண்டியில் புதிதாகத் திறக்கப்பட்ட வீதிகளினால் தமது சுதந்திரம் கிராமிய வாழ்க்கை என்பன சிதைவடைவதைக் கண்ட மக்கள் மனம் நொந்தனர். கோப்பித் தோட்டங்கள் திறக்கப்பட்டமையால் தோட்டப் பகுதிகளில் வியாபாரம், சாராயக் குத்தகை ஏற்றுமதி ஒப்பந்தங்கள், தரகு, தச்சு வேலை போன்ற தொழில் வாய்ப்புக்கள் பெருகவே அவற்றினால் முதலில் அதிகளவில் நன்மையடைந்தவர்கள் கரையோரச் சிங்களவரே. இவர்கள் பாமர மக்களின் அறியாமையையும், எளிமையையும் பயன்படுத்தி அவர்களை ஏமாற்றிப் பிழைத்தனர்.

அரசாங்கத்தின் மதக்கொள்கை காரணமாகப் பல தவறணைகள் திறக்கப்பட்டன. இவ்வியாபாரத்தினால் கூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுவதன் பொருட்டு கிராமங்கள் தோறும் தவறணைகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டன. இப்பிரதேசங்களில் 1815-1848 வரை நூற்றி முப்பத்திமூன்று தவறணைகள் திறக்கப்பட்டன. இப்பிரதேசங்களில் மது அருந்தும் பழக்கம் மாபெரும் தீமையாகவே கருதப்பட்டது. மேலும் இக்கால கட்டத்திலிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை நான்கு. இதிலிருந்து அக்கால கண்டிப் பிரதேசத்தின் நிலைமையை உணரக் கூடியதாக இருக்கின்றது. கிராமவாசிகள் தமது நிலங்களை, தானியங்களை விற்பனைசெய்தும் அடகுவைத்தும் மது அருந்தினர். விவசாயிகள், தொழிலாளர்கள் உழைத்த பணம் முழுவதும் இவ்வாறு தீய வழிகளில் செல்லலாயின. களவுகள், கொள்ளைகள் போன்ற குற்றங்கள் அதிகரித்தன. ஐரோப்பியர், தென்னிந்தியர் வருகையால் அப்பிரதேசத்தின் தனித்தன்மைக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டது. புதிதாக வந்தவர்களின் மொழி, பழக்கவழக்கங்கள் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாத கண்டிய மக்கள் அவர்களைத் தமது நாட்டின் செல்வங்களை அபகரிக்க வந்தவர்களாகவே கருதினர். இதுபற்றி ரொறிங்ரன் பின்வருமாறு கூறினார்.

"எங்கள் தோட்டங்கள் கண்டியரின் கொடிய பகைமைக்கு ஒரு முக்கிய காரணமாகும்."

ஆங்கிலேயர் மலையகத்தில் கடைப் பிடித்த நிலக் கொள்கையும் கூட மலையக மக்களை வெகுவாகப் பாதித்தது என்றே கூறவேண்டும். புதிதாகக்கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தால் கிராம வாசிகளின் கூட்டுறவுச் சமூக வாழ்வு வேரறுக்கப்பட்டுவிட்டது. நிலங்களை மற்றவர்களுக்கு விற்பனை செய்வதும் புதிய சட்டத்தின்படி இலகுவாக்கப்பட்டது. இம்முறையின் மூலம் ஏராளமான நிலங்கள் ஐரோப்பியருக்கு விற்பனை செய்யப்பட்டன. 1834, 1840 களில் 2. 47, 000 ஏக்கர் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டன. நிலத்திற்கான போட்டிகள் இக்கால கட்டத்தில் அதிகரித்தது. எனவே அரசாங்கம் 1841ல் 9 ஆம் இலக்க முடிக்குரிய சட்டத்தை இயற்றி உரிமைகள் பாராட்டப்படாத நிலங்கள் முடிக்குரிய நிலங்களாக்கப்பட்டு ஐரோப்பியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. இதனால் குடியானவர்கள் தமது காட்டுச்சேனை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் என்பனவற்றை இழந்தனர்.

மக்கள் இவ்வாறு அரசாங்கத்தின் மீது பல்வேறு வழிகளிலும் வெறுப்புற்றிருந்த இக்கால கட்டத்தில் உலகச் சந்தையில் இலங்கைக் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தது. இதனால் கோப்பி வியாபாரத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு நட்டமேற்பட்டது. இக்கால கட்டத்தில் தான் ஐரோப்பிய அரசியற் கருத்துக்கள் முதன் முதலாக இலங்கையிற் புக ஆரம்பித்தன. இதன் காரணமாக இலங்கையின் வரிமுறை நன்கு பரிசீலிக்கப்பட்டது. அரசாங்க வருமானம் ஏற்றுமதி இறக்குமதி வரிகளில் தங்கியிருப்பதிலும் பார்க்க நேரடியான வரிகளில் தங்கியிருப்பதுதான் ஏற்றதென இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது. இதனால் இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி வரி குறைக்கப்பட்டமையினால் அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்தின் பல நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு 1847 அளவில் பல புதிய வரிகள் விதிக்கப்பட்டதுடன் பல வரிகள் உயர்த்தப்பட்டன. இவற்றுள் முதலாதாக முத்திரை வரி உயர்த்தப்பட்டது. கப்பல், தோணி, வண்டி, நாய், துப்பாக்கி முதலியவற்றின்மீது வரிகள் விதிக்கப்பட்டது. நாய் வரி, துவக்கு வரி என்பன கிராமங்களில் வசித்து வந்த விவசாயிகளைப் பாதித்தது. கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்களைக் கப்பல் வரி, தோணி வரி என்பன பாதித்தன. சில்லறைப் பொருட்களை ஏற்றி இறக்குபவர்கள் இதன்மூலம் பெற்றுக்கொள்கின்ற வருமானத்தை வண்டி வரி பாதித்தது. உணவுப்பொருட்களுக்குக் கூட மேலதிக வரிகள் விதிக்கப்பட்டன. இதன் காரணமாக அரிசிக்கு 25 வீதமும், கோப்பிக்கு 120 வீதமும், உப்புக்கு 800 வீதமும் என்ற எல்லா வரிகளும் விதிக்கப்பட்டன. இதன்காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்தன. இலங்கை அரசாங்கம் உத்தியோகஸ்தர்களது எண்ணிக்கையைப் பொதுவாகக் குறைத்தும், பாடசாலைகளை மூடியும், ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கியும் நிலைமையைச்சமாளிக்க முற்பட்டது.

புதிதாகக் கொண்டுவரப்பட்ட வீதிச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆணும் வருடத்தில் ஆறுநாட்கள் வீதியில் வேலை செய்தல் வேண்டும் அல்லது மூன்று சிலிங் அரசாங்கத்துக்கு கொடுத்தல் வேண்டும். இப்புதிய வீதிச்சட்டத்தின் வாயிலாக இராஜகாரியமுறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு ஆளுனர் ரொறிங்ரன் முயற்சி செய்கிறாரென மக்கள் சந்தேகம் கொண்டார்கள். இத்தகைய வரிகள் விதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டபோதும் மக்கள் அதனைச்செலுத்தியிருப்பர். ஆனால் அரசாங்கம் மக்களைப் பணமாகவே வரிகளை செலுத்துமாறு கேட்டது. மக்களிடம் பணப்புழக்கம் குறைவாக இருந்த இக்காலகட்டத்தில் அவர்களுக்கு அது பெரும் சிரமத்தை உண்டாக்கியது என்றே கூறவேண்டும். இச்சமயத்தில் தான் அரசாங்கம் சனத்தொகைப் பொருளியல் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கு பல கேள்விகள் அடங்கிய பத்திரமொன்றை மக்களிடம் வழங்கி ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளியல் நிலைபற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முற்பட்டது. இவ்விபரங்களைப் பெற்று அரசாங்கம் வரிகளை மேலும் விதிக்க முற்படுகின்றதென்ற வதந்தி நாடெங்கும் பரவியது. ஏற்லவே அரசாங்கத்தின் வரிக்கொள்கையால் வெறுப்புக்கொண்டிருந்த மக்களிடையே இக்குடிசனப் பொருளியல் மதிப்பீடு அவ் வெறுப்புணர்வினை மேலும் அதிகரிக்கச் செய்வதாக அமைந்தது எனலாம்.

இச்சமயத்தில் 1847 யூலை 6ஆந் திகதி புதிய வரிகளை ஆட்சேபித்து நாலாயிரம் குடியானவர்கள் ஒரு மனுவைச் சமர்ப்பித்தனர். அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக மாத்தளை, குருநாகல் ஆகிய பகுதிகளிலே முதலில் கலகமேற்பட்டது. புரண்அப்பு, கொங்கலெகொடைபாண்டா ஆகிய இருவரும் தங்களை அரசனாகப் பிரகடனம் செய்துகொண்டு அவ்வப்பகுதிகளில் மக்களின் ஆதரவை நாடினர். ஏற்கனவே அரசாங்கத்தின் மீது வெறுப்புக்கொண்டிருந்த மக்களுக்கு இது ஒரு கிடைத்தற்கரிய சந்தர்ப்பமாகக் காணப்பட்டது.

கொழும்பிலும் அதேநேரம் வரிகளை எதிர்த்து சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கிறிஸ்தோப்பர் எலியட் என்பவர் தனது கொழும்பு ஒப்ஸ்சேவர் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் வரிகளை வன்மையாக கண்டனம் செய்தார். கண்டி, மாத்தளை, குருநாகல் ஆகிய பகுதிகளில் காட்டுத்தீபோல் கலகம் பரவியது. அரச திணைக்களங்கள், கடைகள், தோட்டமுதலாளிகளின் வீடுகள் என்பன தாக்கப்பட்டன. இக்கட்டத்தில் ஆளுனர் ரொறிங்ரன் படைத்தலைவர்கள், அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள் என்பவர்களை அழைத்து ஆலோசனை நடாத்தினார். தோட்ட முதலாளிகள் தமது தோட்டங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் கலகத்தைத் தீவிரமாக அடக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

இதன் காரணமாக ஆள்பதி ரொறிங்ரன் இராணுவசட்டத்தைப் பிறப்பித்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். படைகள் மாத்தளை, டம்புள்ளை, குருநாகல் போன்ற பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களைத் துன்புறுத்தியது. வீடுகள் பல தீக்கிரையாக்கப்பட்டன. பயிர்கள் அழிக்கப்பட்டன, இவ்வாறான பல கொடுமைகளால் மக்கள் தமது கிராமங்களை விட்டு வெளியேறுவதற்குகூட முற்பட்டனர்.

கண்டி, மாத்தளை, டம்புள்ள ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட கலகங்கள் இவ்விதமாக அடக்கப்பட்டன. கொடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கலகம் அடக்கப்பட்டது. இந் நடவடிக்கைகளின் போது ஒரு ஆங்கிலபோர்வீரனாவது உயிர் விடவில்லை. ஆயினும் கண்டியில் இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டு பயங்கர ஆட்சிநடைபெறத் தொடங்கியது. இராணுவத்தினர் கொள்ளைகளில் ஈடுபட்டனர். இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் பலர் தூக்கிலிடப்பட்டனர். இன்னும் பலர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர். புரன் அப்பு கொங்கலகொடைபண்டா ஆகிய இருவரும் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இவர்கள் பற்றிய தகவல்களைக் கொடுக்க மறுத்ததின் காரணமாக குட்டபொலஉன்னசே என்ற பௌத்த பிக்கு தனது காவியுடையுடன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டத்தில் கலகத்திற்கான காரணங்களையும் அதனை அடக்குவதற்கு ரொறிங்ரன் எடுத்த நடவடிக்கைகளையும் இங்கிலாந்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குப் பலர் முற்பட்டனர். லோறன்ஸ் ஒலிபன்ட், பேக்கசன் எலியற் ஆகியோர் இங்கிலாந்திலுள்ள தங்களின் நண்பன் கிறிஸ்ரி மூலமாக ரொறிங்ரனும் அவரது அதிகாரிகளுக்கும் முறைகேடாக நடந்துகொண்டார்கள் எனவும் அவர்களது நடவடிக்கைகள் பற்றி விசாரணைகள் செய்து அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்றும் பொதுமக்கள் சபையில் பிரேரித்தனர். 1848ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கலகத்தைப்பற்றிய ஒரு விசாரணைக்குழு விசாரணை நடாத்தியது. இவ்விசாரணைக் குழுவினர் முன்னிலையில் கருத்துரை வழங்கியவர்கள் பிரித்தானிய அரசின் நிர்வாகச் சீர்கேடுகள் பற்றி விளக்கமளித்தனர். விவசாயிகளின் சீர்கெட்ட நிலையும் அவர்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளுமே கலகத்தை ஏற்படுத்தியதென்பதை உணர்த்தினர். இவர்களின் கருத்துக்கள் இரண்டு உண்மைகளை அரசாங்கத்திற்கு வெளிப்படுத்தியது. ஒன்று நிர்வாகச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் இவ்விசாரணைக் குழுவினர் ஆள்பதி ரொறிங்ரனும் கப்ரன் வோட்சனும் கலகத்தின்போது அநீதியான முறையில் நடந்துகொண்டார்களென்பது தொகுத்து நோக்குகின்றபோது கோல்புறுக் ஆணைக்குழுவின் வருகை, பாரம்பரிய பண்பாட்டுக்கு அடிமைப்பட்டிருந்த கண்டிய மக்களின் நிலமை, பிரதானிகளின் அதிகாரங்கள் கண்டியப் பிரதேசங்களில் குறைக்கப்பட்டமை, பௌத்த பாரம்பரியங்களுக்கு பிரித்தானிய அரசாங்கம் மதிப்புக்கொடுக்காமை. பெருந்தோட்டங்கள், வீதிகள் திறக்கப்பட்டமை, அரசாங்கத்தின் நிலக்கொள்கை. இங்கிலாந்தில் இலங்கைக் கோப்பிக்கு ஏற்பட்ட நெருக்கடி, புதிதாக விதிக்கப்பட்ட வரிகள், வீதிச் சட்டங்கள் இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆளுனர் ரொறிங்ரனதும் அவரது அதிகாரிகளின் அத்துமீறிய செயல்கள் என்பவையும் கிளர்ச்சி இடம் பெற்றமைக்கு காரணங்களாக அமைகின்றன. இந்தவகையில் இலங்கையில் ஆங்கிலேயர் கால ஆட்சியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய கலகமென இலங்கை வரலாற்று ஆசிரியர்கள் பலராலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில் 1848இல் இடம் பெற்ற இக்கிளர்ச்சி அமைந்துள்ளது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. கதிர்காமநாதன் சி. எஸ்.
   இலங்கை வரலாறு 1769 – 1948
   யாழ்ப்பாணம் (1967) பக். 106–113
2. குலரத்தினம், கா. சி.
   நோத் முதல் கோபல்லவா வரை
   பகுதி 1
   யாழ்ப்பாணம் (1966) பக். 112–119
3. **HULUGALLE, H. A. J.**
   **British Governors of Ceylon**
   **Colombo (1963) 76 – 79**
4. **MENDIS G. C.**
   **Ceylon Under the British**
   **Colombo (1944) p. 48 – 50**
5. **MILLS A.**
   **Ceylon Under the British Rule**
   **1975 – 1932**
   **London (1933) p. 158 – 202**
6. **SILVA K. M. DE**
   **History of Sri Lanka**
   **United Kingdom (1981) p. 277 – 281**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் ஸ்பானியா

— செல்வி முத்தமிழ்ராஜினி சுப்பிரமணியம்
வருகைப் போதனாசிரியை
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

ஐரோப்பிய வரலாற்றில் கி. பி. 16, 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஸ்பானியா வல்லமை பெற்றுத்திகழ்ந்த அரசாக விளங்கியது. நீர், நிலப் போர்களிலும், வணிகத்திலும், கலைத்துறையிலும் கூட இதன் சிறப்பு வளர்ச்சியுற்றிருந்தது. இக்காலப் பகுதியில் தான் உலகம் பரவியபேரரசில் ஸ்பானியா தலைமை வகித்தது. இது ஸ்பானியாவை ஆட்சி செய்த பெர்டினன்ட், 5ஆம் சாள்ஸ், 2ஆம் பிலிப் போன்ற திறமைமிக்க மன்னர்களின் அளப்பரிய சாதனைகள் மூலமே சாத்தியமாகிற்று எனலாம். போர் மூலமாகவோ, அரசியல் வெற்றிகளாலோ ஸ்பானியா கலையிடாத நாடுகளை ஐரோப்பாவில் காண்பது அரிதாக இருந்தது. பீரனீஸ் மலையினால் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளின்றும் பிரிக்கப்பட்டுத் தனியான நாடாக விளங்கியபோதும் அயல் நாடுகள் பலவற்றையும் தன் ஆணைக்குட்படுத்தியதுடன் அமெரிக்காக் கண்டத்திலும் ஆதிக்கம் செலுத்திவந்தது. நெதர்லாந்து, நேபிள்ஸ் இராச்சியம் – சிசிலித்தீவு முதலான இத்தாலியப் பகுதிகள், போர்சுக்கல் மற்றும் இந்தியாவின் சில பகுதிகள் போன்றவற்றையெல்லாம் அடக்கியதாக ஸ்பானிய அரசு விளங்கியது. இன்னோர் வகையில் கூறுவதாயின் அட்லாண்டிக் பெருங்கடலுக்கப்பால் மிகப் பரந்த நிலப்பகுதிகள் அதற்குச் சொந்தமாக இருந்தது.

ஸ்பானியாவின் வரலாற்றில் கத்தோலிக்க சமயம் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. பரிசுத்த உரோமப் பேரரசின் தலைமைப்பீடமாக ஸ்பானியாவே விளங்கியது. முஸ்லீம்களுக்கெதிரான சிலுவைப்போரில் தீவிரமாக ஈடுபட்டு ஸ்பானியாவின் தலைமையில் கத்தோலிக்க சமயத்திற்கு வெற்றியீட்டிக் கொடுத்த நாடு என்ற வகையிலும் ஸ்பானிய அரசனே பரிசுத்த உரோமப் பேரரசனாக இருக்கவேண்டும் என்ற நியதியும் ஸ்பானியாவுக்குப் பெருமை தேடிக்கொடுத்தது. மூர்களை விரட்டிய பின் ஸ்பானியாவில் உள்ள சிற்றரசுகள் மத்தியில் காணப்பட்ட தீவிர கத்தோலிக்க சமயப்பற்றும் அதன் வாயிலாக அவற்றினிடையே காணப்பட்ட ஒற்றுமையுணர்வும் அதன் அரசியல் பலத்திற்கு உறுதிப்பாடாய் விளங்கிற்று.

15ஆம் நூற்றாண்டில் காஸ்டில் நாட்டு இளவரசி இசபெல்லா அரகன் நாட்டு இளவரசனான பெர்டினன்ட் என்பானுடன் கொண்ட மணத்தொடர்பின் மூலம் இரு இராச்சியங்களும் இணைந்து கொண்டமை ஸ்பானியாவின் அரசியல் ஒற்றுமைக்கும் ஆள்புல விஸ்தரிப்பிற்கும் வழிசமைத்தது. மேலும் இவர்களது பேரன் 5ஆம் சாள்ஸ் போர்சுக்கல் மன்னன் இறக்க அம்முடியரசில் உரிமை கொண்டாடி ஐபீரியத் தீபகற்பம் முழுமைக்கும் மன்னனானான். அதனால் போர்சுக்கீசர் வசமிருந்த இந்தியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா போன்ற நாடுகளின் பல பகுதிகள் ஸ்பானியாவின் ஆட்சிக்குட்பட்டது.

மூர்களான முகமதியர்கள் இஸபெல்லாவிடம் தோல்வியுற்ற போதும் அடிக்கடி முடியாட்சிக்கு எதிராகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அமைதியைக் குலைத்துக் கொண்டேயிருந்தனர். நகரங்கள் மன்னர் அதிகாரத்தை உதாசீனம் செய்து சுய ஆட்சி நடத்தின. பெர்டினன்ட் இவர்களைப் போரினால் கீழ்ப்படிய வைத்தான். ஆங்கில வரலாற்றில் நட்சத்திர மன்றம் ஆற்றிய செயலை ஸ்பானியாவில் காஸ்டில் நாட்டுக் குழு செய்தது. முடியாட்சிக்கு எதிராகக் கலகம் விளைவித்த எல்லா இனங்களையும் இக்குழு அடக்கியது. இது ஸ்பானியாவின் அரசியல்.

ஆஸ்திரிய மன்னன் மாக்கிமில்லியன், பர்கண்டி நாட்டு இளவரசி மேரி ஆகியோரின் மகன் பிலிப் ஸ்பானிய இளவரசி ஜோனாவை மணந்து கொண்டமையால் ஸ்பானியா நெதர்லாந்துடன் இணைந்து கொண்டது. எவ்வாறு அமெரிக்காவில் ஸ்பானியாவிற்குச் சொந்தமான இன்டீஸ் எனும் பகுதிகளில் இருந்து நிறைந்த செல்வங்களை ஸ்பானியா பெற்றதோ அவ்வாறே, நெதர்லாந்தில் இருந்தும் பெற்றுக்கொண்டது. இது ஸ்பானியாவை வாணிபத்தில் தனியுரிமை செலுத்தவும் பொருளாதார ரீதியில் மேம்படவும் வழியமைத்தது.

2ஆம் பிலிப்பின் ஆட்சிக்காலத்தில் ஸ்பானியா பல பின்னடைவுகளைச் சந்தித்துக் கொண்ட போதும் அதன் வளர்ச்சியில் அவனாற்றிய சேவைகளைப் புறந்தள்ள முடியாது. 2ஆம் பிலிப்பின் ஆட்சியில் ஸ்பானிய கடற்படைத் தலைவனாக இருந்த டான்ஜான் 1571இல் கத்தோலிக்க நாடுகளில் இருந்து பெரும்படை திரட்டி அப்படை மூலம் காரிந்து வளைகுடாவுக்கண்மையில் உள்ள லெபான்டோ எனும் இடத்தில் துருக்கிய கடற்படை சிதறடிக்கப்பட்டது. 1580 இல் பெற்ற இவ்வெற்றியினால் கிழக்குத் துறைமுகங்களில் இருந்து ஆபிரிக்காவில் இருந்த துருக்கியர்களின் கடல் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.

இவ்வகையில் ஒரு நூற்றாண்டுவரையில் வலிமையுள்ளதாக விளங்கிய ஸ்பானியா 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதன் வளர்ச்சிப்போக்கில் தேய்வு நிலையை எய்தியமை காணலாம். மன்னர்களின் நில விஸ்தரிப்புக் கொள்கை, மன்னரும், மக்களும் கத்தோலிக்க சமயத்தின்பால் கொண்டிருந்த தீவிரபற்றுதல், முஸ்லிம்களுடன் முரண்பட்டு அவர்களுடன் போரிட்டமை. நெதர்லாந்தைப் பொறுத்து ஸ்பானிய மன்னர்கள், கடைப்பிடித்த கொள்கை, பிரான்ஸ், ஒல்லாந்து இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கூட்டணி, இவற்றின் மூலமான பொருளாதாரப் பின்னடைவுகள் என்பன ஸ்பானியாவின் தோல்விக்குக் காரணங்களாக அமைந்தமை காணலாம்.

பேடினன்ட் என்பவன் 1469இல் காஸ்டில் இளவரசியைத் திருமணம் செய்து கொண்டமையால் அப்பகுதி ஸ்பானியாவுடன் இணைந்து கொண்டது. 1492இல் பேடினன்டின் தீவிரமான போராட்டத்தின் மூலம் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கிரனடாப் பகுதியும் ஸ்பானியாவுடன் இணைக்கப்பட்டது. இவன் மகன் 5ஆம் சாள்ஸ் மன்னனாக்கப்பட்டபோது அமெரிக்கா ஸ்பானிய கப்பற்படையால் கண்டுபிடிக்கப்பட்டதன் அடிப்படையில் அமெரிக்காவும் ஸ்பானிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அடுத்து 5ஆம் சாள்ஸின் மகன் 2ஆம் பிலிப் 1555இல் ஆட்சியேற்றபோது நெதர்லாந்து. இத்தாலியப் பிரதேசங்கள் என்பவற்றுடன் மேற்கிந்தியத் தீவுகள், மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா போன்ற இடங்களிலும் அவன் ஆணை பரவியிருந்தது. அத்துடன் 2ஆம் பிலிப் இங்கிலாந்து மன்னன் ஹென்றியின் மகளுடன் கொண்ட திருமண உறவினால் இங்கிலாந்திலும் சில காலம் ஆட்சி செலுத்த முடிந்தது. 1580இல் கிழக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகப் பகுதியில் இருந்து துருக்கியரை அடக்கியதன் மூலம் ஐபீரியத் தீபகற்பம் முழுவதும் ஸ்பானியாவுக்குரியதாயிற்று. இத்தகைய பரந்த பேரரசில் திறம்பட நிர்வாகத்தைத் திட்டமிட்டு, ஆற்றும் ஆளுமை ஸ்பானிய மன்னர்களிடம் இருக்கவில்லை. 2ஆம் பிலிப்பைப் பொறுத்தவரையில் மந்திரிகளைக் கூட நம்பாதவன். உலகம் முழுவதும் பரவியிருந்த பேரரசின் அலுவல்களை தலைநகரில் இருந்தே கவனித்து வந்தான். 2ஆம் பிலிப், அவர் காலத்தில் இருந்தவர்களாலும் பிற்காலத்தில் இருந்தவர்களாலும் வெறுக்கப்பட்டதுபோல் ஐரோப்பாவில் வேறு எவரும் வெறுக்கப்பட்டிலர் என ஐரோப்பாவின் ஆண்டுக்குறிப்பு வரலாறுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது, இத்தகைய திறமையற்ற நிர்வாகம் அதன் ஆட்சிக்குட்பட்ட நாடுகளை அதிருப்தி கொள்ளவைத்தது. அவ்வாறே அமெரிக்காவின் தென்பகுதிகளான பீரு, மெக்சிக்கோ முதலியவற்றில் இருந்து சுரங்க வருமானம் ஸ்பானியாவுக்கு செழிப்பைக் கொடுத்த அதே நேரம், ஸ்பானியாவின் அரசியல் நிர்வாகத் தளர்வு நிலைமைகளின் போது இன்டீஸ் பகுதிகளின் பொருட்டும் அதிகம் செலவு செய்யவேண்டி இருந்தது. திறனற்ற ஆட்சியினால் அங்கிருந்து கிடைக்கும் வருமானத்தின் பெரும்பகுதி கட்டணங்களாகச் செலுத்த வேண்டியிருந்தது. இத்தகைய குடியேற்றக் கொள்கையினாலும், மிகப் பரந்த பேரரசில் ஒரு பாகமாய் இருந்தாலும் முடிவில்லாப் போர்களில் இறங்க வேண்டியிருந்தது.

ஸ்பானியா ஒரு கத்தோலிக்க நாடு. அதிலும் கிறிஸ்தவ உலகிற்கு மையமான நாடு. கத்தோலிக்க மதம் ஸ்பானிய மக்களிடத்தில் உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்தியிருந்தது. மக்களுக்குச் சமயத்தின்பாலிருந்த நம்பிக்கைதான் "இன்குவிஸிஷன்" ஏற்படுவதற்கு வழி வகுத்தது. இந்தச் சமய நீதிமன்றத்தினால் கருத்துரிமை ஒடுக்கப்பட்டது. அதனால் ஐரோப்பாவில் ஏனையபகுதிகளை மேம்படுத்திய புதிய சிந்தனைகளும் கருத்துக்களும் ஸ்பானியாவுக்குள் சென்று பரவமுடியவில்லை. ஸ்பானிய மன்னரும் மக்களும் கத்தோலிக்க மதத்தை எதிர்த்து வளரும் புரட்டஸ்தாந்து மதத்தை ஸ்பானியாவின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து அழிக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காவே 2ஆம் பிலிப் நெதர்லாந்து, பிரான்ஸ், இங்கிலாந்து என்பவற்றுடன் போரில் ஈடுபட்டான். நெதர்லாந்தில் லூதரின் மதமும் கல்வினிய மதமும் மக்களால் பின்பற்றப்பட்டன. நெதர்லாந்தின் பதினேழு மாகாணங்கள் ஸ்பானியா அரசுடன் சேர்க்கப்படிருந்தன. கைத்தொழிற்றுறையாலும், வணிகத்துறையாலும் நெதர்லாந்து ஸ்பானியாவை வளர்த்தது. இப்பதினேழு சிற்றரசுகளும் ஒரே முடியின்கீழ் இருந்தாலும் அவை ஒவ்வொன்றும் தனித்தனியான வட்டார உரிமைகளுடன் இயங்கிவந்தன. பெருமையுணர்வும், சுதந்திர மனோபாவமும் கொண்ட நெதர்லாந்து மக்கள் ஸ்பானிய முடியரசை வெறுக்கத் தலைப்பட்டனர். 5ஆம் சாள்ஸின் காலத்தில் இரு நாடுகளிடையேயும் பேணப்பட்ட நட்புறவு 2ஆம் பிலிப்பின் காலத்தில் குறைவடைந்து செல்லலாயிற்று.

சமய ஒற்றுமையில்லாமல் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது என்ற கொள்கை 2ம் பிலிப்பிடம் இருந்தது. நெதர்லாந்தின் வடபாகத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த புரட்டஸ்தாந்து இயக்கத்தை அவன் நசுக்க உறுதி பூண்டான். உபாயத்தினால் அமைதி காண வேண்டிய பிரச்சனையை அடக்கு முறை மூலம் சாதிக்கத் தீர்மானித்து 'ஆல்வாக் கோமகனார்' எனும் ஸ்பானியத் தளபதியை 1567இல் நெதர்லாந்திற்கு அனுப்பி வைத்தான். மிகக் குறைந்த படைவலிமையால் நெதர்லாந்தை அடிபணிய வைக்கலாம் என்றே 2ஆம் பிலிப்பும் ஆல்வாக் கோமகனாரும் எண்ணியிருந்தனர். சமய மறுப்பு, வரி

அறவீடு ஆகியன தொடர்பான குற்றங்களை விசாரித்து விரைவான தண்டனை விதிக்க அல்வாப் பிரபு ஒரு மன்றத்தினை ஏற்படுத்தினார். "இன்னற்கழகம்" அல்லது 'குருதிமன்றம்" என நெதர்லாந்து மக்களால் அழைக்கப்பட்ட இம்மன்றம் நெதர்லாந்து புரட்டஸ்தாந்து மக்கள்மீது தீவிரமான அடக்கு முறையைக் கையாண்டது. அல்வாப் பிரபுவின் இத்தகைய அடக்குமுறைக்கஞ்சி மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அதே மக்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பின் "கடற் பிச்சைக்காரர்" என்ற பெயரோடு தாயகம் திரும்பி, மேற்கொண்ட எதிர்கிளர்ச்சிகளுக்கு முகங்கொடுக்க ஸ்பானியாவால் முடியவில்லை. 1572இல் முக்கியமான பல அரண்மனைகள் கடற்பிச்சைக்காரர் எனும் புரட்சியாளர் வசமாயிற்று. இவர்கள் ஒரேஞ் வம்சத்தவரான வில்லியம் என்பானைத் தம் தலைவனாக நியமித்தனர். இவ்வாறு நாற்பது ஆண்டுகள் இந்தச் சுதந்திரப்போர் தொடர்ந்தது. நெதர்லாந்தின் கடல் மற்றும் கால்வாய்களின் புவியியல் ரீதியான அமைப்பு பாதுகாப்பு அரண்களாகத் திகழ்ந்து ஸ்பானியப் படைகளுக்குத் தக்க பதிலடி கொடுத்தது.

ஐக்கிய நெதர்லாந்துடன் போரிட்ட அதேசமயம், ஸ்பானியா பிரான்சுடனும் இங்கிலாந்துடனும் போர் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இங்கிலாந்து புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றுமொரு நாடு. புரட்டஸ்தாந்து நாடுகளுக்கு எதிராக 2ஆம் பிலிப் செயற்படுவதை இங்கிலாந்தின் பட்டத்து ராணி எலிசபெத் கண்டித்து ஸ்பானிய மன்னன் 2ஆம் பிலிப்பின் கொள்கைகளை முறியடிக்கும் முயற்சியில் இறங்கினார். அதனால் நெதர்லாந்திற்கும் ஸ்பானியாவுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டைகளின்போது எலிசபெத் இங்கிலாந்துப் படைகளை நெதர்லாந்திற்கு ஆதரவாக அனுப்பிவைத்தார். பிரான்சும் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவுகின்ற நாடு என்பதால் பிரான்சிற்கும் எலிசபெத் இராணியின் உதவி பெருமளவில் கிடைத்தது. எலிசபெத் ராணியின் இத்தகைய நடவடிக்கைகள் 2ஆம் பிலிப்பை இங்கிலாந்துடன் போரிடத் தூண்டியது. 1580ஆம் ஆண்டுகளில் இரு நாடுகளுக்குமிடையேயான பகைமை வலுப்பெறத் தொடங்கியது. ஆங்கிலேயக் கடற்படைத் தளபதியினால் ஸ்பானியக் கப்பல்கள் பல இடங்களில் தாக்கியழிக்கப்பட்டன. ஸ்பானியத் தூதுவர்கள் எலிசபெத் இராணியினால் இங்கிலாந்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு இருக்கையில் 1587ஆம் ஆண்டு கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த மேரி ஸ்ருவட் என்பவள் இங்கிலாந்தில் கொலை செய்யப்பட்ட சம்பவமானது உடனடியாக ஸ்பானியாவை இங்கிலாந்துடன் போரிட வைத்தது. 1588இல் ஆர்மடா எனும் பலம்மிக்க ஸ்பானியக் கடற்படையை இங்கிலாந்திற்கு எதிராக அனுப்பிவைத்தான். அது ஆங்கிலேயரிடம் படுதோல்வியுற்றதால் ஸ்பானியாவின் பெருமை மேலும் நிலை குலைந்தது.

ஸ்பானியாவின் கடும்பகையாகவும், புரட்டஸ்தாந்து சமயமாகவும் இருந்த நாவரே எனும் நிலப்பகுதியைச் சேர்ந்த ஹென்றி என்பவன் பிரான்சின் முடியினைப் பெற்றான் அத்துடன் இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்சு இம்மூன்றும் ஸ்பானியாவுக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்தன. இக்கூட்டணியின் அச்சுறுத்தல் ஸ்பானியாவுக்கு வெற்றி பெறுவதற்கான சாத்தியக் கூறுகளையே அடியோடு கழைந்து விட்டது எனலாம்.

இக்காலகட்டத்தில் ஸ்பானியாவின் மாநில ஆளுநர் திடீரென இறக்கவே நீண்டநாட்கள் ஊதியம் வழங்கப்படாதிருந்த ஸ்பானியப் போர்வீரர்கள் மன்னனுக் கெதிராகக் கலகம் செய்தனர். இக் கிளர்ச்சிகள் தெற்கில் இருந்து தோன்றியதைவிட மாறுபட்டிருந்தது. வடநாட்டினர் மிக்க பற்றுடையவராகவும் ஜேர்மன் மொழிப்பிரிவைப் பேசுவோராகவும் இருந்தவர். தெற்கில் உள்ளவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஞ்சு மொழிபேசுவோர். இவ்வாறான வேற்றுமைகள் அவர்கள் மத்தியில் இருந்தாலும் ஸ்பானியாவின் அதிகாரத்தை அடக்கித் தாம் சுதந்திரம் பெறவேண்டும் என்ற அடிப்படையில் ஒன்று சேர்ந்தன. இந்தக் கிளர்ச்சிகளை அடக்கி ஸ்பானிய முடியாட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஸ்பானிய மன்னன் மேற்கொண்ட நெடிய பயனற்ற முயற்சி ஸ்பானியாவின் அழிவிற்குப் பெரிதும் காரணமாயிற்று.

மன்னன் பெர்டினண்ட் கடைப்பிடித்த அரசியல் கொள்கையினால் முஸ்லீம்களது கிரனடாப் பகுதி ஸ்பானிய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஸ்பானியாவில் உள்ள வேற்று மதத்தவர்கள் 5ஆம் சாள்ஸ், 2ஆம் பிலிப் ஆகிய மன்னர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். கிரனடாப் பகுதிவாழ் முஸ்லீம் மக்களை கத்தோலிக்க சமயத்தைத் தழுவும்படி கடுமையாக அச்சுறுத்தினர். 1567இல் முஸ்லீம்களின் உடமைகளுக்குக் கட்டுப்பாடுவிதிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது. முஸ்லீம்களது கலாசார விழுமியங்கள் மீதும் கடும் சட்டத்தைப் புகுத்தினர். அதனால் முஸ்லீம்மக்கள் மன்னருக்கு எதிராகக் கலகங்களில் ஈடுபட்டனர். கலகம் விரைவில் அடக்கப்பட்டது. அதனால் அப்பகுதியில் இருந்து முஸ்லீம்கள் வெளியேறினர் இதுவரை பட்டுநூற்செடி வளர்த்தல், கைத்தொழில், வியாபாரம் மற்றும் விவசாயத்திலும் முன்னணியில் திகழ்ந்து ஸ்பானிய வருமானத்திற்குப் பெரும் பங்காற்றிய கிரனடாப் பகுதி முஸ்லீம்களின் வெளியேற்றம் பொருளாதார ரீதியில் ஸ்பானியாவைத் தளர்வு பெறச்செய்தது.

தொகுத்து நோக்கும்போது ஒரு நூற்றாண்டு ஸ்பானியா உலகம் பரவிய பேரரசிற்குத் தலைமை தாங்கியிருந்தது. அத்தகைய ஒரு நிலையை எட்டுவதற்கு எந்தக் காரணங்கள் சாதகமாக அமைந்தனவோ, எம்மன்னர்கள் பொறுப்பாக இருந்தனரோ அதே காரணங்களும் அதே மன்னர்களுமே அதன் தோல்விக்கும் காரணமாக இருந்தமையைக் காணமுடிகின்றது. அதனாற்தான் ஸ்பானியாவின் பொற்காலம் எனப் போற்றப்பட்ட 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அதன் வீழ்ச்சிக்கான அறிகுறிகளும் தென்படத் தொடங்கி, 17ஆம் நூற்றாண்டில் பூற்றான வீழ்ச்சியை எய்திற்று.

**உசாத்துணை நூல்கள் :**

1. EUROPE :
The story of the last Five Cent--uries.
Grant, A. J., Tamil Nadu text book society, 1971

2. இக்கால ஐரோப்பாவின் மலர்ச்சி
சோ. மரியற்று

3. ஐரோப்பிய வரலாற்றுச் சுருக்கம் ;
கிராண்ற் ஏ. ஜே.

---

வரலாறு ஓர் முன்யோசனையுடைய ஆசிரியன்

**History is a preceptor of pruduence**

— Edmund Burke

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்க அரசியல் சிந்தனையாளர் அரிஸ்டோட்டில்

— பாலசுந்தரி
வரலாற்றுச் சிறப்புக்கலை
இறுதியாண்டு
யாழ். பல்கலைக்கழகம்

ஐரோப்பிய அரசியல் சிந்தனை வரலாற்றிலே கிரேக்க தத்துவஞானிகளுடைய பங்களிப்பு மகத்தானதாகும். "கிரேக்கர் ஐரோப்பிய சிந்தனை மூலகர்த்தா." என்று சொல்லுமளவுக்கு கிரேக்க தத்துவஞானிகளினுடைய பங்களிப்பு இத்துறை பொறுத்துக் காணப்பட்டது. கிரேக்கர்கள் அரசியல் சிந்தனைத்துறையில் ஆற்றியிருந்த சேவைகள் அனைத்தும் கிரேக்கத்திற்கு முன்பான பழைய நாகரிகங்களின் அரசியல், சமக, பொருளாதார அறைசார்ந்த கருத்துக்களினாலே வளம்படுத்தப்பட்டிருந்தது. எனினும், பண்டைய நாகரிகங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவு கிரேக்க நகர அரசுகளிடையே வளர்ச்சி பெற்ற பல தன்மைப்பட்ட அரசியல் நிறுவனங்களினுடைய உருவாக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் துணைபுரிந்துள்ளன. இவ்வகையிலே கீழைத்தேய கருத்துக்களான தெய்வாம்சம் பொருந்திய முடியாட்சி முறைமை, பேரரசு முறைமை என்பன முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் கிரேக்க நாகரிகத்திற்கும் அதற்கு முன்னுள்ள பண்டைய நாகரிகங்களுக்கும் சிந்தனைத்துறை பொறுத்து ஒரு பிரதான வேறுபாடு காணப்பட்டது. இந்த வேறுபாடே கிரேக்கருடைய அரசியல் சிந்தனைகளை முன்னர் குறிப்பிட்ட பொது அரசியல் சிந்தனைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் தன்மையாகவுள்ளது. அந்தவித்தியாசம் தான் பகுத்தறிவுக்கு முதன்மை கொடுத்து எதனையும் கேள்விக்கிடமாக்கி துருவி ஆராயும் பண்பாகக் காணப்பட்டது. மேலும் கிரேக்கத்தினுடைய புவியியல் நிலைமை சுதந்திரமான சிந்தனைப்போக்கு வளர்வதற்கும் பல தன்மைப்பட்ட அரசியல் நிறுவனங்கள் தோன்றிவளர்ச்சி அடைவதற்கும் ஏதுவானதாகக் காணப்பட்டது. மற்றைய பண்டைய நாகரிகத்திலே வாழ்ந்த மக்களிலும், பார்க்க இவர்கள் பெருமளவு நேரத்தை ஆய்வு நோக்கிலே செலவிட்டனர். கிரேக்கத் தீபகற்பத்தின் கடற்கரையோரங்கள், மலைகள் நிர்மலமானவானம் ஆகியன சிந்தனை ஆற்றலை வளர்ப்பதற்கு ஏதுக்களாக அமைந்தன.

அரசியல் கோட்பாடுகள் பழைய கிரேக்க காலத்திலிருந்து உருவாகிவந்துள்ளன. அரசியல் கொள்கைகள் பற்றியும், அரசியல் அமைப்புகள் பற்றியும் பல்வேறான கருத்துக்கள் பண்டைக்காலத்தில் இருந்து இன்றுவரை நிலவி வருகின்றன. ஏதென்சு நகர அரசியல் முதன்முதலாக இருந்த சோபிஸ்ட் [Sophist] அல்லது அலைந்து திரிந்து அரசியலை வளர்த்த ஆசிரியர்கள் பல அரசியல் கருத்துக்களைக் குறிப்பாக அரசியல் கொள்கைகளைச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அதன் பின்னர் அறிவு மேதைகளான சோக்கிரற்றீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றவர்கள் அரசியல் ஆராய்ச்சிகள் செய்து அரசு, அரசாங்கம் இவைகளைப் பற்றிய இலக்கணமும் விளக்கமும் கொடுத்திருக்கிறார்கள், சோக்கிரற்றீஸ் எழுதியதாக எவையும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் அவருடைய கருத்துக்களை, அவருடைய மாணவராகிய பிளேட்டோ 'ரிப்பப்ளிக்' (Republic) என்ற புத்தகத்தில் எழுதியுள்

ளார். அதற்குப் பின்னால் வந்த பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டோட்டில் இன்னும் தெளிவாக அரசியல் கருத்துக்களை எடுத்து வழங்கியுள்ளார் அவரால் வழங்கப்பட்ட சிந்தனைகள் பற்றி நோக்குவோம்.

கிரேக்க சிந்தனையாளர்களுள் தலைசிறந்தவராக விளங்கியவர் அரிஸ்டோட்டில் ஆவார், அரிஸ்டோட்டில் ஆதென்சுக்கருகிலுள்ள ஸ்ட்டஜைரா (Stagira) என்ற ஊரில் கி. மு. 384 ஆம் ஆண்டில் பிறந்தார். தனது பதினேழாவது வயதில் ஆதென்சு நகரசுக்கு வந்து ஐசோக்ரேட்டஸ் என்ற ஆசிரியரிடம் கல்வி பயின்றார். பிளேட்டோவிடம் தன்னை மாணவனாகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டு கி. மு. 364 ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். மாணவராகச் சேர்ந்து 17 ஆண்டுகள் அதாவது கி. மு. 347 வரை பயின்றார். பிளேட்டோவின் மெய்யறிவு ஆற்றலினால் ஈர்க்கப்பட்ட இவர் கற்பனையாக ஆராயவும் வாழ்க்கையே (Life of Specutation) முழு இன்பத்தையும் அளிக்கும் எனக் கருதினார். பிளேட்டோவின் மறைவிற்கும் பின் மசிடோனிய மன்னனின் மகனுக்கு ஆசிரியராகச் சில காலம் பணியாற்றினார், பின் கி. மு. 635ஆம் ஆண்டு ஏதென்சுக்கு திரும்பி வந்து லீசியம் (Lyceum) என்ற கழகத்தை நிறுவினார். இவர் இக்கல்விக் கழகத்தில் நடந்து கொண்டு கற்பித்தமையால் இக்கல்விக் கழகத்தை நடமாடும் கழகம் [Peripatetic School] என்று குறிப்பிட்டனர். அரிஸ்ரோட்டில் தம் சுயசிந்தனையை ஆதாரமாகக் கொண்டு அரசியல் சமுதாயப் பிரச்சினைகளை ஆய்வு செய்யத்தொடங்கினார், எனினும் இவ் ஆய்வானது அவர் நடைமுறையில்செயற்பட்டுவந்த அரசியல் சமுதாய நிறுவனங்களையும் கருத்துக்களையும் நேராகக் கண்டு ஆராய்ந்தறியவும், சில பொது விதிகளை வகுக்கவும் கூடிய அறிவியல் முறையில் செயற்பட வைத்தது. இதனால் அரிஸ்டோட்டில் நடைமுறையில் செயற்பட்ட அரசியலமைப்புக்களை ஆராய்ந்து இலட்சிய அரசினியல்புகள் எவ்வளவிற்கு அவற்றில் காணப்பட்டன எனக் கூறினார்.

இவர் அரசியலில் மட்டுமன்றி பொருளாதாரம் பௌதீகம், விலங்கியல், அளவையியல், உளவியல், கலையியல் போன்ற இன்னும் பலதுறைகளில் தேர்ச்சி பெற்று விளங்கினார். அரிஸ்டோட்டிலின் அரசியற் சிந்தனைகள் விஞ்ஞானரீதியான முறையில் முதன் முதலாக ஆராயப்பட்டது. இதனால் தான் அரசியல் விஞ்ஞானத்தில் நவீன பண்பு கொண்ட போக்கை வளர்ச்சிப்படுத்திய வகையில் அவர் சிறப்பிடம் பெறுகின்றார்.

பிளேட்டோ, அரசின் தன்மைபற்றியும், தோற்றம்பற்றியும், இயங்கும் முறை பற்றியும், முன்வைத்த கருத்துக்களின்று வேறுபட்ட தன்மை கொண்டவராக அரிஸ்டோட்டில் காணப்படுகின்றார். பிளேட்டோவைப் போல கற்பனை அரசுபற்றி அரிஸ்டோட்டில் எழுதி இருந்தாலும் இருவருக்கும் இடையிலான வேறுபாடு காணப்படத்தான் செய்கின்றது.

அரிஸ்டோட்டில் பிளோட்டோவைப் போல ஒரு பொதுவான இலட்சிய கருத்தமையமாகவைத்துக் கொண்டு மனிதவாழ்வின். சமுதாய பொருளாதார அரசாங்கத்துறைகளிலுள்ள செயல்முறைகளையும் நிறுவனங்களையும் கொள்கைகளையும் ஆராய்ந்தார். இவர் காரியத்திலிருந்து காரணத்தை அறியும் தருக்கமுறையை நன்கு வகுத்து வைத்தார். இதன் விளைவாகப் பல்வேறு நூல்களையும் எழுதினார். அரசியல் கோட்பாடுகளை கூறும் நூலாக 'அரசியலமைப்புக்கள்' (Consitutions) என்ற நூலையும் தனது அரசியல் கோட்பாடுகளாக அரசியல் (The Politics) என்ற நூலையும் எழுதினார். இந்நூலில் தாம் கண்டு ஆராய்ந்த அரசியலமைப்புக்களிலிருந்தும் வேறுவகையான சிறு பொதுவான கோட்பாடுகளை வகுத்தார்.

இவர் எழுதிய அரசியல் என்ற நூல் அரசியல் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. மனிதன் 'அரசியல் பிராணி' எனும் தத்துவத்தை போதித்த அறிஞர் அரிஸ்டோட்டில் எந்த மனிதனும் ஓரரசின் கட்டுக் கோப்பிற்குள் தான் சிறப்புற வாழ்ந்திட முடியும் என்றார். ஆட்சியாளர்கள் மனைவி, மக்களைப் பெற்றிருத்தல் கூடாது தனிச் சொத்துக்கள் கொண்டவராக இருத்தல் கூடாது என்ற பிளேட்டோவின் கருத்தை ஏற்க மறுத்தார். என்றாலும் கல்வி அறிவின் மேன்மைத் தன்மையைப் பிளேட்டோவைப் போன்ற வற்புறுத்தினார். இவர் இந்த நூலின் முற்பகுதியில் அரசு, குடும்பம் ஆகியவை பற்றிய சமுதாய அமைப்புக்கள் பற்றிய கோட்பாடுகள் சிலவற்றை வகுத்துள்ளார். அரசானது மனிதர்களைக் கொண்ட அமைப்புக்கள் எல்லாவற்றிலும் உயர்தரமான வடிவத்தில் அமைந்த அமைப்பு எனக் கூறுகின்றார். அரசு என்ற சமுதாய அமைப்பு ஆனது மனிதர்களுடைய இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய கட்டாயமான நிலையில் தோன்றி மக்கள் முழுமையான நல்வாழ்க்கையை அடையவேண்டும் என்ற நோக்கிற்காக நீடித்து வருவதாகக் கூறினார். மேற்கூறப்பட்ட சிந்தனையானது அரசின் இன்றியமையாமை பற்றிஎடுத்துக் காட்டுகிறது. இவரின் கருத்துப்படி அரசு ஒட்டுமொத்தமாக மனித மேம்பாட்டைத் தந்து அனைவரின் மகிழ்ச்சியிலும் சந்தோசமாக இருக்கவேண்டும் என்பது அவரின் நோக்கமாகும். இத்தகைய குறிக்கோளை முதன்மைப்படுத்தும் அரசியல் அமைப்பினையே சிறந்ததாகக் கூறுகின்றார்.

அரிஸ்டோட்டில் தனிமனிதனைப் பற்றிக் கூறுகின்றபோது, அரசாங்கத்தில் பணிபுரிவதற்கு அரசியல் உரிமைகளைப் பெற்று இருப்பவரே அவர், இந்தத் தனி மனிதனுக்கு திட்டவட்டமான சமுதாய உரிமைகளும் அரசியல் உரிமைகளும் இருத்தல் வேண்டும். உதாரணமாக சமுதாய உரிமை எனும்போது சொத்துரிமை அடிப்படை உரிமை, பேச்சுரிமை என்பனவற்றையும் அரசியல் உரிமை என்னும் போது வாக்குரிமை தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பவற்றைக் குறிப்பிடலாம். இவரது கருத்துப்படி தனிமனிதன் என்பவன் ஆளுவதற்கும், ஆளப்படுவதற்கும் தகுதியைப் பெற்று. அன்றாட வாழ்க்கைக்கு தேவையானபொருட்களை ஈட்டும் தொழில்களில் நின்றும் விடுபட்டு இருக்க வேண்டும், பாராளுமன்ற ஆணைக்குட்பட்டு தொழில்செய்யும் இயல்புகளையும் கொண்டு இருத்தல் வேண்டும்.

பொதுவுடமைபற்றி அரிஸ்டோட்டிலின் கருத்தானது பிளேட்டோவின் கருத்தில் இருந்து வேறுபடுகின்றது. பிளேட்டோவின் கருத்துப்படி தனியுரிமைக்குப் பதிலாகப் பொதுஉரிமையை சிறந்த அரசு ஒன்று ஏற்பட வழிவகுக்கின்றது. என்றார். ஆனால் அரிஸ்டோட்டில் தனியுரிமையை ஆதரிப்பவராகக் காணப்பட்டார். ஸ்பாட்டா, எதென்ஸ். போன்ற நகர அரசுகளின் அமைப்புக்களையும், ஹிப்போடாமஸ், பேலியஸ் சோலன் முதலிய அரசியலறிஞர்களுடைய திட்டங்களையும் இவர் நுட்பமாக ஆராய்ந்தார்.

அரிஸ்டோட்டில் அரசியல் அமைப்பின் இறைமை அதிகாரம் பற்றிக்குறிப்பிடுகின்றபோது ஓர் இடத்தில் அதிகாரம் இருக்கவேண்டுமெனின் முழுநலன் அல்லது பண்புடைய வாழ்க்கையை ஏற்படுவதற்கு வேண்டியவையெல்லாம் செய்பவர் எவரோ அவரிடத்தில் தான் தலைமையான அதிகாரம் கொடுக்கப்படுதல் வேண்டுமே தவிர உயர்குடிப் பிறப்போ, செல்வமோ, சுதந்திரமோ, பெற்றிருப்பது தான் இறைமையைப் பெறுவதற்கான அளவுகோலாக ஆகாது என்று கூறுகிறார். அவர் இறைமையின் இருப்பிடமாக குடிமக்கள் யாவரும் அடங்கிய தொகுதியே எனக்குறிப்பிடுகின்றார். செல்வச் சிறு குடியினர் ஆட்சியில் சாதாரண மக்கள் வெளியேற்றப்படுபவதால் செல்வரடங்கிய சிறிய ஆளும்கூட்டத்திலேயே இறைமை அதிகாரம் இருக்கிறது. இவர் தமது காலத்தில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையினை ஆதாரமாகவைத்தே இறைமை அதிகாரத்தின் இருப்பிடத்தைக் கூறினார்.

இறைமை அதிகாரமானது சட்டத்தின் இறைமையில் அதிகாரம் இருக்கல் வேண்டும். ஏனெனில் ஒருவரிடத்திலோ அல்லது சிலரிடத்திலோ, மக்கள் தொகுதியிடமோ இருந்தால் சட்டமாக இருக்காது. சில வேளைகளில் நீதி கிடைக்காத அளவிற்குச் சட்டம் கடுமையானதாகவும் இருக்கும். அப்படி இருந்தாலும் சட்டம் என்னும் வழக்கம் விதிக்கின்ற விதிகளினால் தோன்றும், நீதியற்ற தன்மை கடுமையானது ஆகாது. ஆகவே சட்டத்தின் ஆட்சி அல்லது தலைமை என்பதை விரும்பினார். அது கடவுளின் ஆட்சி அல்லது அறிவின் ஆட்சி ஆகும். மனித விருப்பத்தின் மீது அமைந்துள்ள ஆட்சியோ விலங்கின் ஆட்சியாக இருக்கும் என்றார்.

அரசியல் அமைப்புக்கள் பற்றி ஆராய்ந்த அரிஸ்டோட்டில் அவற்றை முடியாட்சி, உயர்குடியாட்சி, மிதமான குடியாட்சி, சர்வாதிகார ஆட்சி, செல்வச் சிறு குடியாட்சி, குடியாட்சி அல்லது மக்களாட்சி என்று வகைப்படுத்தினார். அவை பற்றிய கோட்பாடுகளையும் வழங்கினார். மிகச் சிறந்த அரசியல் அமைப்பு எது? என்ற வினாவிற்கு விடைகாணும் அரிஸ்டோட்டில் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த அரசியமைப்பு எது என்றுமட்டும் ஆராயாமல் நடைமுறையில் மக்களால் மிகச் சிறந்ததாக அடையக்கூடிய அரசியலமைப்பு எது என்றும் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் சிறந்ததாக இயங்கக் கூடிய அரசியலமைப்பு எது என்றும் ஆராய்ந்து சில கருத்துக்களைக் கூறுகின்றார். கருத்தளவில் மிகச் சிறந்த பண்பு அல்லது தகுதி பெற்றிருப்பவரே ஆளுதல் வேண்டும், சிறந்த தகுதியுடையவர் ஆளுவாராயின் முடியாட்சிதான்சிறந்தது. சிறப்பான தகுதியுடைய ஒரு சிலர் ஆட்சி செய்வோராயின் உயர்குடி ஆட்சியே சிறந்தது. நடைமுறையில் பார்க்கும் போது எது சிறந்த அரசியமைப்பு என்றால் தீவிரமான நிலையைத்தவிர்த்து நடுத்தரமானவகையில் செயற்படக்கூடிய அரசியலமைப்பு எதுவோ அதுவே சிறந்தது என்று கொள்ளலாம் எனக் கூறுகின்றார்.

ஒரு அரசிற்கு இருக்கவேண்டிய சிறந்த கருதுகோளாக அமைதியான வாழ்வும் அதன் மூலமாக நாட்டிலுள்ள அரசியல் சமுதாய அமைப்புக்களின் கூறுகள் எல்லாம் யாதொரு முரண்பாடு ஒய்வுமின்றி செயற்பட்டு முழுவளர்ச்சி பெறுமாறு செய்தலும் ஆகும் என்றார். இக்குறிக்கோள்களை அடைவதற்குப் பல வழிகள் உண்டு எனவும், அவற்றில் ஒன்று அறிவியல் முறையாகச் சட்டம் வகுத்து மக்களின் இயல்பையும் நாகரிகத்தையும் உருவாக்குவது ஆகும் என்றார். மேலும் மக்கள் அரசின் நேரடிக் கண்காணிப்புக்குட்பட்டு இருத்தல வேண்டும் மக்கள் ஊக்கமும் கல்வியறிவும் கூர்மையும்பெற்று இருத்தல் வேண்டும். எனவும் இலட்சிய நகர அரசியல் அரசானது குடிமக்கள் யாவருக்கும் நல்லகல்விப் பயிற்சியினை அளிக்கின்ற ஆசிரியனாக பணியாற்றவேண்டும். மக்கள் அனைவரினதும் ஒழுக்க அறிவியல் பண்புகள் முழுமையாக வளர்ச்சி பெறுவதன் மூலமே அரசியல சமுதாயம் நல்லபணி செய்ய முடியும். கட்டாயக்கல்வி முறை இலட்சிய அரசுக்கு தேவை எனவும், இதுவே அரசின் முக்கியமான அலுவல் எனவும் குறிப்பிட்டார். மக்களுக்குத் தனிவாழ்க்கை திருமணவாழ்க்கை, குழந்தை பெறுவதற்கான காரியம், குழந்தைப் பாதுகாப்பு என்பன அரசின் மேற்பார்வையின் கீழ் அடங்க வேண்டும். இவ்வாறு இருப்பதால் குழந்தைகள் பிற்காலத்தில் உடல் அழகும், வலிமையும் ஒழுக்கமும் அறிவுக்கூர்மையும் உடையனவாகவும் விளங்குவர் எனக் கூறினார்.

அரிஸ்டோட்டில் புரட்சிபற்றிக் கூறும்போது புரட்சி இயக்கங்களுக்கெல்லாம் பொதுவான ஒரு காரணமாக இருப்பது யாவரும் ஒத்த உரிமையோடிருத்தல் வேண்டும் என்றும், மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் சமத்துவம் உடையவர் என்றும் மக்களிடத்தில் காணப்படும் இயல்பான உணர்ச்சியே ஆகும் என்று கூறியுள்ளார். மேலும் புரட்சியைத் தடுக்கக்கூடிய இயல்பை உடைய பாதுகாப்புக்கள் எவை எனவும் அரிஸ்டோட்டில் குறிப்பிடுகின்றார்.

அரிஸ்டோட்டில் சர்வாதிகார ஆட்சி முறைமையானது நிலைத்து இருப்பதற்கான காரணங்களையும் குறிப்பிடுகின்றார். சர்வாதிகாரி இரக்கமின்றி மக்களை அடக்கியும், கொலை செய்தும் துரத்தியும் ஆட்சி செய்கின்றார். அறிவு வளர்ச்சிக்கும் சமுதாய நலனுக்கும் இன்றியமையாத தொடர்புகள், எல்லாவற்றையும் தடைசெய்கிறான். சர்வாதிகாரி அடிமைகளால் சூழப்பட்டு நலம்மிக்க வாழ்வுவாழ்கிறான். இவர் தனது சர்வாதிகார ஆட்சியினை நலம்மிக்க ஆட்சி போலக்காட்டுகின்றார். இதன் காரணமாக மக்கள் அவரிடத்திலே மரியாதை காட்டுகின்றார்கள். மக்களுக்கு அச்சம் வருவதில்லை அறிவாளிகளை ஆதரித்தும் சமய வழக்கங்களுக்கு மதிப்புக்கொடுத்தும் ஆடம்பர வாழ்வுக்கான போக்கை விடுத்தும் வாழவேண்டும் என்றார். படையில் அடும் உழைப்பைக் கொண்டவர்களைச் சேர்க்க வேண்டும். பணக்காரர்கள், ஏழைகள். தமக்கிடையில் தொடர்புகளை வைத்திருக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். வெகுமதிகளையும், விருதுகளையும் வழங்கவேண்டும். சர்வாதிகார ஆட்சியானது. சர்வாதிகார ஆட்சிபோல அல்லாது ஆதரவளிக்கின்ற தந்தைபோல் இருக்கவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

அரிஸ்டோட்டிலின் சிந்தனைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது அவரது சிந்தனைகள் கிரேக்க நாகரிகம் வீழ்ச்சி அடைந்த பின்னரும் கிறிஸ்தவ திருச்சபை முக்கியம் பெற்ற காலத்தில் கிறிஸ்தவ இறைஇயலை உருவாக்கவும் இவரது சிந்தனைகள் பயன்பட்டன. குறிப்பாக பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ சிந்தனையாளரான தோமஸ் அக்குவினாஸ் அரிஸ்டோட்டிலின் அரசியல் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இடைக்காலம் முழுவதும் செம்மைப்படுத்தியவர்களுள் ஒருவராகக் காணப்படுகிறார். கிறிஸ்தவ திருச்சபையில் 'பாகன் பண்பாடு' என்று இண்டல் செய்கின்ற வகையில் கிரேக்க உரோம பண்பாட்டைக் குறிப்பிட்டுச் சொன்னவர்களால அதே பண்பாட்டில் வளர்ந்த அரிஸ்டோட்டிலின் ஆய்வுமுறையினைச் சுருக்கமாக பின்பற்றி இருந்தனர். அதே முறையினை பின்பற்றி இறையியல் தத்துவங்களை உருவாக்கி இருப்பதையும் காணலாம். இதிலிருந்து அரிஸ்டோட்டிலின் அரசியல் சிந்தனை வளத்தின் முக்கியத்துவத்தினைக் காணலாம்.

உலகத்தின் எந்த நாட்டின் அரசியலமைப்புப்பற்றியும் அரசியலாளர் எவரும் மதிப்பீடு செய்தாலும் அதற்கு அரிஸ்டோட்டில் வகுத்த அளவுகோலை ஆதாரமாகக் கொண்டே ஆகவேண்டும். எனினும் இவரது அரசியல் கருத்துக்கள் தர்க்கத்திற்குரியனவாகவும் விளங்குகின்றன. எதென்ஸ் நகரரசை மையமாக வைத்து அரிஸ்டோட்டில் வகுத்த அரசியல்கோட்பாடுகள் பிற்காலத்தில் தோன்றிய பல்வேறு வகைப்பட்ட அரசியலமைப்பு வகைகளைச் சீர்தூக்கி ஆராய்வதற்கு உதவியாக இருக்கின்றன என்று கூறலாம். மேலும் கிரேக்கத்தை அடுத்து உரோம நகரரசிலும் உரோமானியப் பேரரசிலும் தோன்றிய இராணுவ முடியாட்சி இடைக்காலத்தில் கிறிஸ்தவ திருச்சபையின் ஆதிக்கத்தில் தோன்றிய அரசு தற்காலத்தில் பொருளியல் அடிப்படையில் தோன்றிய அரசு ஆகியவற்றில் செயற்பட அரசியலமைப்புக்கள் எல்லாம் ஆராயப்படுவதற்கு இவற்றின் கோட்பாடுகள் உதவுகின்றன எனின் மிகையாகாது.

உசாத்துணை நூல்கள்

1. மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள்
   பா. சூரியநாராயணன்
2. அரசியல் கோட்பாடுகள்
   பெ. நடராஜன்
3. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி II
   தமிழ்ப் பல்கலைக்கழகம் சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமலர்ச்சிக்கால இத்தாலியில் எழுச்சி பெற்ற சிந்தனையும் இலக்கிய வளர்ச்சியும்

— வனித்தா நாகையா
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

ஐரோப்பிய வரலாற்றிலே மறுமலர்ச்சிக் காலமானது கி. பி. 1300-கி. பி. 1600 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியதாகும். மறுமலர்ச்சி இயக்கமானது முதலில் இத்தாலிய சிறுநகரங்களிலிருந்து தோன்றி பின்னர் ஐரோப்பிய நாடெங்கிலும் பரவிச் சென்றது எப்படி. பிரான்ஸ் அரசியல் வளர்ச்சிக்குத் தாயகமாகவும் ஜேர்மனி சமயப்புரட்சிக்கு இருப்பிடமாகவும் இருந்ததோ அதேபோன்று இத்தாலியும் சிந்தனைப்புரட்சிக்கு தாயகமாக இருந்தது. மறுமலர்ச்சிக் கால இத்தாலியின் அறிவியல் சிந்தனையும் இலக்கியத்தின் செழுமையான தன்மையும் வரலாற்றிலே மறுமலர்ச்சிக்கால மனிதனைத் தனியாக அடையாளம் காணக் கூடியவகையில் அமைந்திருந்தது.

முதலில் இக்காலத்தில் தோன்றிய அறிவியல் சிந்தனையை நோக்கின் அவை ஓர் தனிப்பட்ட அம்சத்தினை உள்ளடக்கியுள்ளது. இடைக்காலத்தில் திருச்சபையின் கீழும் அதன் ஆதிக்கத்துள்ளும் அதன் வழிநடத்துதலின் கீழும் இருந்த மக்கள் இக் காலத்தில் தங்களது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் எழுச்சிகரமான முறையில் வெளிக்கொண்டு வந்தனர். அதாவது இடைக்கால மக்கள் வாழ்ந்து வந்த நிலையிலும் பார்க்க சகல துறைகளிலும் சிறந்து விளங்கினர். சுமார் 1000 ஆண்டுகள் மறந்திருந்த இலக்கியங்களையும் கலைகளையும் கண்டுபிடித்தனர், இடைக்காலத்தில் மக்கள் எதனையும் மூடத்தனமாக நம்பி வாழ்ந்தனர். அரசர்களும் அதிகாரிகளும் சமயவாதிகளும் கூறுவதை மக்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர். ஆனால் மறுமலர்ச்சிக் காலத்திலே எழுச்சி பெற்ற சிந்தனையின் காரணமாக அவர்கள் கூறுவதற்கு மக்கள் விளக்கம் கோரினர். அவர்களுடைய ஐயப்பாடுகளை தெளிவாக்கிக் கொள்ள ஏன்? எதற்கு? எப்படி? என்ற பல வினாக்களை எழுப்பினர். காரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தனர் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தனர். இதனால் அவர்கள் இயற்கையாகவே அறியாமையிலிருந்தும் சமய நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகளிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட முற்பட்டனர். இது மறுமலர்ச்சிக்கால சிந்தனைக்கான தூண்டுதலைக் காட்டுகிறது.

மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் அழகைப் போற்றல், பகுத்தறிவை மதித்தல் இயற்கையை ரசித்தல், புதியதுறைகளில் வளர்ச்சியை நாடுவதில் மகிழ்ச்சியுறுதல் துணிச்சலான பயணம், முன்னேற்றகரமான கண்டுபிடிப்புக்கள், உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம், பழைமையையும் புதுமையையும் இணைத்து அனைத்து மக்கள் கூட்டத்தினரையும் ஒன்று சேர நோக்குகின்ற மனப்பாங்கு எதையும் திருப்திகரமான வகையில் முழுமையாக நிறைவேற்றுகிற தன்மை, அறிவுத்துறை நோக்கிய தேடல், கற்றல், பரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல், மொழிவளர்ச்சி, மனிதனையும் இவ் உலக வாழ்க்கையையும் மகிமையடையச் செய்தல் என்பன சிறப்பான அம்சங்களாகும். இக் காலகட்டத்தில் ஒரு சிந்தனையாகவும், ஒரு பாணியாகவும் வளர்ச்சி பெற்ற ஒரு எண்ணக்கருவே 'Humanism' ஆகும். அதனை'Man discovery of him self and the world' அதாவது மனிதன் தன்னைப்பற்றித்தானே சிந்தித்தல் அத்துடன் உலகத்தையும் நோக்குதல் இதுவே மனிதவாத சிந்தனையின் கருப்பொருள் ஆகும். மனிதனையும் உலக வாழ்வையும் மகிமைப்படுத்தல் என்ற கருத்தில் அமைவதாகும்.

மனிதவாத சிந்தனையின் தந்தை என Francesco Petrarch போற்றப்படுகிறார். இவர் மனிதவாத சிந்தனையின் அம்சங்களை ஆழமாக ஆராய்ந்தார். இடைக்கால மக்கள் முழுக்க முழுக்க மறு உலக வாழ்க்கையையே நம்பி இருந்தனர் என்பது மட்டுமல்ல அப்படியே வளர்க்கப்பட்டனர் எனவும் கூறலாம். எனவே Francesco Petrarch என்பவர் இடைக்காலத்துக்கும் மறுமலர்ச்சிக் காலத்துக்கும் இடைப்பட்டவராக இருந்தமையால் இரு காலங்களின் தன்மைகளையும் அறிந்திருந்தார். இவர் வலியுறுத்தும் கருத்தாவது மக்கள் மறு உலகத்தை மாத்திரம் அல்ல இவ்வுலக இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதாகும். மதம் மனிதனின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே கருதப்படவேண்டும் என்பதாகும். அதாவது இவ்வுலக வாழ்க்கை பெறுமதியானது என்பதை வலியுறுத்தியதோடு மனிதனின் இவ்வுலக வாழ்க்கையை மேன்மைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் நியாயமானது மட்டுமல்ல போற்றப்பட வேண்டியதும் கூட என வாதிட்டார். இதன் அடிப்படையிலேயே அவர்கள் இயற்கையை ரசித்தல், அதை வழிபடுதல் இவ்வுலகின் அழகினை ரசித்தல், அதை வழிபடுதல் இவ்வுலகின் அழகினை சுவைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். இதை சிந்தனையில் மாத்திரம் அல்ல செயற்பாட்டிலும் கொண்டுவர வேண்டும் என அவர்கள் விரும்பினர்.

இடைக்காலத்தில்தனிமனிததத்துவம் மறுக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து விடுபட்டு மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாக அமைந்தது எனலாம். இம் மனிதவாதமானது Humanism Jndividulism Civic Humanism என காலப் போக்கில் வளர்ச்சி கண்டது. இவை படிப்படியாக மக்கள் மத்தியிலும் பின்னர் அரசியலிலும் முக்கியத்துவம் பெற்றது. பெற்றாக்கினால் உருவாக்கப்பட்ட சிந்தனையானது மதத்துடன் இணைந்ததாக காணப்பட்ட பொழுதிலும் பின்னர் இச் சிந்தனை மறு உலக வாழ்க்கைக்கு எதிரானதாகவும் கருதப்பட்டது.இதனால் அவர்கள் மதத்தையோ மத சடங்கையோ எதிர்த்தார்கள் எனக் கூறமுடியாது. இச் சிந்தனை மதத்துடனே இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டு மனிதனுக்கு முதலிடம் கொடுப்பதாக அமைந்தது: எனவே மேற் கூறப்பட்ட கருத்துக்கள் மூலம் மறுமலர்ச்சிக்கால சிந்தனையின் ஆழமான தன்மையை நோக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் மறுமலர்ச்சிக்கால இலக்கியங்களின் தன்மைகளை ஆராய்ந்தால் மறுமலர்ச்சிக்கால சிந்தனையின் ஊடாகவே இலக்கியங்களோ கலைகளோ ஒரளவிற்கு அமைந்தன என்பதை அவற்றின் தன்மைகளின் ஊடாக நாம் அறிந்து கொள்ளலாம். இக்கால இலக்கியத்தினை நோக்கும் பொழுது பன்முகப்படுத்தப்பட்ட தன்மையாகவும், பல்துறை சார்ந்ததாகவும் காணப்படுகின்றன. 14, 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த மனிதவாதிகள் வரலாறு, இலக்கியம், விமர்சனம், இலக்கணம் கவிதை போன்ற துறைகளில் கூடிய ஆர்வம் காட்டினர். இயற்கையை விளங்கிக்கொள்வதற்கும் தமது சிந்தனைகளைச் சிறந்த வகையில் வெளிப்படுத்திக் கொள்வதற்கும் கிரேக்க உரோம நாகரிகத்தினர் பின்பற்றிய வழிமுறைகளைத் தாமும் பின்பற்றினர். மறுமலர்ச்சிக்கால அறிவு வளர்ச்சிக்கு இப்பழைய நூல்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. இவ்விலக்கியங்களைப் படிக்கவும் போற்றவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு செய்யவும் பலகழகங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இதுவரை சிறப்பை இழந்திருந்த சொற்பொழிவாற்றல்' என்ற கலையும் போற்றப்பெற்றது. மற்றும் மனிதாபிமானத் தன்மை மேம்படுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பெற்றன.

மனிதாபிமான இயக்க வளர்ச்சியில் 3 விதமான மாறுதல்கள் காணப்பட்டன. அவற்றில் முதலாவதாக பழைய இலக்கியங்கள் புதுப்பிக்கப்பட்டன. பழைய கையெழுத்துப் பிரதிகளைத் துருவித் துருவிக் கண்டுபிடிக்க முற்பட்டனர். ஏனெனில் இடைக்காலத்தில் மக்கள் முக்கிய விடயங்களை மறந்திருந்தனர். இத்தகைய விடயங்களை இலத்தின் மொழினூடாகத்தான் ஓரளவு அறிந்திருந்தனர். நாளடைவில் மக்களிடையே கிரேக்க இலக்கியங்களை முழுமையாகப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இந்த விருப்பம் நிறைவேற வேண்டுமாயின் பல பாகங்களிலும் சிதறிக் கிடக்கும் பழைய இலக்கியங்களைத் தேடிக் கண்டுபிடித்து வெளியிட வேண்டியிருந்தது. இம்முயற்சி பலனளிக்காத காரணத்தினால் கிரேக்க மொழி தெரிந்தவர்களின் தனிப்பட்ட முயற்சியினால் கிரேக்க நூல்கள் புத்துயிர் பெற்றன. ஆரம்பத்தில் கிரேக்கப் படைப்புக்கள் அரபு மொழி பெயர்ப்பிலிருந்தே இலத்தின் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டது. அதன் பின்னர் கிரேக்கமொழி அறிவு வளர்ச்சிக்குட்பட்டதும் நேரடியாக கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டது.

மனிதாபிமான இயக்கத்தின் இரண்டாவது மாறுதல் கிரேக்க மொழியில் ஆர்வம் படைத்தவர்கள் கிரேக்க இலத்தின் மொழிகளில் எழுதப் பெற்ற பழைய கையெழுத்துப் பிரதிகளைத் தேட முற்பட்டனர். Bracciolini இதற்கென ஓர் இயக்கத்தையே தொடக்கி வைத்தார் இப்பிரதிகளைத் தேடும் முயற்சிகளில் Giovanni Aurispa, Francesco Phillipo. ஆகியோர் துருக்கியில் நூற்றுக்கணக்கான பிரதிகளைத் தேடித்தந்தனர். சிலர் நூல்கள் எடுத்தும் அவற்றுக்கு நகல் எடுத்தும் வந்தனர். குறிப்பாக Cosimo - de - Medichi க்கு விற்பனை செய்ய 45 பேர்களை நகல் எடுக்க அமர்த்தி 22 மாதங்களில் 200 பிரதிகளை எடுத்துக் கொடுத்தார். தனியாரும் அரசாங்கமும் அனைத்து இடங்களிலும் புதிய நூல் நிலையங்களை நிறுவினார்கள். France Rome ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட நூல்நிலையங்கள் பிரசித்தி பெற்றவை ஆகும். போப்பாண்டவரின் நூல் நிலையத்தில் கூட கிரேக்க இலத்தீன் பிரதிகள் ஏற்கப்பட்டது. அதாவது 5ஆம் நிக்கலஸ் காலத்தில் நூல் நிலையம் புதுப்பிக்கப் பெற்று அங்கு 824 இலத்தின் பிரதிகளும் 362 கிரேக்கப் பிரதிகளும் காணப் பெற்றன.

மூன்றாம் காலகட்டத்தில் முன்போல் கண்மூடித்தனமாக எல்லாக் கிரேக்க இலத்தின் நூல்களையும், வானளாவப் புகழாமல் அவற்றைத் திறனாய்வு செய்ய முற்பட்டனர். இதனால் இவ்வியக்கத்தில் நல்ல முன்னேற்றமும் காணப்பட்டது. Lorenzovalla Leo Battista Alberti Marsillo Ficino, Angelo Poliziano, Giovanni Piccodella Mirandola ஆகிய சில முக்கியமான திறனாய்வாளர்கள் அப்பொழுது போற்றப்பெற்றனர். கிரேக்க கல்விக்கூடங்களும் ஐரோப்பாவில் நிறுவப்பட்டன. கல்விக்கூடங்களில் எண்ணற்ற அறிஞர்கள் கூடி அறிவுசார்ந்த சர்ச்சைகளை நடத்தி அறிவைப் பரப்புவதற்கும், அறிவு முன்னேற்றம் ஏற்படவும் பெரும்பாடுபட்டனர்.

இத்தகைய முன்னேற்ற நடவடிக்கைகள் கூட இத்தாலிய இலக்கிய வளர்ச்சியின் தன்மையினைக் காட்டி நிற்கிறது. Florence நகரில் நிறுவப்பட்ட கல்விக்கூடம் தான் மிகவும் சிறப்புப்பெற்றது. இங்கு கிறிஸ்த்தவப் பெயர்களை மாற்றி அமைக்காது இங்கு குழுமிய அறிஞர்கள் உண்மையிலேயே பழைய கிரேக்க இலத்தின் இலக்கியங்களையும் அறிவு நூல்களையும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத் திறனாய்வு செய்தனர். அப்பொழுது மிகச்சிறந்த அறிஞர்களாகக் கருதப்பெற்ற Politian, Pico Ficino Alberti, Poggio, Landino, Pulci Franco Michel Angelo ஆகியோர் இக்கல்விக் கூட அங்கத்தவர்களாகவும் விளங்கி இலக்கிய வளர்ச்சியைத் துரிதப்படுத்தினார்கள். எனவே இலத்தின் கிரேக்க மொழிகள் இத்தாலியில் உயிர்பெற்று எழுவதற்கு அந்நாட்டு ஆட்சியாளர்கள் சிறந்த பணி புரிந்தார்கள். இவர்களில் முக்கியமானவர்களாக Cosimo - de - Medichi பாப்பரசர் Nicholasv என்பவர்கள் விளங்குகின்றனர். Medichi நூல்நிலையம் ஐரோப்பாவில் பெயர்பெற்று விளங்குகின்றது.

மேலும் இவர்களுடைய இத்தகைய இலக்கியமொழி துரிதமாக வளர்ச்சி வலுப்பெறுவதற்கு முக்கியகாரணம் அச்சியந்திரத்தின் வருகையும் கொன்ஸ்தாந்திநோபிள் பட்டணத்தை துருக்கியர் கைப்பற்றியமையுமாகும். இக்காலத்தில் நிகழ்ந்த அரசியல் உறவுகள் கடிதப்போக்குவரத்து மற்றும் சொற்பொழிவுகளும் இலத்தின் மொழியில் செய்யப்பெற்றன. அப்படிச் செய்வது நாகரிகமாகவும் கருதப்பட்டது. இப்பணிகளைச் செய்ய கிரேக்க இலத்தின் மொழி பயின்ற மனிதாபிமானிகள் நியமனம் செய்யப்பட்டனர். நாளடைவில் இம் மனிதாபிமான இயக்கம் வலுவடைந்தது. இது நாகரிகத்தின் சின்னமாக கருதப்பெற்றது. ஆரம்பத்தில் மனிதாபிமானிகளைப் பற்றி நல்ல எண்ணம் கொள்ளாத பாப்பரசர் பின்னர் இவர்களை மதிக்கத் தொடங்கினர்.

மேலும் இவர்களது சிந்தனைகள் நேரடியாகவோ நூல்கள் மூலமாகவோ சமூகத்துடன் தொடர்பு கொண்டது. இவற்றில் உடலியல், அழகியல், அறிவு சார்ந்த சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகிறது. மத்திய காலப்பகுதியில் Aristortile இக்கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அரிஸ்ரோட்டிலின் பல படைப்புக்கள் தற்காலக் கோட்பாடுகள் latin மொழிபெயர்ப்பின் மூலம் கிடைக்கப்பெற்றது. கிரேக்க இலக்கிய வடிவங்களில் முக்கியமானவையும், பிளேட்டோவின் படைப்புக்களும் மொழிபெயர்க்கப்படாமலிருந்தன. மறுமலர்ச்சிக் காலத்தில் தான் பிளேட்டோவின் படைப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டன. மறுமலர்ச்சிக் காலத்தில் Plato வினுடைய் குடியரசு, சட்டம், அரசியல்ஞானி என்னும் நூல்கள் முக்கியத்துவம் பெறுகிறது. New Platonism academy இக்காலத்தில்தான் நிறுவப்பட்டது.

அடுத்ததாக மறுமலர்ச்சிக் கால சிந்தனையாளர்களையும், அவர்களுடைய கருத்துக்களையும் அவர்களின் இலக்கியங்களையும் ஆராய்ந்தால் இவர்களில் முதன்மை பெறுபவர் Francesco Petrach என்பவரே ஆவார். இவர் Father of humanism என அழைக்கப்படுகிறார். இயற்கையின் அழகினையும், மூதாதையர்களின் அறிவினையும் வியந்து கவிதைகளையும், செய்யுள்களையும் படைத்தார். 1341 இல் உரோமாபுரியில் பிறந்த கவிஞன் என்ற பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். உரோமானிய அம்சங்களை பெருமைப்படுத்தும் வகையில் Africa, Lives of liustrious men ஆகிய படைப்புக்களைச் செய்தார். இவர் ஓர் புறத்தில் ஆன்மீகத்திற்கும் மறுபுறத்தில் மனிதவாதத்திற்கும் உரியவர் ஆவார். இவர் சிறந்தசம்பாசனைகளையும், கவிதைகளையும் latin மொழியிலே எழுதினார். தமது சீடர்கள் புராதன இலக்கியங்களைக் கற்பதில் பெரும்பங்காற்றினார். மனிதவாத சிந்தனையைத் தூண்டியவர்களில் இவர் முக்கியமானவர். இடைக்காலதிற்கும். மறுமலர்ச்சிக்காலத்திற்கும் இடைப்பட்டவரானபடியால் இவரின் ஆக்கங்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தன. இவர் சமயத்திற்கு எதிரான தன்மைகொண்டவர் அல்லர்.

Franeesco Petrachஐ அடுத்துவந்தவர் Giovanni Boccacio ஆவர். இவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலிய மனித சிந்தனைவாதிகளில் ஒருவர் ஆவார். இவர் Petrarch போலவே புராதன பாரம்பரியங்களில் அதிக ஈடு பாடுடையவர். இத்தாலிய இலக்கியத் துறையினை வடிவமைத்தவர் இவர். உலகி யல் வாழ்வில் இன்பங்களை மிக்க ஆர்வத் துடனும், தெளிவுடனும் வெளிப்படுத்தி னார். Decameran என இவரால் எழுதப் பட்ட படைப்பானது பல கதைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. அது பிற்பட்ட நாவல் எழுத்தாளர்களுக்கும் திரைப்பட இயக்குனர்களுக்கும் முன் மாதிரியாக அமைந்துள்ளது என்பர். புராதன வரலாற்றாசிரியரான Jacitus என்பவருடைய படைப்புகளைத் தேடிப் பெற்று அவற்றை புதிய சந்ததியினருக்கு வழங்கினார். இதைப்போன்றே பல்வேறு புராதன சுவடிகளையும் தேடிப்பெற்றுப் பாதுகாத்தார். Petrarch போலவே "On the Geneology of Greatmen, "On famous women" ஆகிய இலக்கியப் படைப்புக்களையும் செய்தார்.

14ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15ம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதி யிலும் 2 முக்கிய மனிதவாதிகள் மனித வாத சிந்தனைகளை வளப்படுத்தினர். Giovanni Gonveasini Coiuccio Salutati இவர்களுள்Salutati30வருடங்கள் Floreexc நகரின் சிக்நோரியாவில் வேந்தராகக் கடமையாற்றினார். இவர் அரசியலை யும் பாரம்பரிய கல்வியையும் இணைக் கின்றவராக விளங்கினார். இவர் கிழக் குப் பேரரசில் கிரேக்க மொழியில் பாண் டித்தியம் பெற்ற Maunuel Chrysolorous என்பவரை அழைத்துவந்து புளோரன்சில் கிரேக்கம் கற்கும்படி செய்தார். 1397இல் Chrysoloraus புளோரன்சில் கிரேக்கக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார். இக்கால மனிதவாதத்தில் அரசியல் அபிலாசைகள், அரசியல் உணர் வுகள், அரசியலில் பங்கேற்றல் ஆகிய விட யங்கள் முதன்மை பெற்றிருத்தல் என்ப தோடு கிரேக்கத்தை அறியாது போயின் அவர்கள் தமது கல்வியை பூர்த்தி செய் யாதவர்கள் என்ற நிலையும் காணப் பட்டது. அரசியல் உணர்வின் வெளிப் பாடாக Civichumanism ஏற்பட்டிருந்தது. அதாவது இதன்படி மக்கள் சிறந்த பாரம்பரிய இலக்கியங்களை வழிகாட்டி களாகக் கொண்டு அரசியலில் ஈடுபட வேண்டும் எனக் கருதினர்.

இத்தாலிய சிந்தனைவாதிகளில் Machiavelli முக்கியமான ஒருவர். இவர் Florerxe நகரத்தின் ஆட்சியாளராகவும், இராச்சியத் தூதுவராகவும் பணியாற்றி நல்ல அனுபவம் பெற்றிருந்தார். இவர் சிறந்த இலக்கியகர்த்தாவாகவும் அரசியல் சித்தாந்தவாதியாகவும் விளங்கினார். இவர் தான் பெற்ற அனுபவங்களினூடாக "The Prince" என்ற நூலை எழுதினார். ஒரு குறிக்கோளைப்பெற அரசு எந்த வழி யையும் பின்பற்றலாம் அரசின் இறுதிப் பயனுக்கும், அறநெறிக்கும் தொடர் பில்லை, என்று கூறுகிறார். மற்றும் History of Florence எனும் நூலையும் எழுதினார். இதில் உரோமப் பேரரசின் பெருமையையும் காட்ட முற்பட்டார். அவருடைய அரசியல் கோட்பாடுகள் அக்கால அரசாங்கங்களில் அதிக செல் வாக்குப் பெற்றிருந்தன. மற்றும் Gucci--ardini என்பவரும் வரலாற்று நூல்களை, எழுதியுள்ளார். The Florence history என்ற நூலை எழுதியுள்ளார். மேலும் மனிதவாத சிந்தனையாளரில் Erasmas என்பவரும் அதிக முக்கியத்துவம் பெறு கிறார். இவர் Prince of Humanism என அழைக்கப்படுகிறார். இத்தாலியர்களை மனிதாபிமான வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட கிரேக்க உரோமானிய விக்கிரக ஆராதனையில் தோன்றிய ஆர்வம் மற் றும் கடவுளைவழிபட அப்பொழுது பின் பற்றப்பட்ட வெளித்தோற்ற முறை களும், பண்டிகைகளும் திருவிழாக்களும், மற்றும் பல சம்பிரதாயங்களும், பல மகான்களின் கல்லறைகளுக்கும் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கும் தீர்த்த யாத் திரை செல்லுதல் போன்ற பழக்கவழக் கங்களைப் பின்பற்றுவோர் கிறிஸ்தவ மதத்திற்கு உண்மையான எதிரிகள் என்று அவர் கருதினார். அன்பு அமைதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் ஆகிய பண்புகளைத்தவிர மற்ற வெளித்தோற்றங்களில் கிடைக்கும் பக்தி. உண்மையானதாகாது என்று அவர் பிரச்சாரம் செய்தார். இவற்றையெல்லாம் கண்டித்து "The Prais of Folly" என்ற நூலை எழுதினார்.

மறுமலர்ச்சிக்கால சிந்தனை வளர்ச்சியின் விளைவாக தோற்றம் பெற்றனவாகவே கலைகளும் விளங்குகின்றன. இந்த வகையில் கலைகளில் சிறப்பாக கட்டிட சிற்ப ஓவியக்கலைகள் சிந்தனையின் விளைவாக எழுச்சி பெற்றன. மத்திய காலத்தில் கலை அம்சங்கள் யாவுமே கிறிஸ்தவ சமய திருச்சபைகளின் கட்டுப்பாட்டினுள் காணப்பட்டன. இதனால் கலைகள் சமயச்சார்பு உடையனவாகவும் தனிமனித ஆற்றலை வெளியே கொண்டுவர முடியாதனவாகவும் காணப்பட்டன. கலைஞர்களின் சுயாதீன படைப்பு உருவாக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தன. ஆயினும் இந்நிலை மறுமலர்ச்சிக்காக இத்தாலியில் சமயத்துறை சார்ந்த திருச்சபைகளின் தன்மை ஓரளவு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கலைஞர்கள் சுதந்திரமாக செயற்படத் தொடங்கினர். இவர்களுடைய படைப்புக்கள் எழுச்சி பெற்ற சிந்தனை வளர்ச்சி காரணமாக மானிடவாதம் தனிமனித வாதம் என்பன கலந்தே தோற்றுவிக்கப் பட்டன.

கலைவளர்ச்சியில் சித்திரக்கலைக்கு பரந்தளவில் ஏற்றம் புரிந்தவர்களாக Aldus Manutius, Botticelli, Leanado davinci, Raphael Michael angelo ஆகியவர்கள் விளங்கினர். இவர்களில் Lianado Davinci (1452-1519) உடைய "மொனாலிசா" இறுதி "இராப்போசனம்" ஆகிய ஓவியங்கள் உலகப் புகழ்பெற்ற கலைப் படைப்பாகும்.

சிற்பக்கலையில் கூட ஒரு மறுமலர்ச்சியினை இக்காலக் கலைப்படைப்புக்களிலிருந்து காணமுடிகிறது. இக்காலக் கலைஞர்கள் இயற்கையை அப்படியே தம் கலைப்படைப்புக்களில் கொண்டுவந்தனர். அத்துடன் வர்த்தகக் குடும்பங்களில் இக்காலக் கலைப்படைப்புக்களுககு ஆதரவு வழங்கியமையால் அவர்களின் விருப்பங்களையும் பூர்த்திசெய்யும் வகையில் இக்கலை ஓவிய சிற்ப உருவங்கள் படைக்கப்பட்டன. இச்சிற்பங்களில் மனித அளவு மனித உடற்கூற்றியல் பண்புகள் அளவீடுகள் என்பவற்றை அனுசரித்தமை சிறப்பாகக் காணமுடிகிறது. கட்டிடத்துறையில் சிறப்பாக கிரேக்க உரோம கட்டிடக்கலைகளில் முறைமைகளைத் தழுவியதாகக் காணப்படுகிறது. இவை மாளிகைகளாக, வதிவிடங்களாக பொதுக் கட்டிடங்களாக அமைக்கப்பட்டதுடன் இடைக்கால கோதிக்கட்டிடக் கலை முறை அழிக்கப்பட்டு கிரேக்க உரோம கட்டிட அமைப்புச் சார்ந்தவகையில் கூரைகளைக்கொண்ட சௌகரியமான மாளிகைகள் இங்கு அமைக்கப்பட்டன. இந்தவகையில் சிற்ப, சித்திர கட்டிடக்கலைகள் புதிய மலர்ச்சியைப் பெற்று வளர்ச்சி அடைந்தமைக்கு காரணமாக அமைவது இத்தாலியரின் சிந்தனை வளர்ச்சியே எனலாம்.

மேலும் இத்தாலியில் எழுச்சி பெற்ற வர்த்தகக் குடும்பங்களின் காரணமாக பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டமையும், அதனைத்தொடர்ந்து நீண்ட ஓய்வு மக்களுக்கு கிடைத்தமையும் கலைஞர்கள் சிந்தனைவாதிகளை சிந்திக்கச் செய்து கலை, அறிவு, சிந்தனை சார்ந்த கண்டுபிடிப்புக்கள் என்பன ஏற்பட ஏதுவாக அமைந்தன. இவ்வகையிலே தொகுத்து நோக்குமிடத்து மறுமலர்ச்சிக்கால இத்தாலியில் எழுச்சிபெற்ற சிந்தனைகள் இலக்கியங்கள் புதிய கண்டுபிடிப்புக்கள் ஏற்படவும், அவற்றின் வழியே புதிய கலைப்படைப்புக்கள் அறிவியற் சிந்தனைகளின் காரணமாக சுதந்திரத்துடன் வளர்ச்சியும் எழுச்சியும் அடைந்துகொள்ளவும் வழிசெய்தது, அவற்றுடன் கலைகள் தனிமனிதவாதம், மானிடவாதம் சார்ந்த புதிய சிந்தனைகளின் தோற்றத்துடன் பரிணமித்ததை அறிந்துகொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. இவை அனைத்தும் சார்ந்து மறுமலர்ச்சிக்கால மனிதன் என அக்கால மனிதனை இனங்காட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

ஐரோப்பிய வரலாறு
(A D 395 – 1500)
T. V. சொக்கப்பா
ஆண்டு 1971

ஐரோப்பிய வரலாறு
(A D 1500 – இக்காலம்வரை)
மு. ஆரோக்கியசாமி
ஆண்டு 1968

ஐரோப்பியவரலாறு
N. K. இராஜகோபால்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
1971

□□

அறியாமையைக் காட்டிலும் இழிவான
அடிமைத்தனம் வேறு கிடையாது.

— இங்கர்சால்

★

நமது உள்ளம் நங்கூரம் பாய்ச்சிய
கப்பல் போல அமைதியுடன் இருக்கவேண்டும்.

— கௌதம புத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் தேசிய இயக்கத்தில் டாக்டர் சுன்யாட்சன்

ப. அபர்ணா
வரலாறு, சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

சீனா நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட பெரியநாடு. இது தன்னளவில் பெருமை மிக்கதாகவும் சுதந்திரம் மிக்கதாகவும் இருந்து வந்தது. மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகள் பல சீனாவை தம்முடைய ஆதிக்கத்திற்குள் கொண்டுவரவிரும்பின. போர்த்துக்கேயர். பிரித்தானியர், பிரான்சியர். ஜேர்மனியர், அமெரிக்கர் ஆகியோர் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால். யப்பானைப் போன்று சீனாவும் மிக ஆரம்பகாலத்திலிருந்தே அன்னிய. இராஜதந்திர வர்த்தக உறவுகளை வெறுத்து வந்தது. சீனா தான் ஒரு நாகரிகம் அடைந்த நாடு என்ற எண்ணமும் சுயநிறைவு பெற்ற நாடு என்ற திடசிந்தனையும் கொண்டு செயற்பட்டது. சீனாவிற்குள் நுழைந்த கத்தோலிக்க குருமார்கள் கிறிஸ்தவ மதத்தினையும் மேற்கத்தைய விஞ்ஞானத்தையும் சீனர்களுக்குப் புகட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. காலப்போக்கில் மதகுருமாரின் நடவடிக்கைகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என சீனர்கள் புரிந்துகொண்டனர். இதனால் சீனர்கள் காலப்போக்கில் மேற்கத்தைய நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் சீனாவில் காலப் போக்கில் பல்வேறு எதிர்ப்பு இயக்கங்கள் தோற்றம் பெறலாயின. 1897இன் பின்னர் இவ் எதிர்ப்பு இயக்கங்கள் தேசிய இயக்கமாக எழுச்சி பெற்றதுடன் "சீனநாட்டை பாதுகாத்தல்", "அன்னியரை அகற்றுதல்" என்ற கோஷங்கள் முக்கியம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற பல கிளர்ச்சிகள் நாட்டில் உள்ளூர் அரசிற்கு எதிரானதாகவும் அன்னியருக்கு எதிரானதாகவும் அமைந்தது.

இவ்வாறு சீனாவில் தோற்றம் பெற்ற தேசிய இயக்கத்தினை 'மறுமலர்ச்சி இயக்கம்' என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதன் பின்னர் சீனர்கள் புதிய சமுதாயம் படைக்க உறுதிகொண்டனர். பழைய கருத்துக்களை மாற்றிப் புத்துயிர்பெற்ற சீனாவை உருவாக்க முற்பட்டனர். மேலைநாட்டு முறைகளை சீனப்பண்புடன் இணைத்து அல்லது வேண்டிய மாற்றங்களுடன் ஒரு புதிய அரசியல் தத்துவத்தை உருவாக்க வேண்டுமென முனைந்தனர். இவை யாவற்றுக்கும் கல்வியறிவு அவசியமானது என்பதனை உணர்ந்து கல்வியமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். இதனால் மக்கள் கல்வியறிவு பெற்றதுடன் புதிய சமுதாயம் தோற்றம் பெறவும் தேசிய இயக்கங்கள் காரணமாக அமைந்தது. இத்தேசிய இயக்கத்தின் அடிப்படை நோக்கம் சீன மக்களிடையே உறங்கிக் கிடந்த தேசிய உணர்வைத் தட்டி யெழுப்பி சீனாவின் ஒருமைப்பாட்டிற்கு வழிகோலுவதாகும். அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடன் இதுவரை செய்திருந்த முறையற்ற, நேர்மையற்ற ஒப்பந்தங்களை நீக்குவதும் அவர்களின் ஆவலாயிருந்தது. இளந் தலைமுறையினரின் இப் புதிய கொள்கை ஒரு பண்பாட்டுப் புரட்சியாக உருவெடுத்தது. இப்புரட்சியைத் தோற்றுவித்தவர்களுள் டாக்டர் சுன்யாட்சன் முக்கிய இடம் பெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் சுன்யாட்சன் 1866ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி கன்ரன் நகரத்திற்கு அண்மையிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார். இவர் மேற்கத்தைய பண்பாட்டு வளர்ச்சியிலும் கிறிஸ்தவ மதத்திலும், மேற்கத்தைய அறிவுத் துறையிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். 1885இல் சீன பிரான்சியப் போரில் சீனா பெற்றுக்கொண்ட தோல்வியானது இவரை மிகவும் பாதித்தது. அத்துடன் இளம் வயதிலே இவர் மஞ்சு அரசாங்கத்தினை தூக்கி எறிய வேண்டும் என விரும்பினார். இவரது அன்னியர் ஆட்சிக்கு எதிரான செயற்பாடே பின்னர் ஏற்பட்ட புரட்சிக்கு அடியிட்டுக் கொடுத்தது என்றால் மிகையில்லை. சுன்யாட்சன் மேற்கத்தைய கல்வி கற்று வைத்தியராய்பணி ஏற்றார். இக்காலத்திலே மஞ்சு அரசுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுவந்தார். 1895 இல் சீனாவைச் சீர்திருத்துவதற்கான ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார். அதன்பின் தன் நோக்கங்களை நிறைவேற்றும் நோக்கத்துடன் இரகசிய புரட்சிகர அமைப்புகளை நிறுவினார். 1895 இல் சீன 'மறுவாழ்வுக்கழகம்' [China Revival Society] என்ற இரகசிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ் அமைப்பு ஆரம்பத்தில் கன்ரென் நகரில் கிளர்ச்சி ஒன்றினை ஏற்படுத்த முனைந்தது. ஆயினும் அந்நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்தது. இப்புரட்சியில் சுன்யாட்சன் ஆதரவாளர்கள் பலர் உயிர் இழந்தனர். இதனால் இவர் ஜப்பான், தென்கிழக்காசிய நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்த சீன மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

1905இல் ஜப்பான் சென்றிருந்த சுன்யாட்சன் அங்கு புதியதோர் அரசியல் இயக்கத்தினை ஆரம்பித்தார் "The Combined League Society" இவ் அமைப்பில் 600இற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கொண்டனர். இவர் ஒருசிறந்த அரசியல் ஞானிக்குரிய தகைமைகளைக் கொண்ட ஒரு தலைவராக விளங்கினார். சிறந்த ஆளுமையும் நேர்மையும் இணைந்து செயற்படும் மனப்பான்மையும், புரட்சிகர உணர்வும் இவையாவற்றுக்கும் மேலாக விசுவாச உணர்வும் அவரிடம் சிறப்புப்பெற்றிருந்த பண்புகளாகும்.

சுன்யாட்சன் அறு பிரதான குறிக்கோள்களைக் கொண்டிருந்தார் அவை,

i) மஞ்சுவம்ச ஆட்சி முறையைத் தூக்கி எறிதல்,
ii) சீனாவில் குடியரசு ஆட்சிமுறையை நிறுவுதல்
iii) உலக சமாதானத்தினை மேம்படுத்தல்
iv) சீன நிலப்பகுதிகளை தேசியமயமாக்குதல்
v) சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே சிறந்த நல்லுறவினைப் பேணுதல்.
vi) அன்னிய வல்லரசுகளின் ஆதரவினை பெற்றுக்கொள்ளுதல்.

என்பனவாகும்.

சுன்யாட்சன் அவர்களின் மேற்படி இலட்சியங்கள் பொதுமைத்தன்மை கொண்டவையாகவும் வரையறுக்கப்படாதவையாகவும் இருந்தன. அவரைப் பொறுத்தவரையில் சீனாவை நவீனமயப்படுத்தப்பட்ட ஒரு நாடாக உருவாக்குவதற்குத் தடையாகவுள்ள பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு இதுவாக அனும் மஞ்சு வம்சத்தினை தூக்கி எறிந்து குடியரசு ஒன்றினை உருவாக்குவதைத் திட்டவட்டமான இலட்சியமாகக் கொண்டிருந்தார். இவர் அத்தகைய செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்குரிய வகையில் கிளர்ச்சிகளை ஏற்படுத்தினார்.

சுன்யாட்சனின் வழிகாட்டலில் 1911இல் சீன மறுவாழ்வுக் கழகம் அன்னியரின் தலையீட்டையும், அரசின் திறமையற்ற எதேச்சதிகாரப் போக்கையும் கண்டித்துக்

குரல் எழுப்பியது. அது மட்டுமன்றி இவர் அமெரிக்க முறையில் அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். இக்காலத்தில் இவர் மேற் கொண்ட கிளர்ச்சிகளுக்கு வெளிநாட்ட வர் உதவிகள் பெறப்பட்டன. முதல் கிளர்ச்சியின்போது ஜப்பான் உதவி வழங் குவதாக இருந்தது. ஆயினும் கிளர்ச்சி யின்போது ஜப்பானிய அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அவ்வுதவி தடைப்பட்டது. அக்கிளர்ச்சியும் தோல்வி யில் முடிவடைந்தது. இதன் பின்னர் இந்தோசீனப் பகுதியில் இருந்த பிரஞ்சுக் காரரின் உதவியுடன் பல கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அவை தோல்வியில் முடிவடைந்தது.

ஆனால் இக்காலத்தில் மேலைநாட் டுக்கல்வியைப் பெற்றவர்கள் மேலை நாட்டு அரசியல் முறைகளையும், அவர் களின் இராணுவமுறைகளையும் கற்று அவற்றை சீனாவிற்குள் புகுத்த விரும்பி னார்கள். அந்தவகையில் சான் கை செக் [Chiany – kai - Shek] என்பவர் முக்கிய இடத்தை பெறுகின்றார். இக்காலத்தில் சீனாவில் தேசிய இயக்கங்கள் அரசியல் அமைப்புச் சட்டங்களை கோரி எழுச்சி பெற்றன. இவைகளுள் சிறப்புப்பெற்றது. டாக்டர் சுன்யாட்சன் ஏற்படுத்திய சீன மறுவாழ்வுக் கழகமே இக்கழகம் அன்னியரின் தலையீட்டையும் அரசின் திறமையற்ற எதேச்சதி காரப் போக்கையும் கண்டித்தது. அமெரிக்க முறையில் அமைந்த அரசிய லமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என் றும் கூறியது. இக்கழகம் 1912இன் பின் தேசிய மக்கள் கட்சி [Kuo - min – Tung] என்றழைக்கப்பட்டது. இக்கழகத்தில் ஏராளமான சீன இளைஞர்கள் சேர்ந் தார்கள். இவர்களுக்கு சீனாவின் அரசி யல், சமுதாயக் குறைபாடுகளையும் உணர்த்தி வழிப்படுத்தும் ஆசானாக, அரசியல் மேதையாக டாக்டர் சுன்யாட் சன் விளங்கினார். இதுபோன்ற வேறு பல இரகசியகழகங்கள் சீனாவில் தோன்றி வளர்ந்து மஞ்சு குலத்தினை அழிக்கும் பணியில் ஈடுபட்டன. இக்கழகத்தில் மேலைநாட்டில் கல்வி பெற்ற மாணவர் களும் சேர்ந்தனர், நாட்டுப்பற்று மிக்க, எழுச்சி மிக்க இளைஞர் சமுதாயம் சீனா வின் பெருமையை மீண்டும் நிலைநிறுத் தும் நோக்கத்துடன் வீறுகொண்டெழுந் தது. இவர்களுடைய பாசறை இளஞ்சீனர் [Young China] என்றழைக்கப்பட்டது இவர்களுடைய முழக்கம் "சீனா சீனர் களுக்கே" என்பதாகும்.

1911இல் புரட்சியின் விளைவால் தென் சீனர்கள் நாங்கிங்கில் கூடி ஒரு தற்காலிகச் சீனக்குடியரசை நிறுவினர். இக்குடியரசின் தலைவராக டாக்டர் சுன்யாட்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1912 ஜனவரி 1ஆம் திகதி மேற்கத்தைய முறையில் தென்சீனக்குடியரசின் தலைவ ராக பதவியேற்றார்.

டாக்டர் சுன்யாட்சன் தற்காலிக குடி யரசுத்தலைவராக பதவியேற்றதுடன் பீகிங் அரசின் தலைமை அமைச்சராகப் பதவி யேற்றிருந்த யுவான் ஷி கேயின் தலைமை யிலிருந்த சீன அரசும் தென் மாநில புரட்சிக்குடியசும் போகிய பணவசதியில் லாமல் புரட்சியைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலையிலிருந்தன. மஞ்சு அரச குலம் பதவியில் இருந்து நீக்கப்படவேண்டும் என்றும் சீனாவில் குடியரசுமுறை ஏற்படுத்தப்படவேண்டு மென்றும் டாக்டர் சுன்யாட்சன் வற்புறுத்தினார். இவ்வாறு சீனாவில் குடியரசு ஏற்படுத் தப்படுமாயின் தாம் குடியரசு தலைவர் பதவியை யுவான் ஷி கேயிக்கு விட்டுக் கொடுப்பதாகவும் டாக்டர் சுன்யாட்சன் உறுதியளித்தார். இவ்வாக்குறுதியின் அடிப்படையில் இருசாராருக்கும் இடை யில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தம் ஏற்படுவதற்கு மற்று மொரு முக்கிய காரணத்தையும் குறிப் பிட வேண்டும். சீனா இரண்டாகப்பிளவு பட்டு புரட்சிப் புயலில் சிக்கித்தவித்த போது ருஷியா, ஜப்பான் என்பன சீனா வின் அரசியலில் தலையிட முற்பட்டனர். ருஷ்யா மங்கோலியாவையும், மஞ்சூரி யாவின் வடபகுதியையும் கவர்ந்து கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளத்திட்டமிட்டது. ஜப்பான் மீண்டும் சீனாவைத்தாக்கிப் பயன் பெற முயன்றது. இவ்வாறு ஆதிக்கவெறி கொண்ட அண்டைநாடுகளின் பிடியிலிருந்து சீனாவைக்காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தினாலும் இச்சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் சுன்யாட்சன் தான் கொடுத்த உறுதிமொழிக்கமைய பதவி விலகினார். யுவான் ஷி கேயிடம் அதிகாரம் அளிக்கப்பட்டது. தென் மாநிலத்தவர்களும், ஒருமைப்பாடடைந்த சீனக்குடியரசைத் தோற்றுவிக்க யுவான்-ஷி-கேயைத் தங்கள் குடியரசுத்தலைவராக ஏற்றுக்கொண்டனர். 1912 பெப்ரவரி 12இல் சீனப் பேரரசர் பதவிவிலக 1912 பெப்ரவரி 13இல் டாக்டர் சுன்யாட்சன் பதவி விலகினார். பெப்ரவரி 14இல் சீனக்குடியரசின் முதல் தலைவராக யுவான் ஷி கே பதவியேற்றார். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக கன்பூசியக் கொள்கைகளில் அடிப்படையில் ஆண்டுவந்த சீனாவின் விண்ணார்ந்த பேரரசு முடிவுற்று சீனா வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கலாயிற்று.

1911இல்நடந்தசீனப்புரட்சிக்குமுன்பு டாக்டர் சுன்யாட்சன் ஏற்படுத்திய சீன மறுவாழ்வுக்கழகம்" என்ற இரகசிய இயக்கப்புரட்சிக்குப் பின்னர் 1912ஆம் ஆண்டு தேசிய மக்கள் கட்சி எனப்புதுப் பெயர் பெற்றது. 1913இல் நடந்த கோடைப் புரட்சியின் காரணமாக யுவான் ஷி கேயால் தடைசெய்யப்பட்டு டாக்டர் சுன்யாட்சன் உட்பட கோமிண்டாங் கட்சியின் தலைவர்கள் அனைவரும் தப்பித்து ஓடினர். இதேகாலத்தில் சீனாவில் இளம் மாணவர் இயக்கத்தின் காரணமாகபெரும் குழப்பமும், கலகங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது டாக்டர் சுன்யாட்சன் ஜப்பானிலிருந்து சீனாவிற்குள் வந்தார். அக்காலத்தில் திடீரென்று யுவான் ஷி கே இறந்தார். இதனால் யுவான் ஷி கேயினால் கலைக்கப்பட்ட அரசுப்பேரவையின் சுன்யாட்சன் மீண்டும் சேர்ந்து கொண்டார். 1916இல் ஒருஅரசுப் பேரவையை சுன்யாட்சன் அமைக்க முற்பட்டார். ஆயினும் கன்ரன் பிரதேசத்தில் இருந்த போர்ப்பிரபுக்களின் நடவடிக்கைகள் காரணமாக டாக்டர் சுன்யாட்சன் பதவி விலகினார். ஆயினும் அவர் 1923இல் இருந்து 1925 வரை மீண்டும் தலைவராக இருந்தார்.

1920இல் இவரால் சீனகொமினியூஸ் கட்சி (பொது உடைமைக் கட்சி) அமைக்கப்பட்டது இவர் தென்சீனாவில் தனது செல்வாக்கை மீண்டும் நிறுவ முற்பட்டார். இம்முயற்சி சீனாவின் பண்பாட்டுப் புரட்சிக்கு காரணமாய் இருந்தது. இவர் மாணவர்புரட்சித் தலைவர்களை தம்பால் ஈர்த்து அவர்களை கட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார். 1921இல் கன்ரன் நகரில் தமது போட்டி அரசைத் ஆரம்பித்தார். தென் மாநில போர்ப்பிரபுகளின் ஆதரவைப் பெற்றார். இக்காலத்தில் தமது கட்சியிலிருந்து குறைபாடுகளை நீக்கி புதிய கொள்கைகளையும் செயல்திட்டங்களையும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டார்.

அத்துடன் போர்ப்பிரபுக்களின் கட்டுப்பாடற்ற, தேவையற்ற போர்களை நிறுத்தி வலிமையான தேசியமைய அரசை நிறுவி சீனாவை அழிவிலிருந்து காப்பாற்றும் பொருட்டு மேலைநாடுகளின் உதவியை இவர் நாடினார். சுயநலத்தினால் சீனாவை பங்கிடநினைத்த மேலை நாடுகள் சுன்யாட்சினின் உயர்ந்த இலட்சியத்தினை அலட்சியப்படுத்தின. சார் மன்னர்களின் கொடுங்கோலாட்சியை மக்கள் புரட்சியால் அழித்துப் பெருமையுற்ற ருஷியா மட்டும் சுன்யாட்சனுக்கு உதவ முன்வந்தது. ருஷியப் பிரதிநிதி அப்பிரகாம் 1922இல் சுன்யாட்சனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். சீனாவை சீர்திருத்துவதற்கு பொதுவுடமைமுறை பயன்படாது என ஒப்புக்கொண்டு அப்பிரகாம் கோமிண்டாங் கட்சிக்கு உதவ முன்வந்தார். சீனாவில் கொமினியூஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து சீனாவில் கோமிண்டாங் என்ற தேசிய கட்சி வளர்ச்சியடைந்தது. இக்கட்சியில் இரண்டு முக்கிய நோக்கங்களாக,

(I) ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம்.

(II) நிலமானிய இராணுவ ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டங்கள்

ஆகியவை அமைந்தன.

1921இல் சீனாவில் ஏற்படுத்தப்பட்ட சீன பொதுவுடமைக் கட்சியின் அங்கத்தவர்கள் கோமிண்டாங் கட்சியிலும் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இக்கட்சியில் படைகளை ஏற்படுத்தவும். பயிற்சி அளிக்கவும் வாம்புலா என்ற இடத்தில் இராணுவக்கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன் பொறுப்பு வாய்ந்த படையதிகாரி சியாங் கை சேக் நியமிக்கப்பட்டார். சுன்யாட்சன் கோமிண்டாங் கட்சியின் முதல் மகாநாட்டை 1924இல் கூட்டினார். இதில் இக்கட்சியின் கொள்கைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

I) மக்களின் மூன்று கொள்கைகள்

II) தேசிய புனரமைப்பின் அடிப்படைகள்.

III) தமது இறுதி குறிப்புக்கள்.

இவற்றுள் சுன்யாட்சனின் மக்களின் கொள்கைகள் முக்கிய இடம் பெறுகின்றது அவை மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது அவை.

I) தேசியம் நாட்டுப் பற்று

II) மக்களாட்சி

III) மக்கள் நலன் என்பனவாகும்.

சுன்யாட்சனின் இக்கொள்கை தான் கோமிண்டாங் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும்.

சுன்யாட்சனின் மூன்று கொள்கைகளுள் முதலாவது தேசியம் அல்லது நாட்டுப்பற்று ஆகும். அதாவது சீனாவின் மஞ்சுக்கள், சீனர்கள், மங்கோலியர்கள், திபெத்தியர்கள், போன்ற பலவகை இனத்தினர் கலந்து வாழ்கின்றனர். இவ்வினத்தினர் அனைவரும் இணைந்து வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் இவர்களை இணைந்து 'ஒரு நாட்டு மக்கள்' என்ற எண்ணத்தை ஏற்படுத்துதல் அல்லது இவர்களிடையே இருக்கும் இனப்பிரிவினைகளை ஒழித்து அனைவரும் சீன மக்களே என்ற எண்ணத்தை உருவாக்குவதேயாகும். சீனாவின் இந்தக்கொள்கை பேராதிக்கக் கொள்கையன்று. டாக்டர் சுன்யாட்சன் ஆரம்பத்தில் மேலைநாட்டு முறை தேசிய கருத்துக்களில் மிகுந்த ஆர்வம்கொண்டிருந்த போதும் பிற்காலத்தில் மேலை நாட்டுத் தேசியமுறையை வெறுத்துச் சீனாவின் பாரம்பரிய முறையடிப்படையில் தான் சீன தேசியம் உருவாக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். என வரலாற்றாசிரியர்கள் கருத்துகளை தெரிவித்துள்ளார்கள்.

இவரது இரண்டாவது கொள்கை மக்களாட்சி ஆகும். இதில் டாக்டர் சுன்யாட்சன் வரம்புக்குட்பட்ட முடியரசையும், வல்லாட்சியையும் மறுத்தார். மேலை நாட்டு குடியாட்சிப் பண்புகள் ஸ்விட்சர்லாந்து நாட்டு அரசியல் அமைப்பிலுள்ள நேரடி மக்களாட்சி முறைகள், ருஷியா அரசியல் முறை, சீனாவின் பழங்காலத் தேர்வுமுறை ஆகிய இவைகளினடிப்படையில் சீன அரசு அமைய வேண்டும் என்று கருதினார். மக்களை நல்வழி நடத்தத் தலைவர்கள், தலைவர்களின் கொள்கைகளை மக்களுக்கு அறிவுறுத்தும் இடைநிலையர்கள், அத்தலைமையை ஏற்கவோ மறுக்கவோ உரிமை பெற்ற மக்கள் என மக்களை மூன்று வகையினராகவும் சுன்யாட்சன் வகைப்படுத்துகின்றார். அரசானது சட்டமன்றம், செயல்துறை மன்றம், நீதிமன்றம் என்ற மூன்று மேலைநாட்டு அமைப்புகளுடன் தேர்வுமுறை, கட்டுப்பாடுகள் என்ற இரண்டு பழஞ்சீன முறைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார். அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வலியுறுத்திய மக்களாட்சி பற்றி மூன்று கொள்கைகள் பின்பற்றப்பட்டன அவையாவன.

I) இராணுவ நடவடிக்கையில் சீனா வின் பல பகுதிகளையும் கைப்பற்றி ஒருமைப்படுத்தி ஆட்சி செய்தல்.

II) கோமின்ராங் கட்சியில் ஏதேச்சதிகார ஆட்சி முறையை ஏற்படுத்தி மக்கள் சுயாட்சி அரசை அமைப்பதற்கான பயிற்சி வழங்குதல்.

III) மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை உருவாக்குதல்.

என்பவையாகும்.

அடுத்து இவரது மூன்றாவது கொள்கை மக்கள் நலனாகும் இக்கொள்கையின் அடிப்படையில் சுன்யாட்சன் பொதுவுடைமை முறைகளை மறுத்தார். அத்துடன் இவர் தொழிலாளர் வேளாளர்களின் நல்வாழ்வு என்னும் அடிப்படையில் அரசின் கொள்கைகளை அமைக்க விரும்பினார். வரி விதிப்பு, நில உடைமை ஆகியவை அரசின் பொறுப்பிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் அனைவரும் பங்கும் பயனும் பெற அரசு உதவவேண்டுமென்று சுன்யாட்சன் வலியுறுத்தினார்.

டாக்டர் சுன்யாட்சன் இக்கொள்கைகளிவடிப்படையில் தமது கட்சியை உறுதிப்படுத்திய அதேநேரத்தில் சீனாவின் ஒற்றுமையைச் சமாதான முறையில் ஏற்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன் அடிப்படையில் 1928இல் அரசியல் திட்டம் ஒன்று டாக்டர் சுன்யாட்சனால் அமைக்கப்பட்டது. 1928 டிசம்பர் இறுதியில் மஞ்சூரியாவின் தலைநகரான முக்டன் நகரில் சீனாவின் தேசியக் கொடி வெற்றிகரமாக பறக்க விடப்பட்டது. தேசியவாதிகள் சீனா முழுவதையும் வென்று ஒருமைப்படுத்தினார்கள். இத்தேசியவாதிகளிற் டாக்டர் சுன்யாட்சன் சீனாவின் தேசிய இயக்கத்தின் தந்தையாகப் போற்றப்படுகின்றார்.

**உசாத்துணை நூல்கள்**


1. சீனா, ஜப்பான் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் வரலாறு. வ. இராஜாராம்

2. Nationailsm in Asia R. S. Chavan

3. நவீன சீனப்புரட்சியின் வரலாறு (1919 — 1936) சி. ஹோகான்.


கண்ணாடியைப் பார்த்துத் தன்னைத்தானே புகழ்ச்சி செய்து கொள்வதல்ல அழகு. அது அன்பின் வழியில் ஒழுகுவதில் தங்கியுள்ளது.

— கவிதாகூர்

# ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்

செல்வி வசந்தமலர் வல்லிபுரம்
*வரலாறு, சிறப்புக் கலை.*
*இறுதி வருடம்*
*யாழ். பல்கலைக்கழகம்.*

ஐரோப்பிய வரலாற்றிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சிகளுள் பிரஞ்சுப் புரட்சியும் ரஷ்யப் புரட்சியும் முக்கியமானவை. இந்த வகையிலே பிரஞ்சுப் புரட்சி உலகளாவிய ரீதியில் எத்தகைய முக்கியத்துவம் கொண்டதாக காணப்படுகிறதோ அதே போலவே 1917இல் ரஷ்யாவில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியானது உலக அரங்கிலே ரஷ்யாவை ஓர் முன்னணியில் திகழும் வல்லரசாக மாற்ற வழிவகுத்தது. எனவே 1917 இல் இப்புரட்சி ஆரம்பமான போதிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தப் புரட்சிக்கான சூழ்நிலை உருவாகத் தொடங்கி விட்டது. அதாவது ரஷ்யாவிலே ஆண்டாண்டு காலமாக நிலவிய அரசியல் பொருளாதார சமூக நிலமைகளால் பாதிப்புற்றிருந்த மக்களின் அதிருப்தியே இந்தப் புரட்சி வெடிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது. அந்த வகையிலே நீண்ட காலக் காரணங்களாக நாட்டில் அரசாண்ட மன்னர்களின் ஆட்சி சீரற்றமையும் அவர்களின் அதிகாரங்களும், மக்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக வைத்திருத்தல், அறிவற்ற சமுதாயத்தை வளர்த்தமை, 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில புத்திஜீவிகள் தோற்றமும் உரிமைக்காக குரல் கொடுத்தமையும் பிறநாட்டவர் இந்நாட்டில் கைத்தொழில் சாலைகளை அமைத்தமை போன்றவற்றால் காலாகாலமாக அதிருப்தியுற்றிருந்த மக்களிற்கு கி. பி. 1878 இல் நடந்த கிருமியப் போரும், கி. பி. 1904 இல் இடம்பெற்ற ஜப்பானுடனான போரும், மேலும் மக்களின் வாழ்க்கையைப் பாதித்தது. எனினும் கி. பி. 1914 இல் நடந்த உலகப்போர் என்பன கி. பி. 1917 இல் ரஷ்யப் புரட்சி வெடிக்க உடனடிக் காரணமாக இருந்தது.

ஐரோப்பிய வல்லரசுகளுள் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட நாடாக ரஷ்யா விளங்குகிறது. அதன் விஸ்தீரணத்தைப் பார்த்தால் பால்டிக் கடல் தொட்டு தூர கிழக்கில் பசுபிக் கரையோரம் வரையும் வடக்கிலே ஆட்டிக் சமுத்திரம் தொட்டு தெற்கிலே பால்கன் பிரதேசம் வரை அக்கால ஒட்டோமன் பேரரசின் வட எல்லை வரை ஆசியாவிலும், இந்தியா, ஆப்கானிஸ்தான் வரையும், தென்கிழக்கே சீன எல்லை வரையும் ரஷ்யா பரந்து காணப்பட்ட போதும், இந்நாடு ஏனைய ஐரோப்பிய நாடுகள் போல சிறந்ததாக விளங்காமைக்கு சீரற்ற மன்னர் ஆட்சியும் அவர்களின் அதிகாரங்களுமே முக்கிய காரணமாகக் கொள்ளலாம். எனவே ஆரம்பத்தில் ரஷ்யா ஸ்தாபிக்கப்பட்ட போது அதன் ஸ்தாபகராக "பூரி" என்பவர் இருந்தார். இவரைத் தொடர்ந்து இவரின் வழி வந்தவர்கள் அரசாட்சி செலுத்திய போது கி. பி. 16ஆம் நூற்றாண்டின் கடைசி 15, 20 வருட காலமாக ரஷ்யா அரசனில்லாத நாடாக இருந்த போது, நாட்டில் கொலை கொள்ளை, பஞ்சம் என்பன மலிந்து காணப்பட்டது. அவ்வேளை மக்களை நிர்வகிப்பதற்கு சிறந்த அரசன் இல்லாமையாலும் அவர்களின் நலன்கள் கவனிக்கப்படாத பட்சத்திலும் மக்கள் தம் வயிற்றுப் பசியை ஆற்றுவதற்கு வெளிநாடுகளை நோக்கி செல்லத் தொடங்கினர். இவ் வேளையில் சில பெரிய தனக்காரர்கள் ஒன்று சேர்ந்து மைக்கேல் ரோமனாவ் என்ற ஒரு சிறு பையனை

கி. பி. 1613இல் சிங்காசனம் ஏற்றினர். தொடர்ந்து வந்த 300 ஆண்டு காலமாக இந்த மன்னர் பரம்பரையில் வந்த மகா பீற்றர், கதறின், அலெக்சாண்டர், நிக் கோலஸ் என்ற சார் மன்னர்கள் ஆண்டனர். இவர்கள் அனைவரும் ரஷ்யாவில் இருந்து ஆட்சிசெய்த போதிலும் இவர்களில் எவருமே மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை விளங்கி, அவற்றைத் தீர்க்கும் மன்னர்களாவோ மக்களின் நலனில் அக்கறை கொண்டு மக்களுக்காக ஆட்சி செய்யும் ஜனநாயக ஆட்சியாளராகவோ இராது சர்வாதிகாரம் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். இவர்களில் மகாபீற்றர், கதறின், அலெக்சாண்டர் போன்றவர்கள் சில சீர்திருத்த நடவடிக்கைகளை செய்த போதும் அவை வெறும் கண்துடைப்பாகவே இருந்தன.

மேலும் இங்கு ஆட்சி செய்த சார் மன்னர்களின் ஆட்சி எவரையும் கேள்விக்கு இடமாக்க முடியாத வகையில் தெய்வீக உரிமை வழியில் ஆட்சியைப் பெற்றிருப்பதுடன், தான் விரும்பிய போதெல்லாம் தான் முன்பு இயற்றிய சட்டங்களை வாபஸ்பெற்று புதிய சட்டங்களை அமுலாக்கும் தன்மை கொண்டவர்களாக இருந்தனர் மற்றும் உயர் பதவிகளில் மக்களைவேலைக்கமர்த்த தெரிவு செய்யும் போது 1/3 பங்கு நிலப்பரப்பு கொண்டவர்களாக இருப்பவர்களையே தெரிவு செய்தனர், அவர்களே மன்னனுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் கொண்டவர்களாகவும் இருந்ததால் அவர்கள் மன்னனுக்கே முற்று முழுதாக ஆதரவு வழங்குவோராகவும் காணப்பட்டனர். இதனால் மக்களின் பிரச்சனைகள் முன்வைக்கப்படாதவையாகவும் தீர்க்கப்படாதவையாகவும் காணப்பட்டன. இவ்வாறான நிலையில் இவர்களின் சட்டதிட்டங்களுக்கு மீறி உரிமைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை மரண தண்டனைக்கு உட்படுத்தியோ அல்லது நாடு கடத்தப்பட்டோ அவர்கள் தண்டிக்கப்பட்டனர். இதனால் மக்கள் சார் மன்னர்கள் மீது அதிருப்தி கொண்டிருந்தமையால் மன்னனுக்கு எதிராக புரட்சி ஏற்படுத்துவதற்கு இது ஒரு காரணமாக கொள்ளப்படுகிறது. அதாவது மக்களின் நலனில் அக்கறையற்ற வலிமையும் திறமையும் இல்லாத எதேச்சதிகார அரசரும் அரசாங்கமும் 1917 இல் ஏற்பட்ட புரட்சிக்கு அடிப்படைக் காரணமாயின எனலாம்.

ரஷ்ய நாட்டை எடுத்துக் கொண்டால் பொதுவாக அது ஓர் விவசாயப் பொருளாதாரம் கொண்ட நாடாகவே 19ஆம் நூற்றாண்டு வரை காணப்பட்டது அந்தவகையில் 95% மான மக்கள் கிராமங்களிலேயே வாழ்ந்ததுடன் அவர்கள் தம் தொழிலாக விவசாயத்தையே மேற்கொண்டனர். இந்நிலையில் ரஷ்யாவின் அரச வம்சமான Romonov வம்சத்தவரின் ஆட்சியிலும் சில நிலச்சுவாந்தர்களுடைய கட்டுப்பாட்டுக்குள்ளுமே ரஷ்ய சமூகம் காணப்பட்டது. இவர்களே ரஷ்யாவில் உரிமை உள்ளவர்களாகவும், மற்றைய மக்களை உரிமை அற்ற அடிமைகளாகவும் நடத்தினர். நிலச் சொத்து அடிப்படையில் கூட அரசும் நிலப்பிரபுத்துவ வகுப்புமே மொத்த நிலப்பரப்பில் 2/3 பங்கு உரிமையுடையவராகவும் மிகுதி 1/3 பங்கு திருச்சபைக்கும் உயர் குலத்த வருக்கும் உயர் குடிப்பிரபுக்களுக்கும் சொந்தமாகவும் காணப்பட்டது. எனவே தன் நிலங்களில் வேலை செய்வதற்காக குழப்ப காலங்களில் வயிற்றுப் பிழைப்புக்காக நாட்டைவிட்டு வெளியே சென்றிருந்த ஏழை மக்களை கட்டாயப்படுத்தி நாட்டிற்கு அழைத்து வந்து தங்கள் நிலங்களை சாகுபடி செய்வித்தார்கள். இதனால் இவர்கள் எல்லோரும் நிலச்சுவாந்தர்களாகவும் மற்ற ஜனங்கள் இவர்களுக்கு தொண்டு செய்யும் அடிமைகளாகவும் மாறினார். அதாவது நிலத்தினை உழுது பயிரிடுபவர்களுக்கு அந்த நிலத்தின் மீது உரிமை இல்லாமல் இருந்ததுடன் அவர்களை அடிமைகளாக நடத்தியமையால் இதுவே காலப் போக்கில் ஆண்டான் அடிமைப் போராட்டமாக தோன்றிப் புரட்சிக்கு வழிவகுத்த காரணிகளில் ஒன்றாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர்கள் ஆட்சியாளர்களால் ஒடுக்கப்படுவதற்கு முக்கிய காரணம் இம்மக்கள் படிப்பறிவற்ற பாமர மக்களாக காணப்பட்டமையே. எனவே ரஷ்ய அறிவுத்துறையை நோக்கினால் மேற்கு ஐரோப்பிய நாட்டுடன் ஒப்பிடும் போது மிக மோசமான நிலையில் இருந்தது. ரஷ்ய மக்கள் அடிமைகளாக ஒரு வித அறிவு வளர்ச்சியும் அடையாதவர்களாக காணப்பட்டனர். ரஷ்யா ஒரு மிகப்பெரும் அரசாகவும், பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கிய ஒன்றாக இருந்த போதும் அங்கு வாழ்ந்த மக்கள் அறிவு விருத்தி அற்றவர்களாக எழுதவோ, வாசிக்கவோ தெரியாதநிலை தான் 100க்கு 100% மான மக்களிடம் காணப்பட்டது. பெண்களை எடுத்தால் மிக மிக மோசமான நிலையில் காணப்பட்டனர். இந்த நிலையிலே கிராமப்புறங்களில் வாழ்ந்தவர்களை பாமரர் என வர்ணித்தனர் நகரப் புறங்களில் நிர்வாக ஊழியருக்கு உயர் குடியினருக்கும் மட்டும் பாடசாலைகள் காணப்பட்டன. இந் நிலையில் கிராமப்புறங்களில் வாழ்ந்த பாமர மக்களால் தம் உரிமைகள் எவை என்பதையும் அவற்றைப் பெறுவது எங்ஙனம் என்பன பற்றிய அறிவும் இல்லாததால் அவர்கள் ஆட்சியாளர்களால் ஒடுக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றிய படித்த இளைஞர் சமுதாயம் அறிவற்றிருந்த பாமர மக்களுக்கு அவர்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறி அவர்கள் அடிமைகளாக ஆட்சியாளர்களால் நடத்தப்படுவதை எடுத்துக்காட்டி அவர்களை உரிமைக்கெதிராக குரல் கொடுக்கவும் புரட்சி செய்யவும் தூண்டினர். அந்த வகையில் இந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் 'ரஷ்யா' உலகத்தினால் கௌரவிக்கப்படக் கூடிய ஒரு ஸ்தாபனத்தை அடைய வேண்டுமானால் அதற்கு இந்த விவசாயிகளின் வாழ்க்கை அந்தஸ்த்தை உயர்த்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தார்கள். இதற்காக பல சங்கங்களை அமைத்து செயற்பட முனைந்தார்கள்.

இக்காலத்தில் 1825 தொடக்கம் 1855 வரை நிக்கலஸ் என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான். இவன் காலம் புரட்சியில் ஆரம்பித்து அடக்கு முறையில் வளர்ந்தது. இவன் காலத்தில் சில பணக்கார குடும்பத்து இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ரஷ்ய தேசத்திற்கு புதிய அரசியல் திட்டம் ஒன்று வேண்டும் என்று கேட்ட போது அவர்களுக்கு கிடைத்த பதில் தூக்கு மேடையும் பீரங்கி பிரயோகமுமே இதனையே "டிசம்பர் புரட்சி" என்பர். ஆனால் இவ்வாறான ஒரு கொடியவனின் காலத்தில் தான் புஸ்கின் டர்கனேவ் கோகோல், கால்மார்க்ஸ், எவ்கெல்ஸ், போன்ற அறிவுச்சுடர்கள் தோன்றி இளைஞர்களுக்கு தம் ஆக்கங்களால் வழி காட்டினர். இந்த வகையிலே ரஷ்யாவின் அரசியலிலும் சமுகாயத்திலும் சமய பொருளாதார அமைப்புகளில் உள்ள சீர்கேடுகளைத் துணிவோடு சுட்டிக்காட்டி புதுவாழ்வுக்கு புரட்சியே வழி என்பதை தம் எழுத்துக்கள் மூலம் வலியுறுத்தி ரஷ்யாவில் உள்ள இளைஞர் சமுதாயத்தை தட்டி எழுப்பி புரட்சிக்கு வழிவகுத்த வகையில் ரஷ்ய நாட்டில் 1917 இல் இடம் பெற்ற புரட்சிக்கு இந்த எழுத்தாளர்களும் ஒரு காரணமாக இருந்திருப்பதை அவதானிக்க முடிகிறது எனவே 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கல்வி அறிவுள்ள இளைஞர் சமுகாயத்தினர் தாம் கல்வி கற்கச் சென்ற ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள சிறப்புக்களையும் அங்கு மக்கள் நடத்தப்படும் முறைகளையும் அதே நேரம் தம் நாட்டில் உழைப்பிலே சிறிது கூட சலிப்பு காட்டாதவர்களாகவும் பொறுமையுடையவர்களுமாக இருக்கும் ரஷ்ய விவசாய மக்கள் எந்தளவிற்கு அடிமைகளாக நடத்தப்படுகின்றார்கள் என்பதை அறிந்து அவர்களை இந்த அடிமை விலங்கில் இருந்து அகற்றும் பொருட்டு சங்கங்களை அமைத்ததுமட்டுமன்றி தங்களுக்கென்று ஒரு தனிக்கட்சியையும் அமைத்தனர், அந்த கட்சிக்கு 'நாரோதினிக்' என்று பெயர் சூட்டினார்கள். இதன் பொருள் 'ஜன சக்தி' என்பதாகும். இதன் மூலம் கிராமம் கிராமமமாகச்சென்று பிரச்சாரங்களை செய்து மக்களை தங்கள் வயப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்தி ரஷ்ய அரசிற்கு எதிராக உரிமைக் குரல் எழுப்பச் செய்தார்கள். ஆயினும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட வேளையிலேயே புரட்சி வெடித்தது.

பிறநாட்டவரான பிரான்சியரும் ஜேர்மனியரும் இங்கிலாந்தும் கைத்தொழில் புரட்சியில் வளர்ச்சியடைந்து ஒரு முன்னேற்ற நிலையை அடைந்திருந்ததால் பெருமளவு பலம் பெற்றனர். எனவே அந்த இலாபத்தை முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பத்தை பார்த்திருந்த வேளையில் ரஷ்யா தான் நாட்டில் இவர்களை தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு அனுமதி கொடுத்தது. இந்த நடவடிக்கைகள் ரஷ்யாவின் உள்நாடு பொறுத்து புரட்சிகர மாற்றம் ஏற்பட ஏதுவாக இருந்தது. அதாவது பிறநாட்டவர்களால் நிறுவப்பட்ட கைத்தொழிற்சாலைகளில் கூலிக்காக வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கத்தினரிடையே, ஐரோப்பிய நாடுகளில் சென்று கல்விகற்றுத் திரும்பியவர்கள் மாக்சிய கருத்துக்களைப் பரப்பினர். இவ்வாறு பொதுவுடமைவாதக் கருத்துக்களை பரப்பியவர்கள் பலரை கைது செய்து சைபீரியாவிற்கு அனுப்பினர். இருந்த போதிலும் இதிலிருந்து தப்பியவர்கள் இந்தப் புரட்சிக் கருத்தை நாட்டின் பல பாகங்களிலும் பரப்பினர். இதனால் மக்கள் அரசிற்கு எதிராக கிளர்ச்சி செய்ய சந்தர்ப்பம் பார்த்திருந்த வேளையில் தான் ரஷ்யா கி.பி. 1858ஆம் ஆண்டு மத்திய தரைக்கடலில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக துருக்கியரால் கைப்பற்றி ஆளப்பட்டுக் கொண்டிருக்கும் சேர்பியா, ருமேனியா, பல்கேரியா போன்ற நாடுகளை தான் கைப்பற்றுவதற்காக துருக்கியுடன் சிநேகம் பூண்டது. இதன் உள்நோக்கத்தை அறிந்த பிரான்சியரும், பிரித்தானியரும் போருக்கெழுந்தனர். கிருமியா என்ற இடத்தில் கி.பி. 1878இல் ரஷ்யா தோற்கடிக்கப்படுகிறது.

இதனைப் போலவே கி.பி.1904இல் ரஷ்யா ஜப்பானுடன் போர் தொடுத்தது. இப்போரானது ரஷ்யா கிழக்கு நோக்கி தன் இராச்சியத்தை பெருப்பிக்கும் போது மஞ்சூரியாவை கைப்பற்ற விளைந்தது. இதனைத்தடுப்பதான போரில் ஜப்பான் ரஷ்யாவை தோற்கடித்தது. இந்த இரண்டு போர்களின் காரணமாக பெருமளவு செலவும் நட்டமும் ஏற்பட நாடு பஞ்சநிலையில் இருந்ததுடன், மக்கள் முன்னரிலும் வறுமை உற்றிருந்தனர். இதனால் ஆவேசம் கொண்ட மக்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்ய முற்பட்டனர். அதன்படி ஒரு ஞாயிறு அன்று பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. இந்த வேளையில் ஆட்சி செய்து கொண்டிருந்த நிக்கலஸ் மன்னனால் அனுப்பப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மக்களைக் கொன்று குவித்தனர். இதனால் உரிமைக்காக குரல் கொடுத்த மக்கள் செத்து மடிந்தனர். அன்றையதினம் "இரத்த ஞாயிறு" என்று வரலாற்றில் கூறப்பட்டதுடன் இது சார் மன்னனின் கொடுங்கோலையும் காட்டுகிறது. இந்தச் சம்பவம் மக்களிற்கு ஆவேசத்தைக் கொடுத்தது.

ரஷ்யா முழுவதிலுமே போரில் ஈடுபட்டிருந்த துருப்புகளுக்கு உணவு வசதி அளிப்பதற்காக பலாத்காரமுறையில் உணவுப் பண்டங்கள் திரட்டப்பட்டன. இவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் போரில் வெற்றி பெற்றிருந்தால் இந்த குறைபாடுகளை மக்கள் மறந்து மேலும் சிலகாலத்துக்கு தாம் அனுபவித்த கஷ்டங்களை துன்பங்களை ஏற்க தயாராயினர். போரின் விளைவாக தீவிரமான பண நெருக்கடி ஏற்பட்டது. தரை மார்க்கமான ரஷ்ய மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் கொண்ட வர்த்தகம் பால்டிக் கடல் மார்க்கம் முழுவதும் இடம் பெற்ற கடல் மார்க்க வர்த்தகம் நடத்த முடியாமல் போனது. ஆட்சியாளர் மத்தியில் தன்னம்பிக்கை இழந்து தோல்வி மனப்பான்மை பரவிக் காணப்பட்டது. நாடு பூராகவும் வேலைநிறுத்தங்கள், போலிஸ், இராணுவ நடவடிக்கை, கலகம், ஆயுதம் தாங்காத மக்கள் கூட பொது இடங்களில் கூடி தங்களுடைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிருப்தியை கூச்ச மரவசங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

லெனின் ரஷ்யாவில் புரட்சியை முன்நின்று நடத்த ஆரம்பித்தார். ரஷ்ய மத்திய வகுப்பின் கீழ்ப்பிரிவில் இருந்து தோற்றம் பெற்ற லெனின், சார் மன்னன் ஆட்சிக்கு எதிராக எதிர்ப்பியக்கங்கள் மூலம் புரட்சிகளில் ஈடுபட்டதாலே நாட்டில் இருக்க முடியாமல் தப்பி ஓடி சுவிஸ்சலாந்து சென்று அங்கிருந்து ரகசிய இயக்கங்கள் மூலம் ரஷ்யாவின் பல பாகத்திலும் பொதுவுடமைக் கருத்துக்களை பரப்ப முற்பட்டார். பத்திரிகைகளை அச்சிட்டு விநியோகித்தல், ரகசிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்து தன்னுடைய அங்கத்தவர்கள் மூலமாக ரகசிய கருத்தரங்குகளை நடத்துகின்ற பல நடவடிக்கைகள் மூலம் பொதுவுடமை வாத புரட்சிக் கருத்துக்கள் ரஷ்யாவிலே வளரவும் ரஷ்யாவிலே பொதுவுடமைப் புரட்சி ஒன்றுக்கு, இடமான வளர்ப்புக்கு லெனின் முற்பட்டிருந்தார். இதுவும் புரட்சிக்கு வழி விட்டுக் கொடுத்த காரணிகளில் ஒன்றாகும்.

இவ்வாறாக பல வழிகளிலும் வெறுப்பின் விளிம்பில் இருந்த மக்களிற்கு கி.பி. 1914ஆம் ஆண்டு ரஷ்யா ஜேர்மனிக்கு எதிராக முதலாம் உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டபோது அதுவே மாபெரும் ரஷ்யப் புரட்சி வெடிப்பதற்கு உடனடிக் காரணமாக இருந்தது. இந்தரீதியில் யுத்தத்தில் ஈடுபட்ட ஏனைய வல்லரசுகளை விட ரஷ்யாவிற்கு கூடிய நட்டம் ஏற்பட்டது. சண்டையில் அளவு கடந்த உயிர்கள் சேதமடைந்ததோடு, நோய் வாய்ப்பட்டும். அநேகர் இறந்தனர். ஐரோப்பாவின் மேற்கு நாடுகள் போல் ரஷ்யா நவீன படைப்பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை புதிதாக கண்டு பிடிக்கப்பட்டஆயுதங்களும் அவர்களிடம் இல்லை. போருக்கு வேண்டிய யாவும் யுத்த முனைக்கு விரைவாக கொண்டு செல்லக் கூடிய வசதிகள் ரஷ்யாவில் அந்நேரத்தில் இல்லாமையால் மேற்கு நாட்டவர் அவர்களுக்களித்த உதவியும் பயனற்றதாகி விட்டது. எதிரிகளிலும் பார்க்க கூடிய சனத்தொகை இருந்தபோதிலும் திருப்தியற்ற பொருளாதார நிலை நாட்டின் பலத்தைக் குறைத்து விட்டது. இந்த நிலையில் ரஷ்யாவில் புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்க முற்பட்ட புரட்சிவாதிகள் இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அதே நேரம் ஏற்கனவே அதிருப்தியின் உச்சநிலையில் இருந்த மக்கள் இந்த முதலாம் உலக யுத்தத்தால் இன்னும் பாதிக்கப்பட்டனர் இதனால் நாடு பூராவும் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும், பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியோருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், கலகங்களும் வெடித்து இறுதியில் மக்கள் புரட்சி வெடித்தது. இதுவே கி. பி. 1917இல் நடந்த ரஷ்யப் புரட்சியாகும்.

எனவே முடிவாக பார்த்தால் ரஷ்யா ஐரோப்பிய வல்லரசுகளில் பெரிய நாடாக இருந்த போதிலும் அங்கு ஆட்சி செய்த சார் மன்னர்கள் மக்களின் தேவை உணர்ந்து மக்களின் நலத்திற்காகவும் மக்களுக்காகவும் ஆட்சி செய்யாது சர்வாதிகார போக்கு கொண்டவர்களாகவும், ல்வி அறிவற்றவர்களாகவும் மக்களை உருவாக்கியதோடு அதன்மூலம் அவர்களின் உரிமைகளை பறித்து அடிமைகளாக வைத்திருந்த வேளையிலேயே 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய அறிவு ஜீவிகளாலும் சிறந்த எழுத்தாளர்களாலும் தம்நிலை உணர்ந்த மக்கள் சிறுசிறு கிளர்ச்சிகள் அவ்வப்போது செய்து தம் அதிருப்தியை காட்டிவந்த வேளையில், 1878இல் இடம் பெற்ற கிருமியப்போரும், 1904இல் இடம் பெற்ற ஜப்பானியப் போரும். இறுதியாக 1914இல் நடந்த உலக மகாயுத்தமும் மக்கள் சார் மன்னர்களிற்கு எதிராகவும், ரஷ்யாவிற்கு எதிராகவும் கிளர்ச்சி செய்ய உடனடிக் காரணமாக அமைந்து புரட்சி வெடித்தது எனலாம்.


உசாத்துணை நூல்கள்

உலக சரித்திரம்
மு. இளையதம்பி B. A. (London)

சோவியத் ருஷ்யா
வெ. சாமிநாதசர்மா

ஐரோப்பிய வரலாறு
அ. திலகவதி ஜகதீசன், பி. ஏ.
முதல் பதிப்பு 1971 ப. 216 — 224

அரசாங்கமும் ஆளப்படுவோரும்
ஆர். எச். எஸ். குரொஸ்மன்
1970, ப. 215 — 221




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வரலாற்றில் கி. பி. 1857 ஆம் ஆண்டுக் கலகம்

## ஒரு வரலாற்று நோக்கு

**செல்வி சி. மாதினி**
*வரலாறு சிறப்புக்கலை*
*3ஆம் வருடம்*
*யாழ் பல்கலைக்கழகம்*

இந்தியாவின் வரலாற்றில் கி. பி. 1857ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனை நிகழ்ந்த காலப்பகுதியாகக் கொள்ளப் படுகின்றது. இந்தியாவில் பிரித்தானியக் கம்பனி ஆட்சியினர் தழைத்து நின்ற மையும், இந்திய சமூகங்களில் அவர்க ளால் செய்யப்பெற்ற சீர்திருத்தங்களும், மேனாட்டுக் கல்வி முறை கிறிஸ்தவ மதப் பிரச்சாரம், மதமாற்றம், மற்றும் இந்தியச் சிப்பாய்களை இவர்கள் நடத்திய விதம் என்பன 1857இல் ஒரு கலகம் தோன்றுவதற்கு நீண்டகாலக் காரணி களாக விளங்கின. உடனடிக் காரணங் களாக பிளாசிப்போர் முடிந்து ஒரு நூற்றாண்டு கழிந்திருந்தமையும், இரா ணுவத்திற்கு வழங்கப்பட்ட புதிய என். பீல்ட்டு துப்பாக்கிகளுக்கு பன்றிக் கொழுப்பு, பசுக்கொழுப்பு பூசப்பட்டது என்ற வதந்தியும் கலகத்துக்கு காரணங் களாக காணப்பட்டன. இந் நிகழ்விற்குச் சிப்பாய்க்கலகம் எனப் பெயர் சூட்டிய வர்கள் மறைதிரு அலெக்ஸ்சாண்டர், சார்லஸ் பால் ஆகியோராவர். ஆளுநர் கன்னிங் பிரபு காலத்தில் தோன்றிய இக் கலகம் பற்றி ஐரோப்பிய வரலாற்றாசிரி யர்களும் இந்திய வரலாற்று ஆசிரியர் களும் தத்தம் கருத்துக்களை முன்வைத் துள்ளனர்.

பிரித்தானிய ஆய்வாளர்களின் கருத் துப்படி ''குறையுற்ற சிப்பாய்கள் சிலரும், பிரிட்டிஷ் ஆட்சியைச் சார்ந்து நின்ற வரும், அரசின் கொள்கைகளால் அதிருப்தி அடைந்தோரும், சிற்றரசர், ஜாகீர்தார்கள் போன்றோரும் செய்த ஒரு கலக எழுச்சியே'' என்பதாகும் இந்திய வரலாற்றாசிரியர்களின் கூற்றுப் படி ''இது இந்தியாவில் அந்நியர் ஆட் சிக்கு எதிராக முதன் முதலில் மக்களால் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர எழுச் சியே'' என்பதாகும். இத்தகு சிப்பாய்க் கலகம் தோற்றம் பெறவும், தோல்வி அடையவும் வழிவகுத்த காரணங்களை எடுத்து நோக்குவோம்.

சிப்பாய்க்கலகம். எனப் பேசப்படும் இக் கலகத்தில் முக்கிய பங்கேற்றவர்கள் பெரும்பாலும் வட, மத்திய பகுதிகளைச் சேர்ந்த இந்து, முஸ்லீம் மக்களும், இந்தி யாவில் பிரித்தானிய அரசினால் உரு வாக்கப்பட்ட சிப்பாய்களுமே ஆவர். மக்கள் மத்தியில் இப்புரட்சி தோற்றம் பெறுவதற்கு அரசியல், சமூக, பொருளா தார, நீதி நிர்வாகம். முதலிய பல்வேறு காரணிகளும் வழி வகுத்தன. அரசியல் துறை பொறுத்து பிரித்தானியர் கைக் கொண்ட கவர்னர் ஆட்சிமுறை மக்க ளுக்கு அதிருப்தி அளித்தது மக்களின் தேவைகளையோ, நலவாழ்வைப் பற்றிய சிந்தனையோ எதுவுமின்றி ஒருவகை யான எதேச்சதிகாரம் கொண்டு செயற் பட்ட கம்பனியினரை மக்கள் வெறுத்த னர். இந்தியாவில் அவர்கள் கடைப் பிடித்த நிர்வாகச் செயற்பாடுகளும் இந்திய மரபுக்கு புறம்பானதாகவும் ஊறு விளைவிப்பதாகவும் அமைந்தன. அத

னால் இவை இந்தியர்களால் எதிர்க்கப்பட்டு 1857இல் புரட்சியாகத் தோற்றம் பெற்றது என ரஸ்ஸெல் என்ற பிரித்தானிய நாடாளுமன்ற அலுவலர் ஒருவர் குறிப்பிட்டார். இவர் மேலும் குறிப்பிடுகையில் "ஆங்கிலேயருக்கு மட்டுமே உரிய திட்டம் இது. இதில் சிறிதளவு கூட இந்தியத்தன்மை இல்லை. இந்தியரின் பழக்க வழக்கங்கள், மற்றும் அபிப்பிராயங்களுடனும் இவை பெரிதும் ஒத்துப்போகவில்லை. எனவே இவர் தம் திட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கையோ, விசுவாசமோ ஏற்படாத அதேவேளை கம்பனி ஆட்சியினருக்கோ இம்மக்கள் மீதும் அனுதாபம் இல்லை. இதுவே 1857இல் கலகம் உருவாகக்காரணம்" என்பர்.

இந்திய சமூகத்தில் பிரித்தானியக் கம்பனியினரால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தமுறைகளும் 1857இல் புரட்சி உதயமாவதற்கு வித்திட்டது. இந்திய மக்களைப் பணம் பெறுவதற்காக ஆங்கில அரசு பல்வேறு வழிகளில் சுரண்ட முற்பட்டது. லஞ்சம், ஊழல் என்பன அக்கால மக்கள் வாழ்வில் மலிந்தன. இந்தியரிடம் இருந்து குறைந்த விலைக்குப் பொருட்களை வாங்கிப் பிற இடங்களில் அதனை அதிக விலைக்கு விற்றுக் கம்பனியினர் அதிக இலாபம் அடைந்தனர். கம்பனித் தாரர்களும் ஊழியர்களும் பெருமளவில் தரகுத் தொகையைப் பெற்றனர். வங்காளம் கம்பனியினரின் சுரண்டலுக்கு முக்கிய மையமாக விளங்கியது. இங்கிருந்து கொண்டுசெல்லப்பட்ட மூலப்பொருட்கள் இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி ஏற்படவும் அந்நாட்டில் ஒரு முதலாளித்துவ வகுப்பு உருவாகவும் வழிவகுத்தது. இக்காலத்தில் இந்தியரின் கைத்தொழில்கள் நசுக்கப்பட்டன. வேலை வாய்ப்பு அருகிப்போய் மக்கள் மத்தியில் பஞ்சம் வறுமை, பிணி, என்பன ஏற்பட்டன. இது பிரித்தானிய அரசுக்கு எதிரான கலகம் ஏற்பட வழி வகுத்தது.

பண்டைய இந்தியாவில் வங்காளம் மிகுந்த செழிப்பான பகுதியாக விளங்கியது. பருத்தித்துணிக்கும், நெற்செய்கைக்கும் புகழ் பெற்றிருந்தது சுதேசக்கைத் தொழில்களும் பல்கிப் பெருகியிருந்தது. பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் ஆட்சிக்குவந்ததும் வங்காளத்தின் மூலவளங்கள் யாவும் உறிஞ்சப்பட்டன. கைத்தொழிலாளர்களும் முடக்கப்பட்டார்கள். இதனால் நெசவு செய்யும் கம்மியர்கள், கப்பல் கட்டுவோர் துணி வேலை செய்வோர், முதலிய யாவரும் தமது வேலைவாய்ப்பை இழந்து விவசாயிகளாகவும், மாறினர். கூலியாட்களாகவும் இத்தகு புதிய தொழிலில் அவர்களால் பெரும் சுமைகளையே தாங்க நேரிட்டது. இதனால் அவர்கள் நிலமானியச்சமுதாயத்துடன் இணைந்து 1857இல் புரட்சி ஒன்றினை ஏற்படுத்தினர்.

இதுவரை இந்தியாவில் இந்தியரும் சுதந்திரமாக வர்த்தகம் செய்தே வந்தனர். வங்காளத்தில் சிராஜ் உத்தௌலாவும், அயோத்தி, டில்லி அரசர்கள் இருந்த காலத்திலும் சுதேச வர்த்தகர்களே பெருமளவில் பொருளாதார வளத்தினை ஈட்டிக் கொண்டனர். ஆனால் அரசியல் ரீதியாக வடஇந்தியாவைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர் டில்லி மன்னரிடம் தாம் பெற்ற "தஸ்தக்" என்ற ஆணையைப் பயன் பயன்படுத்தி இந்தியாவில் தமக்குப் போட்டியாக இருந்த இந்திய வர்த்தகர்களை முற்றாக அகற்றுவதில் கவனஞ் செலுத்தினர். இதனால் ஆங்கிலேயர் சுங்க வரிகளின்றி வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். சுதேச வர்த்தகர்கள் வியாபார உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டனர். பிரித்தானிய உற்பத்திப் பொருட்களுக்கு இந்தியாவே முக்கிய சந்தையாக விளங்கியது. பிரித்தானிய முடிவுப் பொருட்கள் இங்கு சந்தைப்படுத்தப்பட்டன. இந்தியப் பொருட்கள் சந்தைப்படுத்த முடியாதபடி சட்டம் போட்டுத் தடுக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. இதுவே 1857இல் புரட்சி ஒன்று உருவாகக் காரணமாக விளங்கியது.

வியாபார உறவுகளில் ஏற்பட்ட இந்த மாற்றம் இந்திய சமூக அமைப்பி லும், பெரிதும் மாற்றங்களை ஏற்படுத் தியது. தறி பிடித்த கரங்கள் ஏர்பிடிக் கத் தொடங்கினர். நிலத்தின் மீது நெருக்கடி அதிகம் இருந்ததால் வேலை யற்றோரே அதிகம் காணப்பட்டனர். பழைய கருவிகள் கொண்டுவிளைச்சலைப் பெருக்கமுடியவில்லை. நிலத்தின் அள வுக்கு ஏற்ப வரி கொடுக்கப்படவேண்டும் என்று திட்டம் தீட்டிய அரசு விளைச் சலைக் கவனத்தில் கொள்ளவில்லை. ஒவ் வொருவரினதும் நிலங்கள் தனித்தனி யாக அளக்கப்பட்டன. இதனால் கிராம சமுதாயம் தன் பொருளாதார பாணியை இழந்தது. நிலவரித் திட்டங்கள் ஏற்படுத் தப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட நிலமானியச் சமுதாயத்தினர் 1857இல் ஆங்கில அரசுக்கெதிரான கலகத்தில் ஈடு பட்டனர்.

ஆங்கில வர்த்தகக்கம்பனியினரால் கொண்டுவரப்பட்ட நாடிழக்கும் கொள்கை காரணமாகவும் 1857இல் புரட்சி தோன்றியது. இக்கொள்கை அளுநர் டல்கௌசி காலத்தில் (கி. பி. 1848 - 1856) கொண்டு வரப்பட்டது. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் தமது ஆட்சி எல்லையை ஆங்கிலேயர் நகர்த்தி வந்தனர். இதற்கு ஏற்ப ஆங்கில அரசினால் துணைப்படைத் திட்டம் வழங்கிப் பாதுகாக்கப்பட்ட சிற்றரசுகள் தங்களுக்கு நேரடி வாரிசு இல்லாது போனால் தாம் தத்தெடுத்த வாரிசு களை அரியணையில் அமர்த்தக்கூடாது அவ்வாறு வாரிசு இல்லாதோரின் அரசு ஆங்கில அரசாங்கத்திற்கே உரியதென வும் வரையறுக்கப்பட்டது. இதன்படி சதாரா இணைக்கப்பட்டதும், மராட் டிய சிற்றரசுகளும், ஏனைய சுதேச அரசு களும் தமது உரிமைகளை இழந்து ஆங்கில ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இங்கு தமது ஆட் சியை இழந்த நானாசாகெப், வீரி லட்சுமி பாய் (ஜான்சிராணி) தாந்தியா தோப்பி, குன்வர்சிங் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள் இவ்வாறு அரசுரிமை இழந்தவர்கள். தமது அரசுரிமையை மீண்டும் பெறுவதற்காக 1857இல் ஆங்கிலேயருக்கு எதிரான போரில் குதித் தனர்.

பழைய அரசசபையின் சுகபோக வாழ் வில் தம் வாழ்வை நடத்திய படைவீரரும் அரசுகளின் ஆடம்பர வாழ்விற்கு சும் பணியை நம்பி வாழ்ந்த வியாபாரிகளும் கூட தமது வேலை வாய்ப்பை இழந்த னர். மேலும் இந்திய மரபுகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் முரணாக நீதி, மற்றும், நிலவரித் துறைகளுக்கும் முத் திரைகளை அறிமுகம் செய்தமையும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத் தியது. சினம்கொண்ட மக்கள் எழுச்சி பெற்ற சிற்றரசர்களுடன் இணைந்து கொண்டனர். அபின் மீதும், ஏனைய உணவுப்பொருட்கள், படகுகள், வீடுகள் மீதெல்லாம் கடுர்வரி விதிக்கப்பட்டது. இது 1857இல் புரட்சி ஒன்று தோன்ற வழி சமைத்தது.

ஆங்கிலேய அரசினால் கொண்டு வரப்பட்ட சொத்துடமை ரீதியான சட் டங்களும் கூட மக்கள் மத்தியில் கிளர்ச்சி உதிக்கக் காரணமாயிற்று. கி.பி. 1850இல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி கிறிஸ்தவ மதம் மாறினோர் மட்டுமே தமது தந்தை யின் சொத்துக்கு உரிமை கொண்டாட லாம் எனக் கூறப்பட்டது. இது தீவிர மதப்பற்றுக் கொண்ட இந்து இஸ்லாமி யர் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியது. சம கல்வி வாய்ப்பு, சமூக வர்க்க வேறு பாடுகளை மதிக்காமை. ஒரே புகைவண் டிப் பிரயாணம் என்பனவும் இக்காலம் புரட்சி தோன்றக் காரணமாயிற்று.

கலகத்திற்கு உடனடிக் காரணமாக அமைவது சிப்பாய்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியே எனலாம். சிப்பாய்கள் வெகு காலமாகச் சண்டையிடாமல் பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையை மட்டுமே கவனித்து வந்ததால் வட இந்தியாவின் பல்வேறு பாசறைகளிலும் வைக்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் இவர்கள் மத்தியில் வர்க்க வேறுபாடுகள், சுதந்திரமாகத் தமது சமய அனுட்டானங்களைப் பின்பற்றுவது போன்ற நிகழ்வுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் உயர் உத்தியோகங்களும், நல்ல சம்பளங்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. வெள்ளை உயர் அதிகாரிகளும் இவர்களுடன் ஆரம்பத்தில் நெருங்கிப் பழகினர். ஆனால் பின்வந்த காலங்களில் பிரித்தானியர் அதிகம் இந்தியாவுக்கு வருகை தந்தமையால் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாக இந்தியச் சிப்பாய்களால் சர்ஜண்ட் பதவிக்கு மேல் உயர முடியவில்லை. ஆங்கில இராணுவத்திற்குப் பாசறையில் தனி உணவு விடுதிகள், வசதியான பங்களாக்கள்என்பனகிடைத்த போது இந்தியச் சிப்பாய்கள் மிகுந்த சிரமங்களுடன் கூடாரங்களில் நெரிந்தனர். இதனால் அவர்கள் மத்தியில் ஆங்கில அரசுக்கு எதிரான வெறுப்புணர்வு ஏற்பட்டது. இதனைச் சாதகமாக்கிக் கொண்ட வாகாபியர்களின் பிரச்சாரம் இந்தியச் சிப்பாய்களைத் தூண்டியது. பிளாசிப் போரின் வெற்றி நூற்றாண்டு நிறைவுநாள் நெருங்கிக்கொண்டிருந்தது. அன்று தான் புரட்சி ஆரம்பமாக இருந்தது. எனினும் சிப்பாய் மங்களபாண்டே முந்திக்கொண்டதால் புரட்சியும் விரைவில் வெடித்துக் கிளம்பியது. இவை புரட்சிக்கான உடனடிக் காரணிகளாகும்.

இந்தியச் சிப்பாய்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து நகர வாசிகளும், கிராம வாசிகளும், கம்மியர் முதலான கைத்தொழிலாளர்களும் ஆங்கிலப்படையதிகாரிகளை கொன்றுவிட்டு அவர்களுடன் இணைந்து டில்லி சென்றனர். அங்கு டில்லி மன்னரான வயோதிபர் பகதூர்ஷாவை மன்னராக்கி மொகலாயக் கொடியையும் ஏற்றித் தொடர்ந்தும் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும் இப்புரட்சி இறுதியில் தோல்வி அடைந்தது. அதற்கான காரணங்களை ஆராய்வோம்.

1857இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் தோல்வி அடையப் பல்வேறு காரணிகளும் வழிசமைத்தன. அவற்றில் முக்கியமானது கலகக்காரர்களின் இராணுவ அமைப்பு மற்றும் இராணுவத் தளபாடப் பற்றாக்குறை, அதன் சீரற்ற கையாளல் என்பன ஆகும். இது ஆங்கிலேயரின் படைத்திறன் மற்றும் அவர்தம் நவீன யுத்த தளவாடங்கள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் வலிமை குன்றியிருந்தது. மேலும் நவீன பீரங்கி மற்றும் நெடுந்தூரம் சென்று தாக்கும் துப்பாக்கி என்பனவும் ஆங்கிலேயரிடம் காணப்பட்டன. இந்தியச்சிப்பாய்கள் மத்தியில் ஒன்றுபட்டு ஒழுங்கான முறையில் போரிடும் தன்மையும் காணப்படவில்லை. இதனால்கி. பி 1857 ஆம் ஆண்டுக் கலகம் தோல்வி அடைந்தது,

இப்புரட்சி நடைபெற்ற காலத்தில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் நில மானியத் தலைவர்களின் விசுவாசத்தைப் பெற்றிருந்தனர். குவாலியர் கைதராபாத் நேபாளம் ஆகிய இடங்களில் இருந்தவர்களின் உதவியும் சீக்கியர், நிஜாம்கள் போன்றோர்களுடைய உதவியும் கலகத்தினை அடக்கும்பொருட்டு ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. ஏற்கனவே கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த நில மானியப் படைத்தலைவர்களுக்கு ஆங்கில அரசின் சலுகைகள் சில கிடைத்ததால் அவர்கள் தமது போராட்டங்களைக் கைவிட்டனர். இதனால் அவர்களுடன் இணைந்து புரட்சியில் ஈடுபட்ட மக்களும் அதனைக் கைவிட்டனர்.

கலகம் செய்தவர்களுக்கு நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. கலகத்தைத்தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தாலும், அமைதி இன்மையாலும் மக்கள் மத்தியில் அதிக பொருட்சேதம் ஏற்பட்டதாலும் அவர்கள் கலகக்காரரை வெறுத்தனர். கலகக்காரர்களின் மத்தியில் ஆற்றல் மிகுந்த தலைவர்களும் இருக்கவில்லை. வீறு கொண்டெழுந்த ஒரு சில தலைவர்களும் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியின் உரிமையைப்பெறும் பொருட்டே போரிட்டனர். இவர்கள் அகில இந்தியாவின் விடுதலைக்கான போரில் இறங்கவில்லை. ஆங்கிலேயர் வசம் லோறன்ஸ், எட்வேட் போன்ற தலைவர்கள் காணப்பட்டனர். மேற்கூறப்பட்ட காரணங்களால் 1857-ம் ஆண்டுக் கலகம் தோல்வி கண்டது.

R. C. மஜீம்தார் கூற்றுப்படி "தேசியத் தன்மையும், செல்வாக்கும் பெற்றதாக இக்கலகம் காணப்பட்ட போதிலும் இதில் ஈடுபட்ட தலைவர்களோ, சிப்பாய்களோ எந்த ஓர் உயர்ந்த இலட்சியத்தாலும் உந்தப்படவில்லை என்ற உண்மையே கலகம் தோல்வியடையக் காரணம்" என்கிறார். அத்துடன் இக்கலகம் வரையறுக்கப்பட்டதாகவும், மூன்று மாகாணங்களில் இருந்த படைகளில் ஒரு மாகாணத்துப்படைகளே இப்போரில் பங்குகொண்டதாகவும், அதுவே தோல்விக்கு வழிவகுத்தது எனவும் R. C. மஜீம்தார் கூறுவர்.

புரட்சிப் படையினர் நழுவவிட்ட வாய்ப்புக்களை ஆங்கிலேயர் தமக்கு அனுகூலமாக்கிக்கொண்டனர். கிளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஆங்கிலேயரது கிருமியன் போரும், சீனப் போரும் முடிந்து நல்ல நிலையில் அவர்களது படைகள் இருந்தமையால் அவற்றைக்கொண்டு கிளர்ச்சியை அடக்குவது இலகுவாயிற்று. ஆங்கிலேயரது கடலாதிக்கமும் கிளர்ச்சியை அடக்க அருந்துணையாயிற்று. போர் முனைக்குச் சென்று திரும்பும் கப்பல்கள் அவசரச் செய்தி கிடைத்ததும் இந்தியக் கரையை அடைந்தன. கிளர்ச்சிகள் வெடித்ததும் ஆங்கிலேயர் வழமையாகக் கையாளும் பிரித்தாளும் தந்திரத்தை மேற்கொண்டு சீக்கிய, முகமதிய வெறுப்பைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். பல ஆயிரக்கணக்கான இந்தியர்கள் படையில் சேர்க்கப்பட்டார்கள். புரட்சியாளருக்குக் கிட்டாத நவீன சாதனமொன்றும் அரசாங்கத்திடம் இருந்தது. அது தான் தந்தித் தொடர்பாகும். "தந்தி முறை இக்காலம் தமது கழுத்தை நெரிக்க வந்த கம்பி" எனச் சிப்பாய்கள் கூறியமை குறிப்பிடத்தக்கது. மீரத் நிகழ்ச்சிக்குப் பின்னர் கிடைத்த இருபது நாட்கள் இடைவெளியானது பாதுகாப்பு ஏற்பாடுகளைச்செய்வதற்கு ஆங்கிலேயருக்கு வாய்ப்பளித்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக நன்கு பயிற்சிபெற்றதும், அனுபவம், திறமை மிக்க தளபதிகளின் தலைமையும் ஆங்கிலத் துருப்புக்களுக்குக் கிடைத்தது. இவை யாவும் 1857 இல் கலகம் தோல்வி அடைய வழிவகுத்தன.

ஜே. வி. நோர்டன் குறிப்பிடுகையில் "ஹைதராபாத் வெள்ளைக்கொடி வீழ்ந்திருந்தால் தென்னகம் முழுமையும் கொந்தளித்திருக்கும். நேபாள மன்னர் ஆங்கிலேயரின் நண்பராக இல்லை என்றால் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும்" என்பர். இவற்றுடன் காலங்கடந்து ஏற்பட்ட நாட்டுப் பற்றும் இக்கலகத்தின் தோல்விக்கு வித்திட்டது. மேற்கூறப்பட்ட சகல விடயங்களையும் நாம் தொகுத்து நோக்கின் இந்திய வரலாற்றில் கி. பி. 1857 ஆம் ஆண்டுக் கலகத்தின் முக்கியத்தினையறிந்துகொள்ளலாம்,

## உசாத்துணை நூல்கள்

இரா. வேலாயுதம் வெளியீடு –
இந்திய வரலாறு பாகம் II,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
வெளியீடு, சென்னை, ஜனவரி 1989

P. E. உறோபேட்சு
தமிழாக்கம்: வே. பேரம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனியாட்சியிலும், முடியாட்சியிலும் பிரித்தானிய இந்திய வரலாறு
வெளியீடு அரசகருமமொழித்திணைக்களம், முதற் பதிப்பு 1964, இலங்கை

திரு. வி. கல்யாணசுந்தரனார்
இந்தியாவும் விடுதலையும்
வெளியீடு: பாரி நிலையம், சென்னை
முதற்பதிப்பு 1940

W. H. மோர்லண்ட்
தமிழாக்கம்: M.R. பெருமாள் முதலியார் M. A.
இந்திய வரலாற்றுச் சுருக்கம்
பிரசுரம் சென்னைப் பல்கலைக்கழகம்
முதற்பதிப்பு 1951, இந்தியா

பி. கோதண்டராமன் எம். ஏ.
இந்தியப் புரட்சி இயக்கம்
(பிளாசிப் போர் முதல் நாடு பூரண சுதந்திரம் அடைந்தது வரை)
வெளியீடு சென்னை, ஆகஸ்ட் 1978

பி. ஷி. ஜோஷி
1857 புரட்சி ஓர் ஆய்வரங்கு
தமிழாக்கம் திலகவதி ஜகதீசன்
முதற்பதிப்பு ஜனவரி 1989
வெளியீடு பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்.

---

**History is Past Politics and Politics is Present history.**

**வரலாறு என்பது இறந்தகால அரசியல் அரசியல் என்பது தற்போதைய வரலாறு.**

— *Sely*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய மாற்று வீதம் கணிப்பீட்டு முறைகளும் வகைகளும்

திரு. சி. உதயகுமார்
விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

## அறிமுகம்

எந்தவொரு நாடும் தத்தமது பேரினப் பொருளாதார இலக்குகளான வேலைமட்டம், உற்பத்தி மட்டம், விலை மட்டம், நுகர்வு மட்டம், முதலீட்டு மட்டம், சேமிப்பு மட்டம், —— போன்றவற்றினை அடைந்து கொள்வதில் நாணய, இறைக் கொள்கைகள் முக்கியம் பெறுகின்றது. இந்த வகையில் நாணயக் கொள்கையினை சீராக்கம் செய்வதில் நாணயமாற்று வீதம் முக்கிய இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே ஒவ்வொரு நாடும் தத்தமது ஆற்றல், தேவைகளை கவனத்தில் கொண்டு பல்வேறு விதமான நாணய மாற்று வீத முறைகளை கடைப்பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் நாணய மாற்று வீதம் என்றால் என்ன? இது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது? நாணயப் பெறுமதியின் இறக்கம் ஏற்றம் என்றால் என்ன? நாணய மாற்று வீத வகைகள் எவை? சென்மதி நிலுவை மீதியில் அவற்றின் தாக்கம் எத்தகையது? போன்ற விடயங்கள் பற்றி மிகவும் சுருக்கமாக இக்கட்டுரை ஆராய முனைகின்றது.

## நாணய மாற்று விகிதம் பற்றிய வரைவிலக்கணம்

வர்த்தகம் முக்கியம் பெற்றுள்ள இன்றைய உலகில் நாடுகளுக்கிடையே சர்வதேச வர்த்தகமானது நடைபெறவேண்டுமாயின் அந்த நாடுகளுக்கிடையே புழக்கத்திலுள்ள நாணயங்களும் பரிமாற்றிக் கொள்ளப் படவேண்டும். இந்தவகையில் ஏதாவது ஒரு நாட்டில் புழக்கத்திலுள்ள நாணயத்தை பிறிதொரு நாட்டில் புழக்கத்திலுள்ள நாணயத்திற்காக பரிமாற்றிக் கொள்கின்ற வீதமே நாணயமாற்று வீதம் (Exchange Rate) எனலாம் அதாவது ஒரு நாட்டின் நாணயத்தை பிறிதொரு நாட்டு நாணயத்தால் கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவு எனலாம்.

உ + ம் : 1 டொலர் = 40 ரூபா

1 ரூபா = $\frac{1}{40}$ டொலர்

இங்கு 1 டொலரைக் கொள்வனவு செய்ய இலங்கையின் 40/- தேவை. அல்லது ஒரு இலங்கை ரூபாவை கொள்வனவு செய்ய $\frac{1}{40}$ டொலர் தேவை என்பதைக் காட்டுகின்றது.

## நாணயப்பெறுமதி ஏற்றமும் இறக்கமும்:

மேற்படி குறிப்பிடப்படும் நாணய மாற்று வீதமானது குறித்த நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை எடுத்துக் காட்டும். இவ்வகையில் குறிப்பிட்ட நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதி அதிகரித்து செல்வதை அந்த நாட்டு நாணயத்தின் பெறுமதி ஏற்றம் (Appreciation) என்றும், மாறாக குறிப்பிட்ட நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை அந்த நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி (Depreciation) என்றும் குறிப்பிடப்படும்

உ + ம் :

1 டொலர் = 40/- என்பது மாற்றமடைந்து (1 ரூபா = $\frac{1}{40}$ டொலர்)

1 டொலர் = 60/- என மாறின் டொலரின் பெறுமதி ஏற்றம்.

1 டொலர் = 20/- எனமாறின் டொலரின் பெறுமதி வீழ்ச்சி (இறக்கம்)

1 ரூபா = $\frac{1}{20}$ டொலர் எனமாறின் ரூபாவின் பெறுமதி ஏற்றம்

1 ரூபா = $\frac{1}{60}$ டொலர் என மாறின் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி (இறக்கம்) எனலாம்.

முறையே ரூபா, டொலரின் பெறு 50% அதிகரித்து இருப்பதையும் 50% வீழ்ச்சி அடைந்து இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது

## நாணயத்துக்கான கேள்வி நிரம்பல்

குறிப்பிட்ட நாட்டு நாணயத்திற்கான கேள்வியும் நிரம்பலும் பற்றிப் பார்க்கும் போது அந்நிய செலாவணிச் சந்தையில் குறிப்பிட்ட நாட்டு நாணயத்துக்கான கேள்வி என்பது பிற நாட்டவர்களால் ஏற்படுத்தப்படுவதையும், அதேபோல் குறிப்பிட்ட நாட்டு நாணயத்துக்கான நிரம்பல் என்பது குறிப்பிட்ட நாட்டு நாணயத்தை வைத்திருப்பவர்களால் பிற நாட்டு நாணயங்களின் ஊடாகக் கொடுப்பனவு செய்ய முனையும்போது ஏற்படும் எனலாம். இதனை இலங்கை ரூபாவிற்கான கேள்வி, நிரம்பல் என்பது எவ்வாறு ஏற்படும் என்பதைப் பின்வரும் உதாரணம் மூலம் நோக்குவதன் ஊடாக விளங்கிக் கொள்ளலாம்.

உ-ம்: 1) அந்நியச் செலாவணிச் சந்தையில் இலங்கை ரூபாவை வைத்திருப்போர் பிறநாட்டு நாணயங்களைக் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள முயற்சிக்கின்ற போது இலங்கை ரூபாவிற்கான நிரம்பல் ஏற்படும். இது பின்வரும் நிலைமைகளில் ஏற்படலாம்.

i) வெளிநாடுகளிலிருந்து இலங்கை இறக்குமதியாளர்களால் மேற்கொள்ளப்படும் இறக்குமதியின்போது.

ii) வெளிநாடுகளிலிருந்து மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவுசெய்யும்போது.

ஆகவே சென்மதி நிலுவையில் செலவுப் பக்கத்து நடவடிக்கைகளால் ரூபாவின் நிரம்பல் ஏற்படும். இதனால் அந்நிய செலாவணி சந்தையில் ரூபாவின் நிரம்பல் நேர்க்கணிய சரிவு கொண்டதாக அமையும். இந்தநிலையில் ரூபாவின் பெறுமதி அதிகரித்தால் இறக்குமதி பொருட்களின் விலைகுறைவடையும் மாறாக பெறுமதி வீழ்ச்சியடையின் இறக்குமதி பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் எனலாம்.

உ-ம்: 2) அந்நிய செலாவணி சந்தையில் இலங்கை ரூபாவின் அடிப்படையில் தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முனையும்போது இலங்கை ரூபாவுக்கான கேள்வி ஏற்படும். இது பின்வரும் நிலைமைகளில் ஏற்படலாம்.

i) இலங்கை ஏற்றுமதியாளர்கள் பிற நாடுகளுக்குப் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்யும்போது

ii) வெளிநாடுகளுக்கு மூலதனப் பொருட்களை அனுப்பும்போது ஏற்படும்.

எனவே சென்மதி நிலுவையின் வரவுப் பக்க நடவடிக்கைகளால் ரூபாவுக்கான கேள்வி ஏற்படும். இதனால் எதிர்கணியச் சரிவுகொண்டதாக ரூபாவின் கேள்விக்கோடு அமையும். இந்த நிலையில் ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி ஏற்றமடைந்தால் ரூபாவின் வெளிநாட்டு நாணய விலை உயரும். மாறாக ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி குறைவடைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் இலங்கையின் ஏற்றுமதிப் பொருளுக்குக் கேள்வி கூடும். காரணம் ஏற்றுமதிகளின் விலை மற்றைய நாடுகளுக்கு மலிவாகத் தெரியும்.

## செலாவணி விகிதம் தீர்மானிக்கப்படும் முறை

செலாவணி விகிதமானது எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை பின் வரும் உதாரணம் மூலம் நோக்குவோமாயின் அந்நிய செலாவணி சந்தையில் அமெரிக்கடொலர் தொடர்பாக இலங்கை ரூபாவின் கேள்வி நிரம்பலைக் கவனத்தில் எடுத்த அதற்கான கேள்வி நிரம்பற் கோடுகளை வரைவதன்மூலம் செலாவணி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது.

(படம் 1 ஐப் பார்க்கவும்)

இங்கே 1 ரூபா $= \frac{1}{40}$ டொலர்

அதாவது 1 டொலர் = 40/-ரூ ஆகும். இந்த நிலையில் இலங்கை ரூபாவின் பெறுமதி 1 ரூபா $= \frac{1}{60}$ டொலர் என பெறுமதி குறைவாக மதிப்பிடப்பட்டால் இலங்கை ரூபாவுக்கு 3500 அலகு கேள்வியும், 500 அலகு நிரம்பலும் ஏற்படும். இதனால் 3000 அலகு ரூபாவுக்கான மிகைக்கேள்வி அந்நிய செலாவணி சந்தையில் எழும். இதனால் இலங்கை ரூபாவின் பெறுமதியை உயர்த்தும். மாறாக 1 ரூபா $= \frac{1}{20}$ டொலர் என மிகைப் பெறுமதி கொண்டிருப்பின் இலங்கை ரூபாவுக்கு 1000 அலகு கேள்வியும், 3500 அலகு நிரம்பலும் ஏற்படுவதால் 2500 அலகு மிகை நிரம்பல் ஏற்படும். இது ரூபாவின் பெறுமதி தேய்வடைய வழிகோலும்.

## நாணய மாற்று வீத முறைகள்:-

1) நிலையான நாணய மாற்று வீதம்
Fixed Exchange Rate

ஒரு நாட்டின் உள்நாட்டு நாணயத்தை வெளிநாட்டு நாணயத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுகின்றபோது அரசின் அல்லது மத்திய வங்கியின் தலையீடு காரணமாக அன்னிய செலாவணி சந்தையில் குறிப்பிட்ட ஒரு நாணய மாற்று வீதம் பேணப்படுதலே நிலையான நாணய மாற்று வீதம் எனலாம். அதாவது செலாவணி சந்தையில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தாலுங் கூட நாணய மாற்று விகிதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாத நிலையைக் குறிக்கும். இங்கு செலாவணிச் சந்தையில் குறிப்பிட்ட நாட்டு நாணயத்துக்கு ஏற்படும் மிகைக் கேள்வி அல்லது மிகை நிரம்பல் போன்றவற்றை நீக்குவதில் மத்திய வங்கியே செயற்படுவதால் மத்திய வங்கி வெளிநாட்டு ஒதுக்குகளைப் பேணுதல் அல்லது குறைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இம்முறை தங்க நியம முறையின் கீழ் காணப்பட்ட ஒரு முறை எனலாம்.

## நிலையான நாணய மாற்று வீதமும் சென்மதி நிலுவை மீதியும்:-

மேற்படி நிலையான நாணயமாற்று வீத முறையின் கீழ் ஒரு நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியானது எவ்வித மாற்றங்களுக்கும்உட்படாதகாரணத்தால் உள்நாட்டு விலை மட்டங்கள், வெளியீட்டு மாற்றங்கள் போன்றவற்றின் ஊடாகச் சென்மதிநிலுவை தொடர்பான சமனிலையின்மைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறப்படுகின்ற போதிலும் கோட்பாட்டு ரீதியாக மேற்படி நிலையான நாணய மாற்றுவீத முறையின் கீழ் சென்மதி நிலுவை குறை நிலை தீர்க்கப்படக்கூடிய தன்மையினை நோக்கின் கெயின்ஸின் விளக்கப்படி திறந்த பொருளாதாரமொன்றில் தேசிய வருமான சமநிலை, $Y=C+I+G+(X-M)$ ஆக இருக்கும் என்றும், இங்கு $X=M$ என இருப்பின் நடைமுறைக் கணக்கு மீதி சமனிலையில் உள்ளதைக் குறிக்கும். ஆனால் சென்மதி நிலுவை குறைநிலை எனின் $X<M$ ஆக அமையும். ஆனால் கெயின்ஸின் கருத்துப்படி வருமான வட்டப் பாய்ச்சலில் X-உட்பாய்ச்சல், M- வெளிப் பாய்ச்சல் ஆகும். இங்கு வெளிப்பாய்ச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இருப்பின் வருமான மட்டம் குறையும். இதனால் இறக்குமதிகளின் ஒரு பகுதியை நாட்டின் ஏற்றுமதி தவிர்ந்த வருமானங்களும் தீர்மானிக்கின்றன. இவ்வகையில் வருமானம் வீழ்ச்சியடையும். அதனால் இறக்குமதி குறைவடைந்துஇறுதியில் $X = M$ ஆக சென்மதி நிலுவையின் சமனிலை பேணப்படலாம். கெயின்ஸின் விளக்கம் இவ்வாறு இருக்க நாணயவியலாளரின் கருத்துப்படி சென்மதி நிலுவை குறைநிலை எனின் பணச் சுருக்க நிலை ஏற்படும். விலை மட்டம் குறையும். பணத் தேசிய வருமானம் குறையும். உள்நாட்டில் பொருட்கள், சேவைகளின் விலை குறையும். ஏற்றுமதிப் பொருட்கள் விலை மலிவாகத் தெரியும். இதனால் ஏற்றுமதிக்கான கேள்வி கூடும். இதனால் ஏற்றுமதி வருமானம் கூடும். இது சென்மதி நிலுவை குறைநிலையைத் தீர்க்க உதவும். மாறாக இறக்குமதிப் பொருட்களின் விலை உள்நாட்டில் உயரும். இறக்குமதிக்கான கேள்வி குறையும். இறக்குமதி செலவு குறையும். இந்த நிலை நடைமுறைக் கணக்கு சமனிலை அடைய உதவி அதனூடாகச் சென்மதி நிலுவையில் சமனிலை ஏற்படும்.

2) மிதக்கும் நாணய மாற்று வீதம்

Floating Exchange Rate

ஒரு நாட்டின் உள்நாட்டு நாணயத்தை வெளிநாட்டு நாணயத்துக்குப் பரிமாற்றம் செய்யப்படுகின்றபோது மேற்படி நாணயமாற்று விகித நிர்ணயத்தில் அரசின் அல்லது மத்திய வங்கியின் எந்த விதமான தலையீடுகளும் இன்றி பொருட்சந்தையில் பொருட்களின் கேள்வி நிரம்பல் அடிப்படையில் பொருட்களின் விலை தீர்மானிக்கப்படுவது போன்று செலாவணிச் சந்தையில் பொருட்கள் சேவைகளின் இறக்குமதி, மூலதன கொடுக்கல் வாங்கல் என்பவற்றின் மூலம் வெளிநாட்டு செலாவணி மீது ஏற்படும் கேள்வியாலும், பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி, வெளிநாட்டுக் கடன் உதவிகள், வெளிநாட்டு முதலீடுகள் போன்றவற்றின் மூலம் ஏற்படும் வெளிநாட்டு செலாவணி நிரம்பல் மூலமும் தீர்மானிக்கப்படுகின்ற நாணய மாற்று வீதம் மிதக்கவிடப்பட்ட வீதமாகும். இதனை நெகிழும் அல்லது தளம்பும் நாணய மாற்று வீதம் எனவும் அழைப்பர். இதுவும் போட்டிச் சந்தை போன்று உள்ளதால் செலாவணிக்கான கேள்வி, நிரம்பல் சமப்படுகின்ற நாணய மாற்று வீதத்திற்குக் கீழ் அல்லது மேல் செலாவணி விலை நிலவுமாயின் அதனைச் சீர்செய்ய சந்தை சக்திகள் பயன்படும். இந்த வகையில் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களில் சீராக்கம் செய்வதன்மூலம் நாணய மாற்று வீத சீராக்கங்கள் தீர்மானிக்கப்படும்.

### மிதக்கும் நர்ணய மாற்று விகிதமும் சென்மதி நிலுவை மீதியும்

மேற்படி மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் தானாகவே அன்னிய செலாவணி சந்தை சமநிலையில் இயங்கும் என்பதால் சென்மதி நிலுவை மீதியும் $(X = M)$ சமனிலையில் காணப்படும். ஆனால் சென்மதி நிலுவை சமனிலையின்மை காணப்படுமாயின் $X > M$ அல்லது $X < M$ மிகைநிலை அல்லது குறைநிலை காணப்படுமாயின் முறையே சென்மதி நிலுவையின் வரவுப் பக்க விடயங்கள் உயர்வாக இருக்கும் அல்லது கொடுப்பனவுகள் உயர்வாக இருக்கும்.

சென்மதி நிலுவை மிகை நிலையில் காணப்படின் செலாவணிச் சந்தையில் உள்நாட்டு நாணயத்துக்குக் கேள்விகூடும். இதனால் உள்நாட்டு நாணயத்துக்கான வெளிநாட்டுப் பெறுமதி உயர்வடையும். இது ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளை உலக சந்தையில் உயர்த்தும். ஏற்றுமதியில் போட்டித்தன்மையை இழக்கும். இதனால் ஏற்றுமதி வருமானம் குறையும். அதே நேரம் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உள்ளாற்றல் மலிவாக இருப்பதால் இறக்குமதிக்கான கேள்வி கூடி இறக்குமதிக்கான கொடுப்பனவு கூடும். இந்தச் செயற்பாட்டின் ஊடாக சென்மதி நிலுவை மிகை நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநிலைக்கு மாற்றமடையும். ($X > M$ ஆனது $X = M$ ஆக மாறும்)

சென்மதி நிலுவை குறை நிலையில் காணப்படின் செலாவணிச் சந்தையில் உள்நாட்டு நாணய நிரம்பல் உயர்வடையும். எனவே நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடையும். ஆகவே ஏற்றுமதிப் பொருட்களின் வெளிநாட்டு விலை குறைவடையும். ஏற்றுமதிக்கான கேள்வி கூடும். ஏற்றுமதிகூட வருமானம் கூடும். அதேநேரம் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உள்நாட்டில் உயர்வடைவதால் இறக்குமதிக்கான கேள்வி குறைந்து இறக்குமதிக்கான கொடுப்பனவுகள் குறையும். இச்செயன்முறையின் விளைவாக சென்மதி நிலுவை குறை நிலை சமனிலைக்கு மாற்றமடையும். ($X < M$ ஆனது $X = M$ ஆக மாறும்) என்று குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய நெகிழும் நாணய மாற்று விகிதத்தின் ஊடாக, கேள்வி நிரம்பல் ஊடாக, சென்மதி நிலுவையில் சமனிலையினைக் காட்டமுடியும். இதனை நாணய இறைக் கொள்கை மூலம் மேற்கொள்ளலாம். இது உலக வர்த்தகம் விரிவுபெற்றுச் சிறப்புத் தேர்ச்சி ஏற்பட உதவும். எல்லா நாடுகளும் தனித்துக் கொள்கைகளை மேற்கொள்ள சுதந்திரம் உண்டு. இவ்வாறான தன்மையுள்ளபோதும் நிச்சயமற்ற தன்மை காரணமாக நெகிழ்ச்சி பற்றிய ஊக்கங்கள், உறுதி பற்றிய உந்துதல், நோக்கம் என்பன ஏற்படவழிகோலும் என்பதால் பாதிப்பையும் ஏற்படுத்தும் எனலாம்.

இவ்வகையில் பின்வரும் நிலைமைகளில் நெகிழும் நாணய மாற்று விகித மாற்றத்தினைப் பின்வருமாறு இலங்கை ரூபாவினைக் கவனத்திற் கொண்டு நோக்கலாம்.

1) இலங்கை ரூபாவின் கேள்வி மட்டும் அதிகரிக்க நிரம்பல் மாறாத நிலையில் ரூபாவின் பெறுமதி ஏற்றமடையும். இதனை படத்தில் $EC_0$ இல் இருந்து $EC_1$ என்ற அதிகரிப்பினைக் காட்டும். ரூபாவின் கேள்வி அதிகரிப்பானது ஏற்றுமதி உயர்வு, மாற்றல், உட்பாய்ச்சல் அதிகரிப்பு, நேரடி முதலீடு, பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் வருகை அதிகரிப்பு மூலமும் ஏற்பட்டிருக்கலாம். (படம் 2 ஐப் பார்க்க)

2) இலங்கை ரூபாவின் கேள்வி மட்டும் வீழ்ச்சியடைய நிரம்பல் மாறாத நிலையில் ரூபாவின் பெறுமதி தேய்வடையும், இதனைப் படத்தில் $EC_0$ இல் $EC_2$ என்ற வீழ்ச்சி காட்டும். இங்கு ரூபாவின் கேள்வி குறைவிற்கு சென்மதி நிலுவையின் வரவுப் பக்க வீழ்ச்சி காரணமாக அமையலாம் (படம் 3ஐப் பார்க்க)

3) இலங்கை ரூபாவின் கேள்வி மாறாத போது நிலையில் நிரம்பல் அதிகரிக்கும் போது ரூபாவின் பெறுமதி செலாவணி சந்தையில் குறைவடையும். இதனை $EC_0$ இல் இருந்து $EC_1$ ஆகக் குறைத்துக் காட்டும். இந்த ரூபாவின் நிரம்பல் அதிகரிப்பானது இலங்கையில் இறக்குமதி அதிகரிப்பு மூலதன வெளிப்பாய்ச்சல் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். (படம் 4 ஐப் பார்க்கவும்)

4) இலங்கை ரூபாவின் கேள்வி மாறாத நிலையில் நிரம்பல் வீழ்ச்சி அடையும் போது ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அதிகரிக்கும். இதனைப் படத்தில் $EC_0 \rightarrow EC_2$ அதிகரிப்புக் காட்டும். இங்கு ரூபாவின் நிரம்பல் வீழ்ச்சிக்கு சென்மதி நிலுவையின் செலவுப் பக்கத்து விடயங்களின் வீழ்ச்சிக்கான காரணமாக அமையலாம். (படம் 5 ஐப் பார்க்க)

இவ்வாறான எதுவித தலையீடும் இன்றிய சந்தை சக்திகளான கேள்வி, நிரம்பல் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஒன்றே மிதக்கும் நாணய மாற்று வீத முறை ஆகும்.

**முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று வீதம்;**

**Managed / Dirty floating Exchange Rate**

சில பல நோக்கங்களை எய்திக்கொள்வதற்காக நாணய அதிகாரிகளின் கட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மிதக்கும் நாணய மாற்று வீத முறையே முகாமைசெய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீத முறை எனப்படும். அதாவது மிதக்கும் நாணய மாற்று வீத முறையின் கீழ் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நாணய மாற்று வீத வீழ்ச்சி அல்லது ஏற்றத்தினைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தலைக் குறிக்கும். இவ்வகையான கட்டுப்பாடுகள் கூட வெளிச் நாட்டு செலாவணியின் கேள்வி நிரம்பல்களைக் கவனத்தில் கொண்டே விதிக்கப்படுகின்றது. இவ்வகையில் சில நாடுகள் குறிப்பிட்ட சில வகையான நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு நாணய மாற்று வீதத்தினைத் தீர்மானிக்கின்றன. இது கூட வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் போது அந்நாட்டு நாணயங்கள் வகிக்கின்ற முக்கியத்துவத்திற்கு ஏற்ப நிறையிடல் மூலம் இது மேற்கொள்ளப்படுகின்றது- இவ்வகையில் நாணய கூடையில் (Basket) உள்ளடக்கப்படுகின்ற அந்நிய நாணயங்களின் அளவு மாறும்போது வெளிநாட்டு நாணயப் பெறுமதியும் மாற்றமடையும்.

உதாரணமாக நாணய மாற்றுவீதமானது விரைவாக வீழ்ச்சி அடைந்து செல்கின்றது எனின் மத்திய வங்கியானது நேரடியாக செலாவணிச் சந்தையில் தலையிட்டு நாணய மாற்றுவீதத்தில் ஏற்படக் கூடியதான பாரிய ஏற்றத் தாழ்வுகளை அகற்றும். அதேபோல் உள்நாட்டு நாணய நிரம்பல் செலாவணி சந்தையில் அதிகரிக்கின்ற போது உள்நாட்டு நாணயத்தினை மத்திய வங்கி கொள்வனவு செய்து அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தினை விற்பனை செய்யும். இச்செயற்பாட்டின் மூலமும் நாணய மாற்று வீதத்தில் ஏற்படக்கூடிய வீழ்ச்சி தவிர்க்கப்படும். மாறாக நாணய மாற்று விகிதம் துரிதமாக ஏற்றமடையும் ஆயின் மத்திய வங்கி செலாவணிச் சந்தையில் அந்நிய செலாவணியைக் கொள்வனவு செய்து அதேநேரம் உள்நாட்டு நாணயத்தை விற்பனை செய்வதன் மூலம் நாணய மாற்று வீதத்தில் ஏற்படக்கூடிய பெறுமதி ஏற்றத்தைத் தடுக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி விளக்கத்தினை வரைபட உதவியுடன் நோக்குவோமாயின் வரைபடம் 6இன்படி செலாவணிக்கான கேள்விக் கோடு DC ஆக உள்ளது. நிரம்பல்கோடு SC ஆக உள்ளது. மத்திய வங்கி ஒரு டொலர் = 40/- இற்கும் 60/- இற்கும் இடையில் பேண விரும்புகிறது. இங்கு ரூபாவின் பெறுமதி மாற்றமடையும் போது $DC_1$ ஆக உயர ரூபாவிற்கு மிகைக் கேள்வி $Q_4 - Q_3$ ஆக இருக்கும். எனவே மத்திய வங்கி மேற்படி மிகைக் கேள்வி ரூபாவினை விற்பனை செய்து அதற்குச் சமனான அந்நியச் செலாவணியைக் கொள்வனவு செய்யவேண்டும். மறுபுறம் ரூபாவின் பெறுமதி குறைவடைந்து $DC_1$ $Q_2 - Q_T$ அளவு ரூபாவினை மத்திய வங்கி கொள்வனவு செய்து அதற்குச் சமனான அந்நியச் செலாவணியை நிரம்பல் செய்யவேண்டும்.

இவ்வகையில் மத்திய வங்கி விரும்புகின்ற கீழ்மட்ட எல்லையான 1 ரூபா = 1/60 டொலருக்கும். மேல் மட்ட எல்லையான 1 ரூபா = 1/40 டொலருக்கும் இடையில் பேணிக்கொள்ள முயற்சிக்கும்போது தனது செலாவணி கையிருப்பைப் பயன்படுத்துவதால் மேற்படி முகாமை செய்யப்பட்ட நாணய மாற்று விகித முறையினைப் பின்பற்றுகின்ற நாடுகள் எப்போதும் செலாவணிக் கையிருப்புக்களைப் பேணிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். மேற்படி விளக்கத்தினை பின்வரும் படம் விளக்குகின்றது. (படம் 6 காட்டுகிறது)

இந்த வகையில் நிலையான. மிதக்கும், முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று வீதங்கள் மூன்றையும் ஒருங்கே நோக்கின் நிலையான மாற்று வீதம் தளம்பலடையாது. உறுதியானதாக அமையும். மிதக்கும் நாணய் மாற்று வீதம் கேள்வி நிரம்பலிற்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிச்சையாகத் தளம்பும். முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று வீதம் ஓரளவு குறைவாக தளம்பலடையும் இதனை வரைபடத்தில் காட்டின் பின்வருமாறு அமையும்.(வரைபடம் 7ஐப் பார்க்க)

**பெயரளவிலான நாணய மாற்று வீதம்:**

**Nominal Exchange Rate (NER)**

பொதுவாக ஒரு நாட்டின் நாணய விலையை இன்னொரு நாட்டின் நாணயத்தின் அளவில் குறிப்பிடுவதே பெயரளவு நாணய மாற்றுவீதமாகும். குறிப்பாக ஒரு நாட்டின் ஒரு அலகு நாணயத்தைக் கொண்டு மறுநாட்டின் எவ்வளவு அலகு நாணயத்தினை கொள்வனவு செய்யலாம். அல்லது பிறநாட்டின் ஒரு அலகு நாணயத்தைக் கொண்டு குறித்த நாட்டின் எத்தனை அலகு நாணயத்தைக் கொள்வனவு செய்ய முடியும் என்பதைக் சுட்டிநிற்பதாகும்.

உ+ம் : 1 ரூபா $= \frac{1}{40}$ டொலர்

என்பது 1 டொலர் = 40 ரூபா என்பதாகும். இது குறிப்பிட்ட இரு நாட்டிற்கும் இடையிலான நாணயமாற்று வீதமாக இருப்பதால் இருபக்க அல்லது இருபுடை மாற்று வீதம் என்பர். (Bilateral Exchange Rate) இதன் துணையுடன் நாணய மாற்று வீத வீழ்ச்சி, உயர்ச்சி பற்றிக் குறிப்பிடுவது தெளிவு குறைவாக இருக்கும் காரணம்.

1 டொலர் = 40/- என்ற நிலை 60/- ஆக உயரும் அதேநேரம் 1 பவுண் = 50/- என்ற நிலை 40/- ஆக குறைவடையும் எனின் இலங்கை ரூபாவின் பெறுமதி மாற்றம் பற்றி தெளிவான விளக்கத்தை கொடுக்க முடியாது. எனவே ஒரு நாடு பிறிதொரு நாட்டுடன் மட்டுமன்றி பல நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளில் ஈடுபட்டிருப்பதனால் இருபக்க பெயரளவு நாணய மாற்று வீதம் போதியதாக இல்லாத காரணத்தால் நாடொன்றின் நாணய மாற்று வீதத்தின்போக்கினை ஒட்டு மொத்தமாகவும், தெளிவாகவும் எடுத்துக்காட்ட பொருத்தமான வகையில் பெயரளவு நாணயமாற்று வீதங்கள் நிறையூட்டப்பட்டு அளவிடப்படுகின்றது.

**பெயரளவு தாக்கமுள்ள பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் :**

**Nominal Effective Exchange Rate (NEER)**

பெயரளவு நாணய மாற்று வீதங்கள் நிறையூட்டப்பட்டுப் பெறுகின்ற நாணய மாற்று வீதமே பெயரளவுத் தாக்கமுள்ள பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதமாகும். இவ்வீதம் தனித்து ஏற்றுமதி இறக்குமதி துறைகளுக்கும் கணிக்க முடியும். அதாவது ஏற்றுமதி அல்லாது இறக்குமதிகளில் நாடுகள் வகிக்கும் பங்கிற்கேற்ப நிறை வழங்கி குறிப்பிட்ட நாடுகளுடனான NER ஐ நிறைக்கேற்ப சீராக்கம் செய்வதன் மூலம் NEER ஐ கணிக்க முடியும்.

இந்த வகையில் 24 வர்த்தகப்பங்காளர்கள் அல்லது போட்டி நாடுகளுடனான இலங்கையின் பயன்தரு நாணய மாற்று வீதமானது 1990ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. அதே நேரம் 1995 இன் இறுதியில் இந்த NEER ஆனது 78.2% ஆக இருந்ததுடன் 1990ஐ விட 1995 இல் ரூபா 22% தேய்வடைந்த தன்மையையும் பங்காளர் நாடுகளின் நாணயத்தை விட விரைவாக இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வு அடைந்துள்ளதை காட்டுகின்றது. இந்த NEER கூட சரியான தெளிவான விளக்கமளிக்காததால் பணவீக்கத்தில் ஏற்படும் மாற்றங்களை சீராக்கி அளவீடு மேற்கொள்ளப் படுகிறது.

**உண்மைத் தாக்கமுள்ள (மெய் பயனுறுதி வாய்ந்த) நாணய மாற்று வீதம்**

**Real Effective Exchange Rate (REER):-**

ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளை மற்றொரு நாட்டின் பொருட்கள் சேவைகளுக்கு என்ன வீதத்தில் மாற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியும் என்பதனை விளக்கு கின்ற வகையில் அதாவது பெயரளவு நாணய மாற்று வீதத்தினை இரு நாடு களுக்கிடையில் நிலவுகின்ற சார்பளவு விலை விகிதத்தால் பெருக்குவதன் மூலம் அளவிடப்படுவதே மெய் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் ஆகும்.

அதாவது NEER உடன் பணவீக்கத் தில் ஏற்படும் மாற்றங்களை சீராக்குவதன் மூலம் REER ஐக் கணிக்க முடியும். இங்கு குறித்த நாட்டின் பணவீக்கத்திற்கும் அந்த நாடு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் நாடுகளின் சார்பளவு பணவீக்கத்திற்கும் இடையிலான வேறு பாடுகள் சீர் செய்யப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.

$$REER = NEER \frac{Pd}{Pf} \text{ ஆகும்.}$$

இங்கு REER - உண்மை தாக்கமுள்ள நாணய மாற்று வீதம்
NEER - பெயரளவு தாக்கமுள்ள நாணய மாற்று வீதம்
Pd - உள்நாட்டு விலை மட்டம்
Pf - வெளிநாட்டு விலை மட்டம்
என்பவற்றை குறித்து நிற்கின்றது.

ஆகவே NEER க்கும் $\frac{Pd}{Pf}$ ( சார்பளவு விலைக்கும் ) க்கும் இடையில் நேர்விகித சமனாக REER உள்ளது. NEER உயர Pd, Pf க்கு சார்பாக உயரின் REER உய ரும் நாடுகளுக்கிடையில் பண வீக்க வீதம் ஒரே மாதிரி இருப்பின் NEER, REER என்பன அண்மித்ததாக இருக்கும். ஆனால் பண வீக்க வீதம் வேறுபடின் NEER உம் REER உம் வேறுபடும்.

eg:
$$NEER = 80$$
$$Pd = 150$$
$$Pf = 120$$
$$REER = 80 \times \frac{150}{120} = 100 \text{ ஆகும்.}$$

இலங்கையின் பணவீக்க வீதம் வர்த்தக பங்காள நாடுகளின் பணவீக்க வீதத்தைவிட உயர்வாக இருந்தால் REER உயர்வாக இருக்கும். இது ஏற்று மதியில் போட்டித் தன்மையை இழக்கும்.

1990ன் NEER 1995ல் 78.2 என்பது இலங்கை தன்பங்காள நாடுகளை விட விரைவான தேய்வுக்குட்பட்டுள்ளதைக் காட்டுகின்றது என முன்பு குறிப் பிட்டோம். ஆனால் 1995ல் இலங்கையின் பணவீக்க வீதம் 11.5% ஆகவும் 24 வர்த்தக பங்காள நாடுகளின் சராசரி பணவீக்க வீதம் 5.5% ஆக இருந்தது. இது சார்பு ரீதியாக இலங்கையில் உயர்ந்த பணவீக்கம் ஏற்பட்ட போதும் NEER தேய்வடைந்ததைத் தொடர்ந்து REER 3.1% ஆல் மாத்திரமே தேய் வுற்றுள்ளது. இது இலங்கையின் ஏற்று மதிகளில் போட்டித் தன்மையை அவ்வளவு தூரம் பாதிக்கவில்லை என் பதைக் காட்டும் எனலாம். REER ல் பெறுமதி ஏற்றம் இலங்கைக்கு பாதகம் ஆகும். காரணம் ஏற்றுமதியில் போட்டித் தன்மையை இழக்கும் REER ல் பெறுமதி இறக்கம் சாதகம் ஆகும். காரணம் ஏற்றுமதியில் போட்டியை அனுபவிக்க முடியும் என்பதால் ஆகும்.

**உடன் நாணய மாற்று வீதம் :- Spot Exchange Rate**

நடைமுறையில் நாணயச் சந்தையில் உடனடியாகவே நாணயங்களை பிற நாட்டு நாணயங்களுக்கு மாற்றி கொடுக் கின்றவகையில் மேற்கொள்ளப்படும் உத்தி யோக பூர்வமான நாணயமாற்று வீதமே உடன் நாணய மாற்று வீதம் ஆகும்.

**முன்னோக்கிய நாணய மாற்று வீதம் :- Foward Exchange Rate**

நடைமுறையில் ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் நாணய மாற்று வீதத் தளம்பலால் ஏற்படும் ஆபத்தினைத் தவிர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் குறிப்பிட்ட ஒரு திகதியில் இருந்து மூன்று அல்லது ஆறு மாதங்களின் பின் கொள்வனவு அல்லது விற்பனை செய் வதற்கு விரும்புகின்ற அன்னியச் செலா வணிக்குரிய வீதத்தினை வங்கிகளுடன் பேசித் தீர்மானிக்கின்ற வீதம் முன் னோக்கிய நாணயமாற்று வீதம் ஆகும். இன்று நடைமுறை உலகில் பொருளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 1




படம் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 3




படம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 5




படம் 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரங்களில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவால் திறந்த வர்த்தகம் கூடிவரும் அதே வேளை மிதக்க விடப்பட்ட நாணயமாற்று முறை யினை அதிகம் கடைப்பிடித்து வருகின்ற காரணத்தால் முன்னோக்கிய நாணய் மாற்று வீதமும் நடைமுறையில் கூடிய பயன்பாடு கொண்டு விளங்குகின்றது.

இவ்வாறாக இன்றைய வர்த்தக உலகில் முக்கியம் பெறுகின்ற நாணய மாற்று விகிதம் பற்றியும், இது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்றும், நாணயப் பெறுமதி ஏற்றம் இறக்கம் பற்றியும் நாணயத்துக்கான கேள்வி நிரம்பல் பற்றியும், அதன் உதவியுடன் செலாவணி விகிதம் எவ்வாறு தீர்மானிக்கப்படு கின்றன என்பது பற்றியும், நாணயமாற்று வீத முறைகள் பற்றியும், சென்மதி நிலுவை மீதியில் இந்த நாணயமாற்று வீதங்களின் தாக்கம் எத்தகையது என்பது பற்றியும் மிகவும் சுருக்கமாக இக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**Reference :-**


(1) A Level Economics
Ray Pawell – 1995 **Page 340-356**

(2) Theory and Problems of Interna-tional Ecoaomice Third Edition-1990
Dominick Salvatore

(3) Trade and Developing Countries.
Kathrryn morton and peter Tulloch – 1978

(4) International Economics, Kindle breger and Lindert Six Edition-1978

(5) கற்றல் கற்பித்தல் வழிகாட்டி, பொருளியல் II வணிக கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

(6) Micro Economic Theory and Policy, William H. Branson – Third Bitdoin


---

ஒருவன் கற்றுள்ள நூல்களின் அளவை
அவனுடைய நுண்ணறிவு விளக்கும்

– ஔவையார்

மனிதனுடைய ஆசைக்கு அளவேயில்லை
அவனுடைய ஆற்றலுக்கும் எல்லையில்லை.

— மார்க்ஸிம் கார்க்கி

சத்தியத்தைப் புறக்கணிப்பதாலும் தீயோர்
சேர்க்கையினாலும் பொறாமை தோன்றுகிறது.
நல்லோர், பெரியோர் இணக்கமும் அவர்களுக்குச்
செய்யும் பணிவிடையும்
அதை ஒழித்து விடுகிறது.........

– மகாபாரதம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் அபீஸ் கோப்பி வந்தாச்சு

● அபீஸ் வந்தால் உங்கள் வீடே கமகமக்கும்

நீங்கள் யாழ். நகரில் அபீஸ் கோப்பியைச் சுவைத்து மகிழ்ந்திட, இன்றே வருகை தாருங்கள்.

பிரியாணி பிரியர்களின், நன்மதிப்பைப் பெற்ற,

அபீஸ் கோப்பி (B) பார் & கூல் ஸ்பொட்

இல: 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

( பாரத் ஸ்ருடியோ முன்பாக )

---

வீனஸ் டிலக்கா

● T. V. றேடியோ, மணிக்கூடு. திருத்துவதில்

● சகல T. V. அன்ரனாக்கள் பொருத்துவதில்

மற்றும் மின்சாரப் பொருட்களை விற்பதிலும் பிரசித்தி பெற்றவர்கள்

வீனஸ் டிலக்கா

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

140, கே. கே. எஸ் வீதி, சத்திரத்துச்சந்தி யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 2064

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● புதுமையும் எழிலும் கொண்ட

● பட்டு, பருத்தி, ஜவுளி ரகங்களின் உதயம்

ஆடைகளின் சங்கமம்

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரியகடை, யாழ்நகர்.

மின்சார உபகரணங்கள் யாவற்றையும்,

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு சேவைகளை

உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும்.

# மா. நாகரத்தினம் அன். கோ.

127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

FAX: 021 - 2406

T. P.: 021 - 2406

62, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசல் 22 கரட் நகைகளை குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

அசோகா நகை அகம்

இல: 275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாளுக்கு நாள் அறிமுகமாகும் புத்தம்புதிய டிசைன்களில்
உங்கள் புடைவைகளைத் தெரிவு செய்ய
நீங்கள் நாட வேண்டியது
புடைவைக்கடல்



சீமாட்டி

அனைத்துப் புடைவைகளின்
மொத்த சில்லறை வியாபாரிகள்

சீமாட்டி — SEEMATI

DEALERS IN TEXTILE & FANCY GOODS

No. 122, Power House Road Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடச் சுட, சுவையான மாமிச உணவுகளை

வகை வகையாய் உண்டு மகிழ்ந்திட,

உங்களுக்கும் ஆசையா?

சுவைஞர்களே!

★ சுத்தமான உணவை

★ சுவைத்து மகிழ்ந்திட

வந்து ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்.

V

# ஷண்கபே

இல: 664 கே. கே. எஸ் வீதி,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு பவான்

❁ எத்நேரமும் சுகாதாரமான முறையில்,

❁ உடனுக்குடன் சைவ உணவுகள்

❁ தயார் செய்து வழங்கப்படும்.

எஸ். சிவராஜா

350, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

---

தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்

● 22 கரட் தங்க நகைகள் ●

ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள

தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

# ஜெய கிருஷ்ணா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

எமது "கால சுரபி" சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்திகளை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, வரலாற்றுத் துறை பேராசிரியர், கழகக் காப்பாளர், பெரும் பொருளாளர் அவர்கட்கும். கால சுரபி இதழ் II சிறப்புற வெளிவர ஆக்கங்களைத் தந்து உதவிய விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும், இந்த சஞ்சிகையை வெளியிடுவதற்காகப் பல வழிகளிலும் ஆலோசனைகளையும். ஊக்கமும் உதவியும் வழங்கிய கழகக் காப்பாளரும் துறைத்தலைவருமாகிய பேராசிரியர் ச. சத்தியசீலன் அவர்கட்கும், பெரும் பொருளாளர், ஏனைய விரிவுரையாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

மேலும் இந்த இதழின் வெளியீட்டிற்காக பலரும் பல்வேறு வகையிலும் உதவிபுரிந்துள்ளமையால், அவர்களுக்கும் இங்கு நன்றி தெரிவித்தல் இன்றியமையாத கடமை என்ற வகையில் விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக நிறுவனங்கள் விளம்பரங்களை சேகரித்த மன்ற அங்கத்தவர்கள், கலை விருந்திற்கான சீட்டுக்களை விற்று நிதி திரட்டிய வரலாற்றுக்கழக மாணவர்கள். மற்றும் ஏனைய யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோருக்கும் இந்த சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதியினை பெறும் நோக்குடன் நடத்தப்பட்ட 'கலை விருந்து' என்னும் (நாட்டிய நிருத்தியார்ப்பணம்) நிகழ்ச்சியை நன்கு நெறிப்படுத்திய திருமதி சாந்தினி சிவநேசன் அவர்கட்கும், மற்றும் கலை விருந்தில் பங்குபற்றிய மாணவ மணிகளுக்கும், வாத்திய இசை விற்பன்னர்களுக்கும், ஒளி, ஒலி வசதிகளைத் செய்து உதவியர்களுக்கும் நன்றி உரியது.

இந்த சஞ்சிகைக்கான அட்டையை அச்சிட்டுத் தந்துதவிய கங்கை அச்சகத்தினருக்கும், சஞ்சிகையை சிறந்த முறையில் அச்சிட்டு நூல் வடிவில் உருவாக்கித் தந்த மஹாத்மா அச்சகத்தினருக்கும். மற்றும் பல்வேறு வழிகளிலும் பல உதவிகளைப் புரிந்த ஏனையோருக்கும் எமது மனம் கனிந்த நன்றியை வரலாற்றுக் கழகத்தினர் சார்பில் கூறிக்கொள்கின்றேன்.

நன்றி

செல்வி வ. வசந்தமலர்
இதழாசிரியர்
வரலாற்றுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org